"பணம்பற்றி மணமா அல்லது குணம்பற்றி மணமா?"

என்னும்,

பொற்றொடி.

முதலாவது அத்தியாயம்.

மேடைப்பிள்ளை வீடு.

நாகரீகமடைந்ததென்று பலரால் வீண்புகழ்ச்சி செய்யப்பட்டதும், உண்மையில் நாகரீகமென்பதின் வாசனையேனும் சற்று மணந்தறியாததுமாய், நமது நாட்டில், நடக்கும் விவாகமனைத்தும் கேவலம் பணம்பற்றி நடப்பனவேயன்றிக் குணம்பற்றியன வன்று. அதாவது, தனவந்தர்களுடைய புத்திரர்க்கு தனவந்தர்களுடைய புத்திரிகளையும், வறியவர்களுடைய பிள்ளைகட்கு வறியவர்களுடைய பெண்களையுமாகப் பொருளையுத்தேசித்தே அநேக விவாகங்கள் நடக்கின்றனவன்றி, ஏனைய விசேஷ லக்ஷணங்களைக் குறித்தன்று என்பது யாவரும் ஆக்ஷேபியாது ஒப்பத் தக்கதே. ஆனால், ஒரு புருஷனுக்கு ஒரு பெண்ணை விவாகஞ் செய்யும்பொழுது பெற்றோர்களும், மற்றோர்களும், ஆய்ந்தறியவேண்டியன: முதலில் ஒழுக்கம், இயற்கையறிவு, கல்வி; இரண்டாவது அழகு, வயது, நாகரீகம்; மூன்றாவது பொருள்; நான்காவது இடம்; ஐந்தாவது

குடும்பம் முதலியவைகளேயாம். இவ்வாறின்றி நமது நாட்டில் பொருளையே முக்கியமாய்க் கருதி ஏனைய உயர் குணங்களை மதியாமல் நடந்தனவும் நடக்கின்றனவுமாய விவாகங்கள் எண்ணில.

குடித்து வெறித்துத் தலைபுழுத்து அலையும் வீணர்க்குப் பரமசாதுக்களாய பெண்களையும், குணவந்தராய புருஷோத்தமருக்கு அடங்காப் பிடாரிகளையும், பள்ளிக்கூடத்தில் மழைக்கேனும் ஒதுங்கியறியா நிரக்ஷர குக்ஷிகளுக்குக் கல்விக் களஞ்சியமான பெண்களையும், சகல சாஸ்திர நிபுணனுக்குச் சட்டி சுரண்டுவதும் அடுப்பூதுவதுமன்றி வேறொன்று மறியாத பதர்களையும், விலைமாதரையே தெய்வமென்று வணங்கும் அறிவிலிகட்கு அருந்ததியனைய கற்பு அரசியரையும், பிறமாத ரெல்லாம் பெற்றதாயென்றெண்ணி யொழுகும் பரமயோக்கியருக்குச் சொல்லொணுத் துர்நடக்கை யுள்ளவர்களையும், வயோதிகத்தால் ஒணுன் போல் இலங்கும் கிழவர்கட்குக் கொஞ்சும் கிளி போன்ற மங்கைப் பருவ மடமாதரையும் போலிவிவாகஞ் செய்து பொருளாசையாற் கெடும் போலிமானிடர் தொகைக்களவுண்டோ? அவர்கட்க ளவிருப்பினும், அவரால் விளையும் தீங்குகளுக்கு அளவுண்டோ?

அந்தோ! ஒழுக்கம், கல்வி முதலியவற்றிற் சிறந்த ஒருமாது தனது புருஷன் மிகவும் தனவந்தனு யிருப்பினும், அவன்பொருளை எள்ளத்தனையும் எண்ணுது, அவனது மடமைக்கும் கொடுமைக்கும் வருந்திப் பல்லாண்டு தெய்வத்தையும், பெற்றோரையும் நொந்து முடிவில்

நிலைதவறத் துணிகின்றாள். பொருள், அழகு இவற்றிற் சிறந்த வேறொருமாது, தனக்கு வாய்ந்த மணவாளன் கல்வியொழுக்க முதலியவற்றில் இணையற்ற வல்லானே யாயினும், அவனையறியாது, அவனுடைய வறுமை, அழகின்மை முதலியவற்றை மட்டுமே கருதி, அவனை அலக்ஷியமாய் அவமதித்து, தோல் சிவப்பாயுள்ள அழகிய மூடரை அபேக்ஷித்துச் சமயம் பார்த்துத் தயங்குகின்றாள். லக்ஷக்கணக்காய்ப் பொருள் படைத்த ஒரு கணவன், தனது அறுபதாம வயதில் ஒரு யௌவனமாதை மூன்றாவது விவாகஞ் செய்து, பல்லணி பூட்டி யலங்கரித்துக் கண்குளிரப்பார்த்து ஆனந்தித்து அன்பு பாராட்டுகின்றான். அவளோ, அவனன்பையும் ஆசையையும் பரிஹஸித்து கணவனது எண்ணத்திற்கு முற்றிலும் மாறாய் நடக்கின்றாள். ஆங்கில பாஷையிலும், ஐரோப்பிய நாகரீகத்திலும் சிறந்த ஒரு பெண், கலப்பை கொழுமுதலிய ஆயுதங்களையன்றி பேனைமைக்கூடுகளைக் கண்ணாலும் கண்டறியா நிர்மூடனுக்கு மனைவியாகின்றாள். சர்வகலாசாலையில் உயர்ந்த வித்யா பட்டம் பெற்று, தேசாபிவிர்த்தியின் பொருட்டு மேனாட்டு மகிமைகளை யுலகுக்கூட்டும் சில நிபுணருக்கு எண்ணெழுத்தறியா மூடப்பெண்களும், தமிழ்ப் பாஷையைக் கூட நன்றாய்ப் பேசத்தெரியாத காப்பிரிப்பெண்களும் மனைவியாராகின்றார்.

இவ்வாறன்றி, பண்டிதனுக்குப் பண்டிதையும், ரூபவானுக்கு ரூபவதியும், யௌவன புருஷனுக்கு யௌவன பெண்ணையுமாக இசைபு நோக்கி நடக்கும் விவாகங்கள்

மிகவும் சிலவே. ஆதலின், இது சம்பந்தமான விஷயங்களை நமது நாட்டு மாந்தர்க்குத் தெரிவிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், சில வருஷங்களுக்கு முன், இப்பாண்டி நாட்டில் நடந்த ஒருசரித்திரத்தை இயன்றவரை சுருக்கி எழுதுகின்றேன்.

வடநாட்டில் கோபாலபுரமென்னும் ஓரூரில், வைசிய வேளாளர் குலத்தில், ஒரு தனவான்வயிற்றில் பிறந்தவளும், தனது பதினன்காவது வயதுக்குள் தமிழ்பாஷையில் மிகுந்த தேர்ச்சியும், ஆங்கிலபாஷையில் எழுத வாசிக்கத் தக்க திறமையும் படைத்தவளும், சங்கீதம் தையல் முதலிய வேலைகளில் நன்கு தேர்ந்தவளும், தெய்வபக்தி, குருபக்தி, பெற்றோர்மாட்டன்பு முதலிய குணங்களில் இணையற்றவளும், கற்பு முதலிய மாதரொழுக்கங்களை கல்வியாலும், கேள்வியாலும் நன்கு மதித்துவந்தவளும், மிகுந்த ரூபவதியுமான ஒரு பெண்மணி யிருந்தாள். அவள் நமது இந்துதேசத்தில் நடக்கும் அநீதியான விவாகங்களையும், அவற்றால் விளையும் அளவற்ற தீங்குகளையும் எண்ணி, மனம்வாடி, தனக்கு எவ்வித நாயகன் வருவானோவென்ற அடங்கா விசாரத்தால் உடல் மெலிந்து தனது பிதாவினுடைய பெரும் பொருளைச் சிறிதும் மதியாது அவருடைய அநாகரீகமான அபிப்பிராயங்களுக்கும், மடமையான நோக்கங்களுக்கும் பெரிதும் கவன்று வந்தாள். இதற்குள் அவள் வயதும் பதினைந்து நிறைந்து பதினாறு ஆகத்தொடங்கியது. மாதா பிதா இருவரும் தக்கபொருள்படைத்த மாப்பிள்ளை எப்பொழுது வருவானோ வென்றெதிர்பார்த்து மற்றவர்களை யெல்லாம் அலக்ஷியஞ் செய்துவந்தார்கள்.

அக்காலத்தில் இரண்டு மாப்பிள்ளைமார்கள் வந்துசேர்ந்தார்கள்.

அவ்வாறு வந்த இரண்டு மாப்பிள்ளைமார்களுள் ஒருவன்பெயர் சீராளன். மற்றவன் பெயர் வெள்ளையப்பன். சீராளன் ஆங்கில பாஷையிலும், தமிழிலும் நல்ல தேர்ச்சியுடையவன். அருள் ஒழுக்கம் தெய்வபக்தியிற் சிறந்தவன். பொருளை மதியாது, கல்வி ஒழுக்க முதலியவற்றில் தனக்குச் சமமான பெண்ணொருத்தியை மணந்து, அவளோடு உயிரு முடம்பும் போல் வாழவேண்டு மென்னும் பேரவாவினால் நெடுநாள் அலைந்து தேடி, முடிவில் இப் பொற்றொடியைக் கேட்குமாறு வந்துசேர்ந்தான். ஆனால் வெள்ளையப்பனோ ஒரு ஜமீனுக்கு சர்வாதிகாரியாயும் சுற்றுக்கு இருகாத வழிக்கு மிகுந்த பராக்கிரமசாலி யென்ற பெயர் பெற்றவனாயு மிருந்தான். இருவருள் வெள்ளையப்பனுக்குக் கொடுக்கவேண்டுமென்று பெற்றோர் உத்தேசித்தார்கள். பொற்றொடியோ அந்தரங்கத்தில் சீராளனைத் தனக்குத் தக்க நாயகனாக மனதில் பாவித்து, அதைக் குறிப்பால் பெற்றோருக்கும் அறிவித்தாள். ஆனால் அவள் தகப்பன் மேடைப் பிள்ளை அவளைக் கோபித்து, “அடீ! உனக்கு இந்த வயதுக்குள் அவ்வளவு சுயாதிகாரம் வந்துவிட்டதா? உன்னுடைய படிப் பல்லவா இதற்குக் காரணம்? பெண்களுக்குப் படிப்பு கூடாது என்னும் முதியோர் வார்த்தை சரியாயிருக்கிறதே?” என்று கோபித்தது மன்றி, “உன்னை இந்த வெள்ளையப்பனுக்கே கொடுக்கிறேன் பார்” என்று சபதங் கூறினர். தாயும் “அம்மா, தாய் தகப்பன்மார் எந்த மாப்பிள்ளைக்குக் கொடுக்கிறார்களோ அவனையே பெரிதாயெண்

ணவேண்டுமே யல்லாது பெண்ணினுடைய இஷ்டப்படி நடக்குமா? அந்தக்காலத்தில் எங்களுக்கெல்லாம் விவாகம் நடக்கும்பொழுது நாங்கள் இப்படிச் சொன்னதில்லையே? அல்லாமலும் வேள்ளையப்பனுக்கோ இன்றைக்குக் கண்ட கண்ணுக்கு ஏழு அல்லது எட்டு லக்ஷத்துக்கு மயக்கமில்லை. சுகமாய் உண்டுடுத்து துரைச்சிபோலிருப்பதை விட்டுவிட்டுச் சீராளனுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்று நினைக்கிறாயே? இதுதானா நீ படித்த படிப்பு? அவன் இன்றைக்கு ஒருவேலை பார்த்தால் இரண்டு துட்டுக் கிடைக்குமல்லாமல் நாலு நாளைக்கு மண்வெட்டியெடுத்துக் கீழே படுத்தால் அன்னப் பாலுக்குக் கூட வழியில்லையே? அல்லாமலும் அவன் தரத்துக்கும் நம்முடைய தரத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்? இன்னார் மகளைச் சீராளனுக்குக் கொடுக்கப்போகிறார்கள் என்றால் பார்த்தவர்கள் பரிஹாசம் செய்வார்களே” என்று பற்பலவிதமாய் புத்திசொன்னாள்.

இதைக்கேட்ட போற்ரேடி “இதென்ன சங்கடமாயிருக்கிறது. இந்தச் சமயத்தில் பேசாமல் வெட்கப்பட்டாவது பயந்தாவது சும்மா யிருந்துவிட்டால் நமது உயிருள்ள வரை அனுபவிக்கும் சகல காரியங்களுக்கும் நஷ்டம் வந்து சம்பவிக்குமே” என்று தனக்குள் ஆலோசித்து மனந்துணிந்து சொல்லுகின்றாள் :—

“அம்மா நான் சொல்வதைச்சற்று கவனி. நீ பொருளைமட்டும் பெரிதென்று எண்ணிப் பேசுகின்றாயே யன்றி வேறொன்றையும் கவனிக்கின்றாயில்லையே? ஒரு புருஷனுக்கு ஒரு பெண்ணை விவாகஞ்செய்வது எதற்கென்றுதான் உனக

குத்தெரியுமா? சிலர் அவனுக்குச் சமயல்செய்து போடுவதற் கென்றும், சிலர் புத்திரோற்பத்தியின் பொருட்டென்றும், சிலர் புருஷனுடைய சந்தோஷத்திற்கென்றும் சொல்லுவர். உண்மை யதுவன்று. தன் புருஷனுடைய சுகதுக்கங்களைத் தனக்கு வந்தனவாக எண்ணி அவனுடைய சந்தோஷ காலத்தில் அவனுடன் சந்தோஷிப்பதும், துக்ககாலத்தில் அவனுடன் அனுதாபிப்பதும், அவனுக்கு இகத்தில் வேண்டுகின்ற இன்பங்களையும், பணிகளையும் உதவலும், பரத்துக்குவேண்டிய அறவழியில் நடத்தலுமாய இக்குணங்களை யுடையவள் மனைவி. அவ்வாறே புருஷனும் தனது மனைவியைத் தனது உயிர்த்துணையா யெண்ணி, தனது அந்தரங்கங்களை அவட் கறிவித்துத் தனக்கு இடருற்ற காலையில் அவள் இன்னுரையால் பிழைத்து அவளையே சர்வமுமாக எண்ணக்கடவன். அதுபற்றியே ஸ்திரீ புருஷரிருவரையும் இரண்டு கண்களெனவும், வண்டியின் இரண்டு சக்கரங்களெனவும் புலவர் இணைகூறுகின்றார். இவ்வாறு ஸ்திரீ புருஷர் ஒத்து வாழ்தற்கு காரணம்யாது? அது பொருளா? அல்லது குணமா? பொருளாயின் செல்வவான்களுடைய மனைவிகளும், பெரிய அதிகாரிகளுடைய மனைவிகளும் தங்கள் புருஷரை மதியாது மறவழியில் நடத்தற்குக் காரணம் என்ன? ஒருபரம ஏழையினுடைய மனைவி அவனைத் தெய்வமென்று எண்ணி அறவழியில் நிற்றற்குக் காரணம் என்ன? முற்காலத்தில் ஸ்திரீ புருஷர்கள் ஒத்து வாழ்ந்தார்கள் என்பதற்கு உதாரணமாக அறுபத்துமூவர் சரித்திரங்களையே கூறலாம். அவற்றில் புகழப்படும் நாயன்மார்களெல்லாம் தனவந்தர்களா?

பொருளை யுத்தேசித்து ஒரு ஸ்திரீ தன் புருஷன்மீது அன்பா யிருந்தால் அப்பொருள் அவனைவிட்டுப் போகுங் காலத்தில் அவள் அன்பும் போய்விடுமே? அவன்மீது அன்பில்லாமற் போன போழ்தே அவள் பிறவழியில் நடக்கத் துணிவாளன்றோ? அரிச்சந்திரன் தனது நாடுநகரம் முதலிய யாவையுமிழந்த பின்னும் சந்திரமதி அவனை மறந்தனளோ? இக்காலத்தில் அநேகர் தமது நாயகர் பெரிய தனவந்தராயிருந்தும், அவர் தமக்கு எண்ணில்லாத ஆபரணங்கள் பூட்டிச் சந்தோஷிப்பித்தும் அவரை மதியாது அடுத்த வீட்டிலுள்ள ஒரு ஏழையை விரும்புகின்றார்களே. ஆகையால் ஒரு பெண்ணுக்கும் புருஷனுக்கும் இடையில் நிகழு மன்பு பொருள்பற்றி யன்று. கேவலம் பொருள்பற்றி உண்டாகும் அன்பிற்கும் விலைமாதருடைய போலியன்பிற்கும் பேதமென்ன? ஆனால் குணம்பற்றியுண்டாம் அன்பு அவ்வாறன்று? 'உலகம பலவிதம்' என்றவாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றினை விசேஷமாயெண்ணுவர். ஒருவன் தனது ஸ்திரீ கற்புடையளா யிருக்கவேண்டுமென்றும, ஒருவன் அழகுடையவளா யிருக்கவேண்டுமென்றும், ஒருவன் கல்வியுடையவளா யிருக்கவேண்டு மென்றும், ஒவ்வொரு விதமாய் விரும்புவர்.

"ஸ்திரீகளுள்ளும் சிலர் ஆண்மக்களிடத்தில் பொருளையும், சிலர் கல்வியையும், சிலர் உத்தியோகத்தையும், சிலர் ரூபத்தையும் விரும்புவர். எல்லாம் வேண்டுமென விரும்புவோரும் உளர். ஆகவே, ஸ்திரீ புருஷர்கள் எவ்வெவ்வித நோக்கங் கொள்வார்களோ அவ்வவ் விதத்துக் கிணைய

விவாகங்கள் நடந்தாலன்றி அவர்கட்கிடையில் அன்பு என்பது உண்டாகாது. அவ்வன்பில்லாவிடத்து அவர்கள் வாழ்க்கையும் வீண்வாழ்க்கையாய் முடிகின்றது. பெயர்மாத்திரத்தில் பார்த்தோர்க்கு ஸ்திரீ புருஷர்கள் போல் விளங்குவாரன்றி, உண்மையிலப்படியன்று. அதுபற்றியே "ஆண்மகனும் மகளும் பொருந்தி வாழ்வாரேற் பிணியுறும் ஆதுலரேனிலும் பெருஞ்செல்வர்" எனவும், "முரணுவரே லுயிரற்ற சவத்தின்மீது பணிகள் மிகப் பூட்டி அலங்கரித்த லோக்கும் அவர் செல்வப்பயன்" எனவும் கூறினர் ஆன்றோர். ஆதலின், ஒரு பெண் தனக்குத் தக்க நாயகனென யாரை விரும்புகின்றாளோ அவனை விடுத்து வேறொரு விருப்பமில்லாதவனுக்கு மணஞ் செய்யப்பட்டால் அவளுக்கு இரண்டு நாயகர் ஏற்படுகின்றார். அவள் மனதில் தியானிக்கப்படுவோன் ஒருவன்; அவளை உலகம் ஒப்ப மணந்தோன் ஒருவன். ஆதலின், அவள் செயலால் இல்லாவிடினும் மனத்தால் நிலைதவறுகின்றாள் என்னலிற் பிழையின்று.

"நான் தான் என்னைப்பெற்று வளர்த்தோர்களாகிய உங்கட்குப் பயந்து நீங்கள் விரும்பும் மாப்பிள்ளையை மணப்பேனேயன்றி என் மனமும் உங்கட்குப் பயப்படுமா? மனதில் எப்பொழுது ஒருவனை எனக்கு நாயகனென நினைத்துவிட்டேனே அதுவே விவாகம் ஆகின்றது. பாண்டவர் இறந்தார் என்றெண்ணிக் கன்னனை மணக்க விரும்பிய திரௌபதை அப்பாண்டவரை மணந்தபின்பும் கன்னன்மீது உள்ளன்பு வைத்திருந்தாள் எனவும், அதுபற்றி அவள் பூரணமான கற்பினள் என்னல் கூடாதெனவும் சிலர்

அபிப்பிராயப் படுவதால், ஒரு பெண் தன்மனதில் ஒருவனை விரும்பியிருக்க பலாத்காரமாய் பெற்ருேர் அவளை வேருெருவனுக்கு மணஞ்செய்தலாற் பெருந் தீங்கு விளைகின்றது. பொதுவாய் பெண்க ளெல்லாரும் புருஷனுடைய ரூபத்தையும், கல்வி முதலிய சாமர்த்தியங்களையும் விரும்புகின்ருர்களே யன்றி பொருளையன்று. எத்தனையோ விவாகங்களில் பெண்கள் மணவறையிலும் பட்டணப்பிரவேச காலங்களிலும் அழுதுகொண்டிருப்பதைக் காண்கிருேம். அந்தோ! அவர்களுக்கு விவாகஞ் செய்வது சந்தோஷத்துக் காகவா, அல்லது துக்கத்துக் காகவா? விவாகமென்பது மங்களமாயிருந்ததுபோய் இப்பொழுது இழவாய் முடிந்தது. ஆகையால் என்னிஷ்டத்துக்கு விரோதமாய் என்னை வேள்ளையப்பனுக்கு விவாகஞ் செய்வதிலும் என்னைக் கொன்றுவிடுவது மிகவும் உத்தமம்." என்ருள்.

இதுகேட்ட தாய் தந்தையர்கள் அவள் வசனத்தைக் கவனியாது, பெண்ணுப் பிறந்தவளுக்கு இவ்வளவு சாஸ்திரம் பேசும்படி ஆய்விட்டதா என்று பலவிதமாய்வைது வேள்ளையப்பனுக்கே விவாகஞ்செய்வதென்று தீர்மானித்து முகூர்த்தமு மேற்படுத்திவிட்டார்கள்.

இவ்வாறு தனது பெற்ருேருடைய கொடுமையால் மனம் வருந்திய பொற்ருேடி "இனி யாதுசெய்வோம். ஈசனெருவன் உண்டோ இல்லையோ?" என்று மனத்துட் கவன்று தாது வீட்டிற்கடுத்த பூந்தோட்டத்திலோர் கருங்கல்லின் மீதுட்கார்ந்துகொண்டு, கண்ணீர் மாலைமாலையாய்

வாய் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். அத்தருணம் அடுத்த வீட்டுக்காரியும் தனக்குற்ற சிநேகிதியுமாகிய அறுபது வயதுள்ள முத்தம்மாள் என்ற ஒரு கிழவி அவளை வீட்டிற்றேடிக்காணாமல் அவளைக்கண்டு பேசுமாறு அவளிருந்த இடத்தைநோக்கி வந்தனள். அவளைக்கண்ட

பொற்றொடி :—(வெட்கிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சும்மாவிருப்பவள்போல் அவளை நோக்கி) "பாட்டி! ஏது இன்றைக்குக் கார்த்திகைப் பிறை கண்டதுபோல் வந்திருக்கிறாய், க்ஷேமமா?" என்று கேட்டாள்.

முத்தம்மாள் :—"ஏனம்மா, அடிக்கடி வருவதற்கு நேரமுமில்லை, உடம்புக்குக் குணமுமில்லை. உனக்குக் கலியாணங் காட்சியென்று பேசிக்கொண்டார்களே, அதுதான் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்."

பொற்றொடி :—"அப்படி யார் சொன்னது? எனக்கு இனிக் கலியாணமேது? ஒருவேளை கலியாணத்துக்குள் இழவு வந்தாலும் வரும்."

முத்தம்மாள் :—"அதென்னடி! அப்படி ஆத்தங்கெட்டார்போற் சொல்லுகிறாய். நல்ல பெண்தான் நீயும். நீ தான் படித்து வாசித்தவளாச்சும்? நல்லாயிருக்கிறது. உன்னுடைய அப்பா பெண்குழந்தைகளுக்குப் படிப்புக் கூடாதென்று சொன்னதைச் சரியாய் ஒப்பித்துப் போட்டாயே. அதேன் அப்படிச்சொல்லுகிறாய்? உனக்கென்ன குறைவந்துவிட்டது? ஏனம்மா சொல்லு."

பொற்றொடி :—"எனக் கென்ன குறைவு? ஒரு குறைவுமில்லை. இந்தப் பாழுலகத்தில் மனமொவ்வா மணவாளரோடு நாளொரு ஆண்டும், ஆண்டொரு யுகமுமாய்க் கழித்துக்கொண்டு அழுதழுது துன்பப்படுவதிலும் கூடிய விரைவில் பரலோகத்தை யடையும் பாக்கியம் எத்தனையோ பெரிது. அப்பாக்கியம் எனக்கு விரைவிற் கிடைக்குமென்று நம்புகிறேன்."

முத்தம்மாள் :—"அம்மா, எனக்கு உன்னுடைய இலக்கணப் பேச்சுகள் ஒன்றும் தெரியவில்லை. நானென்ன உன்னைப்போல படித்தவளா? 'ஆற்றைக்கண்டேனா? அழகரைச் சேவித்தேனா?' எனக்கு நீ சொல்வது இன்னதென்று தெரியவில்லை. நன்றாய்ச் சொல்வதுதானே. தாய்க்கொளித்த சூலா? என்னிடம் சொல்லாமல் வேறுயாரிடம் சொல்லப்போகிறாய். உனக்கென்ன வந்துவிட்டது. நீ பிறந்ததில் குறையா? வளர்ந்ததில் குறையா? இன்னும் நல்ல பாக்கிய வாட்டியாயிருப்பாய்."

பொற்றொடி :—"ஆமாம். அதுதான் மெய்; நான் இப்படிப்படித்துத் தானே பாழாய்ப் போனேன். படித்த படிப்பு எனக்குத்தான் வினையாய் முடிந்தது. அந்த நாட்களில் நான் படிக்கும் பொழுது நாலுபேரைப்போல் நன்றாய் வாழலாம், நல்ல மணவாளரை யடையலாம், அவரோடு இல்லறம் நடத்தலாம், பொருளுள்ள பெண்களைப் பார்க்கிலும் கல்வியுள்ள பெண்களைத்தான் இக்காலத்தில் பல மணவாளரும் விரும்புகின்றார். ஆகையால் நானும் நன்றாய்ப்படித்து நமக்குவரும் மணவாளருடைய

மனத்தைக் களிக்கச்செய்யலாமென்று பேராசைகொண்டு இராப்பகலாய்ப் படித்தேன். தையல் கற்றேன், சங்கீதம் பயின்றேன், எல்லாங் கற்றேன். இப்படியுமானேன். போ, என்னபேச்சு? உப்பில்லாதபேச்சு."

முத்தம்மாள் :—"ஆம். நீ அவ்வாறு நினைத்ததற்கு இப்பொழுது என்ன கேடு வந்துவிட்டது? அப்படி உன்னை இருக்கவேண்டாமென்று சொல்வது யார்?"

பொற்றொடி :—"என்ன பாட்டி அப்படிச் சொல்லுகிறாய்? புஷ்பத்தின் மணத்தைக் குரங் கறியுமா? தங்கத்தின் மாற்றைக் கொல்லனறிவானா? அதுபோல் கல்வியொழுக்க முதலியவற்றைக் கல்வியொழுக்க முள்ளவர் தாமறிவாரேயன்றி மூட ரறியார். ஆகையால் என்னியல் பறியாதவருக்கும் யான் விரும்பாதவருக்கும் என்னை மணந்தால் என்மனம் மகிழுமா? எனது பெற்றோரே இப்படிச் செய்யத் துணிந்தால் இதை யாரிடம் முறையிடுவேன்?" என்று கண்ணீர் புலபுலென உகுத்தாள்.

முத்தம்மாள் :—"அம்மா ஏன் வருந்துகின்றாய். உனக்கு இப்பொழுது நிச்சயித்திருக்கும் வெள்ளையப்பன் என்ன கல்வியில்லாதவனா? பொருளில் குறைந்தவனா? இவனைப் பார்க்கிலும் மேலானவன் வேறே யாரிருக்கின்றார். அப்படியிருந்தால் சொல்."

பொற்றொடி :—"பாட்டி நீ இப்படிக் கேட்டால் நானெப்படிச் சொல்வேன். அந்தத் தர்க்கமெல்லாம் முடிந்து போய்விட்டது, 'பெண்ணாய்ப்பிறந்த நாய்' என்ன சொன்

னாலும் 'ஆண் பிள்ளைச்சிங்கங்கள்' சொல்லுகிறபடியல்லவா நடக்கும். நல்லது பார்த்துக்கொள்வோம்."

முத்தம்மாள் :—"ஏனம்மா விழுங்கிவிழுங்கிப் பேசுகிறாய்? மனதிலுள்ளதைச் சொல். நீ குறிப்பிட்டிருக்கும் மணவாளன் யார்? அவன் இன்னானென்று நான் கொஞ்சம் அறியப்படாதா?"

பொற்றொடி :—"நீ யறிந்தென்ன. நானறிந்தென்ன. அந்த ஈசனல்லவா அறியவேண்டும்?"

இதைக்கேட்ட முத்தம்மாளும் இவளிடம் உள்ளதைக் கேட்டறிய முடியாதென்று நினைத்து அவளைத் தேறுதல் சொல்லிவிட்டுப் பொற்றொடியின் தாயாகிய மீனாக்ஷியிடம் போய் "அம்மா! மாப்பிள்ளை எந்தவூர்? அவர் நிலைமை என்ன?" என்று கேட்டாள்.

மீனாக்ஷி;—"மாப்பிள்ளையை நீ யின்னும் விசாரிக்கவில்லையா? பள்ளியூர் ஜமீந்தார் பிள்ளையவாள் மகன்."

முத்தம்மாள்;—"மாப்பிள்ளை நல்லாபடித்து வாசித்துக் கெட்டிக்காரன் தானே?"

மீனாக்ஷி :—"கெட்டிக் காரனென்ன கெட்டிக்காரன்? கெட்டிக்காரத்தனமிருந்தால் வாய் நிறையுமா? வயிறு நிறையுமா? சொத்துமட்டும் எத்தனையோ லக்ஷத்துக்கிருக்குதாம். நம்பெண்ணோ வேலைவெட்டி முடியாதவள். அவளை அப்படி வளர்த்து விட்டோம், இனிமேல் படிப்பு வேணுமென்று இல்லாத ஒரு எளியவனுக்குக் கொடுத்

தால் அவள் வேலைவெட்டி செய்ய வேணும். நாலுபேரும் காலைச்சொல்வார்கள். அதுதான் இப்படி ஒன்றை முடிந்து போட்டோமானால் அவள்பாட்டுக்கு நம்வீடுபோலே சுக மாயிருக்கட்டுமென்று எண்ணினோம். அவளுடைய ஐயா வுக்கும் அதுதான் எண்ணம்."

முத்தம்மாள் :—"ஆமாம், அதுசரிதான். பொற் றொடிக்குப் பிரியந்தானா? அவள் குறிப்பை யறிந்தீர்களா?"

மீனாக்ஷி :—"அவள் குறிப்பென்ன? அவளுக்கு இப்போது என்ன தெரியும்? அவள் சொல்லுவாள் புத்தியில் லாமல். அந்தப்படியே செய்யமுடியுமா? அவளுடைய ஐயாவோ கோபக்காரர். உனக்குத் தெரியாதா?

முத்தம்மாள் :—"அப்படி யானால் அவளுக்குப் பிரிய மில்லையோ? சங்கதியைச் சொல்லேன்."

மீனாக்ஷி:—"பிரியமென்ன பிரியம். அவளுடைய நோக் கம் ஒருவிதம். நடவாத சங்கதியைப் பேசிப் பிரயோசன மென்ன?"

முத்தம்மாள் :—"நடக்கட்டும், அல்லது நடக்காமல் போகட்டும். அவள் நோக்கந்தா னென்ன?"

மீனாக்ஷி;—அவளுக்குச் சீராளன் நல்ல மாப்பிள்ளை யென்றும், வெள்ளையப்பன் அவ்வளவு திருப்தியில்லை யெ ன்றும் சொன்னாள். ஏனென்றால் அவன் கொஞ்சம் இங்கி லீசு கிங்கிலீசு படித்திருக்கிறான். கோட்டுக்கீட்டுப்போ ட்டுக்கொஞ்சம் முறுக்காயிருக்கிறு னல்லவா? அதுதான்.

ஐவேசு சத்தப் பூச்சியம். இருந்திருந்து அவனுக்கா கொடுக்கவேணுமென்று நான் நினைக்கிறேன். அந்தப்பிள்ளைக்கு இப்போது என்ன தெரியும்? நாளை வயிறு காய்ந்தால் தெரியும்."

பொற்றொடி பாட்டியின் பின்னாலேயேவந்து இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்து, தன் தாயுடைய மடமையான அபிப்பிராயங்களுக்கு மிகவும் வருந்திப்பின்பு அடங்காக் கோபங்கொண்டு இனி என்ன வந்தாலும் வரட்டுமென்று தீர்மானித்துக்கொண்டு சொல்லுகிறாள்:—

"அம்மா நீ பேசுவது எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. வயிறாரச் சாப்பிட்டாற் போதுமா? நாயும் வயிறு வளர்க்கிறது, பேயும் வயிறுவளர்க்கிறது, தாசியும் வயிறு வளர்க்கிறாள். மனமொத்த நாயகரோடு எள்ளு மெண்ணெயும் போல வாழ்ந்து, தர்மவழியில் இல்லறம் நடத்துவதுதான் பெரிதேயன்றி வயிறு நிறையச் சாப்பிட்டால் மட்டும் போதாது. அம்மா! நீ அப்பா திருத்தொண்டர் பெரியபுராணம் வாசிக்கக் கேட்டிருக்கிறாயே. அன்றைக்கு நான் திருவள்ளுவர் சரித்திரம் வாசித்ததையும் கேட்டாயே. அதிலெல்லாம் உத்தமிகளென்று புகழ்ந்து கொண்டாடப்பட்ட பெண்களிருக்கிறார்களே, அவர்கள் தங்களுடைய பர்த்தாக்களைப் பணக்காரரென்றெண்ணி மதித்தார்களா? அல்லது அவர்களுடைய ஒழுக்கத்தை யெண்ணி மதித்தார்களா? திருவள்ளுவருக்கும் திருத்தொண்டர் முதலியவருக்கும் எத்தனை லக்ஷம் ரூபாய் சொத்துண்டு? பணம் பணமென்று வாயைத் திறந்துகொண்டு இப்பொழுதுள்ள சில

பாழாவார் தங்கள் பெண்களைக் கெடுத்து நாசமாக்கினது போதாதா? என்னையு மப்படித்தானா நாசமாக்க நினைத்தாய்? இதற்கோ என்னை வளர்த்தாய்? என்னை இப்படிச் செய்வதிலும் பிறந்த அன்றைக்கே பேய்க்கு இரையாக்கி விடலாமே. நீ எனக்குத் தாயன்று. சத்துருவே யாவாய். உலகத்தில் மாமியார் கொடுமை செய்வதாயும், தாய்மார் அருமை செய்வதாயும் சொல்வது சுத்தப்பொய். இந்தப் பணப்பேய் பிடித்த காலத்தில் பெண்களுக்குத் தாயும் தகப்பனுமே யமனா யிருக்கிறார்கள் அல்லாமல் மாமியுமல்ல, மாமனுமல்ல. ஆனால் ஒன்றுமட்டும் திண்ணமாய் எண்ணிக் கொள். நீ சொன்னாலும் சரி, உன்னுடைய அப்பாவும், தாத்தாவும் சேர்ந்து சொன்னாலும் சரி, காரியம் நடவாது. கவர்மெண்டு இங்கிலீஷ் கவர்மெண்டு என்பது ஞாபகத்தில் இருக்கட்டும் 'சாகத்துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்காலளவு', 'மானத்துக்கஞ்சி எருமைக்கன்றைச் சாகக் கொடுக்கும்' வழக்கம் என்னிடம் இல்லை'' என்றிப்படிப் பேசித் தர்க்கஞ்செய்யும் பொழுது தகப்பனார் வந்து விட்டார்.

இதையறிந்த போற்றேடி புலியைக்கண்ட மான்போலவும், பூனையைக்கண்ட கிளிபோலவும், போலீசாரைக் கண்ட ஜட்காக் காரனைப் போலவும், பயந்து ஒடுங்கிப் பேசா திருந்தாள். உடனே பிரபு, "ஆமா நாயே, உனக்கு இவ்வளவு வாய்மதம் வந்துவிட்டதா? உன்பேரில் குற்றமில்லை. உன்னை அருமையாய்ப் படிக்கவைத்தேனே நான் மடையன். என்பேரி லல்லவா குற்றம். நல்லது. என்ன

வந்தாலும் சரி. என் மானத்தையும், கௌரவத்தையும், நீ கெடுத்து 'இன்னார் மகள் இப்படி வாய் பேசுகிறாளாம்' என்று பலரும் கேலி செய்யும்படி ஆக்கிவிட்டாயல்லவா? நல்லதிருக்கட்டும். உன்னை அந்த வெள்ளையப்பன் காலிலேயே கட்டுகிறேன்; நீதான் என்ன செய்கிறாய் பார்ப்போம். இனி ஏதாவது பேசினால் தக்க சிக்ஷை செய்வேன். (பின்னும் பாட்டியைப் பார்த்து) பாட்டி! நீதான் சொல். ஒரு மாப்பிள்ளைக்கென்று நிச்சய தாம்பூலம் செய்தபிறகு ஒரு பெண்ணைப்பெற்ற கழுதை இவள் இப்படிப் பேசிக்கொண்டும், அழுதுகொண்டும் இருந்தால் அந்த மனுஷன் மாப்பிள்ளை இதையெல்லாம் கேட்டால் என்ன நினைக்க மாட்டார்? சொல்லு பாட்டி, என்ன மண் போல் இருக்கிறாய்." என்று முடித்தார்.

இரண்டாவது அத்தியாயம்.

காதற் கடிதங்கள்.

இதைக்கேட்ட பொற்றொடி "இனி இவர் நமக்குத் தகப்பனுமல்லர்; நாம் அவருக்கு மகளுமல்ல. நம்முயிரை வாங்கவந்த யமன்தான்" என்று தீர்மானஞ்செய்து கொண்டு, மனந்துணிந்து சொல்லுகின்றாள்:—"அப்பா! எனக்கு விவாகமே வேண்டாம், விவாகத்துக்கு வேண்டிய முயற்சியும் செய்ய வேண்டாம். நான் ஒன்றும் பேசவு

யில்லை. இறந்துபோகிறேன். நான் இருந்ததினால் அல்லவா இத்தனை சங்கடம்" என்றாள்.

மேடைப்பிள்ளை:—(இதைக்கேட்டு) "இப்படிப்பட்ட பெண் இருந்தாலும் ஒன்று போனதுதான்; இறந்தாலும் ஒன்று போனதானே. அப்படியும் சற்றே பயங் காட்டுகிறீயா?" என்றார்.

இது இப்படியிருக்க ஸ்ரீராமனோ இந்த வீட்டில் நடந்த விஷயங்களையும், பொற்கொடி தன்மீது அன்பு கொண்டிருத்தலையும் அறிந்து "ஐயோ ஜகதீசா! இதுவும் உன் திருவிளையாட்டோ? உலகத்தில் ஜனங்களையும் படைத்து அவர்களுக்கு எத்தனை துன்பங்களையும் கொடுத்தாய்? இது உன் கருணைக்கு அழகோ? உலகத்தில் ஒரு பெண்ணை ஒரு ஆடவனுக்கு மணஞ்செய்தல் அவ்விருவருடைய சுகத்துக்கேயன்றிப் பெற்றவர்களுடைய சுகத்துக்கும், மற்றவர்களுடைய சுகத்துக்கு மல்லவே? அப்படியிருக்க, மாதுகண்மணியாகிய பொற்கொடியின் தகப்பன் இருக்கின்றானே—அந்த மடையன்—அவனுக்கு அப்படியேன் புத்திபோனது. அம்மங்கை என்மீது காதல் கொள்வதற்குரிய சிறந்த குணங்கள் என்னிடம் ஒன்றுமில்லாவிட்டாலும், என்னையும் என் கல்வி யொழுக்கத்தையும் பெரிதாய் மதித்தாளல்லவா? அந்தமட்டிலும் அவள் சிறந்த விவேகியும் ஒழுக்கவதியுமாகவே யிருப்பாள் என்பதில் எள்ளளவும் சந்தேக மில்லை. ஆகையால் நான் விவாகஞ் செய்தால் எவ்விதமாயாவது அவளையே செய்வேன். இல்லாவிடின் இப்படிப்பட்ட அரும் பெண்மணியை விட்டுவிட்டு நாயையும் பேயையும் கட்டியழுவதிலும் சந்நியாசியாகி உல-

குக்கு நன்மை புரிவேன். அதுவுமியலாவிடின் இறப்பேன். ஆனால், பொற்றொடியோ பெண், அவள் மனத்தை மட்டும்கட்டுப்படுத்துவாளன்றி வேறேது செய்வாள்? ஆகையால் இதுவிஷயத்தில் நானே முயலவேண்டும்" என்று தீர்மானஞ் செய்துகொண்டு இன்னும் யோசிக்கிறான்:—"ஐயோ தெய்வமே! யானேது செய்வேன்! எனது கண்மணியாகிய பொற்றொடி என்னைப் பொருட்டா யெண்ணி என்னை மணந்தாலன்றி உயிர் வைத்திரேன் என்று சொல்லுகிறாளே. அவள் கருத்துக்கு விரோதமாய் அவளை இன்னொருவன் விவாகஞ் செய்ய நான் கண்ணாலே பார்ப்பேனோ காதால் கேட்பேனோ? மனம் சகிக்குமா? அப்படி நான் மனஞ் சகித்திருந்துவிட்டாலும் அவள் மனம் வருந்துமே. உயிரைத் துறப்பாளே; அப்பாவம என்னையன்றோ சாரும்? இதை யாரிடம் சொல்வேன்? வெளிக்குத் தெரிந்தால் அந்த வெள்ளையப்பன் என்னைக் கொன்றாலும் கொன்றுவிடுவானே. யான் பொற்றொடியை விவாகஞ்செய்ய முடியாவிட்டால், வேறு ஒருவரையும் விவாகஞ்செய்யாமல் சந்நியாசியானாலும், எனக்குக் கேள்வியு மில்லை, கேட்பாருமில்லை. என் பாடு எப்படியானாலுமாகிறது. அவளுடைய கதி அதோகதியாய்ப் போகுமே. இதற்கு உபாயம் என்ன? எனது சிறிய மூளைக்கு ஒன்றும் தட்டுப்படவில்லையே. ஆனால் ஒரு காரியம் செய்வோம். இரகசியமாய் ஒருகடிதமெழுதிப் பொற்றொடிக் கனுப்புவோம். அவள் என்ன யோசனை சொல்வாளோ அப்படிச் செய்வோம். ஒருவேளை அவளுக்கு இப்பொழுது கடித மனுப்பினால், என்னை ஒழுக்கமில்லாதவனென்றும், போக்கிரி யென்றும் நினைக்

துவிட்டால் என்ன செய்கிறது? அதனால் பதில் எழுதாமல் பேசாதிருந்துவிடுவாளோ என்னவோ? அவள் உத்தமியாகையால் புருஷருக்கு எழுதப்படாதென்று இருந்துவிட்டாலும் நடத்தை அது குற்றமல்லவா? ஆனால் அவளை நம்மை அப்படி நினைத்துக் கழித்துவிட்டால் அதைப் பற்றிப் பரவா யில்லை. எழுதுவோம்" என்று துணிந்து எழுதுகின்றான்:—

"எனதுயிர்க் குயிராய கண்மணி!

உனக்கு, உன்னைக் கனவிலும் மறவாக் காதலன் எழுதும் கடிதம்: எல்லாமறிந்தேன். என்னாலாக வேண்டியதென்னவென் றெழுதினால் அவ்வாறு செய்யக்காத்திருக்கிறேன். எனது உடலும், உயிரும், மனமும், வாழ்க்கையும், பொன்னும், பொருளும் ஆகிய எல்லாம் உன்னுடையதேயன்றி எனக்கிவ்வுலகில் ஒரு பற்றுமில்லை. நீ மகிழ்தலே எனக்கு மகிழ்ச்சி; நீ வாழ்தலே எனது வாழ்க்கை; நீ வருந்தலே எனது வருத்தம்; உனது மரணமே எனது மரணம். இதில் அணுவளவும் ஐயம் வேண்டாம்; சத்தியம். சத்தியம். சத்தியம். வேறு விரித்தெழுத வறியேன்.

இங்ஙனம்,

உனது மனத்தினில்வாழும்,

மணாளன்."

என்று எழுதிமேற்படி பாட்டியம்மாளைக் கண்டு, அவள் மனத்தையும் அவள் பொற்றொடியின் மீது அன்புள்ளவளெனவும் தெரிந்துகொண்டு தெய்வமேதுணையென்றுநம்பி அவள் மூலமாய்க் கொடுத்தனுப்பினான். கடிதமும் பொற்றொடி கையிற் கிடைத்தது.

சீராளனது கடிதத்தைப் பார்த்த பொற்றேடி தனக்குள் எண்ணுகின்றாள் :—"ஐயோ, இவ்வுலகத்தில் பெண்ணொன்று பிறந்தவர்களுள் என்னைப்போல் துர்ப்பாக்கியமுள்ளவருண்டா? என்னைப்போல் பாவிகளுண்டா? என்னைப்போல் படித்துப் படித்துப் பாழானருண்டா? ஐயோ தெய்வமே! அடுத்த வீட்டிலுள்ளவர் நமக்குக் கேடு செய்தால் நமது பெற்றோரிடம் சொல்லலாம். பெற்றோரே நம்மை இவ்வாறு பாழுங் கிணற்றில் தள்ள வேண்டுமென்று வழி பார்க்கும் பொழுது இதை யாரிடம் சொல்வேன்! ஏ ஜெகதீசா! நீ தானொருவன் இருக்கின்றாயா இல்லையா! யான் படும் பாட்டெல்லாம் உனக்கு விளையாட்டாயிருக்கின்றதோ? இப்பாழுலகில் பெண்களை ஏன் படைத்தாய்? படைத்தாலும் வேறு தேசத்தில் படையாமல் இவ்விடத்திலா படைக்க வேண்டும்? அதுவும் இந்த நாட்டிலா? அப்படியே படைத்தாலும் இப்பாவிப் பெண்களுக்குக் காதல் என்னும் ஓர் ஆசையை ஏன் படைத்தாய்! இந்தக் குடிகெடுத்த காதலன்றோ என்னை வாட்டுகின்றது! ஐயோ! நான் இவ்வாறு புலம்பிப் புலம்பி யழப் படுத்தேனே யன்றி நினைத்ததை முடிக்கும் வகையறிந்தேனில்லையே. இதை யாரிடஞ் சொல்வேன்! ஊர் ஜனங்களும் இன்னாள் இப்படிச் செய்தாள் இன்னான் இப்படிப் போகின்றான் என்று கேலி செய்வார்களே யன்றி நம்மை அனுதாபிக்கப் போகிறார்களா! அல்லது எந்த உதவிசெய்யப் போகிறார்களா? நமக்குக் கேடுசெய்கிறவர் என் தாயானாலென்ன, தகப்பனானாலென்ன அவருடைய

முகத்திலும் விழிக்கப்படுமா? நல்லது, இனி யோசனை
ஒன்றும் தோன்றவில்லையே. எனது காதலனுக்கு என்ன
பதில் எழுதுவேன்? ஏது மறுமொழி சொல்வேன்? எழு
தாமற் பேசா திருப்பதினும் என்னை எப்படி நினைப்பாரோ
தெரியவில்லையே. ஏதாவது எழுதினாலும் வெளிக்குத்
தெரிந்தால் பெரிய குற்றமாய்ப் பேசுவார்களே. இப்படி
ஊராருக்குப் பயந்து எழுதாமலிருந்துவிட்டால் எனது
அன்பரும் பேசாது இருந்து விடுவாரோ என்னவோ!
இருந்துவிட்டால், என்னை இந்தப் பாழாவனுக்குக் கட்டி
விடுவார்களே? அவனோடு நான் எப்படிக் காலம் கழிப்பே
ன்? மனத்திலன்பில்லாமல் வெளிக்குப் பசையுள்ளவள்
போல பாசாங்கு செய்து பகட்டவும் எனக்குத் தெரியா
தே. எல்லாம் படித்தவள் அதைப் படிக்க மறந்துவிட்டே
னே. அப்படியே இந்த வெள்ளையப்பனுக்கென்னை மண
ந்து அவனோடு காலங் கழிக்கும்படியும் நேரிட்டு நானும்
வெளிவேஷம் போட்டு அவன்மீது அன்புள்ளவள் போல
நடித்தாலும், என் பாவிமனமானது இந்தச் சீராளச் செல்
வரை மறக்குமா? அவரை இனி எந்தப் பிறப்பில் மணந்து
வாழ்வேன்? அவர்மீது நான் காதல்கொண்டது இன்
றைக்கு நேற்றைக்கல்லவே. சுமார் சென்ற ஐந்து வருஷ
காலமாய் அவரன்றோ என்மனதில் குடிபுகுந்திருக்கின்றார்!
ஏ மனமே! நானொரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்
வழியில் ஒரு ஜட்கா வண்டிக்காரன் என்மேல் வண்டியை
விடக்கூடிய நிலைமையிலிருக்க அப்பொழுது தாமுயிரைப்
பெரிதா யெண்ணாமல் ஓடிவந்து, என்னுயிரைக் காப்
பாற்றி வண்டியை விலக்கினரோ அந்த மகானுபாவர்.

அந்த நன்மையை யெல்லாம் மறந்துவிட்டாயோ பாவி மனமே! ஏ பாழான மனமே! அன்று நான் பன்னிரண்டு வயதுள்ள சிறுமியாயிருந்தாலும் அவருடைய கரம் என்மேற் பட்டதே. அக் காலத்தில் அல்லவா கொண்டேன் இந்தக்காதல்! அவர் அன்று பரிஹாஸமாக "ஏ பொற்றொடி! உன்னை நான் வண்டியினின்று தப்பித்து விட்டதற்கு என்ன தருவாய்" என்று கேட்டாரே. நானும் அப்பொழுது மண்போலிருந்துவிடாமல், "மாமா! நீங்கள் விரும்பியது தருவேன்" என்றேனே. அவரும் "நிச்சயமா?" என்றதற்கு "அதற்கும் தடையா?" என்று சிறுபிள்ளைத் தனமாய் உளறிவிட்டு வந்தேனே. இதை எனது அம்மையு மறிவாளே. இந்தப் பழங்கதை யெல்லாம் நினைக்க நினைக்க வயிறெரிகிறதே. நல்லது; இதையெல்லாமறந்து, விதிப்படி நடக்கிறது, எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி யிட்டுப் பயனென்ன" என்று எண்ணி மனம் சகித்து வெள்ளையப்பனையே மணந்தாலும், வெளிப் பார்வைக்கு அவனை மணவாளனாகக்கொண்டு மனதில் சதா சீராமனைத் தியானித்துக் கொண்டிருந்தாலும், அது நமது கற்புக்கு அழகன்றே. தன்னைத் தொட்டு மணந்தவனிருக்க இன்னொருவனை மனத்தால் எண்ணினாலும் கற்புக் கழகன்று எனச் சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறதே. ஆகவே, நான் பெற்றோருடைய சொற்படி நடந்தால் கற்புத் தப்பின்மையாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இனி இவ்வளவெல்லாம் படித்தும் நாம் கற்பில்லாத் தன்னியாய் உலகில் வாழ்வதி லென்ன பயன்; அதிலும் இறத்தலன்றோ உத்தமம்? உலகத்தில் பெண்ணாய்ப் பிறந்தவர்களு

க்கு கற்பைவிட மேலான ஆபரணம் உண்டா! மேலான பெருமையுண்டா? 'பிரபுக்களுக்கும் இராஜாக்களுக்கும் படே அதிகாரிகளுக்கும் மனைவியா யிருக்கின்றேன்' என்று கர்வங்கொண்டு ஆயிரக்கணக்கான ஆபரணஞ்சூடி வெளிப்பகட்டுச் செய்வதிலும் தன் மனமொத்த நாயகனோடு கூழைக் குடித்துக் கொண்டாவது அல்லது பட்டினிகிடந்தாவது கற்பைக் காத்தலன்றோ விசேஷம்! எமது சந்திரமதிமேநளிபார், காரைக்காலம்மையார் முதலியவர்களின் திவ்யசரித்திரங்களை வாசித்தும் நான் கற்பில்லாதவளாய்ப் போகும்படி நேரிடுமோ என்னவோ தெரியவில்லையே? ஐயோ, அப்படியுமா என் தலையில் எழுதி யிருக்கிறது! ஆனால் இதுமட்டும் நிச்சயம். வெள்ளையப்பனை மணந்தால் நான் கெட்டே போவேன். சீராளச்செல்வரும் என் மனத்தைவிட்டகலார். ஆகவே எனது ஒழுக்கமும் திட்டமாய்ப்போய்விடும். அதாவது, இரண்டு காரியம் ஏற்படுகிறது: பெற்றோருக்குப் பயந்து வெள்ளையப்பனை மணந்தால், எனது சகல சந்தோஷங்களும் போவதோடு கற்பும் போய்விடுகிறது. தெய்வத்துக்கும் பாவியாகிறோம். மறுமையில் நரகத்துக்கும் ஆளாய் விடுகிறோம். இதுவும் சாலாமல் நம்மைவிட்டுப் பிரிந்த சீராளரும் சந்நியாசியாகித் தவிப்பர். அந்தத் துக்கமும் என்னையே சாரும். உள்ளபடியே சந்நியாசியானால்மட்டும் அவருக்கு முத்தி கிடைக்குமே யன்றி என் பொருட்டு வெளிக்குத் துறவி வேஷம் போட்டு மனத்தில் என்னை எண்ணிக்கொண் டிருந்தால் அவருக்கும் நரகமும் அபகீர்த்தியும் கிடைக்கும். அந்தப் பாவமும் என்னையே சாரும். ஆனால் பெற்றோரையும்

ஊரார் வீண்பேச்சையும் தவிர்த்து எவ் வழியாலாவது எனது சீராளச்செல்வரை மணந்துவிட்டால் மேலே கூறிய ஒரு குற்றமும் ஏற்படாது. இம்மையில் எங்களுக்கிணையில்லையென்று பூவும் மணமும்போலும், எள்ளும் எண்ணெயும்போலும் இரண்டறக் கலந்து மகிழலாம். இல்லற தர்மத்தினின்று இம்மியும் வழுவாமல் கற்பரசியாய் வாழலாம். மறுமையில் எமது நடைக்கும் புண்ணியத்துக்கு மிரங்கி, இறையவனும் நற்கதி அளிப்பர். ஆனல் ஊரிலுள்ளவர்கள் மட்டும் ஒரு குற்றஞ்சொல்வார்கள். அதாவது, இன்னூர் மகள் பொற்ருெடி, சீராளனேடு ஓடிப்போய்விட்டாள் என்று சொல்லுவார்கள். இதைத் தவிர வேறேயார் என்ன செய்து போடுவார்கள்? வழக்கு முதலியது வந்தாலும் கவர்ண்மெண்டாரும் நமக்கு உதவியாய் நம்முடைய பக்ஷத்திலிருப்பார்களே யன்றி வேறில்லை. ஸ்திரீயும் புருஷனும் மனமொத்து விவாகஞ் செய்துகொள்ளும் பொழுது ஊடே கிடக்கிற கட்டைகள் பேசாமற் கிடக்க வேண்டியது தானேயென்று அறிவுள்ளவர்கள் எவர்களும் சொல்லுவார்கள். அறிவில்லாத மூடர்கள் மட்டும் பல்லைக் காட்டிப் பரிஹாஸம் செய்வார்கள். அதைப் பற்றி நமக்கு வரவுமில்லை, செலவு மில்லை. அதுவு மன்றி ஊராருடைய கேலிக்குப் பயந்து மனமில்லாதவனுக்குக் கழுத்துக் கொடுத்துவிட்டுப் பின்பு சற்பழிவு முதலிய துர்க்கிருத்தியம் செய்து நம்முடைய பெயரைக் கெடுத்துக்கொள்வதிலும், இப்படிச் செய்வது எத்தனையோ மேல். இதனல் நம்முடைய ஒழுக்கத்துக்குங் குற்றமில்லை. ஏனெனில், நாம் ஒரு மணாளனைத் தொட்டபின் வேருெருவனை நினைத்தால் மட்டும்

குற்றமேயன்றி, ஒரு பாவமுமறியாத கன்னிப்பருவத்தில் எனது சீராளத் தேவரை மனத்தில் ஐந்துவருஷக் காலமாய் தியானித்தேன். அதுபோலவரும் என்னை விரும்பி வந்தார். அதுவே விவாகம் போலாயிற்று. தாலி கட்டுவதுதான் விவாகமா? இருவர் மனமும் ஒன்றாய்க் கலந்து விடுவதன்றோ விவாகம். ஆகவே எனக்கும் அவருக்கும் விவாகம் முன்னமே நடந்துவிட்டது. அவரே எனது மணவாளர். நானே அவருடைய மனைவி. இனி யார் என்ன சொன்னாலெனக் கென்ன? இந்தப் பெற்றோராகிய பாவிகளை விட்டுத் தப்பும் வகையையே நாடவேண்டும். அப்படி தப்ப வழியில்லையானால் நமக்கு மரணமே கதி. இதுவே உத்தமம், இதுவே சத்தியம்" என்று தீர்மானித்து எழுதுகின்றாள் கடிதம்.

"எனது ஆருயிரினும் ஆயிரமுறையரிய மெய்ந்நண்பர் சீராளச் செல்வீர்!

தங்களுடைய திவ்ய சரணாரவிந்தங்களுக்குச் சதா அடிமையென மனதிற்கொண்டொழுகும் பொற்றொடி எழுதும் விண்ணப்பம்:—

தாங்கள் கருணையோ டெழுதிய திருமுகங்கண்டு தங்கள் திருமுகத்தைக் கண்டாற்போல் மகிழ்ந்தேன். யானிப்போ திருக்கும் நிலைமையைத் தாங்களேயறிவீர்கள். விரித்தெழுதல் வீண். இரண்டு பொருள்கள் என் முன்னிற்கின்றன. ஒன்று சாயுச்சியபதம். மற்றொன்று ரௌரவாதி நரகம். சாயுச்சியபதமாவது தங்கள் சரணங்களை யடைந்து தங்களோடிரண்டறக் கலத்தல். மற்-

றென்று தங்களைவிட்டு நீங்கி வேற்றூராகிய யமபடர்கள் கைப்பட்டழுந்தித் தன்னிலைதவறி, மறுமையிலும் நிரயிடைப்பட்டு வருந்தி யுழலல். ஆனால் யானிவ்வாறு எழுதியதை நினைத்து என்னியல்பினைக் குறித்து நகுதல் கூடாது. ஏனெனில், தாங்கள் என்னைத் தொட்டு மணந்திராவிடினும் தங்கள் திருக்கரத்தால் வரையப்பட்ட திருமுகத்தையே திருமாங்கல்யமாகப் பாவித்தேன். தாங்களெனக்கு முன்னொருக்கால் செய்த பேருதவியையே நிச்சய தாம்பூலமாக வெண்ணினேன். ஆதலால் வீண்மக்கள் வீண்டம்பஞ் செய்துகொட்டிமுழக்கி ஆடிப் பாடிச் செய்யும் வீண்மணத்தினும், நாமிருவரும் செய்துகொண்ட மாண்மணமே பெண்மணமாயிற்று. தாங்களென்னையும் என்னியல்பையும் எவ்வாறு கொண்டிருப்பினும், நான் தங்களையே நாயகராக நிச்சயித்தேன். உலக மெய்ப்ப வெளிமண முடியாவிடினும், நான், என் மனத்துள், தங்கள் மனைவியெனவே எண்ணுகின்றேன். சாதாரண ஜனங்கள் தட்டானைக்கொண்டு பொன்னாற் செய்த தாலியை யணிந்து அதுவே தமது நாயகராலிடப்பட்ட மங்கல சின்னமெனக் கொள்வர். யானோ ரந்திமதிதேவியார் போன்று பிறர் கண்களுக்குத் தோன்றவில்லாத ஒரு மாங்கல்யம் புனைந்தேன். அது தாங்களென் மீதுகொண்ட அன்பே. அவ்வன்பெனும் மாங்கல்யம் கேவலம் கழுத்தென்னும் அவயவத்தை மட்டும் கட்டாது. என் உடல், பொருள், ஆவி மூன்றினையும் ஒருங்கே கட்டியது. இனி என்னை வேறு யாவரேனும் மணம்செய்ய விரும்பினும் முயலினும் அவர் 'பிறன்கடை நின்ற பேதையர்' ஆவர்.

"எனது பெற்றோரே என்னை வேற்றானை மணக்குமாறு தூண்டினும் அவரும், தம்மகளை சோர நாயகர்க் களித்துப் பொருளிட்டும் பாவிகளடையும் கதியையே யடைவர். இன்னும் மனத்தாலும் வாக்காலும் தங்களை நாயக ரெனக் கொண்ட யானே, காயத்தால் பிறிதொருவனை மணக்க நேரினும், அது சோரமேயன்றி மெய்யான மணமன்று. ஆதலின், பிராமணரும் குருக்களும் கூடி மணவறையிலிருந்து ஓமம் வளர்த்தாலும், உறவினரனைவரும் கூடி மணவறையைச் சுற்றி ஓலமிட்டாலும், சங்கீதங்களும் டம்ப கோஷங்களும் செவியடைக்க முழங்கினாலும், வதூவரர்களிருவரும் உள்ளன்போடு செய்து கொள்ளாத மணம் மணமேயன்று. ஆதலின், காதலன் காதலியிருவர் கருத்தும் இருமைவிட்டு ஒருமைப்பட்டு, ஒன்றினுமொன்று ஒன்றி, ஜகத்தும் பிரமமும் போற் கலத்தலே மெய்ம்மணம். மற்றப்போலி மணங்கள் அனைத்தும் பொய்ம்மணமே. அதுபற்றியே, ஜகத்தென்றும், மாயை என்றும், பிரபஞ்சமென்றும் சொல்லப்படும் இத்தோற்றத்தைச் சத்தியாகிய ஒரு பெண்ணெனவும், அதனுள்ளிரண்டறக் கலந்தும், அதனுள் ஒடுங்கியும் அடங்கியும், அதனை இயற்றியும் முயற்றியும் விளங்கும் பிரமத்தைச் சிவமாகிய ஒரு புருஷனென்றும் தத்துவ நூலார் சொல்வர். ஆகவே, வதூவரர் மனம் இரண்டும் சக்தியும் சிவமும்போற் கலந்தாலன்றி அவர்களிடையில் நிகழ்ந்த விவாகம் உண்மை விவாகம் ஆகாது. அப்போலி விவாகத்துக்கும், நாடகத்தில் புருஷன் எனவும், பெண் எனவும் வேஷமிட்டாடிப் பார்த்தோரைக் களிக்கச்செய்யும் விளையாட்டு விவாகத்துக்கும், எள்ளத்தனையும் பேதமின்று.

இருக்கவந்தேனோ, வீட்டுக்குவிக் கோரும் புலியும்போ லர். புலியும் எலியும்போலும் ஒருவர்க்கொருவர் முரண் பட்டுப் பார்க்கிறதும் கெட்டோதும நகைக்கும்படி வாழ்கி ன்றனரே, சில ஸ்திரீபுருஷர். அவர்களெல்லாரும் மேற் படிய போகிலே ஸ்வாகதக் கொள்கிறவரே யன்றி பெண்மையைச் செய்தாரல்லர் என்பதில் இன்னமும் சந்தேக மின்று. இத்தன்மையுடைய ஸ்த்ரீகள், இப் பெற்றோர்களும், மனைக்கும் பயந்து பொய்மையைச் செய்யக்கடவேனோ? அவ்வாறு வராக்கும் உற்றார்க்கும் பயந்து மனமில்லாதவனை மணந்து கொண்டு கெட்டழிந்துபோவதிலும் என் ஆயிளை ஒரு கோ கைதன் மார்தவன் துறையில் விரைவாக்கப் போறேன். உலகிற் பிறந்துள்ள கல்வியுள்ள பெற்றோருடைய வசிற்றில் அதிர்ப்போன இன்றைக்கு பிறப்பிலேயும் எனது நாளைச் செல்வராய கடவுளையே மணந்து வாழ்வேன். இது அல்லாத இறக்கைக் துறையில் இறங்குவேன். வணக்கம் இங்ஙனம்.

கோபாலபுரம். }

இங்ஙனம்,
தங்கள் மெய்யடியாள்,
பொற்கொடி."

பக்கா ஸ்வாமிகள்

போற்றெடி எழுதியனுப்பிய கடிதத்தை முத்தம்மாள் மூலமாய்ப் பெற்ற சீராளன் "ஆ! ஆ! இந்தக்காலத்தில் இவ்வளவு பொறிவும் திடசித்தமும் வாய்ந்த பெண்களு மிருக்கின்றார்களோ? நான் அவளைச் சாதாரணமான பெண்ணெனவும் கல்வியிலும் குணத்திலும் சிறிது சிறந்தவளெனவும் எண்ணியிருந்தேனே யன்றி இவ்வளவு உயர்ந்த இயல்பையும் ஒப்புயர்வில்லா நாகரீகப் போக்கையு முடைய பெரியாள் என்று கனவிலுமறியேன். அன்றியும், அவள்பேரில் நான் காதல் கொண்டிருந்தது பட்டிட்டே முன் எனக்குத் தெரியுமே யன்றி அவள் என்பேரில் இவ்வளவு பக்ஷம் வைத்திருக்கின்றாள் எனச் சமீப காலத்துக்குள் தான் தெரிய வந்தது." என்று இவ்வாறாகத் தனக்குட் சொல்லிக்கொண்டும், அவளனுப்பிய கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப்படித்து பார்த்துக்கொண்டும் அதை மடிப்பதும் பின்னும் விரிப்பதுமாயிருக்கும்பொழுது, அவனுக்கு ஆதி குருவானவரும், ஆங்கிலம், திராவிடம், ஆரியம் முதலிய பலமொழிகளில் தேர்ந்தவரும், வைத்திய கணித சாஸ்திரங்களில் நிபுணரும், அவ்வூரில்தானே அக்காலத்தில் வசித்துக்கொண்டு வந்தவருமாகிய "பக்கா ஸ்வாமிகள்" என்னும் ஒருபெரியவர் வந்துவிட்டார். (அவருக்கு இந்தச் சீராளன், போற்றெடி யிவருடைய விவாக சம்பந்தமாய் நிகழும் சமாசாரங்களெல்லாம் கேள்வியினல் தெரியவரும்.)

சாமிகள்:—"அப்பா, சீராளா! என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

சீராளன்:—"சுவாமி! நமஸ்காரம். உள்ளே வரட்டும்."

சாமிகள்:—"ஏதப்பா! ஒரு வாரமாகக் காணவில்லை? முன்னெல்லாம் அடிக்கடி வந்து கொண்டிருப்பாயே?"

சீராளன்:—"கொஞ்சம் ஜோலியாயிருந்து விட்டேன். அதுதான் வரவில்லை."

சாமிகள்:—"ஏது கடிதம் உன்னுடைய அம்மா எழுதியிருக்கிறாளா?"

சீராளன்:—"இல்லை. இல்லை. வேறொரு சிநேகிதனுடைய கடிதம். தாயார் சிதம்பரத்துக்குப் போய்விட்டு வந்து விட்டாளே சுவாமிகளுக்குத் தெரியாதா?"

சாமிகள்:—"அப்படியா? எனக்குத் தெரியாது. உன் தாயார் சிதம்பரம் போனது பெண் விஷயமாய்த்தானே?"

சீராளன்:—"ஆமாம். அப்படித்தான் உத்தேசித்துப் போனாள். அந்தப் பெண் விஷயம் எனக்கு அந்தரங்கத்தில் சம்மதமில்லை. அதுபோலவே அவளும் பெண் பிடிக்கவில்லையென்று வந்து விட்டாள்."

சாமிகள்:—"பின் உங்களிரண்டுபேருக்கும் எந்தப் பெண்தான் பிடிக்கப்போகிறது? இப்படி நாளைக் கடத்திக்கொண்டுபோனால் விவாகம் எப்பொழுது நடக்கும்? உனக்கென்ன வயது காணாதா?"

சீராளன்:—"அதென்ன சாமி! அப்படி உத்தரவு செய்கிறது. பைதாய் விட்டதென்று, கழுதையைப் பிடித்துக் கட்டிக்கொள்வார்களா!"

சாமிகள்:—"கழுதையைக் கட்டிக்கொள்ளும்படி சொல்லவில்லையே. உனக்குத்தான் எந்தப்பெண் பிடித்திருக்கிறது? அதைத்தான் சொல்."

சீராளன்:—"எனக்குப் பிடித்திருக்கிறபெண் அப்பாவுக்குப்பிடிக்கவில்லை. அவருக்கு பிடிக்கிறபெண் எனக்குப்பிடிக்கவில்லை, இரண்டுபேருக்கும் பிடித்திருக்கிற பெண்ணை பெண் வீட்டுக்காரர் தரமாட்டோமென்கிறார்கள், இதற்கென்ன செய்கிறது?"

சாமிகள்:—"இரண்டு பேருக்கும் பிடித்திருக்கிற பெண் எது?"

சீராளன்:—"அப்படி ஒரு பெண் இருக்கிறது. அது எல்லாருக்கும் பிடித்திருக்கிறது, பெண்வீட்டுக்காரருக்கு இஷ்டமில்லை."

சாமிகள்:—"அப்படி யார்? எந்த ஊர்?"

சீராளன்:—"ஊரெல்லாஞ் சமீபந்தான்——"

சாமிகள்:—"பெண் நீ நினைக்கிறபடி நன்றாய்ப் படித்த பெண் தானா?"

சீராளன்:—"படிப்பா? அந்தப்பெண்ணைப்பற்றி ஒரு குற்றமும் சொல்லமுடியாது. அதைப்போலே வேறே பெண் இந்த நாட்டிலேயே கிடையாது?"

சாமிகள்:—"நீயே நேரிற் பார்த்திருக்கிறாயா? அல்லது கேட்ட கேள்வியா?"

சீராளன்:—"நேரே பார்த்திருக்கிறேன், அதாவது இரண்டு மூன்று வருஷத்துக்கு முன். இப்பொழுது முன்னிருந்ததைப்பார்க்கிலும் பதின் மடங்கு விசேஷமாகவே இருக்கும். அந்தப்பெண் கிடைக்கும் பக்ஷத்தில் நான் அதிர்ஷ்டசாலிதான். அதற்குத் தடையே யில்லை."

சாமிகள்:—"அதென்ன அப்படி விசேஷமா! இன்னா ரென்று தான் சொல்லேன். என்னப்பா எனக்குத் தெரியாமலும் ஒரு இரகசியம் வைத்திருக்கிறாயோ?"

சீராளன்:—"இரகசியம் ஒன்றுமில்லை. பெரிய வீட்டுக் காரியம்."

சாமிகள்:—"பெரிய வீட்டுக்காரிய மென்றால் உனக்கெ ன்னத்துக்கு அந்த ஆசை?"

சீராளன்:—"அப்படிச் சொல்லப்படுமோ? முடியும் போல் தோன்றுகிறது. நமக்கு ஆதரவும் பெரும் உதவியுமிருந் தால் எப்படியும் முடித்து விடலாம். இப்போதெல்லாம் பணமுள்ளவருக்குத் தானே காலம்."

சாமிகள்:—"அது இன்னாரென்று தான் சொல்லேன் அப்பா. நான் யாரிடம் சொல்லப்போகிறேன்?"

சீராளன்:—"சொன்னால் சாமிகள் முடித்துக்கொடுக்க முடியுமோ?"

சாமிகள்:—"நீ சொல்வது கொஞ்சமும் பொருத்தமாயிருக் கிறதே! சாமியாரென்ற பேரோடு பெண் பேசப் போகச் சொல்லுகிறாயா?"

சீராளன்:—"பெண் பேசப் போகவேண்டாம். அவ்வி ஷயத்திற் சில யோஜனைகள் சொல்லி உதவி செய்தாற் [illegible]."

சாமிகள்.—"நல்லது அப்படியே ஆகட்டும். சங்கதியைச் சொல்."

சாமியாருக்கும் சீராளனுக்குமுள்ள அந்தரங்க இஷ்டம் பலமாயிருந்தபடியால் அவரிடம் நடந்தவற்றை எல்லாம் சொல்லுகிறான்.

[illegible]ராளன்:—"இப்பொழுது வெள்ளையப்பனுக்குப் பேசி முடிவாயிருக்கிறதல்லவா அந்தப்பெண்தான்."

சாமிகள்—"அந்தப்பெண்ணையா நினைத்துக்கொண்டிருக்கிறாய்? அது நிச்சய தாம்பூலமெல்லாம் முடிந்து விவாகத்துக்கும் முகூர்த்தம் வைத்தாய் விட்டதே. இனிமேல் முடியுமா! தவிரவும் அந்தப்பெண்ணினுடைய தகப்பனும் ஒரு விதமான பிடிவாதமுள்ளவனாயிற்றே."

சீராளன்:—"இன்[illegible] [illegible]. [illegible] க்கென்ன? வழி வேறேயிருக்கிறது" என்று சொல்லிக்கொண்[illegible] [illegible] எழுதியனுப்பிப் போற்றேடி [illegible] [illegible]தியிருப்பதையும் சொன்னான்.

சாமிகள்.—"அவள் எழுதிய கடிதமெங்கே? பார்ப்போம்."

சீராளன்:—"இதோ இருக்கிறது பார்க்கட்டும்" என்று கடிதத்தை எடுத்துக் கொடுக்க, கடிதத்தை வாசித்துப் பார்த்த,

சாமிகள்:—"ஆஹா! உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். நல்லது, இந்த விஷயத்தில் நான் சரியான முயற்சிசெய்து

எப்படியும் முடிக்கநினைக்கிறேன். முகூர்த்தத்திற்கு இன்னும் எட்டுநாள்தானிருக்கிறது. அதற்குள் எப்படியாவது முடிக்கவேண்டும். ஆனாலும் பார்ப்போம். இந்த விஷயத்தைப்பற்றி என்னைத்தவிர ஒருவருக்கும் தெரியப்படாது. உன் தாயாருக்குக்கூடத் தெரியக்கூடாது அதற்கொருவழி யிருக்கிறது. சாயங்காலம் சொல்லுகிறேன்" என்று புறப்பட்டார். சிராளனும் நல்லதென்று ஒத்துக்கொண்டான்.

இதை வாசிக்கும் கனவான்களும், கனவாட்டிகளும் இந்தபக்கா சாமியார் யாரோ என்று யோசிக்கக்கூடும். ஆனால் அவருடைய சரித்திரத்தை இங்கே எழுத முடியாது. சுருக்கமாகச்சொல்லும் பக்ஷத்தில் இவர் முன்னொரு மஹாராஜாவிடம் திவான் உத்தியோகத்திலிருந்து விட்டு, ஏதோ சில காரணங்களால் சாமியார் போல மாறுவேஷம் போட்டுக்கொண்டிருக்கிறார். இவரொரு பெரிய திவானென்பதும் பெரிய காரியங்களை யுக்தியாய் முடிப்பதில் மகா வல்லவரென்பதும், அவருடைய அந்தரங்க சிநேகிதருக்கும் சிஷ்யர்களுக்கும் மட்டுமே தெரியும், அவருடைய மகா சரித்திரம் ஒன்றுண்டு. அதை வாசிப்பவர்களுக்கு அவரைப்பற்றி எல்லாம் விளங்கவரும்.

இனி, இக்கோபாலபுரமென்னும் ஊருக்கருகில் ஆலவாய் என்னொரு பெரிய பட்டணமுண்டு. அதில் சப் ஜட்ஜ் உத்தியோகம் செய்துகொண்டிருந்தார் ஒரு ஐயர், அவர் பெயர் சத்திய ஸேயர். அவரும் மேற்சொன்ன ஜமீன்தாருக்குப் பழய மாணாக்கரும், அத்தியந்த நண்பருமாயிருந்தார். அன்றியும் அவர் அவ்வூரில் ஆசார சீர்திருத்த

சபை (Social Reform Association) என்று ஸ்தா
பித்து அதற்குத்தாமே சபா காரியதரிசியாகவு மிருந்தார்.

ஆகவே, அவர் இப்படிப்பட்ட அநீதியான விவாகங்
கள் நடப்பதற்குச் சம்மதிக்க மாட்டாரென்பது யாவரும்
யூகித்துக்கொள்ளக்கூடிய விஷயம். ஆதலால், சாமியார்
உடனே புறப்பட்டு சத்திய சீலராயரிடம் வந்து, சீராள
னது வரலாற்றையும் அவனுக்கும் பொற்கொடி யென்னும்
பெண்ணுக்கு மிடையில் நிகழும் வர்த்தமானங்களையும்
விரிவாய்ச்சொல்லி இவ்விஷயத்தில் இராயரவர்கள் மு
யற்சி எடுக்கவேண்டுமென்றும் கூறினார். இதைக்கேட்டு
மிகவும் ஆச்சரிய மடைந்த

ராயர்:—"ஸ்வாமிகளே! இவ்விஷயத்தைக் கேட்கும்
பொழுது என்மனமானது ஒருபக்கம் அளவில்லாத சந்
தோஷத்தை யடைகிறது; ஒருபக்கம் படபடவென்று
அடிக்கிறது. ஆயினும் இக்காலத்தில் ஸ்திரீகளுக்குள்
இவ்வளவு உயர்ந்த நாகரீகமும் தைரியமும் பெற்ற ஒரு
பெண்ணை நான் கண்டிலேன்; கேட்டிலேன். ஆனால் இ
ப்படிப்பட்ட முக்கியமான விஷயங்களில், நல்ல பதவியிலி
ருக்கிற நாமெல்லாம் உதவிசெய்யாவிட்டால் வேறு யார்
தான் உதவி செய்வார்கள்? ஆகையால் எந்த வழியாலா
வது அவ்விருவரையும் ஒன்று சேர்த்து விவாகமும் செய்ய
வேண்டியது நம்முடைய கடமை. இன்னும் அந்தச் சீரா
ளனென்பவர் திருமங்கலம் இந்து பாடசாலையில் உபாத்தி
யாயராயிருக்கிற விஷயமட்டும் எனக்குத்தெரியுமே தவிர,
வேறொன்றும் அவரைப்பற்றித் தெரியாது. அவர்
சென்ற வாரத்தில் "ஞானானந்தன்" என்னும் பத்திரிக்கை

யில் ஒரு விஷய மெழுதியிருந்ததையும் வாசித்திருக்கிறேன். அந்தப்பட்டிலும் அவர் மிகுந்த பக்திசாலியென்றே மதிக்க வேண்டியிருக்கிறது. அவருடைய அபிப்பிராயங்களையும் நான் மெச்சுகிறேன். ஆனால் அவரை, நான் நேரில் பார்த்துக்கொள்ள விரும்புகிறேன்'' என்று சொன்னார்.

அவ்வாறே, சுவாமியாரும் ராஜாவை யழைத்துக்கொண்டுபோய் சப்ஜட்ஜியிடம் பேட்டி செய்வித்துக்கொடுத்தார். இருவருமாக மேற்படி விஷயத்தைப்பற்றி இவ்வின்னபடி செய்வதென்று தீர்மானஞ் செய்துகொண்டார்கள். இதைத்தெரிந்துகொண்ட ராஜனுடைய சொந்த ஜில்லாக்காரகளும் வேண்டிய உதவிகள் செய்து தருவதாய் உறுதிகூறி ராஜனைத் தைரியப்படுத்தினார்கள். ராஜனுடைய [illegible] பதைத்தோய்ந்தது. ஆனால் இவ்விஷயம் பொன்னும் பொற்கொடிக்குத் தெரியவராது. அவளும் முத்தம்மாளையடைந்து, ''பாட்டி! நீ கடிதம் கொண்டு கொடுத்தாயே, அவர்கள் பதில் எழுதித்தரவில்லையா?'' என்று கேட்டாள்.

முத்தம்மாள்:—''அம்மா! நான் கடிதத்தைக்கொண்டு கொடுத்தேன். பதில் வேண்டுமென்று கேட்டேன். ''நாளைக்குத் தருவேன்'' என்று சொல்லிவிட்டான். என்னவோ உனக்கும் அவனுக்கும் கடவுள் முடிந்துபோட்டால் நடக்கும். அதற்காக வீண் கவலைப்பட்டு என்ன செய்யலாம்?'' என்று சொன்னாள்.

அதற்குள் நிச்சய தாம்பூலமும் ஆய்விட்டது. மாப்பிள்ளை வீட்டிற் கல்யாண மாகையினால் பெண்ணையுடையவன் வீட்டில் முகூர்த்தக்கால் முதலியது நட்டிப் பெரும்பொ

டான வேலைகளெல்லாம் நடக்க ஆரம்பித்துவிட்டன. சுமார் முப்பது ஆயிரம் ரூபாய் வரையில் கலியாணத்துக்குச் செலவிடப் போகிறதாய் ஊருக்குள் பேசிக்கொண்டார்கள். ஜனங்களும் "பொற்றேடி நல்ல யோகக்காரிதான்" என்று பேசிக்கொண்டார்கள். ஆனால் பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ் படிக்கிற பிள்ளைகளும், பெண்களும் மட்டும் வேறுவிதமாய்ப் பேசிக்கொண்டார்கள். "வெள்ளையப்பனுக்கு எத்தனை லட்ச ரூபாய்க்குச் சொத்திருந்தாலும் பொற்றேடிக்குப் புருஷன் அவனு!" என்பான் ஒரு பையன். "என்னமோ இந்த விவாகம் நடக்குமோ நடவாதோ? அநேகமாய் நடப்பது சந்தேகம்தான்" என்பான் இன்னொரு பையன். மற்றொருவன் "பொற்றேடிக்கு இவனை விவாகஞ்செய்யப் பிரியமில்லை. ஆனால் அந்தத்தகப்பன் என்கிற முரடனுக்குத் தெரியவில்லையே" என்பான். வேறொருவன் "அப்படியே விவாகம் நடந்தாலும் பொற்றேடி இவனோடு இருந்து வாழமாட்டாள். ஒரு வேளை இறந்தாவது போவாளே தவிர இந்த மடையனோடு வாழ்வாளா? அவளுடைய படிப்பென்ன? புத்தி யென்ன! என்னவோ எல்லாம் இன்னும் பத்து நாளைக்குள் தெரியும்" என்பான். கடைசியா யொருவன் "இந்தக் கல்யாணம் நடக்கு முன் அநேக கலகங்களும் சச்சரவுகளும் கட்டாயம் நடக்கும். எல்லாம் இருந்திருந்து பார்ப்போம்" என்பான். இவ்வாறாகக் கோபாலபுரம் ஊரெங்கும் இந்தப்பேச்சே பேசிக்கொண்டிருந்தார்கள். ரகசியமாய் சீராளன் முதலிய இவர்கள் செய்துகொண்டிருக்கும் வேலைகள் ஒருவருக்கும் தெரியாது.

கோபாலபுரத்துக்குச் சுற்றுக்கு முக்காதவழி தூரத்திலுள்ள ஊர்களிலெல்லாம் வெள்ளையப்பனுடைய கல்யாணப்பேச்சைத் தவிர வேறே பேச்சுக் கிடையாது. முகூர்த்தத்துக்கு இரண்டு மூன்று மாசத்திற்கு முன்னமே வேலைகள் மிகவும் முறுக்காய் நடந்து கொண்டிருந்தன. முகூர்த்தமும் நாலு நாளைக்குள் சமீபித்து விட்டது. அநேக ஜனங்களும், உத்தியோகஸ்தர்களும், பிரபுக்களும், இரண்டு மூன்று தினத்துக்கு முன்னமே கோபாலபுரம் வந்து சேர்ந்து விட்டார்கள், பெரிய பெரிய பேர்போன மேளவாத்தியக்காரர்களென்ன, பாடகர்களென்ன, தாசிகளென்ன எல்லாரும் வந்துவிட்டார்கள். விவாகம் பத்து நாளைக்கு நடக்கப்போகிறதென்று பிரஸ்தாபம். வெள்ளையப்பன் யோகமேயோகம். "பொற்றொடிக்கு இத்தனை பாக்கியமும் கொடுத்து வைத்திருக்கிறதே. அவளல்லவோ பாக்கியசாலி" என்று ஊரெங்கும் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் பொற்றொடிக்கு இந்தப் பேச்சுகளெல்லாம் காதுக்கு இதமாகவேயில்லை. மாப்பிள்ளை வீட்டிருந்து வந்தவர்களெல்லாரும் பெண்ணைப் பார்த்துவிட்டு வரலாமென்ற நோக்கத்துடன் பொற்றொடி வீட்டுக்கு வந்து கொண்டேயிருந்தார்கள். பொற்றொடி வீட்டிலும் சதா கூட்டந்தான். பொற்றொடியினுடைய வீடு பெண் வீடாயிருந்தாலும் பார்த்தவர்களுக்கு மதிப்பாயிருக்க வேண்டுமென்று அங்கேயும் அநேக பந்தல்கள் போட்டு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பொற்றொடியைப் பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்று அடிக்கடி மாப்பிள்ளை வீட்டுக்காரர் வருவதும் போவதுமாயிருந்தபடியால், அவளை அலங்காரம் செய்யும்படி அநேக தாதிகளும், வேலையாட்களும் நியமிக்கப்பட்டார்கள்.

எங்கெங்கேயிருந்தோ அநேக விதமான ஆடைகளும், ஆபரணங்களும் தயாராய் வந்திருந்தன. பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகவேண்டிய காலமும் சமீபித்து விட்டது. ஆனால் பொற்றொடியோ ஒரு ஆபரணமும் அணியவில்லை. ஒரு நல்ல சேலையும் உடுத்த மாட்டேனென்று மறுத்துவிட்டாள். வந்தவர்கள் அவளோடு "பொற்றொடி! பொற்றொடி! என்று கூப்பிட்டு வலிய வலியப் பேசினாலும் அவர்களோடு ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஏதோ பித்தம் பிடித்தவள் போல் மௌனமாயிருந்தாள். கண்ணில் தாரை தாரையாய்க் கண்ணீர் வடிந்துகொண்டு படுத்த படுக்கையை விட்டுக் கூட எழுந்திராமல் விம்மி விம்மி யழுதாள். அழப்படாதென்று மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டாலும், கண்ணிலிருந்து வரும் கண்ணீரை மட்டும் அடக்க அவளால் முடியவில்லை. பார்க்கவந்திருந்த மாப்பிள்ளை வீட்டுக்காரர் என்னவென்று கேட்டாலும் பதில் கிடையாது. இந்தச்சமாசாரம ஊர் எங்கும் தெரிந்தது. தம்பி வெள்ளையப்பனுக்கும் தெரிந்து கொண்டது. உடனே மிகுந்த கோபம் அடைந்த,

வெள்ளையப்பன்:—"இவளுக்கு இவ்வளவு அக்கிரமமா. அடே! (ஓர் நண்பனைப்பார்த்து) நல்லது கிடக்கட்டும் தாலிகட்டி முடியட்டும்; எல்லாத்துக்கும் வழி சொல்லுகிறேன்." என்று வருமம் கூறினான்.

அந்தப்பேச்சு எப்படியோ பெண்வீட்டுக்குத் தெரிந்ததுமன்றி எங்கேபார்த்தாலும் 'குசு புசு' என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். நாளை காலையில் $5\frac{1}{2}$-மணிக்கெ

ல்லாம் விவாஹம் நடக்கப்போகிறது. இன்னும் சீராள னிடமிருந்து யாதொரு கடிதமுமில்லை; ஆளுமில்லை. பொற் றொடி இரவில் பத்துமணிக்கெல்லாம் மேடை மேலுள்ள தனது படுக்கை யறைக்குட் சென்றாள். கதவையும் பூட் டிக்கொண்டாள். கலங்கி நினைத்துக்கொள்ளுகிறாள்:-"ஐயோ தெய்வமே! இதுவும் உன் செயலா! சீராளரை நினைந்து நினைந்து என் மனம் வாடுகிறதே. தெய்வத்தினு டைய மனந்தான் கல்லாய்ப் போய்விட்டது; எனது சீரா ளச் செல்வனுடைய மனமும் கல்லாய்ப் போய்விட்டதோ? அவர் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார், என் றுகூடத் தெரியவில்லையே. ஒருவேளை இனி ஒன்றும செய்யமுடியாதென்று துறவி வேடம் பூண்டு தேசாந்தரம போய்விட்டாரோ? அல்லது வேறே யேதாவது முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறாரோ? ஒன்றும் தெரியவில்லையே. இந்தப்பாழாய்ப்போன முத்தம்மாள் என்ற கிழவியையும் கண்ணிற் காணேமே. இதை நான் யாரிடம் சொல்வேன். தெய்வத்தைத் தவிர வேறொரு துணையுங் காணேனே? உடன் பிறந்த அக்காள் தங்கையுமில்லையே; அண்ணன் தம்பி யுமில்லையே. ஐயோ! ஐயய்யோ! இனி நானென்ன செய் வேன். ஒண்டியாய்ப் புறப்பட்டு வெளியேறிவிட்டாரே. யாராவது கண்டுகொண்டால் பெரிய பிசகாய் வந்துசேரு மே. நான் என்னவெல்லாம் நினைத்திருந்தேன்! தெய்வம் எப்படி முடித்துவிட்டது பார்த்தாயா! நல்லது; நாளை ஐந்து மணிக்கு எனக்கு முகூர்த்தம் என்கிறபேரிழவு கூட் டப்போகிறார்கள். நான் எப்படி இந்த வெள்ளையப்பன் முகத்தில் விழிப்பேன்? அவன் தாலிகட்ட என் கழுத்தை கொடுப்பேனு? அவன் என்னைக் கையால் தொடவும் விடு

னே! என் சீராளச்செல்வருக்குப் பணிவிடை செய்யவென்று வாய்த்த இச்சரீரத்தை இந்த ஈனன் தொடச் சகிப்பேனே? ஐயையோ! என்ன செய்வேன் ஈசா! ஏ ஜகதீசா ஏது செய்வேன்.'' என்று சொல்லிக் கொண்டே அழுகிறாள்; கண்ணிலிருந்து ஜலம் தாரை தாரையாய் ஆறுபோல் பாய்கிறது. தனது மேனியெல்லாம், ஆடையெல்லாம், [illegible] கண்ணீரால் நனைத்தாள்; முகத்தில் [illegible], மண்டையைச் சுவரோடு அடித்தடித்து மோதினாள். "ஓ சீராளரே! ஓ சீராளச் செல்வரே! நீர் என்னை மறந்தீரோ? என் முன் இந்த விஷம் வந்து நில்லீரோ? உம்மையே கதியென்று நம்பினேனே நான் பாவி. என்னை இப்படித் தனிக்க விடுவது யார்க்கு நீதியோ?" என்றுகூவிக் கூவிக் கதறினாள்.

இவ்வாறு கவலைப்பட்டுக்கொண்டு, ஒன்றும் தோன்றாமல் விழித்துக்கொண்டே யிருந்தாள். கடிகாரத்தில் 11 அடித்தது. உடனே செய்தாள் ஒரு யோஜனை. அந்தோ பரிதாபம்! "இன்றிரவு பன்னிரண்டு அல்லது ஒரு மணிக்குள் யாதொரு கடிதமும் வரவில்லையானால் எனது உயிரை மாய்த்து விடவேண்டும். நாளைக்குத் தாலிகட்டி முடிந்த பிறகு யார் என்ன செய்தாலும் என்ன நடக்கப் போகிறது! ஆகையால், இன்று ஒரு மணி வரையில் தான் இருப்பேன்; அதற்குள் ஏதாவது சீராளருடைய கடிதமாவது ஆளாவது வந்தால் உயிர் வைத்திருப்பேன்; இல்லாவிட்டால், இதோ இந்தக் கிணற்றில் வீழ்ந்து மாள்வேன். ஐயோ! நானிப்படி இறந்துபோனேனென்று எனது அன்பரறிந்தால் அவருமிறந்து விடுவாரே

என்னவோ தெரியவில்லையே" என்பாள். மீண்டும் யோசிக்கின்றாள்: "அப்படி யிருப்பது சரியல்ல! நாளைக்காலை பத்து மணிவரையும் காத்திருப்போம். அதுவும் சரியல்ல. அந்தப்பாவி வெள்ளையப்பன் என்னைக் கொட்டு மறைந்து விடுவானே. எனது கற்புமே அன்றே யழிந்து விடுமே. எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லையே. தெய்வமே! எபாவி தெய்வமே! ஏ பாழான தெய்வமே! நான் இப்படி அழுதழுது புலம்பித்தவிப்பது உன் காதிலேற வில்லையோ? உன் காதும் கண்ணும் அவிந்து போய் விட்டதோ? என்னை இப்படிப் பரிதவிக்க விட்டு வேடிக்கை பார்ப்பது உனக்கு விளையாட்டோ? இதற்கோ உன்னை இத்தனை நாளும் கும்பிட்டு கும்பிட்டு வழிபட்டேன்?" என்றிவ்வாறாகப் பற்பல விதமாய்ப் புலம்பிக்கொண்டிருக்கும் தருணத்தில் "பொற்றொடியைக் காணோமே? அவளெங்கே போனாள்?" என்று தேடிக்கொண்டு அவளுடைய தாயார் மேலே உயரவந்து கதவைத்திறக்கச்சொல்லி சாப்பிட வரும்படி கையைப்பிடித்து பொற்றொடியைக்கூப்பிட்டாள். உடனே கையை உதறிக்கொண்டு,

பொற்றொடி:—"எனக்குப் பசியுமில்லை ஒன்றுமில்லை. போ." என்று சொல்லிவிட்டாள்.

இப்படி விஷயங்கள் நடந்து கொண்டிருக்கையில கலியாண சுந்தரம் பிள்ளை யென்ற ஒரு பெரியவர் வந்து வீட்டு முன் வாசலில் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். அது [illegible] பொற்றொடி கவனிக்காமலிருந்துவிட்டாள். அவர் சொல்லுகிறார்:—"என்னையா, எல்லாரும் படுத்துக்கொண்டு தூங்குகிறீர்கள், நாளைக்கு பத்து மணி

க்குப் புறப்படவேண்டும் பெண்ணை அழைக்கிறதெப்போது? மூன்று மணிக்கெல்லாம் பெண் பட்டணப் பிரவேசமாய், சரியாய் நாலுமணிக்கு மாப்பிள்ளை வீடு போய் சேரவேண்டும். இப்போது மணி பதினொன்று அல்லது பதினொன்றரை இருக்கும். ஒன்றும் ஜாக்கிரதை செய்யாமல் எல்லாரும் படுத்துத் தூங்குகிறீர்களே. மேளகாரன் பல்லக்குக்காரன் எல்லாரும் கிழவீடு மிட்டாதார் பிள்ளை அவர்கள் வீட்டு வடக்குச் சாவடியில் படுத்திருக்கிறார்கள். எல்லாரும் இரண்டுமணிக்கெழுந்து பெண்ணுக்கு ஸ்நானஞ்செய்வித்து மூன்று மணிக்குள் அலங்காரஞ்செய்து தயாராயிருக்கவேண்டும். மாப்பிள்ளை வீட்டில் எல்லாம் தயாராயிருக்கிறது. நான் போகிறேன்" என்று உளறிக்கொண்டு ஏதோ அவசரமாய் வெளியே போய் விட்டார்.

நான்காவது அத்தியாயம்.

பரிதாப நிலை

இவ்விதமாய் வெள்ளையப்பன் கல்யாணத் தடபுடல் நடந்து கொண்டிருந்தது; மணி பன்னிரண்டாய் விட்டது. நாளைப் பலபல வென்று விடியுமுன் விவாகம் நடந்தாய் விடும், சப்ஜெட்ஜ் சத்திய சீலாயரவர்களும் வெள்ளையப்

பன் விவாகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தபடியால், அவர்களும் தமது மனைவி சகிதமாய்ச் சரியாய் பன்னிரண்டரை மணிக்குக் கோலாபுரம் வந்துசேர்ந்தார்கள். கூட பக்காஸ்வாமிகளும் வந்திருந்தார்கள். இருவரும்நேரே வெள்ளையப்பன் வீட்டுக்குப்போக, ஜட்ஜி யவர்தன் மனைவி துளசியம்மாளும், பாட்டி முத்தம்மாளும் பெண்ணைப்பார்க்க வருபவர்கள் போல, பொற்ருெடி வீட்டுக்குவந்து அவளைக் கண்டார்கள். பொற்ருெடிக்கு துளசியம்மாளை முன்னமே தெரியுமாகையால், அவர்களைக் கண்டவுடன் மிகவும் வணக்கமாய் அவர்களை வரவழைத்து மேல் வீட்டுக் கிட்டுக் கொண்டுபோனாள். நேரம் ஒரு மணிக்கு மேலாய் விட்டபடியால், பொற்ருெடியும் அவள் தாயாரும் வேறு சிலரும் தவிர மற்றவ ரெல்லாரும் நல்ல நித்திரையி லிருந்தார்கள். பொற்ருெடியின் தாயார் மீனாக்ஷியும், துளசியம்மாளுக்குத் தாம்பூலம், சந்தனம் கொடுத் துபசரித்துப் பேசிக்கொண்டிருக்கையில்,

மீனாக்ஷி:—"*எஜமானும் வந்திருக்கிருர்க ளல்லவா?" என்ருள்.

துளசி:—"ஆமாம். அவர்களும் வந்திருக்கிருர்கள். நான்மட்டும்நேரே யிங்கே வந்து விட்டேன். என்ன—பெண்ணை அலங்காரம் செய்யாமல் வைத்திருக்கிறீர்கள்!"

மீனாக்ஷி:—"செய்யத்தான். மூன்று மணிக்குத் தானே பட்டணப் பிரவேசம். எல்லாம் நீங்களே யிருந்து நடத்த வேண்டியது தானே?"

---

*எஜமான்—ஜட்ஜ் அவர்கள்.

துளசி:—"அருந்ததியம்மா! இப்போது பொற்கொடிக்கு வயதென்ன? அவளை மிகவும் சிறு பெண்ணாயிருக்கும்போது—அதாவது மூன்று நாலு வருஷத்துக்கு முன்பே—பார்த்தது."

மீனாக்ஷி:—"வயதென்ன இந்தக் கார்த்திகையோடு பதினைந்தாம் ஆண்டு நிறைந்து பதினாறு ஆகிறது."

துளசி:—"ஏன் சடை வாயிருக்கிறாள்? கல்யாணமாகப்போகிற பெண் சந்துஷ்டியா யிருக்கவேண்டாமோ?"

மீனாக்ஷி:—"சடையென்ன, ஒன்றுமில்லை. எந்தா உறக்கச் சடைவாயிருக்கிறாள்?"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், பொற்கொடி முத்தம்மாள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளோ துளசி முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். காரியம் ஒன்றும் விளங்கவில்லை.

துளசி:—"ஏனம்மா பாட்டி! நீ பொற்கொடிக்குஸ்நானம் முதலியது செய்வித்து தயார் செய்கிறது தானே? நாங்களிரண்டு பேரும் இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம்." என்று சொல்லிக் கொண்டு முத்தம்மாளுக்கு ஒரு ஜாடை காட்டினாள். உடனே அவள் பொற்கொடியைப் பார்த்து "அம்மா! எழுந்திரு" என்று கையைப் பிடித்துக்கொண்டு எழுப்பிவிட்டாள். பொற்கொடியின் மனமோ கலங்கி நொந்துகொண்டிருக்க, சங்கதி எப்படியாமோ வென்ற கவலை போலும், முத்தம்மாள் எப்போது வாய் திறப்பாளோ வென்ற ஆவலோடும் உடனே எழுந்து நின்றாள். இருவருமாய்ப் பின் வாசலுக்குச் சென்றார்கள். இங்கு மீனாக்ஷி பொற்கொடியின் தாயாரோடு பல சமாசாரங்களைப்பேசி

நேரத்தைப் போக்கிக்கொண்டிருந்தாள். இதற்குள் மடமடவென்று பத்துப் பெண்களும், இரண்டு மூன்று ஆண் பிள்ளைகளும் வீட்டுக்குள் வந்து நுழைந்தார்கள். இவர்கள் மாப்பிள்ளை வீட்டிலிருந்து பெண்ணழைக்க வந்தவர்கள். அவருள் இரண்டுபேர் வெள்ளையப்பனுடைய சகோதரிகள். அவர்களிரண்டு பேரும் வெகு அழகான ஆடை ஆபரணங்களோடு வந்திருந்தார்கள். அவர்கள் மீனாக்ஷியைப் பார்த்து "என்ன அத்தை, பெண்ணெங்கே? நேரமாய் விட்டதே. அலங்காரம் செய்தாய்விட்டதா?" என்று சொல்லிக்கொண்டு அவசரப்படுத்தினார்கள்.

துளசி:—"நல்லது எல்லாரும் உட்காருங்கள்" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். இப்படிச் சுமார் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே ஜட்ஜினுடைய சேவகன் வந்து "அம்மா எஜமான் வந்து வாசலில் நிக்கிறாங்கோ, ஊருக்குப் புறப்பட்டு விட்டாங்கோ" என்று ஜட்ஜ் மனைவியைப் பார்த்துச் சொன்னான். இதைக் கேட்ட,

மீனாக்ஷி:—"என்னம்மா இவன் இப்படிச் சொல்லுகிறான்! காலமே முகூர்த்தம் நடக்கப்போகிறது. எஜமான் இப்போது புறப்படப்போகிறதாய் இவன் சொல்லுகிறானே" என்றாள்.

துளசி:—"இல்லையம்மா! நாங்கள் நாளை இரவுக்கு வந்து பட்டணப்பிரவேசத்திற்கு இங்கே வந்துவிடுவோம். இதே முகூர்த்தத்தில் என்னுடைய சம்பந்தி மகனுக்கு—அதாவது என் எஜமானுடைய தமக்கை மகனுக்கு எங்கள் வீட்டில் ஆவணியில் சடங்கு முகூர்த்தம். நாளை காலை

பத்து மணிக்குள் எல்லாம் நடந்துவிடும். பின்பு சாயங் காலம் புறப்பட்டு இங்கே எல்லாரும் வந்துவிடுவோம். நீங் களும் எங்களுக்கு வெகு நாளாய்த் தெரிந்தவர்கள். மாப் பிள்ளை வீட்டுக்காரரும் எங்களுக்குப் பரம்பரையாய்த் தெரிந்தவர்கள். ஆகையால் வராமலிருந்து விட்டால் சடை த்துக் கொள்வீர்களென்றெண்ணித் தங்களிடம் சொல்லி விட்டுப் போகலாமென்று எல்லாரும் வந்தோம். நாளைக்கு கட்டாயம் வந்துவிடுவோம்." என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டாள்.

மீனாக்ஷி:—"என்னம்மா, இதற்குத்தானா இப்போது அவசரமாய் வந்தீர்கள்? அப்படியாவது, பொற்றொடி ஸ்நானத்துக்குப் போயிருக்கிறாளே, அவள் வரட்டும் சொல்லிக்கொண்டு போங்கள்." என்று கட்டாயம் செய் தாள்.

துளசி:—"அவள்வர நேரம் செல்லும்; நான் போய் விட்டதாயும், நாளை வருவதாயும் அவளிடம் சொல்லிவிடுங் கள்; நான் இதோ போகவேண்டும்" என்று சொல்லுமுன், சேவகன், "அம்மா, சீக்கிரம் புறப்படுங்கள், எஜமான் வண்டிபோட்டுக் காத்துக்கொண்டிருக்கிறாங்கோ" என்று நெறித்துக்கொண்டு நின்றான். உடனே துளசி "நான் போய்விட்டு நாளை 12 மணிக்குள் வந்துவிடுகிறேன். பொற்றொடியிடம் சொல்லிவிடுங்கள்" என்று வழியனுப் பிக்கொண்டு வெளியே வந்தாள். வாசலிலும் ஜட்ஜ் அவர்களும் வேறு சிலரும் நின்று கொண்டிருந்தார்கள்.

துளசி:—(தன்நாயகனைப் பார்த்து) "என்ன புறப்படலாமோ? என்னுடைய வண்டி எங்கே நிற்கிறது?" என்று சொல்ல,

ராயர்:—"நீ இந்த வண்டியிலேறிக்கொள். அந்த வண்டி கிழக்கு ரோட்டில் நிற்கிறது" என்று சொன்னர்.

துளசி:—"எல்லாரும் வந்து விட்டார்களா?" என்று ஒரு குறிப்பாய்க் கேட்க,

ராயர்:—"அதற்குத் தடையா? நீ வண்டியிலேறு. நான் ரோட்டுவரை கீழே நடந்து வந்து, பின்பு வண்டியிலேறிக்கொள்ளுகிறேன்" என்று சொல்லவும், துளசி வண்டியிலேறிக்கொண்டாள். ராயரும் பக்கத்தில் நின்று காத்துக்கொண்டிருந்த மேடைப்பிள்ளை, வெள்ளையப்பன் தகப்பனர் முதலிய பிரபுக்களிடம் வழியனுப்பிக்கொண்டு வண்டியின் பின்னலே நடந்தார். அவர்கூட வந்திருந்த டலாயித்துகளும், சேவகர்களும் கூடப்புறப்பட்டார்கள். வெள்ளையப்பன் தகப்பனர் முதலியவர்கள், "எஜமான் நாளைச்சாயங்காலம் கட்டாயம் வந்துவிடவேண்டும்" என்று சொல்லி நமஸ்காரம் செய்து வழியனுப்பினர்கள்.

இதற்குள், பல்லக்குக்காரர் மேளவாத்தியக் காரர்களெல்லாரும் பெண்வீட்டில் கொலுமேளம் வாசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். எங்கே பார்த்தாலும் தீவர்த்திகளென்ன, மத்தாப்புகளென்ன, அதிர்வெடிகளென்ன டாம் டாம் என்று முழக்கமாய்க் கிடக்கிறது. மாப்பிள்ளை வீட்டில் வெள்ளையப்பன் ஸ்நாநம் முதலியது செய்து மாப்பிள்ளைக்கோலம் பூண்டுகொண்டு தயாராயிருக்கிறன்.

பிராமணர்கள் மணவறையில் வந்து உட்கார்ந்து, ஓமம் வளர்க்க வேண்டிய பிரயத்தனங்கள் செய்கிறார்கள். தெப்பக்குளங்களிலும், கிணறுகளிலும் சுமார் இரண்டு அல்லது மூன்று மணி வரை கல்யாணவீட்டுக்கு வந்த பெண்கள் ஸ்நானஞ்செய்துகொண்டு நிற்கிறார்கள். எங்கே பார்த்தாலும் முழக்கமாயிருக்கிறது. பெண்ணலங்காரம் செய்வதற்கு தாதிகள் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். மேளகாரர்கள் 'பூப் பூ' என்று ஆரம்பித்து, 'டப டபா' என்று அடித்து முழங்குகிறார்கள். ஊருக்குள் எந்தத்தெருவைப் பார்த்தாலும் ஜனக்கூட்டந்தான். மாப்பிள்ளையின் சகோதரிகள் இரண்டுபேரும் ஸ்நானம் செய்யப்போன போற்றேடியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பெண் அலங்காரஞ் செய்வதற்கு புஷ்பசரங்களென்ன, மாலைகளென்ன எல்லாம் தயார். இந்த தடபுடலுக்குள் கலியாணசுந்தரம் பிள்ளை வந்தார். "நீங்களென்னம்மா! பெண்பிள்ளைகள் தானா? மணி மூன்று ஆய் விட்டது. எல்லாரும் காத்துக் கொண்டிருக்கிறார்களே. பெண்பிள்ளைகள் சங்கதியெல்லாம் இப்படித்தான்" என்று கோபப்படுகிறார். வெளியே போகிறார். மடமடவென்று மேல்வீட்டின் மேலேறுகிறார். திரும்பவும் கீழே இறங்குகிறார். "அடே! பல்லக்கு தயாராய்விட்டதா? அடே! சந்தனம் தயாராய் விட்டதா? அப்பா குப்புசாமி! இந்த சர லாந்தரைக் கொளுத்து. அடே நாகமுத்து! இந்த நாற்காலியை உயரக் கொண்டுபோ'' என்று என்ன அதிகாரமெல்லாமோ செய்கிறார். 'பட பட' வென்று வேலைகளும், விசாரணைகளும், அதிகாரங்களும் நெருப்

பாறாய்ப்போகிறது. பொற்றொடி வரப்போகிறாள்; அலங்காரமானவுடன் பட்டணப்பிரவேசமாய்ப் பலபலவென்று ஐந்தரைமணிக் கெல்லாம் முகூர்த்தம் 'நளோஸ்' ஆய்விடும். சமையல் வேலைகளோ தீப் பறந்து போகிறது. இதற்குள் மணி மூன்று அடித்து 35 நிமிஷமாய் விட்டது.

எல்லாம் சரிதான். முத்தம்மாளும், பொற்றொடியும் ஸ்நானஞ் செய்வதற்காகப் பின் வாசலுக்குப் போனார்களே. அவர்கள் கதி யென்ன? ஸ்நானஞ் செய்தாய் விட்டதா? அல்லது இன்னும் மூன்றரை மணி வரைக்கும் குளித்துக் கொண்டு தானிருக்கிறார்களா? ஒன்றும் தெரியவில்லை யல்லவா? அதை சற்று கவனிப்போம்.

முத்தம்மாள் பொற்றொடியை யழைத்துக் கொண்டு சர சர வென்று பின் புறத்திலுள்ள தோட்டத்திற்குட் சென்றாள். எதற்காக இப்படி அவசரமாய்க் கூட்டிக் கொண்டு போகிறாளோ வென்பது பொற்றொடிக்கு நன்றாய்த் தெரியவில்லை. ஆனாலும் போவோ மென்று நினைத்துக்கொண்டு சற்று தூரம் போனவுடன், முத்தம்மாள் ஒரு பலாமரத் தண்டையிற் கிடந்த பெரிய கல்லின் மேற் போயுட்கார்ந்துகொண்டு சொல்லுகிறாள்:—

“ஏ பொற்றொடி! என்னவோ நினைத்திருந்தாயே? இப்பொழுது அதற்கெல்லாம் நேர் விரோதமாய்க் காரியம் இப்படி முடியப்போகிறதே? இனி என்ன செய்வாய்; நீயும் உன்னால் ஆன மட்டும் தான் பார்த்தாயே! தெய்வம் கூடச் சற்றும் இரங்காமல் கற்போலிருந்து விட்டதே.

இதை முன்னிட்டே நானும் உன்னைப் பார்க்கக்கூட வெட்கப்பட்டு இத்தனை நாளாய் வராமலிருந்து விட்டேன். 'கொடுத்து வைத்தது கிடைக்கும்' என்று சும்மாவாவது இராமல் கண்டபடி எல்லாம் பேசினையே? நீ உன் வாயினாலல்லவா கெட்டுப்போனாய்? அடி கண்மணி! நீ படித்தது தான் மிச்சமன்றி, கொஞ்சமேனும் புத்தியில்லாமற் பேசிவிட்டாய்; பனைக்கு வெள்ளையப்பன் கையிலகப்பட்டுக் கொண்டு என்ன செய்யப்போகிறாய்" என்றாள்.

பொற்கொடி—"என்ன பாட்டி! இப்படியெல்லாம் சொல்லுகிறாய்? இந்தப் புத்தியெல்லாம் உன்னிடத்தில் நான் கேட்டேனா? நீ இத்தனை நாளும் மௌனமாயிருந்துவிட்டு எனக்கு நாளைக்கு கொள்ளை வரப்போகிற சமயத்தில் புத்திமதி சொல்ல வந்து விட்டாயாக்கும். நல்லது, போதும்; போதும். நான் அப்படித்தான் பேசுவேன். இனிமேலும் அப்படித்தான் பேசுவேன். அதற்கு உன்னை யார் கேட்டது? இப்படிப் புத்தி சொல்லத்தானா உனக்குத் தெரிந்ததே யன்றி நான் நினைத்தபடி செய்ய முடியாமற் போய் விட்டதே. நான் அந்த சிராளச் செல்வரையல்லவா சதமென்று நம்பியிருந்தேன். அவருமென்னை இப்படி கைவிடுவாரென்று நினைக்கவில்லையே! ஐயோ தெய்வமே? ஏ பாட்டி! நீ எப்போது வருவாயென்று கவலை பூண்டு இவ்வளவு நாளும் காத்துக்கொண்டிருந்ததற்கு நீ யிருந்திருந்து இதைத்தானா சொல்லவந்தாய்? நீ முதலில் வீட்டுக்குள் துளசிகூட வந்த உடனே என்னவோ விசேஷமிருக்கவேண்டுமென்று நம்பினேன். அதன்பின் நீ கையைச் சுறண்டிக் கூப்பிட்ட உடனே

ஏதோ நமக்கு நல்ல காலம் வந்து விட்டதென் றெண்ணினேன் நான் பாவி. நீ இப்பொழுது புத்தி சொல்லுகிறதைப்பார்த்தால் என் வயிறு தீப்பிடித்துப் பகீர் பகீரென்று எரிகிறதே." என்றாள்.

முத்தம்மாள்:—"நீ அப்படியா நினைத்தாய்? காரியம் தெரியாதா? நீ இப்படி யெல்லாம் வீட்டிலிருந்து அழுது கொண்டிருப்பதாயும் சீராளன் மேலாசைகொண்டு வெள்ளையப்பனைக் குறைவாய்ப் பேசினதாயும் ஊரெங்கும் பிரஸ்தாபமாய் விட்டது. இது மாப்பிள்ளை வீட்டுக்காரருக்கும் தெரிந்து கொண்டது. இதைக் கேள்விப்பட்ட வெள்ளையப்பன் உன்மேல் மிகவும் கோபங்கொண்டிருப்பதாயும், உன்னை எப்படி யெல்லாமோ தண்டனை செய்து கஷ்டப்படுத்தப் போவதாயும் எல்லாரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதைக்கேட்ட உடனே என மனம் சகிக்கவில்லை. ஐயோ! அருமையாய்ப் பெற்றுவளர்த்த பெண்ணை இந்த வெள்ளையப்பன் என்ன பாடுபடுத்துவானோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன் அந்தச் சமயத்தில் சத்திய சீலராயரும், துளசியம்மாளும் வந்திருப்பதாய்க் கேள்விப்பட்டு, அவர்களைக்கண்டு வெகு நாளாய்விட்டதே யென்று அந்த அம்மாளைப் பார்க்கலாமென்று வந்தேன். இப்போது கொஞ்ச நேரத்துக்கு முன் தான் என் மகனுக்குச்சோறு போட்டுவிட்டு வெளியே வந்தேன். அப்போது தான், துளசி அம்மாளும் வண்டியிலிருந்து கீழே யிறங்கினார்கள். உடனே என்னைக்கண்டவுடன் கல்யாணச் சங்கதியை விசாரித்தார்கள். அவர்களுக்கு எல்லாம் தெரியும் போலிருக்கிறது. உனக்கு இப்படி எல்லாம் புத்தி சொல்லு

ம்படி என்னிடம் சொல்லியனுப்பினார்கள். ஆகையால் என் கண்மணீ ! ஏ பொற்ரேடீ! இனிமேல் உன் பிடிவாதத்தையும் முறண்டையும் விட்டு விடு. வம்பாய்க் கெட்டுப் போகாதே; நான் பெரிய மனுஷி சொல்வதைத் தட்டாதே; இனிமேல் சிராளனையை விட்டு விடு. எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டாலும் கிடைக்குமா ? ஆகையால், இதற்குமுன் போனதெல்லாம் போகட்டும். இனிமேலாவது சந்தோஷமாயிருக்கவேண்டும். மணவறையிற் பெண்ணுக்கிருக்கும்போது அழுதுகொண்டாவது, வேறே சேட்டை பண்ணிக்கொண்டாவது இராதே. உன்னை வெள்ளையப்பன் ஏதாவது கோபமாய்ப்பேசினாலும், வைதாலும், அடித்தாலும் அதற்காக நீயும் பதிற்பேசிக்கொண்டிராமல், அவன் மனம்போல் நடந்து அவன்மேல் பக்ஷமுள்ளவள் போல் பாசாங்காவது செய்யவேண்டும். அப்போது தான் உன்னை நல்லபெண், புத்திசாலி, கெட்டிக்காரியென்று சொல்வார்கள். நமக்குக் கொடுத்து வைத்ததுதானே கிடைக்கும். நானும் எனக்கு தெரிந்ததைச் சொன்னேன். நான் கிழவி சொல்வதைக் கேளாவிட்டாலும், துளசியம்மாள் சொல்வதையாவது கேட்கவேண்டாமா? அந்த அம்மாள் சொல்வதையும் கேளாமல் முறண்டு செய்வாயானால் வம்பாய்க் கெட்டுச் சீரழிந்து, பார்த்தவரெல்லாரும் சீச்சீ என்று சொல்லும்படி பாழாய்ப் போய்விடுவாய். இனிமேலுன்னுடைய இஷ்டம். இதற்கு மேலெனக்குச் சொல்லத்தெரியாது."

அப்போது பொற்ரேடி தனக்குள்ளே தானே நினைக்கிறாள்:-"ஐயோ! இத்தனையத்தனை நம்பிக்கையிருந்ததுபோய்

விட்டது. இந்தக்கிழட்டு முண்டையும் நான் சொல்வதை யெல்லாம் விட்டு விட்டு வேறென்ன எல்லாமோ கண்டவள் போற் புத்திசொல்ல ஆரம்பித்துவிட்டாள். இனி இவளோடு பேசுவதில் யாதொரு பிரயோஜனமுமில்லை, ஐயோ என்கதி இப்படியா முடிந்தது! இந்தக் கிழவியை நம்பியிருந்ததற்கு இப்படி என்னை முழுமோசம் செய்துவிட்டாள். இனி, என் காதலன், ஐயோ! என்சீமான், ஐயோ! என் பிராணநாதன், அப்பா! எனது ஆசைமணவாளன், எனது கண்மணியாகிய சீராளசெல்வருமிப்படி மோசம் செய்தாரே? அவரிப்பொழுது எங்கே இருக்கின்றாரோ? என்ன செய்கிறாரோ? என்னை மறந்தாரோ? ஒன்றும் தெரியவில்லையே! ஐயையோ நாளையிந்நேரமெல்லாம் நான் இறந்துவிட்டேனென்ற செய்தியைக் கேட்பாரே! எப்படிச் சகிப்பாரோ? ஏ தெய்வமே! நான் எனது நாயகராகிய சீராளச்செல்வரை எந்தப் பிறப்பிற் காணப் போகிறேன்? அவரோடு அப்படி வாழவேண்டும், இப்படி வாழவேண்டுமென்று ஆகாசக் கோட்டை கட்டினேனே! அவரோடு ஒரு நிமிஷநேரங்கூட வாழவில்லையே? என்னுடைய உயிர் தானென்னைவிட்டு இலகுவிற் பிரியுமா? இறந்தாலும் எனக்கு முத்தி கிடைக்குமா? சாவதற்குமுன் அவரிடம் ஒரு வார்த்தையாவது பேசிக் கொள்ளவேண்டாமா? என் பிராணன் போகுமுன்னே அவருடைய திருமுகத்தை ஒருதரமாவது தரிசிக்கவேண்டாமா? அவரெங்கே யிருக்கிறாரென்றாவது இந்தக்கிழவியிடம் கேட்போம்" என்று நிர்ணயஞ்செய்துகொண்டு, "ஏ பாட்டி நீ சொன்னபடியே செய்கிறேன். உன் சொல்லைத் தட்டுவேனோ? நீ என் மேல் பக்ஷமுள்ளவ

னால் எனக்காக ஒரு காரியம் சொல்லவேண்டும்; அன்றைக்கு என்னிடமிருந்து கடிதம் வாங்கிக்கொண்டு கொடுத்த பின்பு நீ சீராளரை எப்பொழுதாவது கண்டாயா? அவர் உன்னோடு என்னவாவது பேசினாரா? அவரிப்பொழுது இன்ன விடத்திலிருக்கிறாரென்று உனக்குத்தெரியுமா? இதைமட்டும் சொல். அதன் பின் நீ சொல்லுகிறபடி செய்கிறேன்" என்று சொன்னாள்.

முத்தம்மாள்:—"அதெல்லாம் எதற்கம்மா நீ கேட்கவேண்டும்? இனிகேட்டுப் பிரயோஜனமென்ன? இனிமேல் நடக்கவேண்டிய காரியத்தைப்பார்."

பொற்கொடி:—"அதுசரிதான் பாட்டி. நீ அவரை கண்டாயா இல்லையா? அதை மட்டும் சொல்."

முத்தம்மாள்:—"ஆமம்மா. அதன் பிறகு ஒரே ஒரு தரம் கண்டேன். இரண்டு மூன்று நாளாய்த் திருமங்கலத்திலிருந்து யிங்கே வரவேயில்லை. இன்றைக்கு சாயங்காலம் அவன் காசிக்கோ எங்கேயோ போய் விட்டதாய் சிலர் சொல்லிக்கொண்டார்கள். அவனுடைய தாயாரும் மகனைக் காணோமென்று அழுதுகொண்டிருக்கிறாளாம்; வேறொன்றும் தெரியாது."

பொற்கொடி:—"அது சரிதானே, அவருன்னைக் கண்டபொழுது எதாவது பேசினாரா?"

முத்தம்மாள்:—"அதேது? பேச்சும் கிடையாது, ஒன்றும் கிடையாது; பேசாமல் தலையைக் குனிந்து கொண்டு போய்விட்டான்: நானும் பேசவில்லை."

இதைக் கேட்டாள் பொற்ருேடி. ஐயோ ! கண்ணிலி ருந்து கண்ணீர் அருவிபோல் பாய்ந்தோடுகிறது. பின் னும் அதை யெல்லாம் மனத்தி லடக்கிக்கொண்டு தன் மனத்துக்குள் தீர்மானஞ் செய்கிருள்:—

"சரி, நமக்கு இந்த ஜன்மம் இதனேடு சரி: நம்மை அந்தப்பிரமதேவன் படைக்கும்பொழுதே இப்படி எழுதி விட்டான்! இனித் தாமதம் கூடாது; நமது உயிரை விடுவ தற்கு வேண்டிய வழியைத் தேட வேண்டும். என்னு டைய உயிரை விடுவதில் எனக்கு யாதொரு ஆக்ஷேபணை யுமில்லை. ஆனுல் ஒரு ஆசைமட்டு மிருக்கிறது: எனது ஜீவன் பிரியுமுன்பு, எனது மணவாளனை ஒரு தரமாவது பார்த்து அவரிடம் வழியனுப்பிக்கொண்டு 'ஐயா, எனது நாதரே! நான் இறக்கப் போகிறேன்' என்று ஒரு வார்த் தை மட்டும் சொல்லிக்கொண்டு இறந்தால் போதுமானது. இதுவே என்னுடைய விருப்பம். அதற்கு மிடமில்லை யானல் வேறே என்ன செய்யலாம்! ஒருவேளை எனது சீரா ளர் காசியிலிருந்து வந்த பின்பாவது என்னைப்பற்றி விசா ரித்தால், அவருக்குக் கிடைக்கும்படியாய் ஒரு கடிதமெ ழுதி அவருடைய தாயாரிடம் கொடுத்துவிட்டுப் போவோ மென்று எண்ணினுலும் இப்பொழுது நேரமில்லை. ஆகை யால் அதுவும் முடியாது. ஆகவே இந்தக் கிழவியை மெள்ள அனுப்பிவிட்டு நமது உயிரை விடுவதற்கு வழி தேடவேண்டும்" என்று நிர்சயமான தீர்மானஞ் செய்து கொண்டு "அம்மா பாட்டி, நீ சொல்லுகிறபடியே செய் கிறேன். என் பேரில் இவ்வளவு பக்ஷம் வைத்திருந்ததே எனக்குப் போதும்; நீ தயவு செய்து வீட்டுக்குப் போய்த்

தலை துவர்த்துகிற முண்டுகிடக்கிறது, அதை எடுத்துக்கொண்டுவா; நான் குளிக்கப்போகிறேன்." என்று பையை அனுப்பினாள்

முத்தம்மாள் :—(இதைக்கேட்டு அவள் வார்த்தையைச்சிறிதும் நம்பாமல் சந்தேகப்பட்டு) "என்னம்மா இப்படிச்சொல்லுகிறாய்? நீ என்னைப் போகும்படி சொல்வதைப் பார்க்கும்பொழுது எனக்குப் பயமாயிருக்கிறதே. சின்னப்பிள்ளைத்தனமாய் ஏதாவது பிசகு செய்துபோடாதே. பெரிய மோசம் வந்து சம்பவிக்கும். வேள்ளையப்பன் வீட்டில் பதினாயிரம் இருபதினாயிரம் செலவிட்டுச் செய்கிற காரியங்களையெல்லாம் விணுக்கிப் போடாதே. நீ அப்படி ஏதாவது செய்து போட்டால் உனது தகப்பனாரும் தாயாரும் உயிர் வைத்திருப்பார்களா? பெரிய அபகீர்த்தியும் கேவலமும் வந்து சேருமம்மா. என் தாயே! முறட்டுத்தனமாய் என்னவாவது செய்து கலியாண வீட்டை இழவு வீடாக்கி விடாதே. ஊராரெல்லாரும் கைதட்டிக் கேலி செய்து சிரித்து விடப்போகிறார்கள். ஆகையால் என்னையுமையே, நீ எல்லாவற்றையும் மறந்து என்னோடுகூட நின்று குளித்துப்போட்டு வீட்டுக்குப் போவோம் வா. துவர்த்து முண்டு வேண்டுமானால் நான் வருத்தித்தருகிறேன். நான் மட்டும் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன். நீயாய் என்னவாவது செய்து விட்டாலும் அது என் தலைமேல் வந்து விடியும். முன்னமே என்பேரில் ஆவலாதியாய்க் கிடக்கிறது. என் கண்ணம்மா வா, பொன்னம்மா வா, தாயே வா, தாயே வா" என்று கையைப்பிடித்து ஸ்நானப் புரைக்குக் கூட்டிப்பிட்டாள். உடனே பொற்றொடி "இதென்ன பரம சங்கட

மாயிருக்கிறது. இந்தக் கிழவியல்லவா இப்போது சனியன் போல் வந்து சேர்ந்தாள். இவளால் உபகார மில்லா விட்டாலும் அபகாரமாவது இல்லாம லிருக்கப் படாதா?" என்று அடங்காத கோபங்கொண்டு "போ பாட்டி, போ. என்னவெல்லாமோ உளறுகிறாயே; அநேக மெல்லாம் தெரிந்தவள் போலப் புத்தி சொல்ல வந்து விட்டாயே. போ அப்பாலே, உன்னிடத்தில் யாராவது யோசனை கேட்டார்களா? அல்லது உன்னை யாராவது கூப்பிட் டழைத்தார்களா? வெள்ளையப்பன் ரூபாய் செல விட்டிருக்கிறதும், அது நஷ்டமாய்ப் போகிறதும் உனக்கு மனவருத்தமாய் இருக்கிறதே யன்றி நான் படும் பாடு உனக்குக் கொஞ்சமும் தெரியவில்லையே; இந்த வெள்ளையப்பனென்கிற நீசனைக்கண்ணாலாவது பார்ப்பே னென்று என்னை நினைத்தாயா? சந்திர சூரியர் தெற்கு வடக்காய் வந்தாலும், நீயேயல்ல, அந்த ஜகதீசனே வந்து சொன்னாலும் நான் இந்த மடப் பயலுடன் ஒரு நிமிஷமாவது வாழ்வேனென்று நினைத்தாயா? சீராளரையே மணப்பேனென்று எப்போது நினைத்தேனோ அப்போதே எல்லாச் சந்தேகமும் போய்விட்டதே. இப்போதுதான் என்ன வந்து விட்டதென்று பெரிய பிரமாதமாய்ப் பேசுகிறாய்! அப்படி ஒன்றும் வரவில்லை என்னவோ இந்த ஜன்மத்தில் சீராளருக்கும் எனக்கும் சொந்தமில்லை. மனதில் நினைத்ததே போதும். அவரையே என் மனதில் தியானம் செய்துகொண்டு இதோ என் உயிரை விடப் போகிறேன். என்னை யார்வந்து தடுக்கக் கூடும்? எனக்குப் பிரியமில்லையென்று மனசாரத் தெரிந்துகொண்டு அந்த மடையன்-அந்த நிர்மூடன்-என்னை

விவாகஞ் செய்யவேண்டு மென்று எண்ணிக்கொண்டிருக்கிறேனே. இந்தத் தடிமாடனுடைய புத்தி உலக்கைக்கொழுந்துபோலிருக்கிறதே. 'கழுதை கனாகண்டதாம கத்தலும் கதகசலுமாய்" என்றதுபோல் அந்த வெள்ளையப்பனென்ற வீணன் அப்படியா நினைத்துக்கொண்டிருக்கிறான். நல்லது பார்ப்போம். நாளைக் காலமே எல்லாச் சங்கதியும் தெரியுமல்லவா? நான் இறந்து போனேனென்று தெரிந்த பிறகாவது எல்லாருடைய மனமும் திருப்தி யடையுமல்லவா; நாளைக்காவது ஐயாவுடைய மனமும், அம்மாவுடைய மனமும் குளிர்ந்தாற்போலிருக்கு மல்லவா! அதே போதும்; என் தலை விதி இப்படித் துர்மரணமாய்ப்போனாலும் இனிமேலாவது பெண்களைப் பெற்றவர்கள் ஜாக்கிரதையாய் இருப்பார்களல்லவா? அதுவே எனக்குத் திருப்தி. என்பாட்டி! நீ ஒரு காரியம் எனக்காகச்செய்யவேண்டும். சீராளர் காசியிலிருந்து ஒருவேளை வந்து நீயும் அவரைச் சந்திக்கும்படி நேரிட்டால், அவரிடம் ஒரு சங்கதி சொல்லவேண்டும். நான் இறக்கும் பொழுது அவருடைய திருவடிகளைத் தியானம் செய்துகொண்டு இறந்தேனெனவும், அவரிடம் நான் ஒரே ஒரு வேண்டுகோள் செய்துகொண்டேனெனவும் சொல்லவேண்டும். அதாவது, நான் இறந்ததற்காக மன்வருத்தப்படாமல், மேலத்தெருவில் தாலூகா முன்சீபுப் பிள்ளைமகள் தாயம்மையை விவாகஞ் செய்துகொண்டு இந்த வூரை விட்டு வேறே ஊரில் குடியிருக்கும்படி சொல்லிவிடு. அவர் நல்லாயிருக்கட்டும். தாயம்மைதான் அவருக் கிசைந்த பெண். அவருடைய தாயாரிடமும் சொல்லிவிடு. வேறே நான் சொல்லவேண்டிய தொன்று மில்லை" என்று சொல்லிக்கொண்டு தன்

சேலையின் முன்தானையிலிருந்து, தான் சில தினங்களாய்த் தயார்செய்து வைத்திருந்த மைதையோ அவிழ்த்தாள். (அவிழ்த்தது பாஷாணம்) உடனே முத்தம்மாள் பயந்து அவள் கையைப் பிடித்தாள்.

ஐந்தாவது அத்தியாயம்.

காதலர் கூடுதல்.

இதற்குள் கீழ்ப்பக்கத்தி லிருந்து சுவரேறிக் குதித்து ஒரு ஆள் மெள்ள கிட்ட நெருங்கி வந்தது. அந்த ஆளைக் கண்டு வெள்ளையப்பனே யாரோ என்று பயந்த பொற்ருேடி திடுக்கிட்டுப் பாட்டியினுடைய பின்புறத்திலொதுங்கினுள்.

இவ்வாறு சுவரேறிக்குதித்து வந்த ஆள், பாட்டியின் பக்கத்திலொதுங்கி நின்று கொண்டிருந்த பொற்ருேடியைப் பார்த்து, "பொற்ருேடி! பயப்பட வேண்டாம், நான்தான், நான்தான்; உன் மனக் கவலையைநீக்கு" என்று சொல்லிக் கொண்டு கிட்ட நெருங்கி வந்தது.

இதைக்கேட்ட பொற்ருேடி தான் நின்ற விடத்தை விட்டுப் பெயாாமல், உற்றுநோக்கும் பொழுது தனது சீரா ளனேன்று தெரிந்து, அடங்கா ஆச்சரியத்தாலும், ஒரு வேளை தன்னினைவினுல் ஏற்பட்ட கனவோ, மயக்கமோ வேறெவருடைய சூதோ என்ற பயத்தாலும், ஒன்றும் பேச வாயெழாமல் பிரமித்து நின்ருள். வந்து நின்றவன் சீரா

ளனே. போற்றேடியின் முக வாட்டத்தையும் அவள் அடைந்த பயத்தையும், துக்கத்தையும் நினைந்து மனம் வருந்திய,

சீராளன் :— "ஏ கண்மணி! நீ என்மேற்கொண்ட அன்பு உண்மையா யிருந்தபடியாலும், அது தெய்வத்துக்கும் சம்மதமா யிருந்தபடியாலும் உனதெண்ணம் நிறைவேறிற்று. இனி யாதொரு பயமும் வேண்டாம்; எல்லா நன்மையும் எளிதில் அடைவாய். உடனே புறப்படு. நேரமாயிற்று" என்று சொல்லிக்கொண்டு கிட்ட நெருங்கினான். உடனே போற்றேடி, எப்படியும் ஸ்திரீ ஜாதியாகையாலும், திடீரென்று தோன்றிய அளவிறந்த அகமகிழ்ச்சியாலும் சிறிது நாணி வெட்கமடைந்தாள். இதுவரை சொல்லிக்கொண் டிருந்ததற்கும், இப்பொழுது காரியங்களிருக்கும் நிலைமைக்கும் நேர்விரோதமாயிருந்த படியாலும், இப்படிச் சீராளன் பேசிக்கொண்டு கிட்டவரும்பொழுது பாட்டி ஒன்றும் பேசாமல் கல்மேல் உட்கார்ந்திருப்பதாலும்போற்றேடிக்குண்டாகிய ஆச்சரியமும் சந்தேகமும் நீங்கவில்லை. ஆகையால், நாணிக் குனிந்த தலையோடு பாட்டியை சுறண்டினாள். பாட்டி யசையவே யில்லை. கிழக்கே சுவரைப் பார்த்தபடியே யிருந்தாள். பின்னும் போற்றேடி அவள் என்னசொல்லுகிறாள் என்று அறிவோம் என்ற ஆசையால் கிழக்கே திருப்பிக்கொண்டிருந்த தலையைத்தன்பக்கமாகத் திருப்பிப் பாட்டியின் முகத்தை உற்றுப்பார்த்தாள்.

முத்தம்மாள்:—"என்னம்மா, என் கழுத்தைஒடித்துவிடாதே. ஏதோ இறந்துபோகப் போகிறேன் என்று சொ

ன்றாயே? இப்பொழுது நடத்துகிறதுதானே உன் காரியத்தை சீராளனிடம் ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டால் போதுமென்றாயே? இப்போது இதோ வந்து நிற்கிறான். அவனிடம் சொல்லிக்கொள்: சீக்கிரம். ஸ்நாநம் செய்துவிட்டு வீட்டுக்குப்போவோம் கொட்டுச்சத்தம் கேட்கிறது நேரமாய்விட்டது" என்று சொன்னாள். இதைக்கேட்ட,

சீராளன்:—"போதும் பாட்டி, உன்னுடைய கேலிகளெல்லாம் போதும். அவளுடைய மனத்தை இன்னும் புண்ணாக்கவேண்டாம். எழுந்திரு" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே கீழ்புறத்தில் 10, 30, பேர்கள் கம்பும் கையுமாய்ச் சுவரை எட்டிப் பார்த்துக்கொண்டு "ஊம், ஊம்," என்று ஜாடை செய்தார்கள்.

இதைக்கண்ட பொற்றொடி திடீரென்று பயந்து முத்தம்மாளை தழுவிக் கட்டிக்கொண்டு, "இதென்ன இதென்ன சொல்லு பாட்டி" என்று காதுக்குள் சொன்னாள். இதற்குள் சுவருக்கப்புறமிருந்து ஒரு பெரிய ஏணியொன்று சரசரவென்று நழுவிக்கொண்டுவந்து உட்பக்கத்தில் சாய்ந்தது.

முத்தம்மாள்:—"என்னம்மா, பொற்றொடி சும்மா சும்மா அலட்டுகிறாய். சீராளன் உன்னைக் கூட்டிக்கொண்டுபோக வந்திருக்கிறானாக்கும், எனக்கொன்றும் தெரியாது. இஷ்டமிருந்தால் அவன் கூடப்போ இல்லையானால் மாட்டேனென்று சொல்" என்றாள்.

இவ்வாறு சொன்னவுடன் பொற்றொடி விவேகியாகையால் இவைகளெல்லாம் சீராளனுடைய ஏற்பாடாய்

இருக்குமென்று யூகித்து நிமிர்ந்து நின்று சீராளனையும், அப்பொழுது அவனுக்கப்புறத்தில் நிற்கும் ஆட்களையும் ஏறிட்டுப்பார்த்தாள்.

சீராளன் :—"பொற்றொடி! புறப்படு, யோசனை வேண்டாம். சந்தேகம் வேண்டாம். எல்லாம்வெளியே போனவுடன் சொல்லுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு அங்கு மிங்கும் பார்த்தான்.

இந்தச்சமயத்தில் மேல் பக்கத்தில் சற்று தூரத்தில் "ஏ பொற்றொடி, ஏஎ பொற்றொடி, ஏ பாட்டி, ஏஎ பாட்டி" என்று ஒரு சப்தம் ஜாடையாய்க் கேட்டது. பொற்றொடி இதைக் கவனித்துக் கேட்டபொழுது அது தன் தாயின் சப்தமென்றறிந்து, அவள் கிட்டவந்து தன்னைப்பிடித்துக் கொள்வாளோ என்ற பயத்தால் கைகால் பதறிக்கொண்டும், கையை நெறித்துக் கொண்டும் சீராளனை ஏறிட்டுப் பார்த்தாள்.

சீராளன் :—"பயப்படாதே. பயப்படாதே வா" என்றான்.

அப்போது பொற்றொடி இன்ன செய்வதென்று தீர்மானமாய்த் தோன்றாமல் யோசிக்கின்றாள் :—"நாம் இனி அதையும் இதையும் நினைத்து வருந்துவதிற் பயனில்லை, எது எப்படியானாலும் ஆகட்டும். ஏதோ சரியான ஏற்பாடுகள் செய்துகொண்டுதான் எனது சீராளர் என்னை அழைக்க வந்திருப்பார் என்று தோன்றுகிறது ; அவைகளின்னின்னவென்று தெளிவாய்த் தெரிந்து கொள்ளவும் இப்பொழுது நேரமில்லை ; ஆகையினால், ஈசனே துணையென்று சீராளரோடு புறப்படவேண்டியதுதான் ; இனி

மேலும் யோசனை செய்துகொண்டு நேரத்தைக் கடத்தினால் யாராவது கண்டுபிடித்துக் கொள்வார்கள். ஏ ஜகதீசா! நீயே துணை, நீயே கதியென்று சீராளரோடு செல்லுகிறேன். நீ எப்படிவிட்டாலும் சரி. எல்லாம் உன் பொறுப்புத்தான்" என்று சகலபாரங்களையும் கடவுள் வசம் ஒப்பிவித்துவிட்டு மனம் துணிந்து, முத்தம்மாளை நோக்கி "பாட்டி! போவோம்" என்றகுறிப்பைக் காட்டி அவள் கையைப் பிடித்தாள்.

முத்தம்மாள்:—"நானும் வரவேண்டுமா? நீ போ. நான் வரவில்லை. நான் உன் தாயாரிடம் நடந்ததைச் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போகிறேன்" என்று பரிகாசமாய்ச் சொல்லிக்கொண்டு நின்றாள்.

சீராளன்:—"என்ன பாட்டி! நேரமாகிறதே" என்று அவசரமாய் இருவரையும் ஏணியின் மேலேறும்படி சொன்னான்.

உடனே முத்தம்மாள் பொற்றொடியைக் கையைப்பிடித்தழைத்துக்கொண்டு ஏணிமேலேறினாள். பொற்றொடியும் பின்னாலேபார்த்துக்கொண்டும் கைகால்கள் பதறிக்கொண்டும் ஏறினாள். ஏறும்பொழுதே சீராளனும் கூடவருகிறானென்று திரும்பித் திரும்பிப் பார்ப்பாள். பாட்டியும், பொற்றொடியும் சுவருக்கப்புறமும் தயாராய் வைத்திருந்த ஏணிவழியாய் அப்புறத்திலுள்ள வயலுக்குள்ளிறங்கினார்கள். கடைசியில் சீராளனும் இறங்கி ஏணியிரண்டையும் இழுத்துத் தூக்கி வேலைக்காரர்கள் தலைமேலேற்றிக்கொண்டு இரண்டடி யெடுத்துவைக்கவும் அங்கே ஒரு பெட்டிப்பல்லக்குத் தயாராய் நின்றது. அதற்குள் பொற்றொடியையு

முத்தம்மாளையையும் ஏறிக்கொள்ளும்படி சீராளன் சொல்ல, அப்படியே ஏறிக்கொண்டார்கள். சீராளன் பல்லக்கின் ஒருபுறமாக நடந்தான். பல்லக்கைச்சுற்றி எத்தனையோ ஆட்கள் கம்புகள், கத்திகள், வெடிகள் வைத்துக்கொண்டு நடந்தார்கள். வயலெல்லாம் பயிரும் தண்ணீருமா யிருந்தபடியால் இத்தனைபேர்களும் பல்லக்கும் போகும்பொழுது சழ புழ வென்று சத்தம் கேட்டது. இந்த சப்தத்தைக் கேட்ட பொற்கொடி, முத்தம்மாளைப்பார்த்து அவர்களும் (சீராளனும்) தண்ணீருக்குள்ளேயா நடந்துவருகிறார்கள்" என்று கேட்டாள். முத்தம்மாள் அதெல்லாம் இருக்கட்டும்; நீ கிடப்பம் பக்குமுன்னவே னென்று அவனுக்குத் தெரியும்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே பல்லக்கும் ஆட்களும் கிழ ரோட்டில் வந்தேறினார்கள். உடனே பாட்டியும், பொற்கொடியும் சீராளன் உத்தரவுப்படியே பல்லக்கை விட்டுக் கீழேயிறங்கவும் அங்கே 10, 12 குதிரை வண்டிகளும் 4, 5 குதிரைகளும் தயாராய் நின்றுகொண்டிருந்தன. ஒருபக்கத்தில் சுவாமியாரும், ராயரும் கூடிப் பேசிக்கொண்டு நின்றார்கள். ஒரு வண்டிக்குள்ளிருந்து துளசி ஆவலோடு எட்டிப்பார்த்துக்கொண்டு இருந்தாள் இவர்களிருவரையும் கண்ட

துளசி:—"பாட்டி! இங்கேவா, பொற்கொடி இங்கேவா" என்று கூப்பிட்டாள்.

உடனே பொற்கொடி தாரை தரையாய் கண்ணீர்விட்டழுகின்றாள். இப்படிக் கள்ளத்தனமாய் வெளியேறி வந்ததற்காகத் தன்னை கௌரவக்குறைவாய் யாராவது நினைப்பார்களோவென்று தன்னைத்தானே நொந்து கொள்ளுகி

றாள். துளசியண்டை போவதற்கும் வெட்கித் தலைகுனிந்து கொண்டே அழுகிறாள். தன்னைத் துளசி மதிப்புக் குறைவா யெண்ணமாட்டாளா வென்று துக்கப்படுகிறாள். இவ்வாறு வெட்கத்தாலும் துக்கத்தாலும் வருந்துகிற குறிப்பை யறிந்து துளசி கீழே யிறங்கி வந்து, "அம்மா பொற்றொடி! வருத்த மடையவேண்டாம்; என்னை உன்னுடைய தாயென்று நினைத்துக்கொள். நீயே எனது குழந்தை யென்றெண்ணியிருக்கிறேன். என்னை அந்நியமனுஷியென்று வேற்றுமை பாராட்ட வேண்டாம். காரியம் சித்தியாய்விட்டது. வண்டிக்குவா போவோம்" என்று பொற்றொடியைக் கையாலணைத்து கூட்டிக்கொண்டுபோய் வண்டிக்குள் இருக்கும் வேறொருஸ்திரீயுடன் ஏற்றி, தானும் பாட்டியும் ஏறிக்கொண்டார்கள்.

உடனே சாமியாரும் ராயரும், சீராளனும், ஒரு வண்டியிலேறிக்கொண்டார்கள். மற்ற சேவகர்களும் கம்புக்காரரும் மற்றவண்டிகளிலேறிக்கொண்டார்கள். எல்லாத்துக்கும் முன்னால் ஒருவன் குதிரை மேலேறிச் சென்றான். அதன் பின் துளசியின் வண்டி, அதைச்சுற்றிலும் மூன்று குதிரைகள்; அதன்பின் ராயர்வண்டி, அதற்குப்பின் மற்ற வண்டிகள்; கடைசியில் ஒரு குதிரைச்சேவகன் சவாரி. இவ்விதமாக எல்லாவண்டிகளும் மெள்ளப்புறப்பட்டன. இதற்குள்,

ஒருவன்:—"ஐயா! வைத்தியர்எஜமாங்க ஏறிக்கொண்டாங்களா?" என்பான்

இன்னொருவன்:—"ஆமாம். சத்தம் போடாதே" என்பான்."

இப்படி அரை மைல் தூரம் போகவே, சவாரிக் குதிரைகள் 'தடாம் தடாம்' என்றுபாய்கின்றன. குதிரை வண்டிகளோ அதைத்தொடர்ந்து மட மட திடு திடு வெனக் காடுமேடு தெரியாமல் பறக்கின்றன. வண்டிச்சத்தமும், குதிரை சத்தமும் செவிகளைப் பிய்த்துக்கொண்டு போகிறது. ஐயர் "ஜல்தி! அப்படித்தான்" என்று வண்டிக்காரரை உற்சாகப் படுத்துகிருர். வண்டிக்குள்ளிருப்பவர் ஒருவரோ டொருவர் பேசினாலும்கூடக் காதுக்கு தெளிவாய்க் கேட்கவில்லை. இவ்விதமாய் வண்டிகள் போம்பொழுது

துளசி:—(முத்தம்மாளைப்பார்த்து) "அம்மா பாட்டி! நீ பொற்கொடியைக் கூட்டிக்கொண்டு பின்வாசலுக்குப் போனாயே. உங்களிருவருக்குள் என்னென்ன சம்பாஷணை நடந்தது" என்று கேட்க, முத்தம்மாளும் தான் பொற்கொடியைத் தோட்டத்திற்குக் கூட்டிக்கொண்டு வந்ததையும், அவளுடைய மனத்தைப் பரிசோதிப்பதற்காகவும் பரிகாசமாகவும் அவளிடம் கேட்ட கேள்விகளையும், அவைகட்கு அவள் சொன்ன மறுமொழிகளையும், கடைசியில் அவள் பாஷாணத்தைச் சாப்பிடத் துணிந்ததையும், இதற்குள் சீராளன் சுவரேறி வந்ததையும், பின்பு சீராளன் தங்களையழைத்துக்கொண்டு வந்த விதத்தையும் விவரமாய் எடுத்துச் சொன்னாள். உடனே மிகவும் சந்தோஷ மடைந்த

துளசி:—"அம்மா பாட்டி! நான் பொற்கொடியைக்கண்ணால் காணுகிற வரையும் எனக்குச் சந்தேகந்தான். ஒருவேளை பயத்தால் வர மாட்டேனென்று சொல்லி விடுவாளோ, அல்லது நீ அவளிடம் பேசுகிற பொழுது யாராவது

கேட்டுக்கொண்டிருந்து அவளைக் கூட்டிக்கொண்டு போய்
விடுவார்களோ என்னவோ வென்ற சந்தேக மிருந்தது.
ஆனாலும் நாம் ஒரு மணி நேரம் கழித்துப் போயிருந்தால்
ஒன்றும் முடியாது. ஏதோ நல்லவேளை, சரியான சமயத்தில்
போய் சேர்ந்தோம். இனி யென்ன? எப்படியாவது காரியம்
முடிந்தது. இனிமேல் பொற்றொடி, சீராளன் மனைவி என்பதி
ல் தடையில்லை" என்று சொல்லிக்கொண்டிருக்கையில், இந்
தப் பேச்செல்லாம் இன்னதென்று தெளிவாய் விளங்காமல்
ஆங்கு நின்றும் பார்த்துக்கொண்டு கவலையோடிருக்கும்
பொற்றொடிக்கு வண்டி இன்ன விடத்திற்குப் போகிற
தென்பதாவது, இன்னின்ன ஏற்பாடுகள் நடந்திருக்கின்றன
வென்பதாவது ஒன்றுந் தெரியவில்லை. ஓயாமல் பாட்டி முக
த்தையும் துளசியின் முகத்தையும் பார்த்துக்கொண்டு பை
த்தியக்காரிபோல் விழித்துக் கொண்டிருந்தாள். காரியம் எ
ன்னவென்று கேட்கவும் வெட்கமாயும் கூச்சமாயு மிருந்த
து. இதற்குள் இவைகளெல்லாம் குறிப்பாலறிந்த விவேகியா
கிய

துளசி:—"ஏ பொற்றொடி! ஏனம்மா கவலையாயிருக்கி
றாய்? கவலை இன்னும் வேண்டுமா? உன் கவலையெல்லாம் தீ
ர்ந்து போய்விட்டதே. ஆலவாயில் உனக்கும் சீராளனுக்கும்
விவாகம் செய்ய வேண்டியதற்கு எல்லா ஏற்பாடுகளும்
நடந்து தயாராயிருக்கிறது. வெள்ளையப்பனுக்கு நியமிக்கப்
பட்டிருந்த முகூர்த்தத்திலேயே சீராளனுக்கும் முகூர்த்
தம். அதாவது ஆலவாய்க்கு இன்னும் அரைமணி நேரத்
துக்குள்—அதாவது சரியாய் நாலரை மணிக்குப்—போய்
விடுவோம். போனவுடன் திருமாங்கல்ய தாரணம் செய்ய

வேண்டியதுதான். பின்பு சீராளன் உனது நாயகனுவான். இதற்கு, சென்ற பதினைந்து இருபது தினங்களாக யோசனைகளும், முயற்சிகளும் செய்து இவ்விதம் தீர்மானஞ்செய்தோம். நிச்சயமாய் நடக்கவும் போகிறது. நீ அன்பு வைத்த சீராளன் இலகுவான ஆசாமி என்று நினைத்தாயா? அப்படி நினைக்கவேண்டாம். இன்றோடு உன் கவலைகளை நீக்கு. சீராளனோடு இனிச் சுகமாய் வாழலாம். சந்தோஷமாயும், தைரியமாயும் இரு; நீ கும்பிட்ட தெய்வம் நல்ல தெய்வம்'' என்று முதுகைத் தடவி ஆறுதல் சொன்னாள். இவைகளை கேட்டுச் சிறிது சந்தோஷமடைந்து பின்னும் வாய்க்குள் முணுமுணுத்த,

பொற்றொடி:-"எல்லாம்சரி; இப்படிநடக்கும் விவாகத்தை எனதுஐயாவும் அம்மாவும்கூடவிருந்து நடத்திவிடப்படாதா? அந்த லபி எனக்கில்லாமற் போய்விட்டதாக்கும். அம்மா என்னை எங்கே யெல்லாம் தேடி யலைகிறளோ? அவளையாவது கூடக் கூட்டிக்கொண்டு வந்தோமில்லையே. எனது கல்யாணத்தை அவளாவது கண்ணுற் பார்க்க வேண்டாமா? என் கல்யாணம பாராமல் வேறு யார் கல்யாணம் பார்க்கப் போகிறாள்? ஒரு மகளென்று என்னை அருமையாய் வளர்த்தாளே" என்று சொல்லிக்கொண்டு தாயின் மேற்கொண்ட உள்ளன்பால் கண்ணீர்விட்டு விம்மி விம்மி யழுதாள். இதைக்கேட்ட

முத்தம்மாள்:—"பொற்றொடி! நீ வனுந்த மனுஷியாக்கும். 'உனக்கு மீசைக்கு மாசை, கூழுக்கு மாசை; சீராளனையும் விடமாட்டாய்' அம்மாளும் கல்யாணத்துக்கு

வந்துவிடவேண்டும். உன் ஆசைதான் என்ன ஆசை! அதெல்லாம் பின்பு யோசிக்கலாம். வேண்டுமானால் உன், சீமந்தத்துக்கு அம்மாளைக் கூப்பிட்டுக் கொள்ளலாம். பேசாம லிரு. தலை பிழைத்தது தாலிப் பாக்கிய மென்றி ராமல், அம்மாளையா தேடுகிறாய்? இதோ இருக்கிறார்களே இவர்கள் தான் துளசி. இப்போதைக்கு உனது அம்மா என்று எண்ணிக்கொள்" என்று சொல்வதற்கு முன்னமே வண்டிகளெல்லாம் மெள்ளப் போக ஆரம்பித்தன. வண்டிகளை எதிர் பார்த்துக்கொண்டு அநேக ஜனங்கள் வழியில் நின்று கொண்டிருந்தார்கள். ஆலவாப்பட்டணத்துக்குள் வந்துவிட்டார்கள். நேரம் விடியற்காலமா யிருந்தாலும் அங்குமிங்கும் ஜனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள். வண்டிகளெல்லாம் நின்றுவிட்டன. உடனே பெண்ணை யழைத்துக் கொண்டு போவதற்காக அநேக சிறுபெண்கள் துளசியின் வண்டி பண்டை வந்து நின்றார்கள். முதலில் துளசி கீழே யிறங்கினாள். அதன் பின்பு முத்தம்மாள் இறங்கினாள். கடைசியில் அடங்காத வெட்கத்தோடும் சிறிது கவலையோடும் பொற்றொடி யிறங்கினாள் துளசி பொற்றொடியின் கையைப்பிடித்து வீட்டுக்குள் அழைத்துக் கொண்டுபோனாள். போகவே மேளவாத்தியங்கள் ஆரம்பமாய் விட்டன. அநேக ஜனங்கள் கும்பல் கும்பலாய்க் கூடிவிட்டார்கள். மணி சரியாய் ஐந்து ஆய் விட்டது.

இவ்வாறு ராயர் வீட்டில் நடக்கப்போகும் விவாகத்தைப் பார்க்கவேண்டுமென்று அநேக பெரியவர்களும் வந்து சேர்ந்தார்கள். மாப்பிள்ளை பெண் இரண்டுபேரும்

$5\frac{1}{2}$ மணிக்குள் ஸ்நானம் முதலியது முடிந்தவுடன் அலங்காரம் செய்யப்பட்டார்கள். பிராமணர்கள் மணவறையில் வந்து உட்கார்ந்தார்கள். முகூர்த்த காலம் சமீபித்துவிட்டது. சீராளனுடைய தாயார் சிவகாமி இரண்டுமூன்றுதினத்துக்குமுன்னமே ஆலவாய்க்கு வந்திருந்தாள். மாப்பிள்ளை பெண்கள் இருவரையும் மணவறைக்கு அழைத்துக்கொண்டு வந்தார்கள். இதில் பெண்ணைத் தாரைவார்த்தும் கொடுக்கிற ஒரு கிரியையில், சத்திய சீலராயரும் அவர் மனைவி துளசியும், பிறப்பினால் பிராமணராய் இருந்தாலும், அநுஷ்டானத்தில் சர்வ ஜீவன்களும் ஓரே ஜாதியாரென்ற பெருங் கொள்கை யுடையவராதலால், பொற்கொடிக்குத் தாயும், தகப்பனுமாயிருந்து அவளைத் தாரைவார்த்துக் கொடுத்தார்கள். சீராளன் தகப்பனை இழந்தவனாகையாலும், அதனால் தாயார் சுபகாரியங்களுக் குரியவ ளல்லாதவளா யிருந்தமையாலும், சுவாமியாரொருவரே சீராளனுக்குத் தாயும் தகப்பனுமாயிருந்து, தாரைவார்த்தளிக்கப்பட்ட பொற்கொடியை ஏற்றுக் கொண்டார். சீராளனுடைய நண்பர்கள் மாப்பிள்ளைத் தோழமாராயிருந்தார்கள். அந்த நண்பர்களின் மனைவிகளாயும் அங்கு வந்திருந்தவர்களாயுமிருந்த சிறு பெண்கள் பெண்ணுக்குத் தோழிகளாயிருந்தார்கள். சரியாய் முகூர்த்தகாலம் வரவே வாத்ய கோஷங்களும், கரகோஷங்களும் மங்களமாகத் தொனிக்க, திருமாங்கல்ய தாரணம் வெகு சிறப்பாய் நடந்தேறியது. உடனே சீராளனுடைய மனமும் பொற்கொடியினுடைய மனமும் பூரித்தன. மணவறையைச் சுற்றிநின்ற சுமங்கலிகளும், சிறுபெண்களும்,

சிறுவரும் பனிநீரிற் கரைத்த சந்தனத்திற்றோய்த்த நறுமலர்களை அள்ளியள்ளித் தூவினர். கல்யாணப் பந்தலெங்கும் புஷ்பமாரி பெய்தாற்போலிருந்தது. இங்ஙனமாகவே சீராளனும், பொற்றொடியும் தற்கால நாகரீகத்தை யனுசரித்து ஒருவரோடொருவர் கணையாழி மாற்றிக்கொண்டனர். சீராளனது நண்பர்களாற் பாடப்பட்ட மங்கள பாக்களும், வாழ்த்துக்கவிகளும், பிடில், முகவீணை, மிருதங்கம முதலிய சின்னமேளத்தோடு பண்பட வாசித்துப் பாடப்பட்டன. இதுமுடியவே பெண்ணையும், மாப்பிள்ளையையும் மணவறையினின் றழைத்துக்கொண்டு போயினர். மணி ஒன்பதரை ஆய்விட்டது சரியாய் பத்துமணிக்கெல்லாம் போஜனத்திற்குப் பந்திவைத்தாய்விட்டது. மேல்வீட்டின் ஒருபாகத்தில், சுவாமியார், ராயர், சீராளன், அவனது நண்பர்களுக்கும், மற்றொரு பாகத்தில் துளசி, பொற்றொடி, பாட்டி, மற்றத் தோழிப்பெண்கள் இவர்களுக்கும் இலை போடப்பட்டுப் பிராமணபரிசாரகர்களால் அறுசுவையமைந்த பலவிதக்கறிவகைகளும் அன்னமும் பரிமாறப்பட்டன. கீழ்வீட்டிலும, தாழ்வாரங்களிலும், கூடத்திலும் பந்தல்களிலும் மற்றச் சேவகர்கள் கம்புக்காரர், வெடிக்காரர், குதிரைக்காரர்களுக்கும் அதே சமயத்தில் அதிதிவ்யமான போஜனமளிக்கப்பட்டது. இவ்வாறு சுமார் பதினொன்றரை மணிக்கெல்லாம் போஜன முடிந்தது மணி பன்னிரண்டுக்கெல்லாம் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும், பரதேசிகளுக்கும், அன்னமும ஆடைகளும் அளிக்கப்பட்டன. சர்வஜனங்களும் "வாழ்க வாழ்க. பொற்றொடி வாழ்க, சீராளன் வாழ்க, ராயர்

வாழ்க, அவர் மனைவி வாழ்க, சுவாமியார் முதலிய சகலரும் வாழ்க." வென்று ஆனந்த கோஷம் செய்தனர். பக்கத்துவீடுகளிலிருந்தும், அடுத்த குக்கிராமங்களிலிருந்தும் அனேக ஜனங்கள் மாப்பிள்ளை பெண்களைப் பார்க்க வந்தார்கள். இவர்களுக்குள் ஸ்திரீகளே அதிகமாய்க் கூட்டம் கூட்டமாய் வந்திருந்தபடியால், இவர்களெல்லாருக்கும் தாம்பூலங்கொடுத்துபசரிக்குமுன் துளசி நிரம்பச் சிரமப்பட்டுவிட்டாள். அங்கு வந்த ஸ்திரீகளுள் ஒருத்தி "ஆஹா மாப்பிள்ளையும், பெண்ணும் தரமாயிருக்கிறார்கள். அந்த மாப்பிள்ளைக்கு இந்தப்பெண்தான் சரி" என்பாள். இன்னொருத்தி, "இல்லை, யில்லை. போற்றேடியி னுடைய நிறத்துக்கு மாப்பிள்ளை நிறம் கொஞ்சம கம்மி" என்பாள். இதற்குள், இன்னொரு புத்திசாலியான ஸ்திரி," இதெல்லாமென்ன பேச்சு! இரண்டுபேரும் நிறம் ஒன்றுபோல இருந்தால் என்ன? இராவிட்டாலென்ன? இரண்டுபேருடைய மனமும் ஒன்றுபோல இருக்கிறதே அதல்லவா விசேஷம். அதல்லவா அபூர்வம். இதல்லாமல நிறத்திலும், உயரத்திலும் அழகிலுமென்ன இருக்கிறது? இவர்களிருவருக்கும் அப்படிப்பட்ட அதிர்ஷ்டம் கிடைத்தது. நல்ல தீர்க்காயுசு பெற்றுப்பெருகிப் பந்தானமாய் இருக்கவேண்டும்" என்பாள்.

இதற்குள் மணி இரண்டு ஆயிற்று. உடனே நலுங்கு ஊஞ்சல் முதலிய நடத்துவதற்காகப் பெண்ணை யழைத்துக்கொண்டு போனார்கள். மாப்பிள்ளை பெண் இருவரும் பூரித்த மனத்தோடும், மலர்ந்த முகத்தோடும், பூம்பந்தெறிதல், பல்லாங்குழி விளையாடல், சந்தனம் பூசல், அப்பளம்

தட்டல், தாம்பூல மீதல், ஆடிமாற்றுதல் முதலிய பலவகை விளையாட்டுகளையும் குதூகலத்தோடும், மனப்பூர்வமாயும், ஆசையோடும், ஆனந்தத்தோடும் ஆடினர். பின்பு சில சிறுமிகளும், சிறுவர்களும் கூடித் தம்புரு மீட்டிக்கொண்டு,

"பொன்னூசலாடாமோ,
பொற்றொடி தன்
பொன்னூசலாடாமோ,
இன்னுமிந்தச்
சீரூசலாடாமோ,
சீராளன்
சீரூசலாடாமோ
ஆடாமோ! ஆடாமோ!! ஆடாமோ!!!"

என்று பாடப் பொற்றொடியும், சீராளனும் சிறிதுநேரம் ஊசலாடினர்.

இதற்குள் மணியும் நான்கு அடித்தது. அடிக்கவும், வாசல் மகாராஜா திருமலையப்ப நாயக்கரவர்களுடைய இரண்டு குதிரைமாட்டிய பெரிய சாரட்டொன்று வந்து தயாராய் நின்றது. உடனே பட்டணப்பிரவேசத்துக் காரம்பித்துவிட்டார்கள். பட்டணபிரவேசத்தின் சிறப்பையும் அங்கே கூடியிருந்த ஜனங்களின் கூட்டத்தையும் ஒவ்வொரு வீட்டின்வாசலிலும் நிறை குடங்களும் தீபங்களும் வைத்திருந்த அலங்காரத்தையும் இலகுவில் சொல்லமுடியாது எல்லாவற்றிற்கு முன்னமே அங்கயற்கண்ணி ஆலயத்துப் பட்டத்துயானை சென்றது; அதன்பின் வஸ்தாதுகளும் பயில்வான்களும் குஸ்தி, சர்க்கஸ் முதலிய வேடிக்

கைசெய்து கொண்டுபோனார்கள். அதன்பின் பாண்டு வாத்தியம் "பம்பம்" என்று தோனித்தது. அதன்பின் வீணை, பிடில் முதலிய மீட்டிப் பாடிக்கொண்டு பாகவதர்கள் சென்றார்கள். அதன்பின் நாகசுரக்காரரும் தவில்காரரும் முழக்கினார்கள். அதன்பின் சுவாமியாரும், ராயரும் புன்னகை செய்துகொண்டு வெகு உல்லாசமாயும் கெம்பீரமாயும் மெல்ல நடந்தார்கள். சாமியார் நாசுரக்காரருடைய வாசிப்பை மெச்சி "ஆஹா! ஆஹா அச்சா!, பஹாபேஷ்," என்று தலையைப்போட்டு ஆட்டிக்கொண்டும், உருட்டிக்கொண்டும் ஆநந்தக் கூத்தாடிக்கொண்டே போவார். ராயர், சுவாமியாரைப்போல் தலையை உருட்டாவிட்டாலும் ஒருவிதமாய் அசைத்துக்கொண்டு தனக்குத் தெரியாத இராகங்களை நாசுரக்காரன் வாசித்தால் "இதென்ன ராகம் சுவாமி?" என்று சாமியாரிடம் இரகசியமாய்க் காதுக்குள்ளே சொல்லிக் கேட்டுத் தெரிந்து கொள்வார். இவ்வளவு சம்பிரமமாகச் சுமார் மாலை ஏழு மணிக்கெல்லாம் பட்டணப் பிரவேச முடிந்து வீடுவந்து சேர்ந்தார்கள். இரண்டாவதும் ஊஞ்சல் நலுங்குகள் நடந்து, பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பாலும், பழமும் கொடுப்பதற்காக அவர்களை மேல் வீட்டுக் கழைத்துக்கொண்டு போனார்கள். சுமார் ஒன்பதரை மணிக்கெல்லாம் இராப்போஜனமுமுடிந்தது. கூட்டங்களும் கலைந்து ஒவ்வொருவரும் அவரவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். சீராளனது ஆத்ம நண்பர்களும் அவர்களுடைய மனைவிமாரும்கூடி மூன்றுவது மெத்தையிலே பள்ளியறை யேற்படுத்தி அலங்காரம் செய்தார்கள். ஒவ்வொரு நண்பரும் தத்தமக்குப் பிரியமானபடி புஷ்ப

சரங்களும், புஷ்ப ஹாரங்களும், சந்தன களப கஸ்தூரி கலவைச் சாந்துகளும், மிட்டாய, ஜிலேபி, அல்வா, திரட்டுப்பால் பேணி, பூந்தி, ரசகுல்லா, சோமாஸ், அதிமதுரம், உப்பட்டு முதலிய நானாவித பலகாரங்களும் தயார்செய்து பள்ளியறையெங்கும் நிரப்பினார்கள். இவ்வித ஜோடனைகளெல்லா முடியவே பெண்ணின் தோழிகள் பொற்றொடியை மறைத்துக்கொண்டு பள்ளியறையிற் சேர்த்துவிட்டுக் கீழே இறங்கினார். பின்பு சீராளனும் சென்றான். செல்லவும், மகாலக்ஷ்மியும், அருந்ததியும், சந்திரமதி தேவியாரும் போன்ற கற்பரசிகளும் சேர்ந்து ஓர் உருவெடுத்துவந்தாற் போல் விளங்கிய பொற்றொடியாகிய பெண்மணி, சீராளனது உயிர்த்துணைவிய கண்மணி, தான் உட்கார்ந்துகொண்டிருந்த சோபாவினின்று திடீரென்று எழுந்து நின்று, தனது இரண்டு மலர்க்கரங்களையும் கூப்பி, சீராளச்செல்வனை, தனது அன்பார்ந்த ஆசை மணாளனை, தன் வாழ்க்கையை வாழ்விக்க வந்த மன்னனை, தன் பிறப்பை சாபல்யப்படுத்த வந்தருளிய சீராளதேவனை, தன்கண்கண்ட கருணாகரனை அவனுடைய உபயபாதங்களில் தனது பொன்முடி தோயும்படி வணங்கி, அப்படி வணங்கின படியே குனிந்து நின்று சீராளனது திவ்விய பாதங்களை மும்முறை தொட்டுக் கண்ணிலொற்றிக் களித்த படியே நின்றனள். நெடுநாள் அருந்தவஞ் செய்து தேடி வருந்திய பயனைக்கண்ட தபசியொருவன் எவ்வாறு பயபக்தியோடு வணங்கி ஆனந்த பாக்யம் பெற்றுப் பரவசப்பட்டிருப்பானோ அவ்வாறே பொற்றொடியும் சீராளனைத் தனது நாயகனென்ற மாத்திரத்தில் நினையாமல், எந்தா

சேடித் தவமிருந்தழைத்த தேவ தேவனைக்கண்டு தரிசித்தாற்போலத் தன்னைமறந்து தன்னுயிரையும் மனத்தையும் சீராளன் பாலிழந்து சித்திரப்பதுமை போலத் திகழ்ந்து விளங்கினுள்.

இதைக்கண்ட சீராளன், பொற்றொடியின்மீது தான் முன்கொண்டிருந்த அபிப்பிராயத்திலும் பதின்மடங்கதிகமான உயர்ந்த அபிப்பிராயத்தைக் கொண்டான். தானொருவனே உலகத்தில் அதிர்ஷ்டசாலி யென்று தனக்குள் மகிழ்ந்தான். பொற்றொடியினுடைய மனோதத்துவ குணங்களையும், செய்கைகளையும் நோக்கித் தான் அவளுக்குப் புருஷனுயிருக்க அருகதையுள்ளவனும் தனக்குள் சந்தேகித்துச் சிந்தித்தான். தேவகன்னிகைபோல விளங்கிப் பொலிந்து தன்னெதிரில் நிற்கும் பொற்றொடியின் மலர்க் கரத்தைத் தனது கண்களிலொற்றிக்கொண்டு ஆனந்தபரவசனுய் மனைவியை நோக்கி "கண்மணி! இன்றோடு உன் கவலையும், என் கவலையும் அடியோடு நீங்கின. இனி யாதொரு குறைவுமின்றி வாழலாம். எனக்கு இந்த உலகத்தில் உன்னையன்றி வேறொரு பற்றுமில்லை." என்று சொல்லிக்கொண்டு ஆசனத்தில் உட்காரும்படி வேண்டினுன். வேண்டுகோளுக்கிசைந்து பொற்றொடியும் ஓராசனத்திலுட்காரவே இருவரும் பின்வருமாறு சம்பாஷிக்கத் தொடங்கினர்.

சீராளன்:—"கண்மணி! நேற்றிந்நேரமெல்லாம், நாமிருவரும் இன்றிரவு இந்த ஆனந்தமான நிலைமையிலிருப்போமென்று சிறிதேனு மெண்ணியிருந்தயோ?"

பொற்றொடி மௌனமாய் ஒன்றும் பேசவில்லை.

சீராளன் :—"பொற்ரேடி! என் கண்மணீ! என் அன்பினிருப்பிடமே! நீ அப்படி எண்ணியிருந்தாயா?"

பொற்ரேடி இன்னும் மெள்ள சீராளன் முகத்தைச் சுறிது ஏறிட்டுப்பார்த்துப் பின்னும் கவிழ்ந்துகொண்டாள்.

சீராளன் :—"பொற்ரேடி! என்னிடத்திற் பேசப்படாதா? உனது இன்னுரையை என் காதாற் சிறிது கேட்டு மகிழலாகாதா?"

பொற்ரேடி சீராளனைப் பின்னுமொருகரம் ஏறிட்டுப் பார்த்துச் சிறிது புன்னகை செய்தனள்.

சீராளன் :—"பொற்ரேடி நான் கேட்டதற்குப் பதில் சொல்லப்படாதா? அவ்வளவு தயவில்லையா?"

பொற்ரேடி :—(மெல்ல) "என்ன பதில்?"

சீராளன் :—"இல்லை; நீ நேற்றிந்நேரமெல்லாம் என்னைப்பற்றியும், உன்னைப்பற்றியும் என்ன எண்ணியிருந்தாய்?

பொற்ரேடி :—"என்ன எண்ணம்? ஒன்றுமெண்ணவில்லை."

சீராளன் :—"ஒன்றுமெண்ணவில்லையா? பேசாமலாயிருந்தாய்? உனக்கு யாதொரு கவலையுமிருந்ததில்லையா?"

பொற்ரேடி :—"அதற்கென்ன இப்போது?"

சீராளன் :—"அதற்கென்னவா? நல்லது, நல்லது. காரியமுடிந்த பிறகு அலக்ஷியம் வேறு?"

பொற்ரேடி:—"அலக்ஷியம் ஒன்றுமில்லை."

சீராளன்:—"அப்படியானால் நான் கேட்பதற்கு ஒன்றும் சரியாகச் சொல்லாம லிருக்கிறாயே? அதுதான் அலக்ஷியமா வென்று கேட்டேன்."

பொற்றொடி:—"அலக்ஷியமென்பதையும், அலக்ஷியமில்லையென்பதையும் என்னிடம் கேட்டுத்தானா தெரியவேண்டும்?"

சீராளன்:—"இல்லை யில்லை. சும்மா கேட்டேன். அதற்கு நன்றாய் வாய்திறந்து பதில் சொல்லிவிடப்படாதா? நானென்ன வழிப்போக்கனா? என்னிடம் பேசுவதற்கு என்ன தங்கை? பொற்றொடி! ஆமாம் பொற்றொடி, என்பேரில் அவ்வளவு பக்ஷமில்லையா? உனக்காக என்னபாடெல்லாம் பட்டேன்."

பொற்றொடி:—"எனக்காகவா? உங்களுக்காக வில்லையோ? சரிதான். அப்படித்தான் சொல்வீர்கள்."

சீராளன்:—"இல்லை, இல்லை." இரண்டு பேருக்குமாகத் தான் பாடுபட்டேன்."

பொற்றொடி:—"அப்படிப்பட்டது நீங்கள் மட்டும் தானாக்கும்? வேறே வேறொருவரும் ஒரு பாடும்படவில்லை போலிருக்கிறது!"

சீராளன்:—"அப்படியுமில்லை பொற்றொடி. நீயும் நிரம்பக் கஷ்டப்பட்டுத்தான்விட்டாய். அது எனக்குத் தெரியாதா? வாய்தவறி ஏதாவது மறந்து சொல்லிவிட்டால் அதையே குற்றமாய்ப் பிடித்துக்கொள்ளுகிறாயே? உன்னைப் போல் சமர்த்தாய் முன்பின் யோசித்துப் பேச எனக்குத் தெரியவில்லையே? இனிமேல் உன்னிடம் படித்துக்கொள்வேன்."

பொற்ருேடி:—"என் சமர்த்தை நீங்கள்தான் மெச்சிக் கொள்ளவேண்டும். என்னுலென்ன நடந்தது? எல்லாம் உங்களுடைய முயற்சிதானே? இல்லாவிட்டால் என்னுடைய கதி அதோகதிதானே?"

சீராளன்:—"அது சரிதான். உன்னுலுமில்லை; என்னுலுமில்லை. எல்லாம் ஈசன் செயல். சுவாமியாரும் இராயரவர்களும் தான் தெய்வம் போல வந்து உதவிஞர்கள்."

பொற்ருேடி:—"அது மெய்தான். அவர்களும் எல்லாருக்கும் இப்படி உதவுவார்களா? நீங்களும் அவர்கள் சந்தோஷிக்கக் கூடிய விதமாய் முன் நடந்திருந்தபடியால் உதவி செய்தார்கள். வெள்ளையப்பனுக்கு யாராவது உதவி செய்வார்களோ ?"

சீராளன்:—"அதுவும் நிஜம்தான். சரிதானே; இப்பொழுது கோபாலபுரத்தில் என்னநடக்கிறதென்று தெரியவில்லையே."

பொற்ருேடி:—"நானும் இப்போது அதைப்பற்றித்தான் எண்ணினேன். நீங்களும் சொல்லிவிட்டீர்கள்."

சீராளன்:—"எல்லாம் விடிந்தால் தெரியும். என்னவோ பார்ப்போம்."

பொற்ருேடி:—"அதெல்லாமிருக்கட்டும். நான் எழுதிய கடிதத்துக்கு என் பதிலெழுதாமற் பேசாதிருந்துவிட்டீர்கள்? பதில் வரும் வருமென்று திசையைப் பார்த்துக்கொண்டிருந்தேனே."

சீராளன்:—"நான் பேசாமலிருந்தேனென்று எண்ணிவிட்டாய்? ஐயோ! நான் பட்டபாடும் அலேந்த அலேச்சலும் அந்த ஈசனுக்குத்தான் தெரியும். இனிமேல் கடிதப் போக்குவரவு வைத்துக்கொண்டால் வெளிக்கு வந்துவிடுமென்றல்லவா பேசாதிருந்துவிட்டேன்."

பொற்கொடி:—"நீங்கள் இப்படி எண்ணினீர்களென்று நான் கண்டேனு? என்னவோ எழுதவில்லேயாக்கும், நம்மை மறந்துவிட்டார்களோ அல்லது எங்கேயாவது போய்விட்டார்களோ என்ன சங்கதியோ தெரியவில்லேயே, வருவார் போவாரைக்கூடக் காணுமேயென்று நான் அடைந்த துக்கத்தை நீங்களறிவீர்களா? கடைசியாய் வந்துசேர்ந்த பாட்டியுங்கூட என்ஃனப் பின்வாசல் வழியாய்த் தோட்டத்துக்குள் கூட்டிக்கொண்டுபோய் என்ஃன பரிசோதிக்க வேண்டுமென்றே அல்லது பரிகாசமாயோ கேலிசெய்துகொண்டிருந்தாளே தவிர உள்ளதைச் சொன்னுளில்லேயே. உங்கள் முகத்தைக் காணுகிறவரை என் உயிர் என்வசத்திலில்லே. பின்பும், தோட்டத்தில் வந்து நின்றது நீங்கள்தானே வெள்ளேயப்பனே அல்லது வேறே யாரோவெனப் பயந்துபோய்விட்டேன். உங்களே நான் நன்ருய்ப் பார்த்து மூன்று நாலுவருஷமாய்விட்டபடியால், உங்களேக் கண்டவுடனே நீங்கள்தானென்று நம்ப இடமில்லே. பின்னும் உங்கள் சத்தம் கேட்டவுடன் நீங்கள்தானென்று நிச்சயித்தேன். ஆனல் நீங்கள் ஒரு மணி நேரம் கழித்து வந்திருக்கும்பக்ஷத்தில் என்ஃன உயிரோடு பார்த்திருக்கமாட்டீர்கள். என்னுடைய பிரேதத்தைப் பார்ப்பீர்களோ என்னவோ?"

சீராளன்:—(கண்ணில் ஜலம் ததும்ப) "கண்மணீ! என்னருயிரே! பெறலருங்கிருவே! என் கண்மணீ! அப்படியேன் சொல்லுகிறாய்? நான் ஒருவேளை வரத் தவறினாலும் நீ யிறந்துபோயிருப்பாயே. ஐயோ பாவம்! அப்படியானால் நீ இறந்தபாவம் எனக்குத் தானே? சிவசிவா! நல்லவேளை. நம்முடைய அந்நியோந்நிய அன்பு மெய்யானகையால் அப்படி ஒன்றும் வரவில்லை. இனியும் நமக்கு ஈசனே துணை." என்று சொல்லிக்கொண்டு ஏங்கினான்.

பொற்கொடி:—(தனது மெல்லிய வஸ்திரத்தால் அவன் கண்ணைத் துடைத்து) "நல்லது சரிதான். இதற்காகத் துக்கப்படலாமா? நினைத்தபடி காரியம் முடிந்தது. சென்ற காலத்தை நினைந்து வீணே துக்கப்படவேண்டாம். ஏ நாதா! என் பிராணநாதா!" என்று தனது குயிலினுமினிய மொழிகளால் ஆற்றினாள்.

சீராளன்:—"கண்மணி! நானுன்னை மணந்து வாழத் தவறி, நீயும் இறந்துபோயாவது அல்லது வெள்ளையப்பன் கையிலகப்பட்டாவது இருக்கும்படி நேரிட்டால், நான் என்னுயிரை வைத்திருப்பேனென் றெண்ணினையா? ஆஹா! நீ எப்பொழுது இறந்தாயென்று கேள்விப்படுவேனோ அப்பொழுதே என்னுயிர், யாதொரு முயற்சியுஞ் செய்யாமல், தானே பறந்தோடி விடுமே. ஏ பொற்கொடீ! நான் தீர்மானித்திருந்த தீர்மானமுனக்குத் தெரியுமா? 'பொற்கொடியை அடைவதற்குக் கூடியவரை முயற்சி செய்வோம். ஒரு வழியாலும் முடியாவிட்டால் உயிரை நிச்சயமாய் விட்டுவிடவேண்டும்,' என்று திட்டமாய் நினைத்திருக்க

இதையறியாமல் நீ தோட்டத்தில் முத்தம்மாளிடம் என்னவோ சொன்னாய்? நீ என்னை அப்படியா எண்ணினாய்?"

போற்றேடி:—"ஆ! நானென்ன சொன்னேன்? உங்களைப்பற்றி ஏதாவது குற்றமாய்ச் சொன்னேனா?" என்று அங்கு மிங்கும் பரக்கப் பரக்கப் பார்த்தாள்.

சீராளன்:—"ஒன்றுமில்லை. ஏதோ நீ யிறந்து போன பிறகு யாரையோ நான் விவாகஞ் செய்துகொள்ளும்படி பாட்டியாரிடம் யோசனை சொன்னாயே. ஏ பயித்தியகாரி! உன்னை மணக்கவேண்டுமென்று எண்ணியிருந்த மனம் இன்னொரு பெண்ணை விரும்புமா? உன் கழுத்தில் திருமாங்கல்யம் பூணவெண்ணிய என்கைதான் இன்னொரு பெண்ணைத் தொடத் துணியுமா? அப்படித் துணிந்தாலும், அந்தக் கையை இரண்டு துண்டாய்த் துணிக்க மாட்டேனா? இதையறியாமல் நான் இன்னொரு பெண்ணை விவாகஞ் செய்வேனென்றெண்ணினாயே. உன்னுடைய புத்தியும், படிப்புமிவ்வளவு தானா? நீதான் நல்லவளென்றும், நான் நன்றி மறந்த பாவியென்றுமா எண்ணினாய்? நல்லது! நல்லது! நன்றாயிருந்தது உன்யோசனை! என்னை விரும்பி, யான் கிட்டாமற்போன காரணத்தால் நீ உயிரிழந்துபோக அதை மனதார அறிந்துகொண்டு, பின்னும் வேறொருத்தியை மணந்தால் நானுமோர் மனுஷனா? நானும் வேஷ்டிகட்டிக்கொண்டு திரியவும் வேண்டுமா? இந்தக்காலத்தில், பெண்சாதியொருத்தி வைப்பாட்டியொருத்தி, சோரநாயகியொருத்தி, கூத்தியாள் ஒருத்தியென்று நாலைந்து பிணங்களை கட்டியழுதுகொண்டு திரிகிறார்களே சில நடைப்பிணங்கள், அப்படிப்பட்ட பிணமென்றெண்ணினாயா

என்னையும்? பெண்ணே! நான் உன்னைக் கேவலம் மனைவியாக எண்ணவேயில்லை. என்னுடைய ஜன்மத்தை ஈடேற்ற வந்த மகாலக்ஷ்மியென்றுதான் எண்ணியிருக்கின்றேன்." என்று மடமடவென்று என்னவெல்லாமோ சொல்லிக்கொண்டே போகிறான்.

பொற்றொடி:—"நீங்களினிமேல் லெனக்கு விசிவாயென்றும் சொல்லவேண்டாம். நாமிருவரும் நினைத்தபடி கைகூடாமல், ஒருவரை யொருவர் கண்ணுலும் காணமல், போகும்படி நேரிட்டு, நாமிருவரும் மரணமடைந்துவிட்டாலும் கூட, இன்னொரு பிறப்பிலாவது நாமிருவரும் ஸ்திரீ புருஷராய் வந்து பிறப்போமேயன்றி வேறில்லை. ஆகையால் போனது போகட்டும்." என்று சொல்லிமுடித்து, தான் கடிதமெழுதிய பின்பு நடந்த விருத்தாந்தங்களையும், கடைசியாய்த் தோட்டத்தில் வந்து தன்னைச் சந்தித்த காலம் வரை செய்த ஏற்பாடுகளையும், நடந்த விசேஷங்களையும் சொல்லும்படி வேண்டினள்.

இதைக்கேட்ட சீராளன், தனக்கும் சாமியாருக்கும் ஆதியில் கோபாலபுரத்தில்நடந்த சம்பாஷணையையும், சாமியார் இன்னாரென்பதையும், ஆலவாயில் சத்தியசீலராயரவர்களைக் கண்டு பேசியதையும், திருமங்கலத்தில் தனது பள்ளிக்கூடத்தில் வாசிக்கிற தனது மாணாக்கர்களினுடைய உதவியால் கிடைத்த பெருந் துணையையும், தனது ஆப்த நண்பர்கள் சொல்லிக் கொடுத்த உபாயங்களையும், பின்பு முத்தம்மாளும், துளசியும் கபடமாய்க் கோபாலபுரத்தில் பொற்றொடியின் வீட்டுக்கு வந்து செய்தசாமர்த்தியத்தை

யும், தானும், கம்புக்காரரும் வண்டிக்காரரும் பல்லக்குக்காரரும் கீழ்ரோட்டில் வந்து காத்துக்கொண்டிருந்ததையும், தோட்டத்தின் கீழ்ச்சுவரோரமாய் ஒன்றி நின்று பாட்டிக்கும்போற்றேடிக்கும் நடந்தசம்பாஷணையைக்கேட்டுக்கொண்டிருந்ததையும் மற்ற எல்லா விவரங்களையும் படிப்படியாய் வரிசை வரிசையாய்ச் சொல்லிக்கொண்டே வந்தான். போற்றேடியும் விரித்த கண் இமையாமல் வெகு கவனமாய்க் கேட்டுக்கொண்டே வந்தாள். சீராளன் செய்த அசாத்தியமான யோசனைகளையும் யுக்திகளையும் உபாயங்களையும், கேட்டு சீராளனுடைய சாமர்த்தியத்தையும், மூளையையும், சுவாமியாரும், ராயரும், மற்ற நண்பரும், மாணுக்கரும் செய்த உதவிகளையும், இதெல்லாம் காணமல் தனது பாட்டியம்மாள் செய்த ரணவேலைகளையும், வேடிக்கைகளையும் நினைந்து நினைந்து மனதுக்குள்ளே மகிழ்ந்து பூரித்தாள். இந்தக் கலியுகத்தில் இவ்வளவு கல்வியும், குணமும், மதிநுட்பமும் பொதுவாய்ப் பெண்பால்மீது—விசேஷமாய் மனைவி மீது—இவ்வளவு அன்பும் வாய்ந்த புருஷர் அருமையிலும் அருமை. அப்படியிருக்க நமக்கு இந்த புண்ணியசீலரை மணவாளரா யடையப் பெற்ற பாக்கியம் கிடைத்ததே நாமே பாக்கியசாலி, நாமே யோகசாலி, அதிர்ஷ்டசாலி, புண்ணியவதி" என்று தன்னைத்தானேவாழ்த்தினள். மகிழ்ந்தாள். மகிழ்ச்சியி லாழ்ந்தாள்.

ஆறுவது அத்தியாயம்.

அபாயம்.

இச்சரித்திரத்தை வாசிக்கும் பிரபுக்களே! இதுவரையும் இதை யெழுதும் யாமும் சந்தோஷத்தோடே எழுதிவந்தோம். நீங்களும் சந்தோஷத்தோடு வாசித்து வந்தீர்கள். எல்லாம் சரியாய்ப்போய்விட்ட தென்று மகிழ்ந்தோம். அந்தோ! அந்தோ! இன்றைக்கு வாழும் வாழ்வை நம்பி மனம் பூரிப்பதே உலக சுபாவம். நாளை வருவதை யறியோம். அடுத்த மணி நேரத்திலும்வரும் துக்கத்தையும் யெதிர் பாரோம்; அடுத்த நிமிஷத்தில் தலைமேல் விழப்போகிற பேரிடியை கனவிலும் எண்ணியிரோம். ஆஹா! இவ்வாறு சீராளனும், பொற்றொடியும் நளன் தமயந்தியாரைப்போலும், மகா விஷ்ணு மகாலக்ஷ்மியைப் போலும், பரம சந்தோஷத்துடனும் பரமோத்ஸாகமாய் பரமபத துல்யமான பஞ்சணை மீது பற்பலவாறு பற்பல விஷயங்களைப்பற்றிப் பற்பலவிதமாய்ப் பேசிப்பறைந்து பேரானந்தக்கடலிற் பெரிதும் அமிழ்ந்து மகிழ்ந்து திகழ்ந்தனர். இதற்குள் மணியோ சரியாய் ஒன்றரை ஆயிருக்கலாம். பொற்றொடி சீராளர் இருவர் தவிர மற்ற எல்லாரும் நல்ல நித்திரை எங்கேபார்த்தாலும் நிஸ்ஸப்தமா யிருந்தது. சுவரில் மாட்டிய கடியாரம் டக் டக் என்று அடிப்பதொன்று, நடுத்தெருவில் ஏகதேசமாய் சில நாய்கள் குரைப்ப தொன்று, போலீஸ்காரர் கொஞ்ச நேரத்துக் கொருதரம் 'உஷார் உஷார்' என்று எச்சரிப்ப தொன்று ஆகிய இவைகளைத்த

விர வேறே சப்தமென்பதே கேட்கவில்லை. பொற்றொடியும் சீராளரும் பேசிக்கொண்டதும் அவர்களிருவருக்கு மட்டும் கேட்குமே யன்றி வேறொருவரு மறியார். இப்படி இருக்கும் சமயத்தில் யாரும் நினைத்திராதவண்ணமாய் திடீரென்று தெருவாசல் கதவில் ஒரு ஆள் வந்து நின்று 'ஐயா! ஐயா! ஏ ஐயா! ஏ ஏ ஐயா!' என்று தொடுத்த படியாய்க் கூவிக்கொண்டு கதவின்மேல் திட் திட் திட் திட் என்று மடமடவென்றடித்துக் கூச்சலிட்டது. பொற்றொடியின்மீது ஐம்புலன்களையு மொருங்கே திருப்பி அவள் மேற்கொண்ட அன்பென்னும் கடலிடை மூழ்கிக் களித்துக் கொண்டிருந்த சீராளனுடைய செவிக்கு இச்சப்தம் கேட்கவில்லை யானாலும், அதி சூக்ஷ்ம புத்தியையுடைய பொற்றொடியின் காதுக்கு மட்டும் சிறிது கேட்டது. கேட்கவே பொற்றொடி சிறிது நேரம் தனது செவிப் புலன்களையும் கூர்ந்து செலுத்தியும் சப்த மின்னதென்று தெரியாமல் என்ன சங்கதியோ வெனச் சந்தேகித்து சீராளனை நோக்கி "நாதா! கவனியுங்கள் கவனியுங்கள். தெருவாசற் கதவில் யாதோ சப்தம் கேட்கிறது" என்று சொல்ல, சீராளனும் கவலையுடன் கேட்டுத் திடீரென்றெழுந்து தாங்களிருந்தபள்ளியறைக் கதவைத்திறந்து கீழே இறங்கப்போனான். இதைக் கண்ட

பொற்றொடி:—"நில்லுங்கள். எங்கே போகிறீர்கள்? அது இன்ன சப்தமென்று தெரியாமல் குபீரென்று கீழே இறங்கவேண்டாம்" என்று தடுத்து நிறுத்தி, இருவரும் இந்நேரத்தில் 'யார் வந்து தட்டக்கூடும். ஏதோ அவசரம் போலவும், அபாயம் போலவும் தோன்று

இன்றதே' என்று சந்தேகித்தார்கள். சீராளன் அது என்னவோ என்ற அலக்ஷியத்தோடு தைரியமாய் நின்ருன். பொற்ருெடியின் எண்ணம் பலவிதமாய் உழன் றுழன்று சென்றது. இதற்குள் முன் பக்கம் தார்சாவில் நித்திரை செய்துக்கொண்டிருந்த சில பரிசாரகர்களும் காவற்காரச் சேவர்களும் விழித்துக் கதவைத்திறந்தார்கள். உடனே வெளியேயிருந்து சுமார் முப்பது முப்பத்தைந்து வயதுள்ள ஆண்பிள்ளையும், சுமார் நாற்பது வயதுள்ள ஒரு ஸ்திரியும் உள்ளேவந்தார்கள். வரும்பொழுதே இருவரும் இதுதான் கல்யாணவீடென்று நிச்சயித்துக்கொண்டு "ராயரவாள் எங்கே? சாமியாரெங்கே? சீராளன் எங்கே? பொற்ருெடி எங்கே?" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்து நின்ருர்கள்.

இதற்குள் அந்த ஸ்திரீ ஏ பொற்ருெடி! என்ன அனியாயம் செய்தாய்? இப்படி செய்யலாமா? பெரிய மோசம் வரப்போகிறதே. ஐயய்யோ, என்ன செய்வேன். ஐயய்யோ, என்ன செய்வேன். இப்படி வந்துவிட்டதே. ஏ தெய்வமே! ஏ பொற்ருெடி! உன் உயிரை கொண்டுபோகப் போகிருர்களே பாவிகள். நானென்ன செய்வேன்?" என்று கூவினள். இந்தக் கூச்சலில் எல்லாரும் விழித்துக் கொண்டார்கள். நன்ருய் அயர்ந்த நித்திரை செய்துக் கொண்டிருந்த சாமியாரும் தடபுடல் கொட்டி எழுந்து "என்ன! என்ன? என்னசங்கதி?" என்று கேட்க, இதற்குள் உள்ளே நித்திரைசெய்துக்கொண்டிருந்த ராயர், துளசி, மற்ற ஸ்திரீகள், மற்ற சீராளனுடைய சிநேகர் எல்லாரும் கண்ணைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்து

பரக்க பரக்க விழிக்கிறார்கள். முத்தம்மாளும், சிவகாமியும் சத்த மின்னதென்று சாடையாய்த் தெரிந்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டார்கள். பொற்றொடியும் சீராளனைக்கீழே இறங்க வேண்டா மென்று தடுத்து அங்கேதான் இருத்திக் கொண்டாள்.

சாமியார்:—(வந்த ஆட்களைப் பார்த்து) "என்ன? சப்தமேன் போடுகிறீர்கள்? காரியமின்ன தென்று சொல்லுகிறதுதானே?" என்று சொல்ல,

அந்த ஆண்பிள்ளை:—"ஐயா! என்னை இன்னானென்று தெரியவில்லையா? நான்தான் முத்தம்மாள் மகன் சங்கரன். இதோ நிற்கிறார்களே இவர்கள் பொற்றொடியின் தாயார் மீனாக்ஷி. எல்லாருமாய்க் கூடி என்ன வெல்லாமோ செய்து போட்டார்கள். இப்பொழுது காரியம் பிசகாய்முடிந்து விட்டதே. இனியென்ன செய்யப்போகிறீர்கள்?. பொற்றொடி எங்கே? சீராளபிள்ளை எங்கே? சீக்கிரம் அவர்களிரண்டு பேரையும் அப்புறப்படுத்தி ஒளிகதுப்போடுங்கள். இல்லையானால் பெரியமோசம் வந்து சேரும்" என்று சொல்லிக் கொண்டு நிரம்பவும் அவசரம்படுத்தினான்.

சாமியார்:—"என்னப்பா! நீ சொல்லுவது ஒன்றும் தெரிய வில்லையே? என்ன மோசம் வரப்போகிறது! காரியமின்ன தென்று சொல்லாமல் 'மோசம் மோசமெ'ன்று சொல்லுகிறாயே" என்றார்.

மீனாக்ஷி:—"என்ன சாமி! நீங்களும் கூடவிருந்து இப்படிச் செய்து போடலாமா? உங்களுக் கெலலாம் பொற்றொடியை வெள்ளையப்பனுக்குக் கொடுக்க பிரியமில்

லாவிட்டால் அதை எங்களிடம் நேரே சொல்லி தடுத்து விடப்படாதா? நீங்கள் சொல்வதை நாங்கள் கேட்கமாட்டோமா? அதற்காக இப்படிச் செய்யாத வேலை செய்யலாமா? சாமியாராயிருக்கிற நீங்களும், நாயர் எஜமானுமே இப்படியெல்லாம் செய்தால் வேறே நாங்கள் யாரிடம் போய்ச் சொல்வோம்? என்னுடைய பொற்கொடி யெங்கே? அவளை நான் பார்க்கவேண்டும்" என்று சொல்லிக் கொண்டு வீட்டுக் குள்ளேபோய் அங்குமிங்கும் தேடினாள்.

துளசி:–"அம்மா! அவசரப்படாதே; மோசம் ஒன்றும் வரவில்லை. எல்லாரும் சௌக்கியமாய் இருக்கிறார்கள். நடந்த சங்கதி என்ன?" வென்று கேட்டாள்."

மீனாக்ஷி: "அம்மா நீங்கள் என்னம்மா இப்படி செய்து போட்டீர்கள்? நடுச்சாமத்தில் என்னுடைய பெண்ணை இப்படி மோசடியாய்க் கடத்திக்கொண்டு வந்துவிட்டீர்களே, உங்களுக்குச் சரியாய் இருககிறதா? அவளெங்கே இருக்கிறாளம்மா" என்று மிகவும் ஆத்திரப்பட்டாள்.

சங்கரன்:—"அம்மா நீங்கள் சும்மாயிருங்கள். நான் சொல்லுகிறேன். சாமி கேட்டீர்களா, ராத்திரியெல்லாம் பொற்கொடி யெங்கே பொற்கொடி யெங்கேயென்று தேடிப் பார்த்தோம். ஒரு பக்கமும் காணவில்லை. வெள்ளையப்பன் முகூர்த்தம் நின்று போய்விட்டது. என்ன மோசமோ வென்று எல்லாரும் காலமே 9 மணிவரையும் விழித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது இவ்விடத்திலிருந்து கோபாலபுரத்துக்கு வந்த ஒரு மனுஷன் பொற்கொடிக்கும், சிராளனுக்கும் இப்படிக் கலியாணமாய் விட்டதெ

ன்று சொன்னான். இந்தப்பேச்சுச் சேர்மென் பிள்ளையவாளுக்குத் தெரிந்து உடனே இவ்விடத்துக்கு ஒரு குதிரை காரனையனுப்பி விசாரித்துக் கொண்டு வரும்படி சொல்லி காரியம் நடந்தது உண்மைதானென்று தெரிந்துக்கொண்டார். இதைக் கேள்விப்பட்ட வெள்ளையப்பன் 'விட்டேனை போட்டேனே' வென்று விண்ணுக்கும் மண்ணுக்கும் குதிக்கிறான். அடியேனுக்கு முன்சிபாலடியில் பில்கலெக்டர் வேலையாகையால் அடியேனும் அங்கே அடிக்கடி போவதுண்டு. நான் அங்கே யிருக்கும் பொழுது வெள்ளையப்பனும் வேறு சில ஆட்களும் கூடிக் கூடிப் பேசினார்கள். அங்கே இடயபுரம் ஜமீன்தார் கோனேரியப்ப நாயக்கரும் வந்திருந்தார். எல்லாருக்கும் அடங்காக் கோபமுண்டாகி விட்டது. ஊரெங்கும் வெகு கேலியாய்ப்போய்விட்டது. இடையபுரம் ஜமீந்தாரும், சேர்மன் பிள்ளையும், வெள்ளையப்பனும் கூட யெத்தனையோ பேருமாய் மேடைப் பிள்ளையவாள் வீட்டுக்குள் வந்து நுழைந்தார்கள். நானும் கூடவே வந்தேன். அவர்களெல்லாரும் வந்து மேடையப்பிள்ளையவாளிடப் "ஐயா! உங்கள் மகளை நீங்களும் கூடவிருந்துதான் சிறை கடத்தி விட்டீர்கள். ஆகையால் வெள்ளையப்பனுடைய கல்யாணச்செலவு நஷ்டத்தை நீங்கள் தான் கொடுக்கவேண்டும்" என்றார்கள்.

மேடைப்பிள்ளை:—"ஐயா! எனக்கு ஒன்றுமே தெரியாது. சத்தியமாய் என் மகளை வெள்ளையப்பபிள்ளைக்குக் கொடுக்க வேண்டுமென்றுதான் தெய்வமறிய எல்லா ஏற்பாடு செய்தேன். இந்த நாசமாய்ப்போகிற சாமியாரும் பாய

ரும் கூடி அந்த வேலைசெய்து போட்டார்களாக்கும். அதற்கு நானென்ன செய்வேன்" என்று சொல்லிவிட்டார்.

உடனே இடையபுரம் ஜமீந்தாராகிய கோனேரியப்பன் வெள்ளையப்பனையும் அவன் தகப்பனாரையும் பார்த்து, "ஐயா இவரென்ன செய்வார்? இவருக்கு ஒன்றுமே தெரியாது, பாவம். இந்த சாமியாரென்கிற மனுஷன் செய்த வேலைதான் இதெல்லாம். இந்த ராயர் மட்டும் இதில் தலையிடாமலிருந்தால் அந்த சாமியார் இன்றைக்குப் படுகிற பாடு உங்களுக்குத் தெரியுமா?" என்று சொல்லிக் கொண்டு வெளியே போய் விட்டார். இப்படி வெளியே போகும் பொழுது அங்கே நின்றுகொண்டிருந்த,

ஒரு விளையாட்டுப்பையன்:—"காத்திருந்தவன் பெண்ணை நேற்றுவந்தவன் கொண்டுபோனான். ஓகோ கோ ஓ! கோ! கோ!" என்று வெள்ளையப்பனைப் பார்த்துப் பரிகாசம் செய்துக் கொண்டோடினான். இந்த வார்த்தைக் கேட்டு

வெள்ளையப்பன்:(கண்ணில் நெருப்புப்பொறிபறக்க கோபங்கொண்டு 'அடே நான் விட்டு விடுவேனோ நான் வெள்ளையப்பனென்ப துண்மையானால் அந்தப்பயலையும, அந்தச்சாமியாரையும் இன்றைக்கு உயிரை எடுத்துவிட்டு மறுஜோலிபார்ப்பேன். நான் அந்தப் பொற்கொடியென்கிற சின்னஞ் சிறுக்கிக்கு செய்யவேண்டிய வேலைசெய்தாலல்லவோ ஆண்பிள்ளை. இல்லாவிட்டால் நான் உயிரோடிருந்தென்ன, இறந்தென்ன. ஏது இந்தச்சாமியாருக்கு ஆள் இன்னாரென்று இனம் தெரியவில்லைபோலிருக்கிறது.

கல்லதுபார்ப்போம்' என்று உங்களையும் சீராளனையும் பொற்றொடியையும் கண்டபடியெல்லாம் வைதுகொண்டும் நெஞ்சில் கையைத்தட்டிக்கொண்டும் மீசையை முறுக்கிக்கொண்டும் வீட்டுக்குத் திரும்பி நடந்தான்: எதிரே என்னைக் கண்டவுடன் 'அடே உன்னுடைய ஆத்தாள்செய்த வேலையல்லவாடா, இரு பத்திரம். உனக்கும் உன் ஆத்தாளுக்கும் என்ன வேலை செய்கிறேன் என்று பார்த்துக்கொள்' என்று என்னையும் வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசினான். நானும் பயந்துபோய் விலகிக் கொண்டேன்" என்றுசொல்லிக்கொண்டிருந்தான். அப்பொழுது,

சாமியார்:—"அதெல்லாம்சரிதானப்பா. எங்களையெல்லாம் வைதானாக்கும்; வேறே ஒன்றுமில்லையே. வைதால் வையட்டும். என்னவோ மோசம் வந்துவிட்டதென்று சொன்னாயே அதென்ன சங்கதியென்று சொல்" என்றார்.

சங்கரன்:-"நில்லுங்கள் சாமி; எல்லாம் கேட்டுக்கொண்டு பிறகு சொல்லுங்கள் (ராயர்முதல் எல்லாரும் வெகு கவனமாய்க் கேட்கிறார்கள்) உடனே கோனேரியப்பனையும் கூட்டிக்கொண்டு வெள்ளையப்பன் வெகு அவசரமாய் எங்கேயோ போனான். நான் இனிமேல் அந்த வீட்டுக்கு போகப்படாதென்று பதறிப்போய் வெளியே நின்றுவிட்டேன். வந்த ஜனங்களென்ன, பந்துக்களென்ன, உத்தியோகஸ்தர்களென்ன, மேளக்காரர்கள் போக்குவரத்து எல்லாரும் ஒன்றும் தெரியாமல் விழித்துக்கொண்டு நிற்கிறார்கள். பாதி ஜனங்கள் கைகொட்டிச் சிரித்துவிட்டு அவரவர் வீட்டுக்குப் போய்க் கூடிக் கூடி பேசினார்கள். இதற்குள் அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற பையன்

கள் போடுகிற குதி என்ன அவ்வள விவ்வளவென்று சொல்லிமுடியாது. ஊரெல்லாம் 'கசுபுசு கசுபுசு' வென்று அந்தப்பேச்சாய்த்தான் கிடக்கிறது. பகல் நாலு மணிவரையும் வெள்ளையப்பனும், கோனேரியப்பனுமாய்க் கூடி என்ன யோசனை செய்தார்களோ எனக்கு ஒன்றும் தெரியாது. கோனேரியப்பனுக்கும் வெள்ளையப்பனுக்கும் நிரம்பவும் அந்தரங்க சிநேக மென்பது சாமிகளுக்குத்தெரியு மல்லவா?" என்றான்.

சாமியார்:—" ஆமப்பா அந்த முட்டாளுக்கும், இந்த முட்டாளுக்கும் நிரம்பச் சிநேகம்தான்; சங்கதி என்ன சொல்" என்றார்.

சங்கரன் :—" சங்கதி சொல்லுகிறேன்: கேளுங்கள் சாமி! 4, 5, மணிக்கெல்லாம் ஊர்க்கு வடபுறத்தி லுள்ள குளக்கரையோரமாய்ப் பள்ளியூர்ரோட்டில் நானும் வேறே இரண்டு மூன்று பேருமாய்ப் பேசிக்கொண்டு நின்றோம். அப்பொழுது இடையபுரம் ராணுவம சர்தார் காமயநாயக்கனும், பள்ளியூர் சின்னணஞ்சேர்வையும் குதிரைமேலேறிக்கொண்டு வெகு விரைவாய் ஊர்க்குள்ளே போனார்கள். காரிய மின்னதென்று தெரியவில்லை. பின்பு பொழுதடைந்த எழுமணிக் கெல்லாம் உக்களஞ்சாவடியில் நிரம்ப ஜனங்கள் வந்து கூடியிருப்பதாயும் சமயல் சாப்பாடு நடந்துகொண்டிருப்பதாயும் கேள்விப்பட்டு அதை யறிந்துகொண்டு வரலாமென்று நானும் மேல்வீட்டு அமீனாப்பிள்ளையுமாய்ப் போனோம். போய்ப்பார்க்கவே அங்கே கும்பல் கும்பலாய் மறவர்களும், வேறே பள்ளர்களும் கூடி யிருந்தார்கள். இவர்களெல்லோரும் நானறி

ந்த மட்டிலும் இடையபுரம் வகையரா ஆட்கள்போலவே தோன்றினார்கள். இப்படியிருக்கும் சமயத்தில் வெள்ளையப்பனும், இடையபுரம் கோனேரியப்பனும் அந்தக் கூட்டத்திற்குள்ளிருந்து ஷை நாயக்கனையும், சின்னணஞ் சேர்வையையும் கூட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள். இவர்களைக்கண்டவுடனே நாங்கள் பயந்துபோய் வீட்டை நோக்கி வந்தோம். வரும்பொழுது சாமி ஒரு அந்தரங்கமான ஆள்மூலமாய் ஒரு சமாசாரம் கேள்விப்பட்டோம் கேட்கவே சாமி, என வயிற்றில் குபீரென்று இடிவிழுந்தது போலிருந்தது. இன்று இரவு இந்த வீட்டைத்தீவர்த்திக்கொள்ளையடிப்பதாயும் சீராளரையும்—ஐயோ! சாமி சொல்ல நாவெழும்பவில்லை—என்னவோ செய்துவிடப் போவதாயும் கேள்விப்பட்டேன், நான் சாயங்காலம் காமயநாயக்கனைக் கண்டதற்கும், பின்பு உக்களஞ்சாவடியில் கூட்டங்கூடி யிருப்பதற்கும் ஒத்திருந்தபடியால், காரியம் மெய்தானென்று நம்பி உடனே ஓடிவந்து மேடப்பிள்ளையவர்களிடம் சொல்லப்போனேன்; அவர்களை வீட்டிற் காணாமல் அம்மாளிடம் சொன்னேன்" என்று சொல்லி முடிக்கு முன்னமே.

மீனாக்ஷி:—"கேட்டீர்களா சாமி! இப்படியெல்லாம் வருமென்று கொஞ்சமும் யோசிக்காமல் என் அருமைப் பெண்ணை மோசம்செய்து போட்டீர்களே. என் பெண்போனால் எனக்கல்லவா நஷ்டம்? அந்தப் பிள்ளையும் ஒத்திருந்தாளே, அவளையல்லவா சொல்லவேண்டும்? பிள்ளை பிள்ளை தலைமுறைக்கு இந்தப் பேச்சு மங்கப்போகிறதா?" என்று பலவிதமாய்ப் பேசிக்கொண்டே போனாள். இதைகேட்ட

சாமியார்:—"அம்மா நாங்கள் இக்காரியத்தில் தலையிடாவிட்டால் உன் மகள் நேற்றே தற்கொலை செய்து உயிரை விட்டிருப்பாளே; அப்படி வீணே சாகப்போன பெண்ணை உயிரோடிருக்கும்படி காப்பாற்றியதற்காக எனக்கு நன்றி பாராட்டாவிட்டாலும், ஆவலாதியுமா சொல்லவேண்டும்?" என்று வெகு சாவகாசமாய்ப் பேசிக்கொண்டும், தனது மொட்டைத் தலையைத் தடவிக்கொண்டும் கொஞ்சமேனும் பயப்படாமலிருந்தார்.

இதை எல்லாம் வீட்டுக்குள்ளிருந்து கேட்ட முத்தம்மாளும், சீராளன் தாயாரும் திடுமென்று பயந்து கையைக் கையை நெறித்துக்கொண்டிருந்தார்கள். துளசியும் பயந்துவிட்டாள். இதற்குள்,

ராயர்:—"என்ன சாமி, பேசாமலிருக்கிறீர்கள்? காரியம் மெய்யாயிருக்குமென்றே நம்புகிறேன்—"

சாமியார் :—"மெய்யாகவே இருக்கட்டும் அல்லது பொய்யாகவே யிருக்கட்டும். வந்ததை யனுபவிக்கவேண்டியதுதானே?"

மீனாக்ஷி:—"இதென்ன சாமி! உங்களுக்குச் சரிதான் சாமிகள்; என் பெண்ணையும் அவள் மாப்பிள்ளையையும் என் கையில் தந்துவிடுங்கள். நாங்கள் எங்கேயாவது போய்த் தப்பித்துக்கொள்ளுகிறோம்."

சாமியார்:—"நல்லது, பேசாமலிரு அம்மா! எல்லாமெங்களுக்குத் தெரியும்" (என்று சொல்லிக்கொண்டு எழுந்து) "அடே, மாரிமுத்து" என்று ஒரு சேவகனைக் கூப்பிட்டு ஏதோவொரு கடிதமெழுதி அதில் ராயரைக் கை

யொப்பம் வைக்கும்படி சொல்லித் தானும் கையெழுத்து போட்டுப் போலீஸ் இன்ஸ்பெக்டரிடமோ அல்லது சூப்பிரண்டெண்டிடமோ உடனே கொண்டுபோய்க் கொடுக்கும்படி உத்தரவு செய்துவிட்டு, சேவகன் வெளியே போனவுடன் தெருவாசற் கதவைத் திடீரென்று அடைத்துத் தாழ்ப்போட்டுக் கொண்டார்; படுத்திருந்த கம்புக்காரரையெல்லாம் பார்த்து "ஏனப்பா; சமாசாரங்களைக் கேட்டுக் கொண்டீர்களா? நீங்களென்னசெய்வீர்களோ தெரியாது" என்று சொல்லி வாய்மூடுமுன்னமே, கம்புக்காரர்கள் எல்லாம் (நெஞ்சிற் றட்டிக்கொண்டு) "சாமி, எஜமாங்களே! நீங்களொண்ணுக்கும் அஞ்சவேண்டாம். நாங்களிருக்கோம் பார்த்துக்கொள்ளுவோம். அடே! அப்படியாய் விட்டதா? நாங்களு மிருக்க, இந்த கோனேரியப்பனுடைய பூச்சும் அவனுடைய பரிவாரங்கள் பூச்சும் இந்த வெள்ளையப்பன் பூச்சும் எங்களிடம் நடக்குமா?" என்று ஏகோபித்து ஒரே சப்தமாய்ச் சொன்னார்கள்.

இதற்குள் அவர்களுக்கெல்லாம்தலைவனான,பெரியசுப்பத்தேவன் (மீசையை முறுக்கிக்கொண்டு) "சாமி, நான் அந்த அண்ணாமலைத்தேவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தது உண்மையானால் இந்தச் சின்னபையன்கள், அதுவும் நம்ம வீட்டைத் திவட்டிக் கொள்ளைபோட விடுவேனா? நல்லாயிருந்தது, ஒருவரும் பயப்படவேண்டாம். அம்மாக்கமார் எல்லாரும் உபரப்போய் இருந்துகொள்ளட்டும்" என்று சொல்ல மற்றக் கம்புக்காரரும் வேஷ்டியைவரிந்து வரிந்துக்கட்டிக் கொண்டு தடிக்கம்புகளைக் கையிலெடுத்துக்கொண்டு தயாராய் நின்றார்கள்.

இந்தவார்த்தைகளைக் கேட்டவுடனே எல்லாருக்குங் கொஞ்சம் தைரியம் உண்டானது. ஆனால், மீநாக்ஷி (துளசியைபார்த்து, "அம்மா! பொற்றொடி எங்கேயிருக்கிறாள்? எங்கேயிருக்கிறாள்!" என்று அவசரப்பட்டாள்.

இதற்குள் ராயர் எல்லா ஸ்திரீகளையும் மேல்வீட்டுக்குப் போகும்படி ஏற்பாடு செய்துவிட்டு வீட்டிலிருந்த இரண்டு மூன்று ரிவால்வர் துபாக்கிகளை யெடுத்துத்தயார் செய்து தானொன்றும், சாமியாரொன்றும் வைத்துக்கொண்டு மற்றதை சங்கரன் கையிற் கொடுத்துவிட்டுத் தைரியமாய்த் நின்றார். எல்லா ஸ்திரீகளும் மேல்வீட்டுக்குப் போய் இருந்துகொண்டார்கள். சீராளன் நண்பரும் வந்தது வரட்டுமென்று தைரியமாய் நின்றார்கள். முத்தம்மாள், மீநாக்ஷியை மட்டும் கூட்டிக்கொண்டு மூன்றுமெத்தையை யடைந்து சீராளன் பொற்றொடியிருக்கும் அறைக்கதவைத் தட்டினாள். இந்தச்சமயம் சீராளனும் பொற்றொடியும் கீழ்வீட்டில் நடந்த சமாசாரங்களையெல்லாம் தெளிவாயறிந்துகொண்டு ஒருவிதமான தர்க்கம் செய்துகொண் டிருந்தார்கள். சீராளன், தானும் கீழேயிறங்கிச் சாமியார், ராயர் முதலியவர்களோடு நிற்கவேண்டுமென்றும், அப்படிச்செய்யாமல் உயரே யிருந்துகொள்வது சரியல்லவென்றும் சொன்னான். அவைகளை யெல்லாம் கேட்டு இடியேறுண்ட சர்ப்பம்போல் நடுநடுங்கிய

பொற்றொடி:—"எல்லாம் முடிந்துவிட்டதென்று எண்ணி மகிழ்ந்தோமே; அதற்குள் இப்படி நினைத்திராத பெரிய ஆபத்து வந்துவிட்டதே. என்னசெய்வேன்? பிராணநாதா! இனி எது எப்படியானாலும் தங்களைவிட்டு அசை

நிமிஷமும் பிரியேன்; அப்படி நீங்கள் கீழே யிறங்குவதானல் நானும் கூடவருவேன். நான் கீழேயிறங்கிவருவது தங்களுக் கிஷ்டமில்லையானல், தாங்களெனக்கு துணையாய் இங்கேதானே இருக்கவேண்டும்" என்று கட்டாயஞ்செய்தாள். அதற்கு

சீராளன்:—"கண்மணீ! அப்படிச் சொல்வது சரியல்ல. நீ இங்கேதானே யிரு. நான் கீழேபோய்விட்டுப் பழயபடி வந்துவிடுகிறேன், அல்லது நான் வரும்வரை நீ நடு மெத்தைக்குப் போய் என் அம்மாளோடும் பாட்டியோடு மிரு" என்ருன். அதற்குச்சம்மதியாத

பொற்ரேடி:—"இந்தசசமயத்தில் நான் அம்மாள் முகத்தில் விழிக்கமாட்டேன்; நீங்கள்தான் என்பக்கத்திலிருக்கவேண்டும். வருகிறவர்கள், கீழே இருக்கிறவர்களையெல்லாமிறி நம்மைவந்து தாக்கினும் நாமிருவரும் ஒரேயிடத்தில் இருக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு அவனைக் கீழேயிறங்கவொட்டாமல் தடுத்துக் காலைப்பிடித் தழுதாள்.

இதைக்கண்டு சிறிதும் சகிக்க முடியாது சரியென்று ஒப்புக்கொண்டும் ஒப்புக்கொள்ளாமலு மிருக்கும் சமயம் முத்தம்மாள் கதவைத் தட்டிய சப்தம் கேட்டு, அவளோடு மீனாக்ஷியும் வந்திருக்கிருள் என்பதையும் குறிப்பாயறிந்த சீராளன், அறையின் எதிர்ப்புறத்திலிருந்த வேறொரு கதவைத் திறந்து அப்புறத்திலுள்ள வராந்தாவிற்போய் நின்றுகொண்டு, முத்தம்மாள் உள்ளே வருவதற்குக் கதவைத் திறக்கும்படி பொற்ரேடியைத் தூண்டினன்.

உடனே பொற்றொடியும், தன் தாயுங்கூட நிற்கிறாளே யென்று சிறிது திகைத்துப் பின்பும் தைரியத்தோடு கதவைத் திறந்தாள். திறக்கவும்,

மீனாக்ஷி:—"ஆமா, பொற்றொடி" (என்று மகளை வாரி யெடுத்து மார்போடணைத்துக் கொண்டு) "பொற்றொடீ! நீ என்னவேலை செய்தாய்? இப்படிச் செய்யலாமா? வரும்பொழுது என்னிடம் ஒரு வார்த்தையாவது சொல்லப்படாதா? நான் உன் தாயல்லவா? உன் தகப்பனார்மேல் கோபமிருந்தாலும், நான் உனக்கு ஒன்றும் செய்யவில்லையே? இதற்கோ உன்னைப் பத்திரமாகக் காத்து பெற்றேன். வளர்த்தேன். அடி கண்ணே! உன் கலியாணத்தை நானாவது பார்க்கப்படாதென்று செய்துவிட்டாய்? என் தாயே என் தாயே" என்று சொல்லிப் புலம்பவே இளநெஞ்சை யுடைய பொற்றொடியும் வாய்திறந்து ஒன்றும் பதில் சொல்லாமல் கண்ணீர்விட்டழுதுகொண்டு தலையைக் கவிழ்த்தபடியே நின்றாள். உடனே

மீனாக்ஷி:—(பாட்டியைப் பார்த்து) "இந்தச் சிறு பிள்ளைக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும், பாட்டீ, நீயாவது ஒரு வார்த்தை என்னிடம் சொல்லப்படாதா? நானுங்கூட வந்திருப்பேனே" என்று சொன்னாள்.

முத்தம்மாள்:—"அம்மா! நானொன்றுஞ் செய்யவில்லை; நான் ஒன்றுமறியேன்" (என்று ஒரே விழுங்காய் விழுங்கி, இந்தப்பேச்சுகளை மறைக்கவேண்டியவளாய் பொற்றொடியை நோக்கி) "அம்மா, உன் மாப்பிள்ளையெங்கே? எங்கே போய்விட்டானோ? அங்கேயேன் இப்பொழுது போனான்?" என்று கேட்டாள்.

மீனாக்ஷி:—(தனது அருமைப் பொற்றொடிக்கு சீராளன நாயகனென்ற காரணத்தால்) "ஆமா அவர்கள் கீழேயா போயிருக்கிறார்கள்? அப்படியேன் போகவிட்டாய்?" என்று மனவருத்தத்துடன் கேட்க, இவை ஒன்றுக்கும் பதிற்சொல்லாமற் பொற்றொடி பயந்தோ வெட்கியோ பேசாதிருப்பதை யறிந்த

சீராளன்:—(வராந்தாவில் நின்றுகொண்டே) "பாட்டி! நான் இங்கேதான் நிற்கிறேன்" என்று சொன்னான்.

உடனே இருவருக்கும் சந்தேகம் தீர்ந்தது. சீராளனும் வராந்தாவிற் சும்மா நில்லாமல், உயர நின்றபடியே ஊருக்குள்ளே யேதாவது ஜனக்கூட்டம் வருகிறதாவென்று ஊரின் நான்கு பக்கத்தையும் கவனமாய்ப்பார்த்துக் கொண்டு நின்றான். மணியும் 2 அல்லது $2\frac{1}{2}$ வரை ஆயிருக்கலாம். வீட்டில் உள்ள சப்தம்தவிர வேறு சப்தமொன்றுமில்லை. சாமியாரும் துப்பாக்கியை வார்ச்செய்தபடியேவீட்டுக் காம்பவுண்டைச் சுற்றிவந்து எல்லாப்பக்கங்களிலும்சரியான நிபங்கள் போடும்படி ஏற்பாடு செய்துகொண்டுவந்தார். வந்தவர் சீராளன் நிற்கின்ற மேல்வீட்டின் வராந்தாவுக்குச் சரியாய்க் கீழே வரும்பொழுது, உயரே சீராளன் முதலியவர்கள் விழித்துக்கொண்ருக்கிறார்களாவென் றறியும்படி உயரே ஏறிட்டிப்பார்த்தார். இதைக் கவனமாய்ப்பார்த்த

சீராளன்:—"சாமி இருக்கிறேன், ஈசன்தான் துணை; ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இதுவரை யொன்றையும் காணோம். மணியும் மூன்றாகப்போகிறது" என்றான்.

சாமியார்—"சீராளா பயப்படாதே. நம்முடைய ஜாக்கிரதையில் என்ன நடக்கும்? எல்லாம் வரட்டும் பார்ப்போம். இந்தச் சின்ன பையன்கள் என்ன செய்து போடுவார்கள்? விடியட்டும் எல்லாருக்கும் வழி செய்கிறேன். ஏதோ கோனேரியப்பனுக்குச் சனியன் பிடித் தலைக்க போகிறது. காளிராங்க ராயபிள்ளை செய்தது பொய்; நான் செய்தது மெய்யென்று செய்கிறேன் வேலை. நீ கீழே இறங்கவேண்டாம். அங்கேதானேயிரு; பொற்ருெடியைப் பார்த்துக்கொள்" என்று தைரியம் சொல்லிவிட்டு வீட்டைச் சுற்றிக்கொண்டேவந்தார்.

ராயருக்கு ஜாடையாய் மனதுக்குள் பயமென்ருலும் சாமியாருடைய தைரியத்தையும், கம்புக்காரர்கள் தைரியத்தையும் வைத்துக்கொண்டு, போலீஸார்க்கு ஆளனுப்பியதற்குப் பதிலும் தெரியவில்லையே யென்று யோசித்துக்கொண்டு நின்ருர். சீராளனுடைய நண்பரும் கூடவே நின்ருர்கள். இப்படி இருக்கும் சமயம் மேலே நிற்கும் சீராளன் கண்ணுக்கு ஊருக்குச் சுமார் அரை மயில் தூரத்துக்கு அப்புறத்தில் நாலைந்து வெளிச்சம் அங்குமிங்கும் ஆடியாடித் தோன்றிற்று. அப்படித் தெரிந்த வெளிச்சம் இன்னதுதானென்று சீராளன் நிச்சயிக்கு முன்னமே, உடனே குபீரென்று எல்லாம் மறைந்து விட்டன. இதைச் சீராளன் சுவாமியாருக்கு உடனே தெரிவித்தான். தெரிவிக்கவும்,

சுவாமியார்:—(காவற் காரர்களைப் பார்த்து) "உஷார் உஷார்" என்று எச்சரிக்கை செய்தார்.

அப்பொழுது மேல் வீட்டிலிருந்த பெண்களெல்லோரும் ஒருவரை யொருவர் சேர்த்துக் கட்டிக்கொண்டு "கூ கோகூ" என்று சப்திக்க ஆரம்பித்தார்கள். இதைக்கண்ட

துளசி:- (தைரியமாய்) "அம்மா! மின்னல் சப்திப்பதுபோலே ஜனங்களெல்லாம் அமைந்த விதியில் ஒன்றும் குறையாது. நானென்னவாய்ப் பட்டாலும், பொற்கொடிக்கும், அவள் மாப்பிள்ளைக்கும் என்ன நேரிடுமோ வென்பதைப்பற்றிமட்டும் பயப்படுகிறேன். எல்லோரும் பேசாதிருங்கள்" என்று சொல்லி சப்தத்தை அமர்த்தினாள்.

இதற்குள், அநாதை இப்படிச் சொல்லி முடிக்குமதற்குள்ளெல்லாம் ஒரு பெரிய சப்தம் கேட்டது. உடனே பட்டணத்தின் உப்பு ஏரியிலே ஒரு பெரிய ஜொலிப்பும் புகையும் கிளம்பிற்று. உடனே எல்லா ஜனங்களெல்லாம், "கூ! கூ!! தீதீ! தீதீ!!" என்று சொல்லிக்கொண்டோடினார்கள். இதையெல்லாங் கண்ட

ரோஜன்:- "சுவாமி! கதவைத் திறக்கவேண்டாம். ஒருவரும் வெளியே போகவேண்டாம்" என்று எச்சரித்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வீட்டின் மேலும் முற்றத்திலும் படபடவென்று பெரும் பெருங்கற்கள் வந்து விழுந்தன. விழவே வீட்டின் பின் வாசலிலும், ஆக்குப் புரையோரத்திலும் நின்று கொண்டிருந்த கம்புகாரர்களெல்லோரும் முன் வாசலிலுள்ள கல்யாணக் கொட்டகைக்குள் வந்தொதுங்கினார்கள்.

சுவாமியார்:—"அடே அடே, சிலபேர் பின் வாசலில் நில்லுங்கள். இதோ தலைமேலே கல்லுகள் விழாமலிருக்கும்படி இந்தச் சருவச் சட்டிகளையும், பொரிக்கும் சட்டிகளையும் தலையிற் கவிழ்த்துக்கொள்ளுங்கள்" என்று அங்கே கிடந்த பித்தளை, இருப்புச்சட்டிகளைத் தூக்கிக்கொடுத்தார்.

கம்புக்காரர்களும் அவைகளைத் தலைமேற் கவிழ்த்துக் கொண்டு பின்வாசலுக்குப் போனார்கள். இதற்குள் வீட்டின் முன்பக்கத்துத் தெருவிலும் மேல்புறத்து முடுக்கிலும் தீவர்த்திகள் தோன்றின. தீப்பிடித்த வீட்டைச்சுற்றி நின்று பட்டணத்து ஜனங்கள் "ராயர் வீட்டிலே கொள்ளை. கல்யாணவீட்டிலே கொள்ளை" என்றுசொல்லிக்கொண்டு பயந்தோடினார்கள். அந்தக்ஷணமே எத்தனையோபேர்கள் வந்து நின்றுகொண்டு முன்வாசற் கதவை பெரிய தடிகளைக் கொண்டும், கோடரிகளைக்கொண்டும் இடி இடியென்றிடித்துப்பிளந்தார்கள். கதவு பலமான மரமாயிருந்தபடியால் இந்த இடியினால் பிளவுபடவில்லை; ஆனாலும் கதவுடைந்து கொள்ளைக்காரர் வீட்டுக்குள்ளே பிரவேசிக்கும்படி நேரிட்டால், அவர்களில் ஒவ்வொருவனையும் மண்டையிலடித்து வீழ்த்தவேண்டுமென்று சாமியார் கையில் ஒருபெரியஇருப்புக் கம்பியை வைத்துக்கொண்டு கதவண்டையில்நின்றார். கதவு பிளவுபடாதென்று, தெரிந்து, கொள்ளைக்காரர் சுவர்கள்மேலேறி உள்ளே குதிப்பதற்காக மேல் புறத்துச் சுவரின்மேல் ஏறினார்கள். உடனே சாமியாரும், சங்கரனும் இரண்டு கையிலும் தண்ணீர்க் கயிறுகளின் இரண்டு நுனியையும் பிடித்துக்கொண்டு அதைச் சுவரின் மேலேறிவரும் கொள்ளைக்காரர் கழுத்திற் போட்டு வலுவாய்ச் சுண்டிப்

படிகளில் நெருக்கி உட்புறத்தில் தள்ளினார்கள். அப்படி உள்ளே தள்ளப்பட்ட கொள்ளைக்காரர் மண்டைகளையும் கைகளையும் கால்களையும் உள்ளே நின்ற காப்புக்காரர்கள் உலக்கைகளாலும், கொப்பரை அகப்பைகளினாலும் அடித்துக் காயப்படுத்தினார்கள். சுவர்மேல் உட்கார்ந்துகொண்டிருந்த வேறு சில கொள்ளைக்காரர்களை கடப்பாரை கொண்டு முதுகிலும் தொண்டியிலும் அடித்துக் கொண்டே தள்ளினார்கள். இதற்குள்ளாய் தப்பித்தவர் இரண்டொருவர் உள்ளே குதித்து விட்டாலும், அவர்களைத் தூக்கி கொண்டு கட்டினார்கள்.

இவ்விதமாக வெளியே ஆயிரக் கணக்கான பேர்கள் நின்று அட்டகாசம் செய்தும் அவர்களால் உள்ளே நின்றவர்கள் 40, 50 பேர்களுக்கு ஜவாப் சொல்ல முடியவில்லை. உடனே கொள்ளைக்காரர்கள் இனி சுவரேறிக் குதிக்கமுடியாதென்று நிச்சயித்து மேற்புறத்துச் சுவரைக் கடப்பாறைகளைக் கொண்டு இடிக்கலானார்கள். இடிக்கும் சத்தம் கொஞ்சம்பிளயடிப்போல் தோன்றிற்று. 'ஐயோ! சுவர் இடிந்து விட்டால் எல்லோரும் உள்ளே வந்துவிடுவார்களே. இந்தக் கொள்ளைக்காரர்களோடு நாம் 40-நாற்பது பேரும் என்ன செய்ய முடியும்?' என்று எல்லோரும் திகைத்துவிட்டார்கள். இதற்குள் உள்ளே நின்ற சில காப்புக்காரர் சுவர்மேலேறி வெளியே குதித்து அவர்களை அடிக்கலாமென்றெண்ணி ஒருவரிடமும் சொல்லாமல் ஏறினார்கள். அப்படி ஏறினமூன்று நான்கு பேரை அந்தப் பக்கத்திலுள்ளவர்கள் தடிகளால் மண்டையிலடிக்க, அவர்கள் சாய்க்கீழே விழுந்து விட்டார்கள். சுவரும் ஏறக்குறைய இடிபட்டு விட்டது உடனே சாமி

பார் கிழவியார் எல்லாருக்கும் கொஞ்சம் பயமுண்டாய் விட்டது.

இதையெல்லாம் கண்ணால் கண்டும் சப்தங்களைக் காதால்கேட்டும் பயமடைந்து, கால் கை நடுங்கி கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் பெண்களெல்லாரும் மேல் வீட்டுக் கதவு களை அடைத்துத் தாழ்போட்டுக்கொண்டு ஒருவரை யொருவர் பிடித்துக்கொண்டு "அம்மா, என்ன செய்வேன், ஐயோ என்னசெய்வேன்: சுவாமி, தெய்வமே செகந்நிவாஸா! சொக்கநாதா! நீயே துணை, நீயே கதி" என்று ஓலமிட்டார்கள். இதுவரை

சீராளன்.—(முதலில் தானின்று கொண்டிருந்த வராந்தாவை விட்டு அந்த மித்தமையைப் பார்த்து) "ஆங்கே ஒரு ஆள் ஏறுகிறது, இங்கே ஒரு ஆள் வருகிறது. போடு மண்டையிலே: இடி முகத்திலே: அப்படித்தான் அப்படித் தான். விடாதே, விடாதே" என்று கீழே நிற்கிற ஜவான்களுக்கு உஷார் கொடுத்துக்கொண்டு நின்றான்

பொற்றொடி:—(அவனை விட்டுப் பிரியாமல் தானும் வராந்தாவில் வந்து நின்றுக்கொண்டு) "ஐயோ! ஐயோ! என்ன செய்வேன்? இப்படி வருமென்று தெரியாதே" ஐயோ தெய்வமே" என்று அழுது கொண்டும் கையை நெரித்துக் கொண்டும் நின்றாள் (இடையிடையே சீராளனைப்பார்த்து "நீங்கள் உள்ளே வாருங்கள். நீங்கள் உள்ளே வாருங்கள்" என்று கூப்பிட்டாள்.

இந்தச்சமயத்தில் வெளியேயிருந்து சிறு கவண் கல் ஒன்று 'விண்' என்று இரைந்துக்கொண்டு வந்து

சிராளனுடைய வலது புஜத்தில் வந்தடித்தது. இதைப் பொறுக்கமுடியாமல் மெல்லிய சரீரத்தை யுடைய சிராளன், "அடே அப்பா" என்று சொல்லிக்கொண்டு வலியைச் சகிக்க முடியாமல் அப்படியே கீழே உட்கார்ந்து விட்டான். இந்தக் கல் கொஞ்சம் மேலேதள்ளித் தலையிலே பட்டிருக்கும் பக்ஷத்தில் சிராளன் நிச்சயமாய் இறந்திருப்பான். இதைக்கண்ட பொற்கொடிக்கு கண்ணீர்மாலை மாலையாய் வடிய "ஐயோ பட்டு விட்டதே பட்டுவிட்டதே" என்று சிராளன் புயத்தைத் தடவி உள்ளே வந்து விடும்படி அவனை யிழுத்தாள். ஒரு இரண்டு நிமிஷத்தில்சிராளன் வலி தீர்ந்து பதைபதை எழுந்து கீழேபார்க்கவே சுவர் இடிபடுவதைக் கண்டான். உடனே மிகவும் பயந்த

சிராளன்:—"பொற்கொடி! இனிநான் இங்கேஇருப்பது சரியல்ல. மோசம் வந்துவிட்டது. எது நம்மைக் கைவைத்து விடுவானென்றே எண்ணுகிறேன். இங்கே அறைக்குள்ளே போ"வென்றுசொல்லி அவளை உள்ளே இருத்திவிட்டு தான் மட மட வென்று படி வழியாய் கீழே இறங்கினான்.

இதைக் கண்ட பொற்கொடி அவனை கீழே இறங்கவொட்டாமல் பிடித்திழுத்துத் தடுத்தும்,

சிராளன்:—"உன்பேச்சைக் கேட்கசமயமிது வல்ல"வென்று சொல்லிக்கொண்டு அவளை மீறி உதறித் தள்ளிவிட்டு கீழே யிறங்கி இரண்டாம் மெத்தைவழியே பின் வாசற் கொட்டகைக்குள் வந்து நின்றுகொண்டு சாமியாரைக் கூவியழைத்தான். இரண்டாவது மெத்தையிலுள்ள ஸ்திரீகளெல்லோரும் இதைக் கண்டு "அப்பா நீ போகாதே;

"ஐயா நீ போகாதே" என்று உரத்துக் கூவினார்கள். சீராளன் கூப்பிடுவதைக்கேட்ட

சுவாமியார்—"என்னசீராளா! காரியஞ் மிஞ்சிவிடும்போலிருக்கிறதே. என்ன யோசனை? நீ உயரப் போய்விடு" என்றார்.

சீராளன்;- "உங்களிடமிருக்கிற மூன்று துப்பாக்கிகளையுங்கொடுங்கள்" என்றுசொல்லி, அவரிடமும் நாயரிடமுமிருந்து துப்பாக்கிகளை வாங்கி அதற்கு வேண்டிய ரவை குண்டு முதலியவைகளை எடுத்துத் தயார் செய்து சங்கரனையும், கூட இரண்டொரு நண்பரையும் கம்புக்காரரையும் கூட்டிக் கொண்டு மட மட வென்று உயர ஏறினான்.

இதை யெல்லாம் கண்ட ஸ்திரீகள் கொள்ளைக்காரர் தான் வந்து விட்டார்களோவென்று பயப்பட, இவர்கள் அது ஒன்றையுங் கவனியாமல் மூன்றும் மெத்தைக்குப் போய் அங்கிருந்து ஒரு ஏணி வழியாய் மூன்றும் மெத்தையின் மேற்கட்டிற் போய் நின்றுகொண்டு துப்பாக்கிகளை யார்செய்துகொண்டு சுற்றி நாலாபக்கமும் பார்க்கவே, மெத்தை மிகவும் உயரமா யிருந்தபடியால், கொள்ளைக்காரர்கள் சமுத்திரம்போற் கூடிக்கூடி நிற்பதும், சுவர் இடி படுவதினால் அவர்களுடைய ஆட்ட ஓட்டங்களும் நன்றாய்த் தெரிந்தன. உடனே மூன்று துப்பாக்கிகாரர்களும் உயரே நின்றுக்கொண்டே வெளியே நிற்கும் கொள்ளைக்காரர்களைச் குறிபார்த்துச் சுட ஆரம்பித்தார்கள். உடனே, 'டாம், டாம், டாம், டாம்' என்று ஒன்றன் பின் ஒன்றாய் வேட்டெழும்பவே சில குண்டுகள் தவறிப்போனாலும், சில குண்டுகள் கொள்ளைக்காரில் இரண்டுமூன்றுபெ

வரைத் துளைத்துக் கீழே தள்ளியது. தள்ளவே, சுவரைத் 'திமர் திமர் திமர்' என்றிடித்துக் கொண்டிருந்தவர்களும் தங்கள்மேற் குண்டுகள் வந்துவிடுமோ என்று ஒதுங்கினார்கள். அதை உயர நின்று பார்த்த சிராளன் "உம், உம், போடுங்கள் போடுங்கள்" என்று சொல்லிக் கையிலிருந்த குண்டுகளையும் ரவைகளையும் எடுத்துக் கொண்டே யிருந்தான். வெடிகளோ, டம், டம், டம், டம் என்று இடைவிடாமற் கீழ்நோக்கி பாய்ந்துக் கொண்டேயிருந்தன. பத்துப் பதினைந்து கொள்ளைக்காரர் "அப்பாடே அப்பாடே" என்றுகொண்டு கீழே சாய்ந்தார்கள் இவர்களுள் காமபநாயக்கனொருவன். சின்னணாஞ்சேர்வைமடிவிட்டான். இதைக்கண்ட மற்றைக் கொள்ளைக் காரரும் தடிகளையும் கடப்பாறைகளையும்போட்டுவிட்டு அங்குமிங்கும் ஓடிப்பதுங்கினார்கள். இவர்களுள் சிலதுஷ்டர்கள் குண்டு உபரிமேல்மெத்தையிலிருந்து வருகிறதென்றறிந்து கவணில் கற்களைவைத்துத் தோடுபிடியாக எறிய ஆரம்பித்தார்கள். இப்படிக் கல்வருவதையறிந்த சிராளன் வகையராக்கள் ஒவ்வொருவராய் மூன்றும் மெத்தைக்குள் வந்து சினங்கொண்டு ஜன்னல் வழியாய்ச் சுட்டார்கள். உடனே கொள்ளைக்காரர்களுடைய யுக்தி ஒன்றும் பலிக்கவில்லை. சுவர் பாதி இடிபட்டிருந்தாலும் 'குறையும் இடிபடுமுன் துப்பாக்கிகள் புறப்பட்டு விட்டதே' என்று கவலைப்பட்டுக் கொண்டும் அவமானப்பட்டுக் கொண்டும் பாதிப்பேர்களுக்குமேல் ஓடிவிட்டார்கள்.

— —

ஏழாவது அத்தியாயம்.

தீ.

ஐயோ! இத்தோடு போய்விடப்படாதா? சீராளன் பொற்றொடி முதலிய எல்லாரும் தப்பிக் கொள்வார்களே. இந்தக் கொள்ளைக்காரர்களோடு ஒருமகா பாவியும் வந்திருந்தான். அவன் தான் வெள்ளையப்பனுடைய சிறியதாய் மகன்: கூந்தற் பனையூர் சுப்பபிள்ளை யென்னும் ஒரு பெரிய பிரபல துஷ்டன். அவன் பெயரைச் சொன்னாலும் மூன்று நாளைக்கு அன்னாகாரம் கிடையாது. அந்தப் பாவி மட்டும் வராமலிருக்கும் பக்ஷத்தில் சீராளன் கக்ஷி ஜயமாய்ப்போயிருக்கும். அவன் என்ன செய்தான்? ஒரு யோசனை செய்தான். "அடே நாமித்தனைபேர்வந்தும் ஒரு காரியமும் செய்யாமற் போனால் பெரிய கேவலம். நேற்றே பெண்ணைப் பறிகொடுத்தோமென்று பெரிய அவமானமாய்ப் போய்விட்டது. அதனோடு சும்மாவிராமல் இன்றைக்குக் கொள்ளைக்கு வந்துவிட்டு அதிலும் அபஜயப்பட்டு போனால் நாமும் ஆண்பிள்ளையென்று உயிர் வைத்திருக்கலாமா? நாமொரு வெள்ளாளன் வந்திருந்தும், அப்படி அவமானம் வரும்படி பார்க்கலாமா? கூடவே கூடாது. கொண்டாடா! பத்து தீவட்டி. இந்தக் கொட்டகையின் மேலேறி தீயாவது பிடிக்கட்டும் உள்ளே யிருக்கிற பயல்களும், அவர்கள் துப்பாக்கிகளும் குண்டுகளும் என்ன செய்கிறதென்று பார்ப்போம்!" என்றான். இவ்வாறு அவன் சொல்லவே சில மறவர்கள் தங்

ளைகளிலிருந்த தீப்பந்தங்களைக் கல்யாணவீட்டுக் கொட்டகையில் வீசி வீசி யெறிந்தார்கள். எறியவே, பனையோலையாற் போடப்பட்டிருந்த கொட்டகையில் தீப்பற்றிக் கொண்டது. கொட்டகை பாரியான உயரமாயிருந்தபடியாலும், காலகதியால் மேல்காற்று வீசியதாலும் தீ மடமடவென்று பிடிக்க ஆரம்பித்துவிட்டது. வீடு காரைக் கட்டிடமாயிருந்தாலும், கொட்டகை வீட்டின் திண்ணையை ஒட்டி நெருக்கமாய்ப் போட்டிருந்தபடியால் தீயின் வெக்கையும், புகையும் வீட்டிற்குள் சேரவும் தாவின. உடனே உள்ளேயிருந்தவர்கள் பட்டபாட்டை யாம் சொல்லவேண்டியதில்லையே. இதுவரையுந் தைரியமாய்நின்ற சாமியார் மனமுங் கொஞ்சம் கலங்க ஆரம்பித்துவிட்டது. சாமநாதம், நம்புக்காரர்களும், மற்ற ஆட்களும் அங்கு மிங்கும் ஓடினார்களேயன்றி இன்னது தான் செய்வதென்று ஒருவருக்கும் தோன்றவில்லை. தீயை அணைக்கவேண்டுமானால் கைவசத்தில் போதுமான தண்ணீருமில்லை. தீயின் கிட்டப் போவதற்கு வெக்கையுஞ்சகிக்க முடியவில்லை. என்ன செய்வார்கள்? ஐயோ பாவம்! இரவு 8 மணிக்கெல்லாம் மேலைத்தாழ்வாரம் எரிந்து பாடிக்கச்சேரியும் கீட்டுச் சுழன்றுகொண்டு தாக்க அக்கினியம் பாம்புக் கிடைபற் காலம் கிளைத்து புகையாய்ப் பறந்து ஆகாயத்தை நோக்கிச் செல்லுகின்றன. கொஞ்ச நேரத்துக்குள் அன்புடன் வளர்த்துக்கொண்டிருந்த பெண்ணும், மாப்பிள்ளையும் இறங்க முடியாமல் நின்று திகைக்கிறார்கள். இரண்டாம் மெத்தையிலிருந்தவர்கள்மட்டும் எப்படியோ பிழைத்தோம் என்று சொல்லிக்கொண்டு கீழே யிறங்கி ஓடிவந்துவிட்டார்கள். உபர மேல் [illegible] வகையராக்கள் இதைத் தெய்வீகத்தின் வெளிப்

மென்மேலும் மெத்தைமேலிருந்துவிட்டார்கள். கொட்டகையில் நெருப்பெடுத்ததை யறியாமல் [illegible] கவலை மாயிருந்தார்கள். சீராளனும், பொற்கொடியும், சங்கரனும் இன்னும் சீராளனுடைய தமையர் மூன்று பேரும் சப்புக்காரர் இரண்டு பேரும் ஆக எட்டுப்பேர்கள் மாத்திரம் உயர மூன்றும் மெத்தையில் அகப்பட்டுக் கொண்டார்கள். புகையும் வெக்கையும் இரண்டாம் மெத்தையை மூட்டி மூன்றும் மெத்தை அறைக்குள்ளும் வந்து நெருங்கவே எல்லாரும் மூன்றும் மெத்தையின் மேற்கட்டுக்குப் போய்ச்சேர்ந்தார்கள். அங்கேயும் அக்கினியின் சுவாலையும், நெருப்புக் கங்குகளும் படபடவென்று தெறித்துக்கொண்டு தலையிலும், முகத்திலும், முதுகிலும் வந்து விழுந்தன. பொற்கொடி யணிந்திருந்த புதிய பட்டு வஸ்திரத்திலும் அவள் மேனியிலும் கங்குகள் விழுவதும் அதை அவள் சகிக்காமல், 'ஐயோ ஐயோ' என்று கதறுவதும் துடிப்பதுமாயிருப்பதைக் கண்ட சீராளனுடைய உள்ளம் [illegible] அவன் கண்ணிலும் தண்ணீர் வந்து விட்டது என்று நாம் சொல்லவேண்டுமோ? கீழே இறங்கவும் வழியில்லை. மேலே யிருக்கவும் வெப்பம் சகிக்க முடியவில்லை. என்ன செய்வது? உடனே, [illegible] விடாமல் [illegible]டைய மேல்வேஷ்டியையும் சேர்த்து ஒரு கயிறுபோல் முடிந்து உயர இருந்துகொண்டே கீழே தரையைநோக்கி விட்டான்.

இதற்குள் அந்த வீட்டின் பின் புறத்தில் [illegible] கொண்டிருந்த சாமியார் [illegible] முதல்வான் முதலிய ஸ்திரீகளும் உயர [illegible]க் கொண்டு,

பொற்கொடி யெங்கே அகப்பட்டுக் கொண்டாளோ என்று பயந்து "சீராளா! ஏ சீராளா! பொற்கொடி உயர நிற்கிறாளா? பொற்கொடி உயரநிற்கிறாளா?" என்று கூவினார்கள்

சீராளன்:—"ஆமாம் இங்கேதான் நிற்கிறாள். எப்படித் தப்புவோமோ தெரியாது. இந்த வேஷ்டியிலே ஒரு கயிற்றைக் கட்டிவிடுங்கள்" என்றான்.

உடனே கீழே நின்றவர்கள் தண்ணீர்க் கயிறுகளையும் பாரக் கயிறுகளையும் கட்டி உயர விட்டார்கள். அவனும் கயிறுகளை உயர யிழுத்து அவற்றை மேல் வீட்டின் கவுதகங்களிலும், தூண்களிலும் கட்டிக் கீழே தொங்க விட்டான். இவ்வாறு தொங்கவிட்ட கயிறுகளின்வழியாய் இரண்டு தம்புக்காரர்கள் மெல்ல யிறங்கி விட்டார்கள். மற்ற ஆறுபேரும் உயர நிற்கிறார்கள். இதற்குள் வீட்டுக்குப் பின்புறமிருந்த ஆக்குப்புரையிலும் சில தீக்கங்குகள் வந்து விழுந்தோ, அல்லது கொள்ளைக்காரர்கள் கொளுத்தியோ அதிலும் தீப்பிடிக்க ஆரம்பித்து விட்டது. எல்லாரும் கூடி அதை அணைக்க முயன்றும் காற்றின் வேகத்தால் அது அணையாமல் மட மட வென்று பிடித்துக் கொண்டது. வீட்டின் இரண்டு பக்கத்திலும் தீ. உயர நிற்கும் ஆறுபேர்களும் என்ன செய்வார்கள்! இந்தச்சமயம் அக்கம் பக்கம் வீட்டிலுள்ள ஜனங்களெல்லாம் அவரவர்கள் வீட்டைப் பந்தோபஸ்து செய்வதில் கவனமாயிருந்தார்கள். ராயர் வீட்டுக் கடுத்த கீழ் வீட்டிலுள்ள ஜனங்களும் அக்கினியின் வெப்பம் பொறுக்கமுடியாமலும் கொள்ளைக்காரருக்கு பயந்து வீட்டை விட்டு வெளியே வர முடியாமலும் மேல் மெத்தைக்கு வந்து சேர்

ந்தார்கள். ஆனால் அந்த வீடு இரண்டு மெத்தையானதால் சீராளன், பொற்றொடி முதலிய ஆறுபேரும் நிற்கும் மெத்தைக்குக் கீழே தாழ்ந்திருந்தது. அந்த வீட்டு இரண்டாம் மெத்தைக்கும் ராயர் வீட்டு மூன்றும்மெத்தைக்கும் சுமார் மூன்று அல்லது மூன்றரை கஜதூரமிருந்தது. இதற்கிடையில் ஒருமுடுக்கு இருந்தது. இந்த முடுக்கின் வழியே நேர் தெற்கே போனால் ஒரு வாழைத் தோட்டத்திற் கொண்டு போய்விடும். ஆகவே சீராளன் முதலியவர்கள் தீயின் வெக்கையினின்று தப்ப வேண்டுமானால் கீழவீட்டின் வழியாய்த் தப்பவேண்டுமே யல்லாது வேறு வழியில்லை. வடபுறம், மேல்புறம், தென்புறத்தில் ஒரு பாகம் எல்லாம் தீயாயிருந்தது. இவ்வாறு மூன்று பக்கத்திலும் தீ பிடிக்கவே பின் வாசலிலும் ஆக்குப் புரையோரத்திலும் நின்ற சாமியார், ராயர், அவர் மனைவி துளசி, முத்தம்மாள் முதலிய சர்வ ஜனங்களும் கீழச் சுவரின்மேல்ஏணி வழியாயும் ஏணியில்லாமலும் ஏறிவிழுந்து கீழ வீட்டு முடுக்கில் போய் குதித்தார்கள். இப்படி வெளியேறுவதை வெளியே நின்று பார்த்துக்கொண்டிருந்த சில கொள்ளைக்காரர் தென்புறத்துச் [illegible] வழியாய் [illegible] முடுக்கு [illegible] எல்லாரும் பயந்து தம் மதியிழந்து விட்டார்கள். உடனே சீராளன் [illegible] ஆரம்பித்தான். பின்பும் கொள்ளைக்காரர் இனி என்ன வந்தாலும் சரி யென்று தீர்மானித்து [illegible] நின்றார்கள். உடனே சீராளன் [illegible] வீட்டு மெத்தையின்மேல் நின்றவர்களைப்பார்த்து அவர்களண்டை ஒரு கயிற்றை வீசியெறிந்தான். அதை அவர்கள் பிடித்துக்கொண்டு ஒருபெரிய மரப்பலகையி

ன் தூணியில்கட்டினார்கள். சீராளன் அதையிலகுவாயிழுத்து நாங்கள் நிற்கும் மெத்தைக்கும் கீழ் விட்டு மெத்தைக்கும் ஒருபாலம் போல் சாய்த்து வைத்துக் கொண்டு அதன்வழியாய் அந்தப்பக்கத்துக்கு போய்விட ஆரம்பித்தான். இந்த மெத்தையில் நின்ற ஆட்களும் அந்த மெத்தையில் நின்ற ஆட்களும் பலகையின் இரண்டு பக்கத்தையும் பலமாய்ப் பிடித்துக்கொண்டார்கள். பிடித்தாலும் மூன்றாம்மெத்தைக்கும் இரண்டாம் மெத்தைக்கும் உயரம் வித்தியாசமாயிருந்தபடியாலும், பலகை தலைகீழாய்ச் சாய்ந்துகிடந்தபடியாலும், இதன்வழியா யிறங்குவது கடினமா யிருந்தது. ஆனாலும் சீராளன், பொற்றொடியின் கையைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டான். மெல்ல பலகையின்மேல் இரண்டுபேரும் உட்கார்ந்துகொண்டு மெதுவாய் நழுவி நழுவி யிறங்கினார்கள். பொற்றொடி கையில் பிடித்துக்கொள்ளும்படி கீழ்வீட்டு மெத்தையி லிருந்தவர்கள் ஒரு கயிற்றை வீசினார்கள். அவளும் கயிற்றை ஒரு கையிலும் சீராளன் கையை ஒருகையிலும் பிடித்துக்கொண்டு கீழ்வீட்டுக் கவுக்கத் தண்டை போய் இறங்கினாள். அடுத்த நிமிஷம் சீராளனும் இறங்கி யிருப்பான். ஆனால், ஐயோ! இதற்குள், கொள்ளைக்காரர்கள் துணிந்து முடுக்கில் நுழைந்து ஒருபெரிய கனைக்கம்பினால் மேலே இரண்டு மெத்தைக்குமிடையிற் கிடக்கும் பலகையை அங்குமிங்கும் அசைத்துப் பலமாய்க் குத்தினார்கள். உடனே பலகை நழுவி விட்டது. பொற்றொடியை அப்புறத்தில் கடத்தி விட்டு விட்டுப் பின் தானும் தப்பிக்கொள்வோ மென்றிருந்த சீராளன் திடீரென்று கீழே விழுந்தான்! பலகையும் அவனோடு கீழே விழுந்தது. கீழே விழுந்தவன் எப்படியா

னுமே தெரியாது. அவன் இப்படி விழுந்தும் விழாமலு
மிருக்கும் சமயத்தில் கொள்ளைக்கார ரெல்லாரும் கூடி
அவனை ஒரே தூக்காய்த் தூக்கிக்கொண்டு முடுக்குவழியா
ய்த் தென்புறத்துத் தோட்டத்திற்குள் நுழைந்து தெரு
விற்குப்போய் ஓடிவிட்டார்கள். அதைத் தடுக்கவேண்டு
மென்று சுவாமியாரும், கம்புக்காரரும் என்ன முயற்சிசெய்
தும் முடியவில்லை. சுவாமியாருக்கும் சில கம்புக்காரருக்
கும் இரண்டு மூன்று பலமான காயம் பட்டுவிட்டது

கொள்ளைக்காரர்களும் தாங்கள் முடிவில் அடைந்த
வெற்றியினால் சந்தோஷப்பட்டுக்கொண்டும் "இனி எப்ப
டியானாலும் பரவாயில்லை" என்று சொல்லிக்கொண்டும்,
"பாளன் செத்தான்; பொற்றொடி அறுத்தாள்" என்று
கூவிக்கொண்டும் ஓடினார்கள். வீட்டிலுள்ள கம்புக்கா
ரும் கீழ்வீட்டுத் தெருக்கதவைத் திறந்து கொள்ளைக்
காரரைப்போய்த் தாக்கவென்று போனாலும் வெளியே
ஓடுகிற சுமார் 150, 200, கொள்ளைக்காரர்களிடம் ஒன்றும்
செய்யமுடியாமல், தடியடியாலும் கல்லெறியாலும் பல
மான காயங்களைப் பட்டுக்கொண்டு திரும்பினார்கள். மணி
$4\frac{1}{2}$, 5, ஆய்விட்டது. தீயும் தானே அணையத் தொட
ங்கினது பொற்றொடி 'ஐயோ' வென்று கதறினாள். தானும் கீ
ழேவிழத் துணிந்தாள். இருந்தவர்கள் கையைப் பிடித்துக்
கொண்டார்கள். அவர்களை யெல்லாம் மீறித் தரையில்
வீழ்ந்து புரண்டாள்; முட்டினாள்; மோதினாள்; "நாதா,
நாதா" வென்று அலறினாள். "ஐயோ! என்கதியும் எனது
நாதன் கதியு மிப்படி ஆய்விட்டதே!" என்று ஓலமிட்டாள்.
என்னசெய்வாள்! அவள் எண்ணமும் ஆசையும் பஞ்சாய்ப்

பறந்தோடிவிட்டன. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடி
ந்தது. வெள்ளையப்பனே ஆண்பிள்ளை என்றுப்பிட்டான்.
வல்லவரான சாமியார் சாமர்த்தியமும், ராயரின் சாமர்த்தி
யமும், ஆற்றிற்கரைத்த புளியாய்விட்டன. இவர்களெல்
லாரையும் வென்றுவிட்டான் வெள்ளையப்பன். தாமெண்ணி
யபடி போற்றேடியை விவாகஞ்செய்ய முடியாவிட்டா
லும் எப்படியாவது சோளனை வேலை நிர்த்துவிட்டோமெ
ன்கிற எண்ணம் அவனைப் பூரிக்கச்செய்தது. முத்தம்மாள்
என்னசெய்வாள்? துளசி என்ன செய்வாள்?
"ஐயோ இப்படிவந்து சேருமென்று தெரியாதே" என்று
கையை நெறிக்கிறார்கள்.

மீனாக்ஷி:—"அட பாவிகளே, என்பிள்ளையை என் அரு
மைபிள்ளையை இப்படி பாழாக்கினீர்களே, உங்களுக்கு
என்னகதி கிடைக்கும்" என்று கூவுகிறாள்.

சாமியார் முதலான எல்லாரும் முகசுப்பேசாக்காட்
டாமல் மௌனமா யிருக்கிறார்கள். மீனாக்ஷி மறுபடியும்
"நான் வந்தவுடனே, பிள்ளையையும், அவள் மாப்பிள்ளையை
யும் என்னோடு கூட்டி யனுப்பி யிருந்தால் நாங்கள் மூன்று
பேரும் எங்கேயாவது ஓடி ஒளித்துப் பிழைத்துக் கொள்
வோமே. அதற்கும் இந்தச்சாமியார் வேண்டாமென்றுசொ
ல்லிவிட்டாரே. இப்போது என் பிள்ளை இக்கதியானு
ளே; என்மருமகனை அந்தப்பாவிகள் கொன்றுபோடப்போகி
றார்களே என்ன செய்வேன்! தாலிகட்டி அறுபதுநாழிகை
கூட ஆகவில்லையே; இதற்குள் இப்படி வந்து விட்டதே
ஐயா! நான் என் பிள்ளையை இப்படி அறுக்கவா வளர்த்

தேன்! என்ன செய்யப்போகிறேன்!" என்று வயிற்றிலும், மார்பிலும், தலையிலும் அடித்தடித்துக் கூவுகிறாள்.

அப்போது எல்லாரும் தூக்கமயக்கத்தோடு பொற்றொடியைத் தூக்கிக்கொண்டு கீழே இறங்கிக் கிழ விட்டுப் பட்டசாலைக்குள் வந்து சேர்ந்தார்கள். மணியும் 5, 5½ ஆய்ப் பலபலவென்று விடிந்தது. ஊரிலுள்ள ஜனங்களெல்லாரும் ராயர் வீட்டண்டை வந்து கூடினார்கள். அவரோ வீட்டைவிட்டு வெளியேற முடியாமல் இனி இன்னதுதான் செய்வதென்றும் தோன்றாமல் ஒரு பக்கத்தில் உட்கார்ந்தபடியே யிருந்தார். உள்ளூர் ஜனங்களும் காணமல் வெளியூர் ஜனங்களும் வந்து கூடினார்கள். ஒவ்வொருவனும் தீப்பட்டுக்கிடக்கிற கல்யாண வீட்டைப் பார்த்து மனவருத்தப்பட்டார்கள்.

"ஐயோபா, நேற்று நேரம் என்னமாயிருந்ததின்று இன்றைக்குளப்படிப் போய்விட்டது பார்த்தாயா?" என்பான் ஒருவன். "அவ்வளவுதான்; அது போகட்டும். சீராளனைக் கொன்றுபோட்டார்களாமே அந்தப்பாவிகள்" என்பான் ஒருவன். "என்னசெய்யலாம், எடாத எடுப்பெடுத்தால் படாத பாடு படவேணுமென்று சும்மவா சொன்னான் அந்தக்காலத்திலே" என்பான் வேறொருவன். "அது கிடக்கட்டும்; வேட்டிக்கொள்ளைக்கு வருவானென்று இவர்களுக்கு முன்னமே தெரியாதோ" என்பான் ஒருவன். "என்னவோ நேற்றே பெண்ணுடைய தகப்பனும் அந்தக் கிழவியுடைய மகனும் வந்தார்களாமே" என்பான் மற்றவன். "அப்படியானால் அந்தச்சமயமே தப்பிக் கொள்ளப்படாதோ? அவர்கள் இரண்டுபேரும் வந்ததாய் [illegible]

சொன்னதார்?" என்பான் இன்னொருவன். "இன்றைக்குப் போலீஸ்டேஷனில் பேசிக்கொண்டார்கள்" என்பான் மற்றவன். "அப்படியானால் போலீசாருக்கு இதெல்லாம் தெரியுமோ?" "அதற்கும் தடையா? நேற்றுப் போலீசாருக்கும் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு மட்டும் குறைந்த பக்ஷம் பதினாயிரம் ரூபாயாவது கொடுத்திருக்கமாட்டானா வெள்ளையப்பன்? அவனுக்கென்ன மகாராஜன். எல்லாம் அடிப்போடுகிற போடல்லவா?" அது சரி தான், இல்லையானால், ராயர் வீட்டையாவது தீவட்டிக்கொள்ளை போடுகிறதாவது என்பான் ஒருவன். இன்னொருவன் "ஆனால் இன்னொரு சங்கதி யிருக்கிறது. இந்தச் சாமியாருடைய அகம்பாவத்துக்கு இவ்வளவு வேண்டியதுதான். ஒரு மாப்பிள்ளைக்குப் பேசி முடித்த பெண்ணை சிறைகடத்திக்கொண்டு வந்து விடுவதென்றால், இவர்தான் ஆண்பிள்ளை, மற்றப்பேரென்ன பெண்பிள்ளையா? வெள்ளையப்பன் செய்தவேலை சரிதான்" என்பான் ஒருவன். "அது சும்மா, இனிமேலும் சாமியார் சும்மாவிட்டு விடுவாரென்று எண்ணிவிடாதே; அவர் ஆள் இன்னாரென்றுனக்குத் தெரியாது" என்பான் மற்றவன். அவர் இனிமேற் செய்து சண்டாக்கப்போகிற திருக்கட்டும். இப்போது சோளனைச்சோலி முடித்துப்போட்டானே வெள்ளையப்பன். இனிப்போன உயிர் திரும்பி வரப்போகிறதோ? ஆனால் மேடைப்பிள்ளையவாள் குணத்துக்கும், அவாள் மாதிரிக்கும் அவாள் மகளுக்கு இப்படி வரப்படாது. இது தான் பெண் பிள்ளை படித்தால் அதுவும், அதிகம்படித்தால் இப்படித் தான் பார்த்தீர்களா?" என்பான் இன்னொருவன். "அப்

படி சொல்லலாமா, யாராவது படித்த பெண்களில் ஒருத்தி எப்போதாவது தவறினால் அதற்காக பொற்றொடியைப்போன்ற படித்தவர்கள் எல்லாரும் அப்படியாயிருப்பார்? அப்படி அக்கிரமமாய் பொற்றொடி எதுவும் செய்தனளுமில்லையே! அவள் படித்தவளாகையால் தன்னிஷ்டப்படி சீராளனைத் தேடிக்கொண்டாள். படியாதவளானால் யாரை வேண்டுமானாலும் மணந்து கொண்டு பின்னர் அவளும் அவள் புருஷனுமாய் நாயும் பூனைபோல் இருப்பார்கள். அவளுக்கு இப்படியெல்லாம் வருமென்று தெரியுமா?" யாரெப்படிபோனாலும், ராயர் எஜமான் இந்த காரியத்தில் தலையிட்டது தான் மகா பிசகு அவர்களுக்கென்ன தாயா? பிள்ளையா? அவாள் பேரிலும் குற்றமில்லை. இந்தச்சாமியார் செய்த வேலை" "சரிதான் ஆனாலும் இந்த வெள்ளையப்பனுக்கு நல்லகதி கிடையாது. இப்படித் தீவட்டிக்கொள்ளை போட்டுவிட்டால், சீராளனைக் கொன்றுபோட்டால் இவனுக்கென்ன கிடைக்கும்?" "அப்படி சொல்லப்படாது; ஊசிக்கூசி எதிரூசி பாயுமா? தன் கலியாணத்தை நிறுத்தி வெட்கப்படுத்தினால் அவன் சும்மாவிடுவானா? அவனென்ன ஒரு தக்க ஜமீந்தாரல்லவா? சும்மா உன்னைப்போல் என்னைப் போலொத்த மனுஷனா? இவாள் செய்ததற்கு அவன் செய்தது சரிதான்" என்றிவ்வாறாக ஒவ்வொருவனும் தனக்கு தோன்றியபடியும், தனக்கெட்டியவரையும் பேசிக் கொண்டிருக்க இதற்குள் மணி ஆறு ஆய்விட்டது.

எட்டாவது அத்தியாயம்.

கேஸ்.

ஆகவே போலீஸ் இன்ஸ்பெக்டரும், போலீசாரும், டிவிஷன் மாஜிஸ்திரேட் முதலிய சில்லரை அதிகாரிகளும் வந்துவிட்டார்கள். சுவாமியாருக்கு வெள்ளையப்பன் மேலிருந்த கோபம் இப்படி அப்படியென்று சொல்லவேண்டியதில்லையே. ராயர் ஒன்றும் பேசாமலிருக்கிறார். வந்த அதிகாரிகளெல்லாரும் ராயரிடம் போய் நின்று மன வருத்தத்துடன் அவரோடு துக்கம் விசாரித்தார்கள். சுவாமியார் மட்டில் மனதைச் சகித்திடாமல், அங்கே யிருந்த சில கப்புக்காரரை எங்கெங்கே யெல்லாமோ அனுப்பிவிட்டு, அநேக தந்திகளெழுதிக் கொடுத்தனுப்பினார். சீரான் மட்டும் தப்பிப்பிழைத்திருக்கும் பக்ஷத்தில் சுவாமியார் மறுநாள் நல்லவேலைகள் செய்திருப்பார். "சீரான் தப்பிவிட்டானே, அவன்பாடு எப்படியாச்சோ!" வென்ற அடங்காக் கவலையே அவர் மனதைப் புண்படுத்துகிறது. ஆயினும் தான் வெள்ளையப்பன் மீதும் அவனுக்கு உதவி செய்த கோனேரியப்பன் மீதும் கொண்ட அகங்காரமும், கோபமும் அடங்கவில்லை. ஆதலால்

அவர்:—"எது எப்படிப் போனாலும் சரி, இனி நம்முடைய உயிரே போனாலும் சரி, அந்த இரண்டுபேருடைய உயிரையும் பழிக்குப் பழி வாங்கியே விடுவேன்" என்று மனதில் தீர்மானம் செய்துவிட்டுத் தானே வாதியாய் நின்றுகொண்டு வெள்ளையப்பன் 1, இடையபுரம் ஜமீந்தார்

கோனேறியப்ப நாயக்கர் 2. கூந்தற் பனையூர் சுப்பபிள்ளை 3, காமயநாயக்கன் 4, சின்னணஞ்சேர்வை 5, கொள்ளையடிக்கவந்த பிரபல துஷ்டர்கள் 82 பேர் ஆக 87 நபர்கள் பேரில் பிரியாது தாக்கல் செய்துவிட்டார். வாதிபக்கம் சாக்ஷிகள் பொற்றொடி 1, சத்திய சீலாரயர் 2, முத்தம்மாள் 3, பாட்டிமகன் சங்கரப்பிள்ளை 4, பெரிசுப்புத்தேவன் 5, கிழ வீட்டு ஷண்பகநாதஞ் செட்டியார் 6, சில்லரையில் ஏழு பேர். ஆக சாக்ஷிகள் பதின்மூன்று பேர். இவ்வாறுஜில்லா ஜட்ஜினிடம்பிரியாது கொடுக்கப்பட்டது உடனே வாரண்டுகள் தயாராய், வாரண்டுச்சேவகர்கள் போய், கோனேறியப்பனையும், வெள்ளையப்பனையும், காமநாயக்கனையும், வேறே சில்லரையில் பத்தொன்பது ஆக இருபத்திரண்டு பேரையும் பிடித்துக்கொண்டு வந்தடைத்துவிட்டார்கள். சின்னணஞ்சேர்வை, கூந்தற்பனையூர் சுப்பபிள்ளை முதலிய அறுபத்தைந்து பேர் ஓடி ஒளிந்துக்கொண்டபடியால் பிடிபடவில்லை. கோனேறியப்பனும், வெள்ளையப்பனும் ஜாமீன் பேரில் விடப்பட்டார்கள். கோனேறியப்பனுக்காக லக்ஷ ரூ ரொக்க ஜாமீனும், வெள்ளையப்பனுக்காக அவன் தகப்பனார் கோபாலபுரம முனிசிப்பல் சேர்மென் சொக்கலிங்கம்பிள்ளையால் 50 ஆயிரம்ரூ ரொக்க ஜாமீனும் கொடுக்கப்பட்டது. காமயநாயக்கனை ஜாமீனில் விடுவதற்குக் கோர்ட்டார் சம்மதிக்காதபடியால் மற்ற இருபதுபேரையும் அடைத்துவிட்டார்கள். அகப்படாத 65 பேர்களுக்கும் வாரண்டுக்காரர்கள் அங்குமிங்கும் ஓடித்திரிகிறார்கள். மறுதினம் காலை 10 மணிக்கெல்லாம் வாயிதாப் போட்டாய்விட்டது. இவ்வாறு கேஸ் நடக்குமென்று

முன்னேறவே எதிர்பார்த்திருந்த வெள்ளையப்பனும், கோனேரியப்பனும் எப்படித் தப்புவதென்று அங்குமிங்கும் ஓடுகிறார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டரையும் சூப்பிரண்டெண்டையும் ஓடியோடிக் காலைப் பிடிக்கிறார்கள். ஆலவாய்ப் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் சப்மேஜிஸ்திரேட்டு முதலிய கிரிமினல் உத்தியோகஸ்தர்களுக்கும் ஏராளமான பணங்களை வாரி வாரி இறைத்து லஞ்சம் கொடுத்தார்கள்.

மறுநாள் பத்துமணிக்கெல்லாம் விசாரணையாகப்போகிறது. கோர்ட்டுத்திறக்கும் சமயமாகிய பத்துமணிக்கு முன்னமே எண்ணில்லாத ஜனங்கள் வந்து கோர்ட்டுக் கச்சேரியின் நான்குபுறமும் வந்து கூடிவிட்டார்கள். திருவிழாக் காலங்களிலாவது, அல்லது கும்பகோணம் மகாமஹம் திருவிழாவிலாவது இவ்வளவு கூட்டம் கூடியிராது. அநேக ஜனங்கள் கேஸின் தீர்ப்பு எப்படியாகிறதென்று பார்க்க வந்தார்கள். இன்னுமநேகர் பொற்கொடி என்பவள் எப்படி இருப்பாளோ என்று அவள் முகத்தைப் பார்க்க வந்திருந்தார்கள். அன்றைக்கும் பொற்கொடி என்பவள் இன்னாரென்று ஒருத்தருக்குத் தெரியாவிட்டாலும் "பொற்கொடி கேஸ், பொற்கொடிகேஸ்!" என்று ஊர் பூராப் பேச்சாய்க் கிடந்தது. ஜில்லா ஜட்ஜு துரையும் கோர்ட்டுக்கு வந்துவிட்டார். வீட்டிலிருந்து வருகிற ஜட்ஜு கோர்ட்டுக்குள் இலகுவில் போகமுடியாதபடி அவ்வளவு ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஜனங்களை விலக்கிக்கொண்டு ஜட்ஜு கோர்ட்டுக்குள்போய்ச் சேர்ந்தார். "இனி பொற்கொடி வரப்போகிறாள், வரப்போகிறாள்" என்று எல்லா ஜனங்களும்

ரஸ்தா வினோதமாக நின்றுகொண்டிருந்தார்கள். ஜில்லாக் கோர்ட்டிலிருந்து ஜட்ஜ் வீடுவரையுள்ள ரோட்டின் இருபுறமும் ஜனங்கள்தான். சாதாரணமாய் ஒரு கவனர் வந்தாலும்கூட இவ்வளவு கூட்ட மிராது. சாமியாரும் சப்ஜட்ஜ் சத்யபிரராயரும் பொற்றொடியண்டை போய் மெல்ல "அம்மா! இனி ஒன்றுக்கும் யோசிக்கப்படாது. உள்ள விதிபோலாகும், கோர்ட்டிச்சங்கதியா யிருப்பதினால் கோர்ட்டுக்கு வந்து நடந்த உண்மையை வாக்கு மூலம் கொடுத்துவிட்டு வந்துவிடு" என்று கூப்பிட்டார்கள். இதைக்கேட்ட

பொற்றொடி:—'ஐயோ! தெய்வமே! நான் இதற்காகவா பிறந்தேன்? நான் பார்த்தோர் சிரிக்கும்படியா உடம் பெடுத்தேன்! நான் இதுவரையும் அடைந்த அவமானம் போதாதா? என் ஆசை மணாளரை, ஐயோ! என் பிராணச்செல்வரை, (தேம்பி முட்டிக்கொண்டு) என்னுயிரைக் காப்பாற்ற வந்த என் குலதீபத்தை இழந்தேனே! இன்னும் உயிர்வைத்திருக்கிறேனே பாவி! நானுமொரு பெண்ணா? என்னையும் ஒரு பெண்ணென்று விரும்பினாரே அந்த மகானுபாவர்! ஐயய்யோ! அவருக்கு நான் மனைவியாயிருந்து பணிவிடைசெய்ய எண்ணிய எண்ணமும், நினைத்த நினைவும் இப்படியு மாச்சே? அவருக்கு நான் யமனாக வந்து பிறந்தேனே! என்னை நம்பிவந்து, என்னை மணந்த என்னருமை நாயகர் என்னவாய்ப் போனாரோ? அந்த சண்டாளப்பாவிகள் அவரை என்னவெல்லாம் செய்தார்களோ? அவருயிர் என்னவிதமாய்ப் போயிற்றோ? அப்பொழுது என்னவெல்லாம் நினைத்தாரோ! அம்மா, பொறுக்க முடி

பனிக்கில்லையோ! என் வயிறு எரிகின்றதே. சாகவேண்டுமெ ன்றுமாய் நினைத்திருக்கவில்லையே. அன்றைக்கே பாஷாணத் தைத் தின்று இறந்துபோயிருப்பேனே. இந்தப் பாட்டிக்கி ழவி அதற்கும் சம்மதிக்கவில்லையே. அன்றைக்கு நான் இறந்திருந்தால், எனது ஆசை நாயகருக்கிவ்வளவு துன் பமும் வந்திராதே. நான் சிறுபிள்ளையாயிருந்தபொழுது ஒருமுறை என்னைக் காப்பாற்றி உயிர்ப்பிச்சை கொடுத்தத ற்குப் பதிலாக, அவருயிர் போவதற்கே நான் காரணமாயி ருந்தேன். நானே அவருயிர் கொண்டுபோகவந்த காலனா னேன். இந்த மா பாதகத்தை எங்கே தொலைப்பேன்? எந்த கங்கையில் முழுகினாலும் இந்தப்பாவம் தொலையுமா? என கன் புருஷனைக்கொன்ற பாவியானேனே! ஐயையோ! அம் மா! அம்மா! அம்மா! ஏ பாட்டி! ஏ சாமி! சாமி! நான் எதைச் செய்வேன்! எப்படிப் பிழைப்பேன்! எப்படிச் சாவேன்? என் ஆசை நாயகரை இனிக் கண்ணாற் பார்ப்பனோ? நான் பிறந்ததும், இருந்ததும், மாடுபோல் தடித்துப் பெருத்து வளர்ந்ததும்—பூமிக்குப் பாரமும் சோற்றுக்குச் சேதமு மாய் முடிந்ததேயல்லாமல் என்னால் யாருக்கு என்னபலன் கிடைத்தது? பெற்ற தாய் தகப்பனுக்கும் பொல்லாத பெ ண்ணானேனே. ஊரிலில்லாத பொல்லாருங் கைதட்டிச் சிரி க்கும்படி கழுதைகளிலும் கெட்ட கழுதையானேனே? நாயிலுங் கடைகெட்ட நாயானேனே. இனி இதுவல் லாமல் நாளையும் கடைசியில் கச்சேரிப்படியேறி நின்று வாக்குமூலமுங் கொடுக்கும்படி நேரிட்டதே. நான் எப் படி வெளியேறுவேன். நான் பன்னிரண்டாம் வயதிற் பள்ளிக்கூடத்தைவிட்டு வீட்டுக்கு வந்தநாள் முதலாய் அடுத்த வீட்டு நடையேறிப் பார்ப்பேனோ! வேறொருவரா

டும் வீணிற் பேசியறியேனே! என் அப்பாவைத் தவிர வேறொரு புருஷரோடும் வாய்திறந்து நன்றாய்ப் பேசியுமி ரேனே. அப்படிப்பட்ட என்னைக் கோர்ட்டில்போய் நின்று வாக்குமூலம் கொடுக்கும்படி சொல்லுகிறீர்களே. எது எப்படியானாலெனக் கென்ன? வெள்ளையப்பன் என்கிற பாவியை ஜயிலில் வைத்தால் தானென்ன? வேறே அவன் எப்படி ஒழிந்து போனால்தான் என்ன? எனது நாயகர் வரப் போகிறாரா? முதல் முதல் அவரை என் மனத்தில் நாயகராக எண்ணி நான்கு வருஷத்துக்கு மேலாகிறது. பின்பு அப்படி முடியுமோ, முடியாதோ வென்று கவலை கொண்டேன். அதன்பின் என்னபாடு பட்டேனோ, யாருடைய பூர்வ புண்ணியத்தாலோ, ராயர் எஜமானும் சாமியும் தெய்வம்போல வந்து உதவினீர்கள். பின்பு நான் எங்கள் வீட்டுத் தோட்டத்தின் சுவரேறி வரும்பொழுது என்மனம் என்னபாடு பட்டதென்று அந்தத் தெய்வந்தானறியும். அதையும் தப்பி இங்குவந்து சேர்ந்தேன். விவாகமும் நடந்தது. இருவரும் சந்தித்தோம். பின்பு எதிர்பாராதபடி ஐயோ! அந்தப் பாவிகள் கொட்டகையில் தீயைவைத்து வேடிக்கை பார்த்தார்களே. அதிலாவது என் பூர்த்தேனோ! என்னவெத்து அவர் பிழைக்கப்படாரோ? இனி அவரையும் காண்போமோ! கடைசியில் என்னைத்தப்புவிப்பதற்காகப் பலகையைப்போட்டு அதன் மேல் நடந்துவந்தோமே! அதிலே அவர் கீழே விழவேண்டும்! விழுந்தாலும் அந்தப் பாவிகள் கையிலா அகப்படவேண்டும்! ஐயோ! கைக்கெட்டினது வாய்க்கெட்டாமற் போயிற்றே! ஐயோ! போனாரோ! வருவாரோ! இன்னும்

இருக்கிறீரா! அவரை நான் கண்ணைப் பார்க்கப்போகிறேனே! என் பதிவிரதாபாவம், என்மனத்தி லிருக்கிற உண்மை யாதும் உங்களுக்குத்தெரியவில்லையே! எல்லாரும் என்மீது தயவு செய்து என்னைக் கொன்றுபோடுங்கள். உங்களுக்கு கோடி கோடி புண்ணியமுண்டு. நான் இனி உயிர் வைத்து வாழ்வதில் யாதொரு பயனுமில்லை. என்னினும் கொடிய பாவி இந்த வுலகத்திலுமில்லை; வேறெந்த வுலகத்திலுமில்லை. ஐயோ சுவாமி! தயவுசெய்து என்னை விட்டுவிட வேண்டும். நான் போர்ட்டுக்கு வரமாட்டேன். என்னைத் தயவுசெய்து மன்னிக்கவேண்டும்" என்றுசொல்லாத கண்ணீர் அருவி பாய விம்மி விம்மி யழுதாள்.

ஒன்றுக்கும் கலங்காத நெஞ்சமுடைய மகா பக்தாச் சாமியாரும் இதைக்கேட்டவுடன் கண்ணீர் விட்டு விட்டார். மீனாக்ஷி, துளசி, முத்தம்மாள் எல்லோரும் 'ஐயோ' வென்று கதறிக்கதறி யழுகிறார்கள்.

மீனாக்ஷி:—"ஐயோ, அந்தக் காலத்திலேயே ரோஜாவுக்குக் கொடுப்பதாய் நிச்சயித் திருந்தால் இப்படியெல்லாம் வந்திராதே. இவ்வளவு வருமென்று தெரிந்திருந்தால் அந்த வெள்ளைப்பயலென்ற நீசனுக்குக் கொடுக்க மாட்டோமென்று சொல்லியிருப்போமே." என்று சொல்லிக்கொண்டழுகிறாள்.

துளசி:—"ஐயோ! இதற்கெல்லாம் நாமும் நம்முடைய நாயகரும் தானே காரணம்?" என்றெண்ணி வருந்துகின்றாள். ஏழைப்பாட்டியம்மாளும் மனம் வருந்துகின்றாள்.

அப்பொழுது

சாமியார்:—"தாயே! பொற்கொடி! நீ சொல்வதெல்லாம், உண்மைதான். இன்னும் என்னத்தைக் கண்டுவிட்டோம். நீ உண்மையாய்ச் சீராளன்பேரில் அன்புடையவளானால், உனக்கு இந்தப்பிறப்பி லில்லாவிடினும் இன்னொரு பிறப்பிலாயினும் நல்லவாழ்வைக் கடவுள் கொடுப்பார். மறுமையில் நற்கதியடைவாய். நீ நினைத்தபடி சீராளனைத் தொட்டு மணந்துவிட்டாயல்லவா? அதுவே சகல பாக்கியமும் என்றெண்ணிக்கொள்ள வேண்டியது. அதைப்பற்றி இனி வீணே வருந்துவது கூடாது உன்னுடைய மெய்யான கணவனுக்குத் தீமைசெய்தானே—அந்தச் சண்டாளன் வெள்ளையப்பனென்கிற பயல்—அவனையும், அவனுக்குதவிசெய்தானே அவனிலும் கேடுகெட்ட அதிவீணன் இடையபுரம் ஜமீந்தாரன் அந்த இரண்டு பேரையும் எப்படியாவது ஜயிலில் வைத்துவிட்டு மறுஜோலி பார்ப்பதுதான் உன் கற்புக்கழகு. உன் மணாளனைக் கொலைசெய்த மாபாவியைக் கொலைக்குக் கொலை வாங்குவதே உன் கற்புக்குச் சிறப்பேயன்றி இப்படி வீணில் சாதாரண பெண்களைப்போல் புலம்புவது உனது கல்விக்கும் அறிவுக்கும் சிறப்பல்ல. ஆகையால் என் சொல்லைத் தட்டாமல், இந்த வண்டியில் ஏறிக் கொண்டு கோர்ட்டு வரையும் வந்து நடந்த உண்மையைக் கோர்ட்டார் முன்பு சொல்லிவிடு. உன்னைப் பொய் சொல்லும்படி ஒருவரும் கேட்கவில்லை. உன் புருஷனுக்காகவே நாங்கள் இத்தனை பாடுபடுகிறோம். அந்தக் கொலை பாதகரை இவ்விதமாய்ச் சிறையிலடைத்தாலன்றி உனக்காவது உனது நாயகன் [illegible] கிடையாது. எழுந்திரு, அம்மா பொற்கொடி! அவளைக்கூட்டிக் கொ

ண்டுவா, எல்லாம் ஈசன் முன்னின் றுதவவேண்டும்'' என்றி வ்வாறு சொல்லவே எல்லாருடைய கட்டாயத்துக்கும் தாக்ஷண்யப்பட்டுப் போற்றேடி அழுத கண்ணுஞ் சிந்திய மூக்கும் விரித்த தலையுமாய் மெல்ல மெல்ல எழுந்து வந்தாள். தெருப்பக்கத்தில் நின்ற வண்டியிலேறிக்கொண்டு சாமியார் ராயர் வகையரா எல்லாரும் புறப்பட்டார்கள். அப்போது தெருவில் கும்பல் கும்பலாய்க் கூடி நிற்கும்,

ஜனங்களெல்லாரும்.—(ஓடி ஓடிவந்து) "இவள் தான் போற்றேடி. இவள் தான் போற்றேடி '' என்று சொல்லுகிறார்கள்.

பொற்றேடியும் கோர்ட்டு வாசலில்வந்து ஜட்ஜ்துரையிருக்கும் மண்டபத்துட்போய்ச் சேர்ந்தாள். ஜட்ஜ்துரையும் மற்றப்பெரிய பெரிய வக்கீல்களும் பொற்றேடியையும் அவளது ரூபலாவண்யத்தையும், அவளிருக்கும் அலங்கோலமான நிலையையும் கண்டு அளவிலா ஆச்சரியமடைந்தார்கள். பின்பு கேஸ் விசாரணையாயிற்று.

வாதிபக்கம் சாக்ஷிகள் பதின்மூன் றுபேரும், பிரதிவாதிகளுள் இருபத்திரெண்டுபேரும், பிரதிவாதி பக்கம் சாக்ஷிகள் பதினெட்டுப்பேரும் கோர்ட்டில்வந்து ஆஜரானார்கள். வாக்குமூலங்கள் வாங்கப்பட்டன. பொற்றேடியின் வாக்குமூலமட்டும் கலப்பற்ற உண்மையேயன்றி வேறொன்றையும் அவள் கூட்டிக் குறைத்துச் சொல்லவில்லை. அவள் சொன்னதாவது:—"என்பெயர் பொற்றேடி. எனக்கு வயது பதினாறு வருஷமும் எட்டு மாதமும் ஆகிறது. எனது நாயகர் சீராளப்பிள்ளை. நான் எனது மனப்பூர்வமாய் எனது நாயகராகிய சீராளப் பிள்ளையை விவாஹஞ் செய்து கொள்

ளவேண்டுமென்று விரும்பினேன். அதற்கு எனது பெற்றோர் சம்மதிக்கவில்லை. வெள்ளையப்பனுக்கென்னைக் கொடுப்பதாய் நிச்சயித்தார்கள். இதற்கு நான் உடன்படவேயில்லை. பலாத்காரமாயென்னை வற்புறுத்தியபடியால் எனது நாயகருக்கு நான் கடிதமெழுதி வருத்தி அவரோடு கூடிக்கொண்டு அவருடைய நண்பராகிய சத்தியசீல ராயரவர்கள் வீட்டுக்குவந்து சேர்ந்தேன் அங்கே யெங்களிருவருக்கும் விவாஹம் நடந்தது. நானாக விரும்பி சம்மதத்தோடு வந்தேனேயொழிய வேறே சத்திய சீலராவது அவர் மனைவி துளசி யம்மாளாவது முத்தம்மாளாவது அல்லது சாமியாராவது என்னைக் கூப்பிடவில்லை. அவர்களிடம் எனது விவாகத்துக்குமுன் பேசியுமறியேன். முத்தம்மாளை மட்டும் எனக்கு முன்னமே தெரியும். இப்படிக் கொள்ளையடித்தும் என் நாயகரை மோசஞ்செய்ததும் இந்த வெள்ளையப்பன்தான் என்று நிச்சயமாய்ச் சொல்லுகிறேன். ஆனால் கொள்ளை நடக்கும் பொழுது வெள்ளையப்பனை நான் கண்ணால்பார்க்கவில்லை அவனும் வந்திருப்பானென்றே நம்புகிறேன். இது சத்தியம்."

சாமியார்:—"என்பெயர் பக்காச்சாமியார். நான் வசிப்பது சச்சிதானந்தபுரம். சென்ற ஆறுமாதகாலமாய் கோபாலபுரத்திலும் ஆலவாயிலும் வசிக்கிறேன். சீராளப்பிள்ளையை எனக்கு வெகுநாளாய்த்தெரியும். கல்யாணக்கடிதம் கிடைத்தபடியால் கல்யாணத்துக்குப் போனேன். கொள்ளைக்காரரோடு வெள்ளையப்பனையும், இடையபுரம் கோனேறியப்பநாயக்கனையும், சின்னணஞ்சோவையையும், காமயநாயக்கனையும்,கூந்தற்பனையூர் சுப்பப்பிள்ளையையும் வேறேஅநேகரை

யுங் கண்டேன். இவர்களை என் கண்ணுறக் கண்டேன். அவருடைய ஐந்து பெண்பிள்ளைகளும் வேறே பருதுப் பதிலை கூட வேறுபாதை சீராளப் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு போனார்கள்" என்று வாக்குமூலம் கொடுத்தார்.

இதற்கெதிரிடையாக சத்திய வேளையன், முத்தப்பன், சங்கரன், அடுத்தவீட்டு வெங்கடநாதஞ் செட்டியார் முதலிய சாக்ஷிகளும் வாக்குமூலங்கொடுத்தார்கள்

வெள்ளையப்பன் வாக்குமூலம்:—"என்பெயர் வெள்ளையப்பன். இந்தப் பெண்ணை எனக்குக் கொடுப்பதாய்ப் பேசியிருந்தது. நிச்சயதாம்பூலம் நடந்தது. ஆனால் அதன் பின்பு எனக்குப் பிரியமில்லாதபடியால் கல்யாணத்தை நிறுத்திவிட்டேன். கொள்ளை நடந்த தினத்தில் நான் சத்திரத்திலிருந்தேன். எனக்கு யாதொன்றும் தெரியாது. சீராளப் பிள்ளைக்கும் எனக்கும் யாதொரு விரோதமும் கிடையாது."

இடையபுரம் ஜமீந்தார் வாக்குமூலம்:— "என் பெயர் கோனேரியப்பநாயக்கன். எனக்கும் இந்த சாமியாருக்கும் முன் ஜென்மவிரோதமுண்டு. என் ஸ்திரீயாகிய காளியம்மாள் பெண்ணைக்கூட இந்த சாமியாருக்குக் கொடுக்கமுண்டு. இந்தக் கொள்ளை நடந்த தினத்தில் நான் என்னுடைய ஊரிலேதானிருந்தேன். எனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. விரோதத்தினால் சாமியார் என்னை வேண்டுமென்று பிரதிவாதியாய்ச் சேர்த்திருக்கிறார்."

பின்பு, பிரதிவாதிபக்கம் சாக்ஷிகளும் விசாரிக்கப்பட்டார்கள். ஆனால் ஜில்லா ஜட்ஜ் கொள்ளை உண்மைதா

னென்று நம்பினாலும் நன்றாய் ஆலோசனை செய்து மறு நாள் தீர்ப்புச்செய்வதாய்ச் சொல்லிவிட்டார். இதற்குள் கட்டாயம் பிரதிவாதிகளைத்தண்டித்து விடுவார் என்று பிரஸ்தாபமுண்டாகிவிட்டது. ஆனால் எவ்விதமாவோ இடையபுரம் கோனேரியப்பனும், வெள்ளையப்பனும் நிரம்பவும் பயந்து விட்டார்கள். இடையபுரம்ஜமீந்தார் ஜில்லா ஜட்ஜினுடைய மனைவியாண்டை போய்த்தான் 5 லக்ஷ ரூபாயும் வெள்ளையப்பன் 5 லக்ஷ ரூபாயும் லஞ்சம் தருவதாயும் தாங்கள் இரண்டுபேரை மட்டும் விட்டுவிடும்படிக்கு அவளுடைய புருஷனிடம் சிபார்சு செய்யும்படிக்கும் கேட்டதோடு அவளுக்குப் பிரியமான அநேக ஆபரணங்களையும் பழவகைகளையும் வேடிக்கை சாமான்களையும் அவள் காலில் வைத்துக்கீழேவிழுந்து கும்பிட்டான். மனைவிசொற் கேட்கும் இயல்புடைய அந்த ஜட்ஜ், மறுநாள் தீர்ப்பு சொன்னபொழுது வெள்ளையப்பனையும், இடையபுரம் கோனேரியப்பனையும் விடுதலை செய்திருப்பதாயும் பறையர் குற்றவாளிகளென்று தெரிந்த கந்தப்பனையும் சுப்பப்பிள்ளைக்கும் சின்னணஞ்சேர்வைக்கும் பதினாலு வருஷமும் காமயநாயக்கனுக்கும் வேறேமூன்றுபறையர்களுக்கும் ஏழுவருஷமும், மற்ற 4 பேருக்கு 3 வருஷமும், சிறைவிதித்திருப்பதாயும் தீர்ப்புச்செய்தார். இப்படி நடந்த 2.3 தினத்துக்குள்வெள்ளையப்பன் தகப்பனார் சொக்கலிங்கம் பிள்ளை தன் மகன் கல்யாணச்செலவு நஷ்டத்துக்கும் மான நஷ்டத்துக்கும் பொற்றொடி தகப்பனார் மேடைப்பிள்ளைபேரிலும் சொளப்பிள்ளை பேரிலும் பிரியாது கொடுத்திருந்தார். அது ருஜுவில்லாமல் தள்ளிவிடப்பட்டது

இவ்வாறு விசாரிக்கப்பட்டு அபராஜயப்பட்ட சாமியார் இத்தோடு விடாமல் எப்படியாவது வெள்ளையப்பனையும் இடையரையும் ஜமீன்தாரையும் தண்டித்து விட வேண்டுமென்று வைராக்கியம் கொண்டார். ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். அந்த அப்பீலில் வெள்ளையப்பன் இல்லா ஜட்ஜிகள் முன் தெரிந்த வாக்குமூலத்துக்கும், அவன் தகப்பனார் மடத்தாரைப் பேட்டைப்பிள்ளைபேரிலும், கோனேரியப்பனை வெட்டியவனை வெட்டச்சொல்ல வெட்டப்பிரியதுக்கும் நேர் விரோதமாயிருந்தபடியால், கொள்ளை போட்டது வெள்ளையப்பனும், கோனேரியப்பனுந்தானென்று ருஜுவாய் விட்டது. வெள்ளையப்பனுக்கும், கோனேரியப்பனுக்கும் ஏழுவருஷம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறு தண்டிக்கப்பட்ட வெள்ளையப்பன், கோனேரியப்பன் ஆகிய இருவரும் சங்கிலியில் பெரிய தெருவில் அழைக்கப்பட்டார்கள். ஊரெங்கும் "அதுதான் சரி அதுதான் சரி" என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள். வெள்ளையப்பன் தான் என்னசெய்வான்? இடையாத்தான் தான் என்னசெய்வான்? அவர்களுடைய அக்கிரமமே அவர்களைத் தண்டித்தது. இரண்டுபேர்களுடைய முறுக்கென்ன; சவடால்களென்ன; குதிரைச்சாட்டிகளென்ன; சேவகர்களென்ன; சிப்பாய்களென்ன; அதிகாரங்களென்ன; அழுக்குகளென்ன; கீர்த்திகளென்ன கொள்ளைகளென்ன; டாம்பீகங்களென்ன; மீசைமுறுக்குகளென்ன; ஆடைகளென்ன; ஆபரணங்களென்ன; எல்லாம் பஞ்சாய்ப்பறந்தோடி விட்டன. இருவரையும் இரண்டு கன்தாக்கொடுத்துக் கட்டிக்கொண்டுபோய்ப் பெரிய

ஜெயிலிலடைக்கவே, பயல்களுக்கு அப்பொழுதுதான் புத்தி வருகிறது! "ஐயோ இப்படி வருமென்று தெரியாதே" என்பான் வெள்ளையப்பன், "அடடே உன்னாலேயல்லவா நானும் கெட்டேன்" என்பான் கோவிந்தன்; என்னசெய்யலாம்! இரண்டு பேரும் பள்ளிக்கூடம் போய்ச்சேர்ந்தார்கள். சேர்மேன் சொக்கலிங்கம்பிள்ளையும் தம்மகனை மீட்டுவிடவேண்டுமென்று என்னென்னவோ தந்திரமெல்லாம் செய்தும் ஒன்றும்முடியாமல் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு கோபாலபுரம் போய்ச்சேர்ந்தார். ஆனால், இதற்குள் கவர்ன்மெண்டார் இவ்வித கொள்ளையும் கலகங்களும் நடந்ததற்கு சப்ஜட்ஜ் சத்தியசீலராயர் ஒருவிதமாய்க் காரணமாயிருந்ததாகச் சந்தேகமேற்பட்ட படியாலோ அல்லது வேறென்ன காரணத்தாலோ, சத்தியசீலராயரை ஆலவாயிலிருந்து தெலுங்கு ஜில்லாவிலுள்ள வால்தேர் பட்டணம் சப் ஜட்ஜியாக மாற்றிவிட்டார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம்.

பிரிவாற்றாமை

இவ்வாறு வியாச்சியத்தில் ஜயம்பெற்றுக்கொண்டு சாமியார் என்னஜோலியின் பேரிலோ வெவ்வேறிடங்களுக்குப் போய்விட்டார். ராயருக்கும் ஸ்தலம் மாற்றிய உத்தரவு கிடைத்தது. ஆனால், ராயர் வீட்டில் பொற்கொடியிருக்கும் பரிதாப நிலைமையைப்பார்க்க ஒருவராலும் சகிக்க முடியவில்லை. கொஞ்ச நாள் 7, 8 நாளாய்விட்டது.

இந்த 8 நாளும் பொற்ருெடிக்கு அன்ன பானம் ஒன்றும் கிடையாது. முன்னெல்லாம் பற்பல விதமாய்ப் புலம்பி யழுதும் அரற்றியும் கூவும் இயல்புள்ளவள் இப்பொழுது ஒன்றுமே பேச வில்லை. ஒருவிதப் பேய் பிடித்தவள் போலப்படுத்த விடத்தை விட்டு எழுந்திராமற் கிடந்தாள். இரவும்பகலும், போஜனமில்லாமையால் உண்டான அன்னக் களைப்பாலும், மனத்தில் நின்று அறுக்கும் அடங்காக் கவலையாலும் உருண் டுருண்டு புரள்வாள். சும்மா படுத்திருக்கும் பொழுதே குபீரென்றெழுந்து "நாதா வாருங்கள், உட்காருங்கள்" என்று சொல்லிக்கொண்டு தூண்களையும் கதவுகளையும் போய் ஆவிச்சேர்த்துக்கட்டிக்கொண்டழுவாள். இதைக்கண்ட மீனாக்ஷி முத்தம்மாள் துளசி முதலியவர்களும் அவளைக் கூட்டிக்கொண்டு வந்து உட்கார்த்துவர். இப்படிச் செய்பவர்களை, கோட்டிகொண்டவள் போல் வாயில்வந்தபடி வைது திட்டுவாள். தன் முகத்திற்ருனே படபடவென் றடிப்பாள். தலையை விரித்துத் தன்மேனி முழுவதும் பரப்பிக்கொண்டு சத்தமிடுவாள். உடம்பெல்லாம் துரும்புபோலாய்விட்டது. இந்தப்பரிதாபத்தைக்கண்டு அவள் தாயாரும் பாட்டியும் அன்னபானமின்றிப் பட்டினியேகிடந்தார்கள். இதற்கு மத்தியில், வீட்டிற்குவந்திருப்பவர்கள், 3, 4, பேர் பட்டினியிருக்க தானுண்பது சரியல்லவென்று துளசியம்மாளும் 4 நாள்வரை சாப்பிடாதிருந்தாள். தான் பிராமணஸ்திரீ யென்பதைச் சற்றுமெண்ணுமல், பொற்ருெடியண்டைபோய் "அம்மா போற்ருேடி! மகளே! எழுந்திரு சாப்பிடு" என்று சொல்லியுபசரிப்பாள். சாதத்தைக்கை

பிடித்தூட்டினாள். என்ன உபசாரம் செய்தாலும் பொற்றொடி ஒரு பிடி சாதமாவது ஒரு மடக்குத்தண்ணீராவது உட்கொள்ளவில்லை. பின்பு நெடுநாள் வரையன்னமில்லாதபடியால் பொற்றொடிக்கு அறிவுமயங்கிப் பிரக்ஞையற்றுப் போய்விட்டது. கொஞ்சம் கொஞ்சம் பேசிக்கொண்டும் புலம்பிக்கொண்டுமிருந்தவள், முடிவில் ஒன்றும் பேசவில்லை. கண்களையும் மூடிவிட்டாள். எல்லாரும் பொற்றொடியின் கதியிப்படி ஆய்விட்டதேயென்று பயந்து அவளைச்சுற்றிவந்து கூடினார்கள். "அம்மா அம்மா, பொற்றொடீ!, பொற்றொடீ!, என்று கூவியழைத்தாலும், அவள் "நாதா, நாதா" என்று உடலசையாமல் மெல்லச் சொல்லுவாளேயன்றி வேறொன்றுஞ் சொல்வதில்லை. தன் சரீரத்தை யாரேனும் கையினால் தடவிப்பார்த்துப் பேசினால் அவர்களுடைய கையை மெதுவாய்ப் பிடித்து அது தனது நாயகனுடைய கையென்றெண்ணி, முத்தமிட்டுக் கொள்ளுவாள். இவ்வளவு பேச்சும் இவ்வளவு அசைவுந்தானுண்டேயன்றி வேறே பேச்சுமில்லை; அசைவுமில்லை. இப்படிப்பொற்றொடியிருக்கும் அபாயமான நிலைமையைக் கோபாலபுரத்தில் அவளுடைய தகப்பனாருக்கறிவிக்கும்படி ராயர் ஒரு ஆள் அனுப்பினார். அந்த ஆளும் அவ்வாறே கோபாலபுரம் போய் மேடைப்பிள்ளையைக்கண்டு, "ஐயா தங்கள் மகள் பொற்றொடி அபாயமான ஸ்திதியிலிருக்கிறாள்" என்று சொல்லும்படி வந்தேன்" என்று தெரிவித்தான். இதைக் கேட்ட

மேடைப்பிள்ளை:— "போ, அப்பா! அவளுடைய கல்யாணத்துக்கு நான் வந்தேனா; அல்லது அவள்

அறுத்ததற்கு வந்தேனா; இல்லையே. அப்படி இருக்க அவளிறக்கிறதையும் நான் பார்க்க மாட்டேன். அவள் என்னை மீறி எப்போது போனாளோ அப்போதே யிறந்து போனதாய் எண்ணிவிட்டேன்" என்று தன்வாயினால்சொன்னார். அவரையறியாமல் கண்ணில்நின்று மாலைமாலையாக்கண்ணீர் வழிந்துவிட்டது. "எப்படியானாலும், நம்முடைய சொல்லைக்கேளாமல் நம்முடைய குடும்பத்துக்கும் பெயருக்கும் அவமானஞ்செய்த பொற்கொடியின் முகத்தில் விழிக்கப்படாது என்று தீர்மானஞ் செய்திருந்தபோதிலும் எப்படியோ அவர்மனங்கலங்கி "என் பொற்கொடி. என்தாயே என்று கதறிக்கொண்டு உடனே எழுந்து, வீட்டில்தன்னைத் தவிர ஒருவருமில்லாதபடியால், வீட்டை அடைத்துப்பூட்டிவிட்டு ஆலவாய்க்குப் புறப்பட்டார்.

ஒற்றை வண்டி குதிரை வண்டி ஆகையால் சுமார் ஒரு மணி நேரத்துக்குள் ஆலவாய்வந்து சேர்ந்து ராயர்வீட்டுக்குள் புகுந்தார். புகவே, அங்கு மயக்கமாய்க் கிடக்கும் பொற்கொடியைக்கண்டு திடுக்கிட்டு "என் கண்ணே, என் செல்வமே, நான் உன்னை இப்படி இடைத்தட்டிலே போய் விடுவாய் என்று எண்ணவில்லையே; எனக்கு என்ன சொல்லுகிறாய்?" என்று கதறினார். இவர் இவ்வாறு கதறவே, அங்கிருந்த பெண்களும் மனங்கலங்கி விட்டார்கள். இதையெல்லாங்கண்ட

துளசி:—(அப்புறத்தில் போய் தனது நாயகனாகிய ராயனை அந்தரங்கமாய் அழைத்து அவரைநோக்கி) "என்ன நாமெல்லாரும்கூடி இப்படிச் செய்துவிட்டோமே. நன்மை

செய்ய வெண்ணித் தீமையாய்வந்து விளைந்ததே. நடப்பது தெய்வச்செயலாய் நடந்தாலும், பாவமும் பழியும் நம்முடைய தலையிலே வந்து விழும்போலிருக்கிறதே. இனி என்னசெய்வோம் யாரெப்படிப் போனுலென்ன வென்று சும்மாயிருந்து விடாமல் என்னென்னமோ செய்தோமே” என்று மனவ்ருத்தப்பட்டாள்.

ராயர்:—“அப்படிச்சொல்லலாமா? நாம் நல்லகாரியத்தைச்செய்தோமேதவிர ஒருவருக்கும் தீமைசெய்யவில்லை நம்முடைய பொல்லாதகாலம் இப்படி வந்து சேர்ந்தது. ஐயய்யோ! சீனாவபிள்ளை எப்படி இறந்தாரோ! அவரை எப்படிக் கொன்றார்களோ! ஒன்றும்தெரியவில்லை; பொற்றொடிக்கு இப்பொழுது என்னமாயிருக்கிறது?” என்று கேட்டார்.

துளசி:—‘அவளுக்குக் காய்ச்சலா தலைவலியா ஒன்றுமில்லை! கொள்ளைநடந்து சீனாவை யிழந்த நாள்முதல் சாப்பாடு கிடையாது. நான் கூடியமட்டும் சொல்லியும் கேட்கவில்லை. எல்லாரும் பட்டினியே கிடக்கிறார்கள். பொற்றொடிக்கு இப்பொழுது தன்னினைவில்லை. என்ன செய்யலாம்; ஒருடாக்டரையாவது கூட்டிக்கொண்டுவந்து பாருங்கள்” என்று சொன்னாள்.

ராயர்: “என்ன செய்யலாம் நம்மை வால்தேர் பட்டணத்துக்கு மாற்றியிருப்பதாய் உத்தரவு வந்திருக்கிறது. சாமியாருடைய கடிதமும் வந்திருக்கிறது. சாமியாரவர்களுக்கும் ரொம்ப வருத்தம்தான்; என்னசெய்வார்கள்! இந்தச்சமயத்தில் இந்தப்பெண்ணுக்கு இப்படியிருக்கிறதே.

வந்தது நீ போ. பொற்கொடியின் தகப்பனார் வந்திருக்கிறார்” என்று மனைவியை வீட்டுக்குள் அனுப்பிவிட்டு ஒரு சேவகனை விட்டு டாக்டரை வருவித்தார்.

டாக்டர் வந்து பொற்கொடிக்குக் கைபார்த்தார். ஒரு மணிநேரம் கைபார்த்தும் அவளுக்கு இன்னவியாதிதானென்று சொல்ல முடியவில்லை. கடைசியாய்.

டாக்டர்:—“ஐயா, என்னவோ நாளைவரை பார்த்துக் கொண்டு ஏதாவது மருந்து தருகிறேன். அதுவரை ரவைக் கஞ்சி போட்டுக்கொடுங்கள்” என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

பத்தாவது அத்தியாயம்.

காளிங்கராயபிள்ளை.

நல்லது, இப்பொழுது நாம் இடையபுரம் ஜமீந்தார் கோபினாதய்யப்ப நாயக்கரைப்பற்றியும் இன்னொரு காளிங்கராய பிள்ளையைப்பற்றியும் சில விஷயங்க ளறிய வேண்டியிருக்கிறது. இடையபுரத்துக்குத் தென்மேற்கு மூலையில் பழுபலை யென்னும் ஊரில் கோதண்டராமபிள்ளை யென்னு மொரு பெரியகுடித்தனக்காரரிருந்தார். அவருடையமகன் தான் காளிங்கராய பிள்ளை. இவருடைய பெருங்குணங்களைப்பற்றி இங்கே விரிவாய்ச்சொல்ல முடியாது. பார்வைக்குப்பெரிய ஆஜானுபாகுவாய்ச்சபைக்கு நிறைந்த மனிதனா யிருப்பார். அவருடைய தோற்றத்தையும் உயரத்தையும்

னத்தையும் கண்டால் யாரும் பயப்படக்கூடும். அசாத்தியமான செலவாளி. கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களில் கலெக்டர் முதல் அவருக்கு அந்தரங்க சிநேக முண்டு. கொஞ்சம் இங்கிலீஷ் மட்டில் படித்திருப்பாரானால் பென்னம் பெரிய உத்தியோகத்துக்கு வந்திருப்பார். ஆனால் அப்படி யாதொரு உயர்ந்த உத்தியோகமு மில்லாவிடினும் தன்பிதாவின் சொத்தையும் தனக்குள்ள கிராமங்களுக்கு வேலையையும் வைத்துக்கொண்டு பெருத்த அதிகாரஞ் செய்து வந்தார். ஆயினும் இவர் வெள்ளையப்பனைப்போல துஷ்டரல்ல; ரொம்ப நல்ல குணமுடையவர். ஆனால், தானென்ற அகம்பாவமுள்ளவராயிருந்தாலும் அஞ்சாமல் குடிக்காப்பேசுகிற வழக்கமுமட்டில் இவருக்குக் கூடாயிருந்தது. பெரிய சபையில் வாய்திறந்து படபடவென்றுபேச ஆரம்பித்துவிட்டால் எல்லாரும் [illegible]வே ண்டும். கிராமப்பஞ்சாயத்துகளிலும் குடித்தன வியவகாரங்களிலும் வழக்குகள் தீர்த்துவிட்டால் வெள்ளரிக்காய் பிளந்ததுபோல நிரம்ப நியாயமாக விருக்கும். அவர் செய்த தீர்ப்புக்கு அப்பீல் கிடையாது. இதற்காகச் சுற்றுக்கு முக்காத காற்காத வழி தூரத்திலுள்ள குடித்தனக்காரர் தங்களுக்குள்ள வழக்குகளையும் விவகாரங்களையும் "பழுமலை காளிங்கராயபிள்ளையவர்கள் சொன்னபடி கேட்டுக்கொள்வோம்" என்று சொல்லிக்கொண்டு இவரிடம் வந்து தீர்த்துக்கொண்டு போவார்கள். தேடி வந்து பிச்சைக்கேட்டவர்களுக்கு இல்லையென்று சொல்லமாட்டார். எத்தனையோ ஏழைகளுக்குத் தருமமாகக் கல்யாணஞ் செய்தும், பிராமணர்களுக்குப் பூணூல் கல்யாணஞ்செய்தும் [illegible]

வர்களுக்கு வேண்டிய வுபகாரம் செய்தும் பெரும் புகழ் பெற்றவர். தனது கிராமத்திலும் அயல் கிராமங்களிலுமுள்ள எளிய ஜனங்களுக்கு ஏதாவது இடையூறு நேரிட்டால் இவரிடம் வந்து சொல்வார்கள். இவரோ அவர்களைத் தேற்றி வேண்டிய உதவி செய்வார். தாயாதிக்காரர்க்குள் அண்ணன் தம்பியை மோசஞ் செய்யவாவது, தம்பி அண்ணனை மோசஞ் செய்யவாவது கண்டால் இவர் சகியார். இவரிருக்கும் ஊருக்குச் சுற்றுக்குக்காதவழி தூரத்துக்குள் களவு, கொள்ளை, தீ, என்பது பேசப்படாது. இவர் பெயரைச்சொன்னால் மறவருக்கும் குறவருக்கும் கள்ளருக்கும் வலுத்த பயம். இவர் பார்த்து யார் மேலாவது கொஞ்சம வைரம் வைத்து விட்டாரானால் அவனை எந்த விதமாவது குடியைக்கெடுத்து விடுவார். சிலசமயங்களில், துஷ்டர்கள் பேரில் பொய்க் கேஸாவது உண்டுபண்ணி பத்து வருஷம் எட்டு வருஷம் ஜெயிலில் வைத்து விடுவார். ஆனால் அநியாயமாய் ஒருவரிடம் வலியச் சண்டைக்குப் போகமாட்டார். எளியவர்கள், கொஞ்சம், தெரியாமல் ஏதாவது பிழை செய்துவிட்டாலும் அதை மன்னித்துவிடுவார். ஆனால் கொஞ்சம பணக்காரனா யிருந்து பணமூர்க்கத்தின்பேரில் ஏதாவது சேஷ்டை செய்தால் அவனை விடவே மாட்டார். ஒரு வழியில்லாவிட்டால் ஒரு வழியில் அவனை எப்படியாவது மாட்டிக் குடியெழுப்பி விடுவார். இவருக்கு பிராமணர் வேளாளர் மேலான உயர்ந்த ஜாதியாரைப் பார்க்கிலும் பள்ளர், சக்கிலியர், பறையர் முதலிய ஜாதியார்மீது அதிக பக்ஷமும் கிருபையும் உண்டு. அவ்வூரிலுள்ள பள்ளர்களும், சுற்றுப்பட்டிகளிலு

ங்க பள்ளர்களுக்கும் "பறைசேப் பெரிய விட்டுச் சாமி" என்று பெயரைக் கேட்டால் தெய்வம் போலெண்ணிக் கும்பிடுவார்கள். இவருடைய வாக்கியமெல்லாம் பள்ளர்க்கு வேதமல்லவேறில்லை. எங்கேயாவது இவருக்கு விரோதமாக கலகம் நடந்தால் ஆயிரம் இரண்டாயிரம் பள்ளர்களை அனுப்பி அடக்கித் துரத்தி விடுவார். வெள்ளையர்களைப் போலவும் இடையபுரம் ஜமீந்தாரைப் போலவும், இவருக்குத் தம்பிகளுடைய சகவாசமும் கள்ளப்பயல்களுடைய சகவாசமும் கிடையாது. இவரே எத்தனையோ கள்ளர்களைப் பிடித்துக் கொடுத்துக் கவர்மெண்டாரிடம் தொடாக்கள் பெற்றிருக்கிறார். ராயருக்குள்ளும் போக்கியமான மனுஷர்கள் சிலபேர் இவருடைய கைக்குள்ளே தான். கோபாலபுரம் சொக்கலிங்கம்பிள்ளையவர்கள் சொக்குமட்டும் இவரிடமிருந்தால் இவர் செய்கிற வேலை வேறே

இப்படியிருக்கையில், சொக்கலிங்கம் பிள்ளையும், காளிக்காரப் பிள்ளைக்கும் விரோதமும் கிடையாது, சிநேகமும் கிடையாது. அவருடைய கீர்த்தி அவருக்கு, இவருடைய கீர்த்தி இவருக்கு. இப்படிப்பட்ட பிரதாபத்தையுடைய காளிக்காரப் பிள்ளை வசிக்கும் புளியங்குளத்துக்குத் தெற்கே ஒரு நாழிகை வழியில் ஒரு இறையைச் சுற்றி உண்டு, அதில் ஆதிமுதல் பள்ளர்கள் நாகத்தைக் குத்தகையிருப்பது வழக்கம். ஆனால் அந்தக் கிணற்றைச் சுற்றி நான்கு பக்கமும் இடையபுரம் ஜமீன்தாரின் பண்ணையைச் சேர்ந்த தோட்டங்கள் தான். இந்தத் தோட்டங்களொன்றில் இடையபுரம் ஜமீந்தார் வசிக்கும் பங்களா வொன்று கட்டியிருந்தார். நிற்க

இப்போது சொல்லப்பட்ட தோட்டங்களை மேற் பார்வை பார்க்கும் பிச்சுவையன் என்கிற ஒரு வட தேசத்துப் பிராமணன் ஜமீந்தாருடைய உத்தரவின்பே ரில் மேற்படி பங்களாவில் குடியிருந்துவந்தான். அவ னும் அந்தக் கிணற்றில் தண்ணீரெடுக்க வேண்டியி ருந்தபடியால் இது வரையும் வழக்கமாய்த் தண் ணீர் எடுத்துக்கொண்டு வந்த பள்ளர்களை இந்தக் கிண ற்றைத் தொடப்படாதென்று தடுத்தான். ஆனால் பள்ளர்கள் இவன் வார்த்தையை அலட்சியஞ்செய்து வழக் கம்போலவே தண்ணீரெடுத்துக்கொண்டு வந்தார்கள். அத னால் கோபங்கொண்டு மேற்படி பிச்சுவையனும் அவன் பெ ண்சாதியும் கோனேரியப்பனிடம் போய் முறையிட் டார்கள். ஜமீந்தார் நியாயத்தையும் வழக்கத்தையும் கவ னியாமல் தனது சேவகர்களை யனுப்பி மேற்படி பள்ளர்க ளைக் கிணற்றுக்கு வரவொட்டாமல் ஏற்பாடு செய்தார். பள்ளர்களோ, பெரிய வீட்டுக் காளிங்கராய பிள்ளையிடம் வந்து "சுவாமி! நாங்கள் இங்கே குடியிருக்கலா வேண் டாமா?" என்று முறையிட்டு நடந்த வர்த்தமானங்களைச் சொல்லிக் கூவியழுதார்கள்.

இதையெல்லாம் கேட்ட காளிங்கராயபிள்ளை "நல்லது, நீங்கள் வழக்கம்போலவே தண்ணீரெடுங்கள்; சர்க்கார் கிண ற்றில் தண்ணீரெடுப்பதற்கு ஜமீந்தார் என்ன அன்ஞுவி? யாராவது தடுத்தால் அக்கரையில்லை யென்று எடுங்கள். மீறிக்கலகஞ் செய்தாலும் விடவேண்டாம். எல்லாம் நா னிருக்கிறேன் பயப்படவேண்டாம்" என்று சொல்லியனு ப்பினார்.

பள்ளர்கள்:—"நயினார் அவ்வளவு சொன்னால்போதும். இனி என்ன வந்தாலும் அடிமைகள் பார்த்துக்கொள்வோம்" என்று சொல்லிவிட்டுத் தண்ணீர் எடுக்கப் போனார்கள். ஜமீன் சேவகர்கள் தடுத்தார்கள். அடிபிடிக்கலகம் உண்டாய்விட்டது. பள்ளர்கள் மண்வெட்டிகளாலும் தண்ணீர்க்காவிறாலும் ஷெ சேவகர்களையும் பிச்சையயனையும் அடித்துத்துரத்திவிட்டு வந்துவிட்டார்கள். உடனே சேவகர்களும், பிராமணனும், அவன் மனைவியும் போய் ஜமீந்தாரிடம் கூச்சல்போட்டு காளிங்கராயபிள்ளையைப்பற்றிக் கோள்மூட்டினார்கள். நிர்மூடனான ஜமீந்தார் தனதுபரிவாரங்களுடன் புறப்பட்டுப் பரமக்குடி வந்துசேர்ந்து பழமைக் கிழவன் காளிங்கராயபிள்ளையை மெத்த அவசரமாயும், கோபமாயும் கூப்பிட்டனுப்பினார். காளிங்கராயபிள்ளையும் தனக்கெஜமானாகிய ஜமீந்தாரென்ற மரியாதையால் உத்தரவுப்படி வந்து ஆஜரானார். உடனே ஜமீந்தார்

கோனேரியப்பன் — "என்னடா, ஐயா—நான் சேவகர்களை அனுப்புகிறதாவது 'நீ பார்த்தால் இம்மாத்திரம்' என்ன—பள்ளப்பயல்களைவிட்டுக் கலகஞ் செய்கிறதாவது; ஆமடா பயலே?" என்று வாயில்வந்தபடி பேசினார்.

இதற்குள் சும்மாவிராமல் கோனேரியப்பன் கிட்ட இருக்கிறவர் என்ற தைரியத்தால் அந்த ஏழைப் பிராமணன், "ஆமடா மகாராஜாவுடைய உத்தரவென்று தெரியாமல், பள்ளப்பயலைவிட்டு என்னை அடிக்கச் சொன்னாயே, ஆமடா?" என்று துடுக்காய்ச்சொன்னான்.

இதைக்கேட்கவே காளிங்கராயபிள்ளைக்குக் கோபம வந்துவிட்டது. அதைத்தான் இப்படி அப்படி என்று சொல்லமுடியாது. "அடே, சின்னப்பயலே, நீ ஜமீந்தாரென்றால் உன் மட்டில்தானே; இருக்கிறவர்களையும் எட்டியடிக்கிறாய்? இந்தப்பிராமணன் பேச்சைக்கேட்டுக்கொண்டு கொஞ்சமும் பயப்படாமல், நெஞ்சுதைரியத்தோடு, என்னடா சொன்னாய்? என்னதுபத்திரம். உன் ஜாதிக் குணத்தைக் காட்டிவிட்டாயே. உன்னையும் உன் ஜமீனையும் கரிக்கோட்டையாக்குகிறேன். பத்திரமாயிரு. உன் நெஞ்சுக்கொழுப்பை வளர்த்துவிடுகிறேன். நான் யாரென்று நினைத்தாய்?" என்று சொல்லி விட்டு வெளியே புறப்பட்டுவிட்டார்.

கோனேரி மூச்சப்பேச்சுக்காட்டவில்லை. கூடநின்ற சேவகரும் வேலையாட்களும் ஓட்டம் பிடித்தார்கள். ஊரெங்கும் கொல்லென்று சிரித்துக்கைதட்டினார்கள். இந்தப்பிரஸ்தாபம் எங்கும் பரவி விட்டது. உடனே கோனேரியப்பன் பழமலைக்கிராமத்திலிருக்கப் பயப்பட்டு, அவமானத்துக்கஞ்சி இரவே புறப்பட்டு இடையபுரம் போய்ச்சேர்ந்தார். போனதும் தனது சொந்த தாயாதியாகிய முத்துக்குமாருபிள்ளையை வரவழைத்து அவரிடம்தான் பழமலைக்குப்போனதையும், கர்ணன் காளிங்கராயபிள்ளையை வருத்தி விசாரணை செய்ததையும், அவன் தன்னைக் கைநீட்டியதையும்சொல்லியவருத்தப்பட்டு "ஐயமுத்துக்குமாருபிள்ளை! இந்தப்பயலுக்கு எவ்வளவு துணிவும் அக்கிரமு மிருக்கிறது பார்த்தீரா? உடனே கிரிமினல்தரப்பில் பிரியாது கொடுக்கவேண்டும். அவன் நம்முடைய அரண்மனைக்குக்

கொடுக்கவேண்டிய பாக்கிக்காக சிவிலில் நம்பரும் போடவேண்டும்'' என்று மிகவும் ஆத்திரத்தோடும் மனவெப்பத்தோடும் சொன்னார். இதைக்கேட்ட

முத்துக்குமாருபிள்ளை —''மகாராஜா! சமுகத்திலே உத்தரவு செய்கிறது சரிதான். ஆனாலும் இன்னான் இன்னபடி ஏசினான் என்று கோர்ட்டில் பிரியாது கொடுப்பது சமுகத்துக்குப் பெரிய அவமானமல்லவா? ஆகையால் அப்படிச் செய்யப்படாது. வேறே ஏதேனும் ஒரு வழியால் காளிங்கராயபிள்ளையின் அக்கிரமத்தை அடக்கலாம்'' என்று சொன்னார். இதைக்கேட்ட ஜமீந்தார், "ஆமா, அதுவும் நியாயம்தான். அப்படியானால் அதற்கு வேண்டிய ஏற்பாடுசெய்யும்'' என்றனுப்பிவிட்டுத் தன்னுடைய அடைப்பக்காரன் சேந்தூரப்பன் என்பவனோடு வெகுநேரம் அந்தரங்கமாய்ப் பேசிக்கொண்டிருந்து அவனுடைய போதனையின்படி பிச்சுவையனையும், கலகத்திற் சம்பந்தப்பட்ட சேவகர்களையும் கூப்பிட்டு மேற்படி காளிங்கராயபிள்ளையின் பேரிலும், பள்ளர்கள்பேரிலும், மேஜிஸ்திரேட்டிடம் பிரியாது கொடுக்கும்படி சொன்னார். அவ்வாறே பிரியாதும் கொடுக்கப்பட்டது. இந்தச் சங்கதியையறிந்த காளிங்கராயபிள்ளை தானும் இடையபுரம் ஜமீந்தார்பேரிற் பிரியாது கொடுத்தார். கேஸ்கள் இன்னும் விசாரணைக்கு வரவில்லை.

இதற்குள், சில சேவகர்களாலும் மேற்படி பிராமணனாலும் துர்ப்புத்தி போதிக்கப்பட்ட கோனேரியப்பன் அதனோடு சும்மாவிராமல் மறுபடியும் ஐந்நூறு மறவர்களையும், தனது பரிவாரங்களையும் திரட்டிவிட்டு மேற்படி கிணற்றில்

தண்ணீரெடுக்கும் பள்ளர்களை அடிக்கும்படி யனுப்பினர். ஆனால் காளிங்கராயபிள்ளையும் யாதொரு ஆதரவுமின்றித் தவிக்கிற பள்ளர்மீது கொண்ட தயவினாலும் அன்பினாலும் தானும் பக்கத்தூர்களிலுள்ள பள்ளர்களை யெல்லாம் திரட்டி அனுப்பினர். இப்படிச் செய்யவே ஒருநாள் கிணற்றண்டை ஒரு பெரிய கலகம் விளைந்தது. ஜமீந்தார் பக்கத்தில் முப்பது முப்பத்தைந்து பேரும் பள்ளர் பக்கத்தில் 10, 12 பேரும் கொலையுண்டனர். இதைத் தெரிந்த கவர்ண்மெண்டார், இதற்குச் சம்பந்தப்பட்ட பள்ளர்கள்பேரிலும் காளிங்கராயபிள்ளை பேரிலும் வாரண்டு பிறப்பித்தார்கள். இவ்வாறே இடையபுரம் கோனேறியப்பநாயக்கர் பேரிலும் வாரண்டு பிறப்பிக்கவேண்டியது நியாயமானாலும் போலீசார் லஞ்சம் வாங்கிக்கொண்டு ஜமீந்தாரை விலக்கிவிட்டார்கள்.

காளிங்கராயபிள்ளையும் இப்படியே லஞ்சம் கொடுத்து விலகிக்கொள்ள முடியும். அதற்குப் போதிய பணமுமுண்டு. ஆனாலும் அவர் "போலீஸாருக்கு லஞ்சம் கொடுத்து விலகுகிறதா?" என்று சொல்லிவிட்டுத் தன் மனைவியையும் பிள்ளைகளையும், மாமனார் வீட்டுக்கனுப்பி விட்டுத் தானும், தனக்கு அந்தரங்கமான வேறிரண்டு வேலைக்காரர்களும், அநீதியாய்க் கலகத்தில் சம்பந்தப்படுத்தி வாரண்டிற் சேர்க்கப்பட்ட குற்றாலத்தேவர் என்பவரும் வாரண்டிற் சம்பந்தப்பட்ட சுமார் 200 பள்ளர்களுமாய்ப்புறப்பட்டுப் பழமலைக்கு ஏழுமைல் தூரத்திலுள்ள ஒருசிறைக்காட்டில் போயிருந்துகொண்டார்கள். இரவு பத்துமணிக்குச் சிறைக்காட்டைவிட்டுப் புறப்பட்டு ஆலவாய்க்குச் சமீபத்

கிறுவன் சிந்தாமணியென்னுங் கொழுக்குருவுக்கு அவ்வூ ரிலுள்ள தனது சம்பந்தமுறைக்குவாகிய ஆறுமுகம்பிள்ளை வீட்டில், இராப்போசனம் செய்துவிட்டுப் பகற்சாப்பாட் டுக்கு கட்டுசோறும் கட்டிக்கொண்டு இராவே புறப்பட் டுப் பழையபடி சிறைக்காட்டுக்கு வந்துவிடுவது வழக்கம். இவ்வாறு சுமார் இருபத்தைந்து நாட்களாய் நடந்து வந் தது. கடைசியாகவொருநாளிரவு மேற்படி காளிங்கராய பிள்ளை வழக்கப்பிரகாரம் தனது சைனியங்களோடு சிந்தா மணிக்கு வாத சாப்பிட்டுவிட்டுச் சிறைக்காட்டுக்குப் புறப் பட்டபொழுது அவரும் மேற்படி ஆறுமுகம்பிள்ளையும் மேற்படி வீட்டு வழக்கைப்பற்றியும் இடையபுரம் கோ னேரிப்பிள்ளைப் பற்றியும் கொஞ்சநேரம் பேசிக்கொ ண்டு போனார்கள். அப்பொழுது,

ஆறுமுகம்பிள்ளை:—“அண்ணாச்சி! இன்றைக்கு ஒரு விசேஷம் தெரியுமா? கோபாலபுரம் சேர்மன்பிள்ளை மக னிருக்கிறானல்லவா வெள்ளையப்பன். அவனுக்கு மேடைப் பிள்ளை மகளை விவாகம் செய்யப்போகிறதாய்த் தெரியு மல்லவா?”

காளிங்கராயபிள்ளை:—“ஆமா, என்னவோ ஒரு பிரஸ் தாபம் உண்டு. நன்றாய்த் தெரியாது.”

ஆறு:—“தெரியாதா? சங்கதி ஒன்றுமே தெரியாதோ?”

காளி:—“என்ன சங்கதி? எனக்குத் தெரியாதே.”

ஆறு:—“அது ஒரு பெரிய கேலியாய்ப் போய்விட்டது திருமங்கலம் பள்ளிக்கூடத்தில் ஒரு கொஞ்சவயதுப்பிள்ளை

பாண்டான் வாத்தியாரா யிருக்கிருனும். அவன் மேடைப் பிள்ளை மகளைச் சிறை நடத்திக்கொண்டுவந்து ஆலவாய்ச் சப்ஜட்ஜ் சத்தியசீலராயரவர்கள் வீட்டில் இன்று காலமே விவாகமாய் விட்டதாய்?"

காளி:—"அப்படியா? சப்ஜட்ஜ் வீட்டில் நடக்கவேண்டிய காரணமென்ன! அவர்களும் அதிற் சம்பந்தப்பட்டிருப்பார்களோ?

ஆறு:—"அதற்குத் தடையா! அப்படிக்கில்லாமல் அவர்கள் வீட்டில் நடக்குமா? இங்கே வந்திருந்தாரே ஒரு சாமியார் அவரைத் தெரியுமா? அவருடைய பேர் ஞாபகமில்லை."

காளி:—"ஓ கோ பக்காச்சாமிகளா! ஆமா அவாளுக்கென்ன?

ஆறு:—அவரும் இதில் நிரம்ப வேலை செய்ததாய்க் கேள்வி."

காளி:—" அப்படியானல் சேர்மேன் பிள்ளை இதற்கு ஒன்றும் செய்யவில்லையா?"

ஆறு:—செய்கிறதென்ன? காரியமுடிந்தபிறகு என்னசெய்யலாம்? கல்யாணத்திற்கென்று இடையபுரம் கோனேறியப்பனும் கூட வந்திருந்தானும். நிரம்ப வேடிக்கை. எல்லாம் நாளைக்கு விசாரித்துச் சொல்லுகிறேன். நிரம்ப நேரமாய் விட்டது. நீங்கள் போய் விட்டு வாருங்கள்.

பதினோராம் அத்தியாயம்

சீராளன் மீட்சி.

இவ்விதமாய்ச் சொல்லி வழியனுப்பிவிட்டு ஆறுமுகம் பிள்ளை வீட்டுக்குத் திரும்பி விட்டார். காளிங்கராயபிள்ளையும் மற்ற ஜனங்களும் சிறைக்காட்டை நோக்கிச் சென்றார்கள். பேசிக்கொண்டு வந்து விட்டபடியால் மணி 3, 4 ஆய் விட்டதென்று எல்லாரும் மிகவும் விரைவாய் நடந்தார்கள். இப்படி இவர்கள் சிறைக்காட்டுக்குப் போகும் வழியில், ஆலவாயிலிருந்து கோபாலபுரத்துக்குச்செல்லும் லொக்கல் பண்டு ரோட்டைத்தாண்டித்தான் போகவேண்டும். ஆகையால், இவர்கள் மேற்படி ரோட்டுக்குச் சமீபமாய்ப்போகும் பொழுது 10, 30 பேர்கள் ரோட்டுவழியாய் மட மட வென்றோடினார்கள். உடனே எல்லாரும் "இது யாராயிருக்கவேண்டும், ஒரு வேளை கள்ளப்பயல்களா யிருக்கவேண்டும்" என்று சம்சயித்துக்கொண்டு ரோட்டின் மேலேறினார்கள். அந்தச்சமயத்தில், 10, 15 பேர்களுக்கு நடுவில் மூசு மூசென்று இளைத்துக்கொண்டு ஒரு பெரிய மூட்டையை காலேந்து போய்த் தூக்கித்தலையில் வைத்துக்கொண்டு ஓடி வந்தார்கள். இதைக் கண்ட,

காளி:—(கூட வந்த பள்ளர்களைப்பார்த்து) "அடே! இவர்களை விடாதே பிடி" என்றார்.

உடனே பள்ளர்கள் குபீரென்று அந்த ஆட்களின்மேல் விழுந்தடித்து நிறுத்திக்கொள்ளவே கொஞ்சம அடிபிடி நடந்தது. ஆனால் பள்ளர்கள் பெருங்கூட்டமானதால்

ஓடி வருகிற ஒவ்வொருவனையும் ஒரு 'கல்தா' கொடுத்து மூச்சுவிடாமல் நிறுத்திக்கொண்டார்கள். உடனே காளிங்கராயபிள்ளை கூட்டத்துக்குள் வந்து "அடே பயல்களே எங்கே இருந்து என்னத்தைக் களவாண்டு வருகிறீர்கள்! ஆமடா சொல்லடா" என்று பயமுறுத்திக்கொண்டு தன் கையிலிருந்த பிரம்பினால் ஒருவனை முதுகில் பலமாய் ஒரு பூசைகொடுத்தார். உடனே "சாமி, சாமி, நானல்ல, நானல்லவென்று கதறினான். அங்கே நின்ற பயல்களெல்லாரும், இவர் காளிங்கராயபிள்ளையென்று சத்தத்தினால் அறிந்து பயந்து விட்டார்கள். உடனே அவர்களில் இரண்டுபேர் குபீரென்று குதித்து ஓடினார்கள். இதைக் கண்ட உடனே, காளிங்கராயபிள்ளை. "அடே இருளா, கருப்பா அந்த இரண்டு பயல்களையும் விடாதே, பிடி, பிடி" என்றார். பள்ளர்களும் ஓடிப்போய் அவர்களிரண்டு பேரையும் தொடர்ந்தோடிப் பிடித்துக்கொண்டுவந்து காளிங்கராயபிள்ளை முன்பு நிறுத்தினார்கள். உடனே அவர் அந்த இருவரையும் பார்த்து "பயல்களா உள்ளதைச்சொல்லுகிறீர்களா? உதைக்கவேண்டுமா? என்னடா பயலே, சொல்லுபயலே" என்று பிரம்பினால் முதுகிலும் விலாவிலும் காலிலும் முகத்திலும் தலையிலும் மண்டையிலும் 'பளிச் பளிச்' என்று பலமாய் அடித்தார். அடி பொறுக்க முடியாமல் "அப்பாடே, அப்பாடே, சாமி, சாமி, சொல்லுகிறேன், சொல்லுகிறேன் சாமி, இதோ சொல்றேன் சாமி' என்று கால்கை நடுங்கிக்கொண்டு கூவினான். உடனே காளிங்கராய பிள்ளையும், "சொல்லுங்கடா, அதென்னடா பெரிய மூட்டை? மூட்டையை அவிழடா, சீக்கிரம், சீக்கிரம், அவிழடா" என்று

அழல்செய்தார். இவருடைய பயங்கரமான சப்தத்தைக் கேட்ட கள்ளர்கள் "இதோ அவிழ்க்கிறான்; இதோ அவிழ்க்கிறான்" என்று சொல்லிக்கொண்டு தாங்கள் சுமந்து கொண்டோடிவந்த சீண்டுமூட்டையை அவிழ்த்து கலைத்து விட்டுக்கொண்டு நின்றார்கள். உடனே காளிங்கராயபிள்ளையும் அதைத்திறந்து தடவிப்பார்க்கவும் குபீரென்று பயந்து "அடடா அப்பா! இது பிரேதமல்லவா; என்ன அநியாயம்! அடே சண்டாளப்பாவிகளே! யாரையடாகொன்று தூக்கிக்கொண்டு போகிறீர்கள்" என்று கூவி அடக்கக் கோபங்கொண்டு மீசை படபடவென்று அடிக்க, கண்கள் சிவக்க, பக்கத்தில் நின்ற பள்ளனிடமிருந்த ஒரு பெரிய தடிக்கம்பை வாங்கி அந்தக்கள்ளர்களைத் தன் முழுபலத்தோடு அடித்தார். அடிக்கவே, அவர்களுள் முதன்மையான இருவர், "ஐயா எங்களை அடிக்கவேண்டாம்; உள்ளதைச் சொல்லி விடுகிறோம், எங்களை விட்டு விடவேண்டும்" என்றார்கள். உடனே

காளி:—"அடே, உள்ளதைச் சொல்லவேண்டும். உங்களை லகுவில் விடமாட்டேன், உங்களுக்கேது? நீங்கள் யார்? இப்பொழுது இதோ கொல்லப்பட்டுக்கிடக்கும் ஆள் யார்? சொல்லு உள்ளதை." என்றார். இதற்குள்,

ஒரு பள்ளன்:—"சுவாமி, தெரிந்துகொண்டது ஆள். இவர்தான் வடக்கே ஆண்டானண்டையிருக்கும் பிள்ளைவாளுஞ்சேர்வை, இன்று இவர்தான் பள்ளிநூர் சின்ன நயினாருடைய தம்பி" என்றான். உடனே,

பிள்ளை:—'யாரடா யாரடா?' என்றார்.

பள்ளன் :—"அதுதான் சுவாமி, கோவலையப்ப வெள்ளையப்ப பிள்ளையோட சின்னம்மை மகன். உங்கள் ஊரார் கப்பபிள்ளை தெரியாதா?" என்று சொன்னான்.

காளிங்கராயபிள்ளை முன்னிலும் அதிக கோபமுண்டாய் அவர்களிருவரையும் பிடித்துக் கட்டும்படி உத்தரவு செய்து கப்பபிள்ளையைப் பார்த்து, "அடே, உனக்கு இன்னம் புத்தி வரவில்லையா? எங்கேயாவது களவுக்குப் போனாயா, அல்லது கொலை செய்யப் போனாயா? இதோ கொலையுண்டு கிடக்கிற ஆள் யார்?" என்று கேட்கவும் அவன் ஒன்றும் பேசாமல் திரும்பத் தனது மைத்துனனைப் பார்த்து "அடே, சேர்வை, நீ சொல், பட்டபாடு தெரியுமா? பத்திரம். சொல்லு சீக்கிரம்" என்னவும்,

சின்னணைஞ்சேர்வை:—"ஐயா! இன்றைக் காலமே எங்களூர் கோட்டையபிள்ளை மகளுக்கும், ஒரு வைத்தியருக்கும் ஆலவாய் ராயர் எஜமான் வீட்டில் கல்யாணமாம். அந்தப் பெண்ணை பள்ளியூர் ஜமீன்தார் பிள்ளைக்குப் பேசினதாம். அதன் பேரில் எங்களையெல்லாம் போய் ராயர் வீட்டைக் கொள்ளையடித்து அந்த மாப்பிள்ளை பெண்ணிரண்டு பேரையும் தூக்கிக்கொண்டு வரும்படி எங்க ராஜாவும் வெள்ளையப்ப பிள்ளையும் அனுப்பினார்கள். நாங்கள் மாட்டோமென்று சொன்னோம். பின்னையும் கட்டாயம் போகவேண்டுமென்று உத்தரவு செய்தார்கள். மகாராசா சொல்லைத் தட்டாமல் வந்து கொள்ளையடித்தோம்" என்றான்.

காளி:—(ஆச்சரியப்பட்டு) "அப்படியா, சரி சரி பயங்கள் அங்கேயா போய்விட்டு வருகிறீர்கள். இதோ கொன்று கிடக்கிற ஆள் யாரடா?" என்றார்.

சேர்வை:—ஐயா. அவர் சாகவில்லை. சும்மா மயக்கமாய்க் கிடக்கிறார்; அவர்தான் அந்த மாப்பிள்ளை' என்று சொன்னவுடன்,

காளி:—"ஐயோ, ஐயோ, கல்யாணமாப்பிள்ளையா? அட பாவிப் பயல்களே, உங்களுக்கென்ன கதியடா கிடைக்கும்" என்று சொல்லிப் பரிதபித்துக்கொண்டு அந்த ஆண்டை (சீராளனண்டை) போய், முகத்திலும், காலிலும் வேஷ்டியினாற் கட்டப்பட்டிருக்கும் கட்டுகளைத் தன் கையினால் அவிழ்த்து 'ஐயா, ஐயா,' என்று காதுக்குள்ளே சொல்லிக் கூப்பிட்டார்."

இதைக்கேட்ட சீராளன் பதிற்சொல்ல முடியாமல் 'உம், உம்' என்று சொல்லிக்கொண்டு மயக்கமாய்க் கிடந்தான். இதையறிந்த காளிங்கராயபிள்ளை தனது ஆட்களைக் கொண்டு அந்தச் சீராளனை மெல்லத் தூக்கிக்கொண்டு வரும்படி உத்தரவு செய்துவிட்டு கூத்தப்பனையும் சுப்பப்பிள்ளையும், சின்னணைந்சேர்வையும் வேறுவகையிலகப்பட்ட தமக்குத் தெரிந்த பிரபல துஷ்டர்களையும் முன் கட்டுப் பின் கட்டாய்க் கட்டி ஒருவனுடைய குடுமியோடு ஒருவனுடைய குடுமியைச் சேர்த்து முடிந்து அவர்களை முன்னே தள்ளிக் கொண்டு தான் பின்னே தொடர்ந்து சிறைக் காட்டை நோக்கிப்புறப்பட்டார்.

இவர் அந்த போய்ச்சேரவும் பலபல வென்று விடிந்தது; விடியவும் தான் பிடித்துக் கொண்டுவந்த சுப்பப் பிள்ளை வகையறா துஷ்டர்களை ஒவ்வொரு மரத்தோடு சேர்த்துக் கட்டி வைத்துவிட்டு, சீராளனைத்தான் வசிக்கும் ஒரு குடிசைக்குள் கொண்டுபோய் ஒரு படுக்கையில்

போட்டு மூடியிருந்த முக்காட்டைத் திறந்து பார்க்கவும் அவன் சரீரமும் ஆடையும் இரத்த மயமா யிருந்தது. கண்ணை மூடி மூடி விழித்து 'அம்மா அம்மா' என்றும் பொற்றொடி பொற்றொடி என்றும் முணங்கினான். காளிங்கராயபிள்ளை அடங்கா விசனத்தோடு காரியமின்னதென்று தெரியாமல் சீராளனைத் தட்டி, ஐயா, ஐயா,' என்று கூப்பிடவே சீராளன் கண்ணை விழித்து 'அம்மா, அம்மா, பொற்றொடி எங்கே? பொற்றொடி எங்கே? என்று சொல்லிக்கொண்டு எழுந்திருக்க வேண்டுமென்று முயன்றான். "தண்ணீர் வேண்டும், தண்ணீர் வேண்டும்" என்று அலறினான். இதற்குள், பிள்ளையும் ஜலத்தை வாயில் ஊற்றிக் கண்களையும், முகத்தையும் துடைத்தார்.

இதற்குள், கொஞ்சநேரத்தில் கிழக்கு வெளுத்தது. படுக்கையிலிருக்கும் சீராளனைக் காளிங்கராயபிள்ளை நன்றாய் உற்றுப்பார்த்து அவன் சரீரத்தின் மென்மையையும், முகவசீகரத்தையும் கண்டு, மனமிரங்கி, அவன் தலையை மெல்லத்தூக்கித் தன்மார்பில் சாற்றிக்கொண்டு, "ஐயா, உமக்கு என்ன வேண்டும், நீர் யார், சொல்லும் பயப்படவேண்டாம்" என்று சொல்ல.

சீராளன்:—"ஐயா, நான்தான் சீராளன், பொற்றொடியைக்காணோமே, அவளெங்கே' என்று வாய் குளறிக்குளறிச்சொல்லவும்.

பிள்ளை :—பொற்றொடியென்பது கல்யாணப் பெண்ணாகிய மேடைப்பிள்ளை மகளுடைய பெயர் என்று ஊகித்துக்கொண்டு) 'ஐயா, பொற்றொடியென்பது யார்? நீர் யார்? சும்மாசொல்லும்' என்று மறுபடியும் கேட்டார்.

சீராளன்:— (கொஞ்சம் மயக்கம் தெளிந்து நீங்களார்? நான் எங்கே யிருக்கிறேன்? இங்கே யெப்படி வந்தேன்? ஐயோ, கீழேவிழுந்துவிட்டேனே! பயமா யிருக்கிறதே! பொற்றொடியைப் பார்க்கவேண்டுமே! சாமி யெங்கே!" என்று கூவிக் கொண்டழுதான். காளிங்கராயபிள்ளை:—"ஐயா, நடந்ததைச் சொல்லும்" என்று மறுபடியும்கேட்க, சீராளனும், தனக்கு விவாகம் நடந்ததையும் கொள்ளை நடந்ததையும், தீப் பிடித்ததையும், அடுத்தவீட்டுக்குப் பலகைவழியாய்ப் போனதையும், தவறி விழுந்ததையும் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சொல்லிப் பின்பு நடந்த சங்கதி ஒன்றும் தனக்குத் தெரியா தென்று சொல்லி முடித்தான்.

உடனே காளிங்கராயபிள்ளை சந்தேகம் தெளிந்து தான் சிந்தாமணியிலிருந்து வந்ததையும், வரும்பொழுது கள்ளர்களைக் கண்டதையும் சொல்லி, சீராளனுடைய சரீரத்தைத் தடவிப்பார்த்தார். பலமானகாயம் யாதொன்றுமில்லை; வலதுபுறத்தில் ஒருசின்னக்காயமும், மணிக்கை கொஞ்சம் புறண்டுமிருந்தது. அதற்குக் கைப்பக்குவமாகச்சிறிது வைத்தியம் செய்யவே நாலு ஐந்து தினத்திற் குணப்படக்கூடிய விதமாயிருந்தது. சீராளன் தன்வரலாற்றையும் தான் பொற்றொடியை விவாகஞ்செய்யவேண்டிவந்த காரணத்தையும் காளிங்கராயபிள்ளைக்கு விரிவாய் எடுத்துச் சொன்னான். பிள்ளையும் தாம் இன்னாரென்பதையும், தனக்கும் இடையபுரம் கோனேறிக்கு முண்டாகிய கலகங்களையும், பின்பு தன்மீது வந்த கேஸ்களையும் சொன்னார். இவ்விதமாக இருவரும் நல்ல சினேகிதர்களாகிவிட்டார்கள். ஒரு சமயத்தில்,

சீராளன்:—"நல்லது, நீங்கள் இடையில் வந்து என்னைக் காப்பாற்றாதிருக்கும் பக்ஷத்தில் என் உயிர் போயிருக்குமென்றே எண்ணுகிறேன். நான் பலகையிலிருந்துகீழே விழுந்ததுமட்டும் ஞாபகமிருக்கிறதே தவிரப் பின்புஎன்னை இந்தப் பாவிகள் தூக்கிக்கொண் டோடியதும், தாங்கள் ரோட்டில் வந்து அவர்களை வழிமறித்ததும், என்னை இந்தச் சிறைக்காட்டுக்குக் கொண்டு வந்ததும் ஒன்றும் ஞாபகமே யில்லை. என்னவோ நீங்கள் தெய்வம்போலவந்து என்னுயிரைக் காப்பாற்றினீர்கள். இனியும் நீங்களே என்னைக் காப்பாற்றிப் பொற்றொடி யண்டை கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். இதுவரை பொற்றொடி கதி யெப்படியாயிற்றோ தெரியவில்லை. ஐயோ அவளென்மீது காதல்கொண்டதும் போதும்: பட்டபாடும் போதும். இருந் திருந்து அவளென்மீதா காதல் கொள்ள வேண்டும். என்னிலும் பெரிய புத்திமான்களும், கல்விமான்களும், தனவந்தர்களும் அவளை விரும்பிக் காத்திருக்க நாற்பது காசுக்குப் பள்ளிக்கூடத்தைக் காத்திருக்கும் பரம தரித்திரனாகிய என்னையா அவள் விரும்பவேண்டும்? நானா அவளுக்குத் தக்க நாயகன்! போதும் போதும்! ஈசனே, ஒன்றுமறியாச் சிறுபெண்ணை இவ்வாறு வருத்தி வாட்டுதல் உனக்குத் தகுமா? தெய்வமே, நீ உலகத்தில் இல்லாத அக்கிருத்தியங்களைச்செய்யும் கெட்ட பெண்களுக்கெல்லாம் நல்ல வாழ்வையும், புருஷரையுங்கொடுத்து மகிழ்வித்து, நீயும் மகிழ்ந்தாயே. ஒருபாவமுமறியாதவளும், கற்பில் சந்திரமதியினும் சிறந்தவளும், கல்வியில் ஔவைக்கும் பெரியவளுமாகிய எனது அருமைப் பொற்றொடிக்கு—என் கண்ணுட்டிக்கு—என் கண்மணிக்கு, என்னைக்கனப்படுத்தி மகிழ்

விக்கவந்த காதலியாகிய பொற்கொடிக்கு இத்தனை துக்கமும், இத்தனை கஷ்டமும், இத்தனை அபாயமும் வரும்படி பார்த்திருந்தாயே! ஏ தெய்வமே! இத்தனையும் வருமென்று எனக்குத் தெரியாதே! ஈசா, இதுவரைதான் பொற்கொடி உயிர் வைத்திருக்கிறாளோ? இறந்தாளோ? என்னைப்பிரிந்த தன்பின் என்னை எங்கெல்லாம் தேடியலைகிறாளோ! ஐயா பெரியபிள்ளையவாளே! நான் இங்கே இருக்கிறேன் என்று அவளுக்குத் தெரியவேண்டாமா? ஆலவாய்க்குப் போகும் வழியும் இதுதானென்று தெரியாதே! தெரிந்தாலும் நடந்துபோகச் சக்தியில்லையே! ஐயா, நீங்கள்தானெனக்குத் தகப்பன், நீங்கள்தானெனக்குத் தெய்வம், நீங்கள்தான் எனக்கு உயிர் கொடுத்துக்காத்த உத்தமன்; இனியும் நீங்களே என்னைப் பொற்கொடியிடம் கொண்டு சேர்த்துவிடவேண்டும்; இந்த நன்றியை ஒருபொழுதும் மறக்கமாட்டேன்" என்றும், "பொற்கொடி! பொற்கொடி!" என்று பெருமூச் செறிந்துகொண்டு புலம்பினான்; மயங்கினான்; தியங்கினான். இதைக்கண்ட பரமதயாளுவாகிய:

சாலிங்கராய பிள்ளை "ஐயா, பயப்பட வேண்டாம். கவலைவேண்டாம். இனி உங்களுக்கு யாதொரு குறையும் வராது; நானிருக்கிறேன்' நீங்கள் தனியாய் ஆலவாய்க்குப் போகவும் படாது. உங்களால் நடக்கவும் முடியாது. நான் சொல்லுவதைக் கேளுங்கள். நான் தினந்தோறும் இரவில் சிந்தாமணிக்குப்போய்விட்டு வருகிறது வழக்கம். இனிமேல் நான் உங்களுக்குத் துணையாய் இருக்கவேண்டியிருப்பதால், இன்றிரவு சிந்தாமணியிலிருக்கும் ஆறுமுகம் பிள்ளைக்கு ஒரு ஆள் அனுப்பி வேண்டிய எற்பாடு செய்கி

றேன். நாளைவரை பொறுங்கள்" என்று சமாதானஞ் செய்துவிட்டுப் பொழுதடைந்தவுடனே, தன்னிடமுள்ள பள்ளர்களில் பாதிப்பேரை வைத்துக்கொண்டு மற்றபாதிப் பேரையும், ஒரு தவசிப்பிள்ளையையும் குற்றாலத்தேவரையும் அழைத்து அவர்களிடம் ஒரு ஓலைச் சீட்டெழுதிக் கொடுத்து சிந்தாமணி ஆறுமுகம்பிள்ளையிடம் கொடுக்கும்படி அனுப்பினார்.

அவர்களும் உடனே புறப்பட்டு சிந்தாமணி வந்து சேர்ந்து ஆறுமுகம்பிள்ளையிடம் சீட்டைக் கொடுத்தார்கள். இது கொள்ளை நடந்த மறுதினம் இரவானகையால், இதற்குள் ஆறுமுகம்பிள்ளை ஆலவாயில் நடந்த விசேஷமெல்லாவற்றையும் நன்றாய்க்கேள்விப்பட்டிருந்தார். அதற்கிசைப்படியே சீட்டிலிருந்த சமாசாரமும் சரியாயிருந்தபடியால், அவர் உடனே, காரியமிப்படி என்று தெளிவாயறிந்துகொண்டு, 4, 5, ஆளுக்குப் போதுமான சாதமும், மூன்று மூட்டை அரிசியும், அதற்குவேண்டிய சாமான்களும் வாங்கி அவற்றோடு வீட்டிலிருந்து சில சமையல் பாத்திரங்களையும் சேர்த்துவைத்து மூட்டையாய்க்கட்டிச் சில பள்ளர்கள் தலையின்மேலேற்றி அனுப்பிவிட்டுத் தவசிப்பிள்ளைவசம் ஒரு பதிற்சீட்டுமெழுதிக்கொடுத்தனுப்பினார். ஆனால் குற்றாலத்தேவரை மட்டும், ஆறுமுகம்பிள்ளை தன் வீட்டு மச்சில இரகசியமாய் இருந்து கொள்ளும்படி சொல்லி வெளிக்குத் தெரியாமல் வைத்துக்கொண்டார். தவசிப்பிள்ளையும் பள்ளர்களும் இரவேபுறப்பட்டு விடியற்காலம் மூன்று மணிக்கெல்லாம் பழையபடி சிறைக்காடுவந்து சேர்ந்து சாமான்களையும், சீட்டையும் காளிங்கராயபிள்ளை

யிடம் கொடுத்தார்கள். அவரும் சீட்டைப்பார்த்து, "நல்லது இனிமேல் காரியம் சரியாய்நடக்கும்" என்று சொல்லி தலையசைத்துக்கொண்டு சிராளனுக்கு வேண்டிய தேவாதல் கூறிவிட்டுக் கொண்டுவந்த அரிசி சாமான்களைச் சமையல் செய்வித்து, சிராளனும் தானும் சிறிது போஜனஞ்செய்து விட்டு பாத்தில் கட்டுண்டு கிடக்கும் சண்டாளனாகிய கூந்தற்பனையூர் சுப்பப்பிள்ளையையும், சின்னணஞ்சேர்வையையும் பார்த்து "அடே பாவிகளே நீங்களேன் பட்டினியே கிடக்கிறீர்கள்? நீங்களும் தின்று தொலையுங்கள்" என்று அவர்களிருவருக்கும் சாப்பாடுபோட்டுத் தவசிப்பிள்ளையும் சாப்பிட்டவுடன் மற்ற வேலைக்காரர்களையும், இரவு சாப்பிடாமலிருக்கும் பாதிப்பள்ளர்களையும் சாப்பிடும்படி ஏற்பாடுசெய்தார், இன்று இப்படிக்கழிந்தது. இரவில் காளிங்கராயபிள்ளை தான் வசிக்கும் குடிசையில் தமக்கும் சிராளனுக்கும் இரண்டு படுக்கை விரித்து இருவரும் படுத்துக்கொண்டபின் குடிசையைச்சுற்றிச் சில பள்ளர்களைப் படுத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்ததோடு, கட்டுண்டுகிடக்கும் சுப்பப்பிள்ளை, சின்னணஞ்சேர்வை ஆகிய இருவருக்கும் காவலாக வேறு சில பள்ளர்களைப் படுக்கும்படி உத்திரவு செய்தார்.

இவ்வாறு இரண்டு நாளாயிற்று; மூன்று நாள் கழிந்தது; நான்கு நாள் கடந்தது; ஐந்து, ஆறு, ஏழு, எட்டு நாட்களும் சென்றன. ஒன்றும் தெரியவில்லை. ஒரு சமாசாரமுமெட்டவில்லை. ஒன்பது, பத்து, பன்னிரண்டு நாட்களும் சிராளனுக்குப் பன்னிரண்டு யுகம்போலிருந்தன. "இவனுக்கு ஒரு துக்கமா? ஒரு கவலையா! மெத்தையி

இருந்து கீழ் விழுந்தமையால் அவன் மெல்லிய மேனியிலுண்டாயிருந்த காயங்களும், வேதனைகளும் ஒரு பக்கம் வாட்டுகின்றன. பொற்கொடியின் பிரிவாற்றாமையாலுண்டான சோகமொருபக்கம் வருத்துகின்றது. அவளுக்கும் என்னென்ன அபாயம் வந்ததோவென்ற கவலை மற்றொரு பக்கம் வாதிக்கின்றது. இனி அவளை எப்பொழுது காண்போமோவென்ற ஏக்கமொருபக்கம் இம்சிக்கின்றது. இதுவும் அன்றி தற்காலம் வசித்துக்கொண்டிருக்கும் வெப்ப சிறைக்காட்டில் காய்கிற வெய்யிலும் பனியும், உச்சியிலெறிக்கும் வெய்யிலும், மாலையில் வீசும் கொடுங்காற்றும், இரவில் வாட்டும் குளிரும், சீராளனுடைய துயரத்தையும், கவலையையும் மிகுதியும் வளர்த்து அதிகரிக்கச்செய்தன. குடிசையை விட்டு வெளியேவந்தால் ஒடை மரங்களும் காருரஞ்செடிகளும், கற்பாறைகளும், பன்றி நாய் முதலிய துஷ்ட மிருகங்களுமே காணப்படுமல்லாமல், சீராளனுடைய துக்கத்தைச் சிறிதேனும் தணிக்கக்கூடிய மனோரம்மியமான மரங்களும் காட்சிகளும் அந்தச் சிறைக்காட்டிற் சிறிதுமில்லை. குடிசையிலிருந்து ஒரு கால் பர்லாங்கு தூரத்தில் ஒரு சிறிய ஊற்றும் அதைச் சுற்றிலும் சிற்சில பூலாத்திச்செடிகளும் காணப்படும். ஆகவே சீராளனும், காயங்களும் நோவும் குணப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சம் நடந்துதிரிய ஆரம்பித்தவுடன், பதின்மூன்றும் நாள் மாலை 5, $5\frac{1}{2}$ மணிக்குக் காளிங்கராயபிள்ளையையும் அழைத்துக்கொண்டு அந்த ஊற்றண்டைபோய் ஒருபெரிய ஒடை மரத்தினடியிலுட்கார்ந்து அவரோடு நானாவிதமாய்ப் பேசிக்கொண்டிருந்தான்; தான் பிறந்து வளர்ந்த பழங்கதை

யை அவரிடம் சொன்னான். அவரும் தான் பிறந்து வளர்ந்த பெருங்கதையையும் தனக்கு இடையபுரம் ஜமீந்தார் கோயிலப்பப்ப நாயக்கனால் விளைந்த கஷ்ட நஷ்டங்களையும் கவலைகளையும் சொல்லிக்கொண்டு வந்தார். இப்படியே வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தபடியால், மணி ஏழு ஆய்விட்டது.

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும் பொழுது குடிசையண்டையிலிருந்து சில பேர்கள், "ஏ வயிறே" என்று கூவிக்கொண்டோடி வந்தார்கள். இதைக் கேட்ட காளிங்கராயபிள்ளை திடுமென்று பயந்து, "என்னடா, என்னடா" என்று பதில் சப்தம் கொடுத்துக்கொண்டு ராமனுக்குச் சமீபமாய் வந்து அவனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார். ராமனும் "ஐயோ, இதுவரை வந்த கஷ்டம் போதாதா! இன்னும் என்ன அபாயம் சம்பவிக்கப்போகிறதோ! உடையாய்! என்னைக் காவாயே" என்று பயந்து குடிசையை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தான். இதற்குள் முதல் முதல் ஒரு பையன் ஓடி வந்தான். அவனைத் தொடர்ந்து, இவனையும் சிவகாமணி ஆறுமுகம்பிள்ளை வீட்டிலிருந்த திருமலைத்தேவர் ஓடிவந்தார். இவரைக் கண்ட காளிங்கராயபிள்ளை "ஓய் தேவரே, என்ன சங்கதி! என்ன சங்கதி! விசேஷமுண்டா?" என்று ஆவலோடு கேட்டார். இப்படிக் கேட்ட கேள்விக்குத் திருமலைத்தேவர் பதிற்சொல்லுமுன்னமே, வந்துவிட்டார்! எங்கெல்லாமோ அலைந்து தேடி முடிவில் வந்துவிட்டார்! ஐயா, வந்துவிட்டார்! திடீரென்று நினைத்திராமல் வந்து விட்டார்! எங்கே யெல்லாமோ அலைந்து தேடி முடிவில் வந்துவிட்டார்!

சீராளனைக் கண்ணுற்றுக்கண்டு "அப்பா சீராளா! என்னப்பா! என்னப்பா! அடே சீராளா! போதும்! போதும்! சுபமஸ்து" என்று சொல்லிக்கொண்டு தெய்வம்போல வந்துவிட்டார்! பார்வைதந்துவிட்டார்! மகாபக்தர்சாமியார் வந்துவிட்டார்! இவரைக்கண்டான் சீராளன், வெள்ளிவெளிச்சத்தினைக் கண்டான் சீராளன். "சாமி! சாமி! என்சாமி! என்சாமி, எப்போது வந்தது, எங்கிருந்து வருகிறது, ஆகா சாமிவாட்டும் சாமிவாட்டும்" என்று உள்ளம் பொங்கி உவகை ததும்பத் துடிக்கொண்டு பக்தர்சாமிகளின் இரண்டு பாதங்களையும் தொட்டுக் கண்ணில் வைத்துக்கொண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து அவர்பாதத்தில் தனது முகத்தை வைத்தபடியே கிடந்தான். இதற்குள் காளிங்கராயபிள்ளையும், "சாமி வருக, சாமி வருக" என்று சொல்லிக்கொண்டு தானும் நெடுவிழுந்து நமஸ்காரஞ்செய்தார். இந்தக் குடிசையைச் சுற்றியிருந்தவர்களும் ஊற்றன்மட ஓடிவந்து கூடி, நடக்கும் நடவடிக்கைகளைப்பார்த்து, சாமியார், பெரியசாமியார் போலிருக்கு, என்று நினைத்துக்கொண்டு தாங்களும் நின்ற நின்றபடியே கீழே விழுந்தார்கள். சாமியார் எல்லாரையும் வாழ்த்தி "எழுந்திருங்கள் போதும்! போதும்! எழுந்திருங்கள் சிவா, சிவா" என்று சொல்லிக்கொண்டு முதலில் காளிங்கராயபிள்ளைக்கு விபூதி கொடுத்துவிட்டுப் பின்பு சீராளனை நோக்கி "அப்பா, மகாராஜனைப்பெற்றும்பெருகியும் வாழ்வாயாக; நீ என்னை நிரம்பவும் கஷ்டப்படுத்திவிட்டாய்" என்று சொல்லிக்கொண்டு அவன் நெற்றி நிறைய விபூதியைப் பூசி அவனுடைய காயங்களிலும், "சிவா, சிவா" என்று சொல்லிக்கொண்டு விபூ

திசை அள்ளிப்போட்டு விட்டு மற்றக் குத்தாலத்தேவர் வகையாராக்களுக்கும், பள்ளர்களுக்கும் விபூதி கொடுத்தார். கொடுத்துமுடியவும்,

சீராளன்:—“சாமி! பொற்றொடி சௌக்கியமா? பொற்றொடி எங்கே யிருக்கிறாள்?” என்றான்.

சாமி:—“அப்பா, அவள் சௌக்கியந்தான். நீ சௌக்கியமா? நீ ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டாயே (என்று சீராளன் முதுகைத் தடவிக் காயங்களைப் பார்த்தார். பின்பு காளிங்கராயபிள்ளையை நோக்கி) ஐயா! பிள்ளையவர்களைக் கண்டு வெகுநாளாய் விட்டதே. அப்பா சீராளா, உன்னைக் கண்ணால் காணுமுன் பெரும்பாடுபட்டு விட்டேன். இது வரை உயிரோடிருந்தாயே. அதுதான் பெரிய காரியம்; இல்லையானால் ஐயோ! என்ன செய்யலாம்?”

காளிங்கராயபிள்ளை:—“என்னமோ சாமிகளுடைய கிருபையால் எப்படியோ தப்பிக்கொண்டார். அதைப் பற்றி ஒன்றுமில்லை. சாமிகள் இப்போது எங்கேயிருந்து வருகிறது? சீராளப்பிள்ளையவர்கள் இங்கேயிருக்கிற விவரம் எப்போது, எப்படித் தெரிந்தது? விவரமாய் உத்தரவு செய்யவேண்டும்.”

சீராளன்:—“ஆமாம் சாமி! நான் இங்கே யிருக்கிறது சாமிக்கு எப்படித் தெரிந்தது? நானிங்கே யிருப்பது பொற்றொடிக்குத் தெரியுமா? அவளிடம் சொல்லிக்கொண்டு வந்தீர்களா? நான் பனையிலிருந்து கீழே விழுந்தபின்பு என்ன நடந்தது?”

சாமி:—"பொறப்பா பொறு; எல்லாம் சொல்லுகிறேன்" என்று சொல்லிக்கொண்டு, கொள்ளைநடந்த காலமுதல் 'ஐகோர்ட்டு அப்பீல் பைசலான' வரையுள்ள சங்கதிகளையும், இடையபுரம் ஜமீந்தாருக்கும், வெள்ளையப்பனுக்கும் தண்டனை கிடைத்ததையும் சொன்னார்.

காளி:—"அப்படியா சாமி, தொலைந்தானா? அப்படித்தான் செய்யவேணும்; அதுதான் சரி."

சீராளன்:—"அப்படியா சாமி? வெள்ளையப்பன் தொலைந்தானா? அப்படித்தான் செய்யவேணும்; அதுதான் சரி."

காளி:—"பின்பு இங்கே பென்னவிதமாய் வந்தீர்கள்? குற்றாலந்தேவரை எங்கே வைத்துப்பார்த்தீர்கள்?"

சாமி:—"ஐக்கோர்ட்டில் 'பைசல்' கிடைத்தவுடன் நேரே புறப்பட்டு ஒருநாளிரவில் கோபாலபுரம் வந்து சேர்ந்தேன். அங்கே வந்து விசாரித்தமட்டிலும் ஒன்றும் தெரியவில்லை. இதற்கு மத்தியில் ஆலவாய்க்குப் போய் விட்டு வரலாமென்றும் எண்ணினேன். ஆனால் அங்கே போய்ப் பொற்றொடி கண்ணில் விழிக்க எனக்கே வெட்கமாயும் வருத்தமாயுமிருந்தது. அதன்பின் கூந்தற்பனையூருக்குப்போய் சுப்பப்பிள்ளையென்பவனைப் பற்றி அந்தரங்க ஆள் மூலமாய் விசாரித்தேன். அதிலும் ஒரு சமாசாரமும் வெளியாகவில்லை."

காளி:—"அப்படியா சாமி? சுப்பப்பிள்ளை இங்கே அகப்பட்டுக்கொண்டான். இதோ அவனையும் சின்னணஞ் சேர்வையையும் மரத்தோடு கட்டிப்போட்டிருக்கிறேன். தெரியுமா சாமி?"

சாமி:—"அப்படியா? அதுதான் சரி; அவர்கள் இரண்டுபேரையும் விடவேண்டாம்."

காளி:—"சாமி! பயல்களுக்கு நல்ல பூசை கொடுத்தேன். மூச்சுப்பேச்சில்லாமல் கிடக்கிறார்கள். அவர்கள் வாக்குமூலத்தை யெல்லாம் சாவகாசமாய்த் தெரியப்படுத்துகிறேன். இவர்கள் சொல்வதையும் மற்றக்காரியங்களையும் கேட்டால் சோளப்பிள்ளை பிழைத்தது பெரிய காரியம்தான். என்னவோ நல்வேளை, நான் வந்து சேர்ந்தேன். இல்லாவிட்டால் அவரை அந்தச்சண்டாளப் பாதகன் கோனேரியென்கிற பயல் என்ன அவமான மெல்லாமோ செய்திருப்பான். கடவுள் கிருபையால் தப்பினார். நல்லது பிறகு நடந்ததைச் சொல்லுங்கள்."

சாமி:—"பின்பு என்ன செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை. சோளன் இருக்கிறானோ அல்லது இறந்துதான் போனானோ, என்னென்னபடி கஷ்டப்பட்டானோ வென்ற மனவிசாரம் என்னை வாட்டிற்று. ஆனாலும் தர்மம் தலைகாக்கும் என்று நம்பிக்கொண்டு சதா ஈசனைத் தியானித்துக் கொண்டேயிருந்தேன். இதற்குள் திருமங்கலத்திலிருந்து வந்த ஐந்தாறு பள்ளிப் பிள்ளைகளைக்கண்டு அவர்களிடம் விசாரித்தேன். அவர்களும் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்லி விட்டார்கள். இப்படியிருக்கும் சமயத்தில் ஏழு மணிக்கெல்லாம் சிந்தாமணி ஆலமுகம் பிள்ளையிடமிருந்து ஒரு லெட்டர் கிடைத்தது. அந்த லெட்டரில் யாதொரு விவரமும் எழுதாமல் "உடனே சிந்தாமணி வந்துசேரவேணும். முக்கியமான சங்கதி. அவசரம். வரவேணும்." என்று மட்டுமே எழுதியிருந்தது. இதைப்பார்

க்கவும் என்ன சங்கதியோவென்று சந்தேகப்பட்டு உடனே புறப்பட்டுக் கால் நடையாய் நடந்து 12 மணிக்கெல்லாம் சிந்தாமணி வந்து சேர்ந்தேன். ஆறுமுகம் பிள்ளையையும் கண்டு பேசினேன். அவரும் சீராளன் இவ்விடத்தில் இருப்பதையும், தங்களிடமிருந்து குற்றாலத் தேவர் மூலமாய்க் கிடைத்ததையும் விவரமாய்ச் சொல்லிச் சாயங்காலம் ஆறு மணிக்குப் புறப்படும்படியாய்ச் சொன்னார். நான் உடனே புறப்படவேண்டுமென்றேன். அதற்கவர் குற்றாலதேவர் வாரண்டியிருப்பதால் பகலில் போகப்படாதென்று சொல்லிவிட்டார். நானும் அது சரிதானென்று 5½ மணி வரையும் காத்திருந்து உடனே மூன்று ரூபாய் வாடகை கொடுத்து ஒரு குதிரை வண்டி தயார் செய்து நானும் தேவருமாய்ப் புறப்பட்டு வந்தோம். வண்டி ரோட்டில் நிற்கிறது. இவ்வளவு தான் நடந்த சமாசாரம். நான் இன்னும் ஆலவாய்க்குப் போகவேயில்லை. அவ்விடத்திய சமாசாரம் ஒன்றும் எனக்கு நன்றாய்த் தெரியாது. ஆனால் சத்திய சிலாராயரவர்களை வால்மீகருக்கு மாற்றியிருக்கிறபடியால் அவர்கள் சீக்கிரத்தில் ஆலவாய் விட்டுப் புறப்படுவார்களென் றெண்ணுகிறேன்."

சீராளன்:—"அப்படியானால் இதுவரையில் போயிருப்பார்களா? பொற்கொடி எங்கே யிருக்கிறாள்? அவளும் கூடவே போயிருப்பாளோ அல்லது கோபாலபுரத்துக்கே ஒருவேளை யாராவது கூட்டிக்கொண்டு போயிருப்பார்களோ தெரியவில்லையே?"

குற்றாலத்தேவர்:—"ஐயா! நேற்று இரவு ஆலவாயிலிருந்து ஒரு ஆள் சிந்தாமணிக்கு வந்தது."

சீராளன்:—"ஆமா? அந்த ஆள் என்னவாவது சொன்னதா?"

குற்றாலத்தேவர்:—"அந்த ஆள் சொன்னதில் ஜட்ஜ் எஜமான் இன்னும் ஆலோசனை விட்டுப்போகவில்லை யென்றும், அந்த அம்மாளும் அங்கே தானே யிருப்பதாயும் சொன்னது. வேறே ஒரு சங்கதியும் தெரியாது."

சாமி:—"அப்படியானால் அவர் இன்னும் போயிருக்க மாட்டார். நல்லது பிள்ளைவாள்! இனி நடக்கவேண்டிய காரியமென்ன? எல்லாரும் புறப்படுவோம் வாருங்கள். சீராளன் புறப்படவேண்டாமா? என்னப்பா நீ ஒரு கல்யாணஞ் செய்யுமுன் இருக்கிற மனுஷனை என்ன பாடெல்லாம் படுத்திவிட்டாய். இனிமேல் ஒன்றுமில்லை புறப்படு."

சீராளன்:—"என்னவோ? பொற்கொடி எப்படி இருக்கிறாளோ? இத்தனை நாளாய் எப்படிக் காலங் கழித்தாளோ? இதுவரையில் நான் இங்கே பிழைத்திருக்கிறேனென்பது அவளுக்குத் தெரியவே தெரியாதே?"

சாமி:—"அதற்கென்ன! எல்லாம் இப்போது போனால் தெரியுமல்லவா? புறப்படு. வண்டி தோட்டில் காத்துக்கொண்டு நிற்கிறது. பிள்ளைவாள்! நீங்களும் புறப்படுங்கள்.

காளி:—"என்ன சாமி என்னையும் [illegible] உத்தரவு சொல்கிறது சரியா? [illegible]"

சாமி:—"என்ன பிள்ளையவாள் இப்படிச் சொல்லுகிறீர்? அதற்கப்பால் ஜாமீனுக்குப்போனால் பின்பு உங்களுக்குப் பயமென்ன? எல்லாம் நாங்களிருக்கிறோம், நீ

களும் குற்றலத்தேவருமாவது கட்டாயம் வரவேணும். இரவே போய்விட்டுத் திரும்பிவிடலாம், அல்லது நாளை முழுதும் அலவாயிலேதானே யிருக்கலாமே. அதைப்பற்றிக் கொஞ்சமும் பயம் வேண்டாம்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

சீராளனின் ஆறாத்துயரம்.

இவ்வாறு சாமியார் சொன்ன தைரியமான வார்த்தைக்குச் சம்மதித்து காளிங்கராயனையும் கூட வருவதாய் ஒப்புக்கொண்டார். உடனே சாமியார், சீராளன், காளிங்கராயனை, குற்றலத்தேவர் ஆகிய நாலு பேரும் புறப்பட்டார்கள். சிறைக்கோட்டையிலிருந்து லோக்கல்பண்டு ரோட்டுக்கு வரும்வரை பள்ளர்களும் கூடத் துணையாக வந்தார்கள். இதற்குள் மணியும் பத்து ஆய்விட்டது. ஆகவே நாலு பேரும் காத்துக்கொண்டு நின்ற குதிரை வண்டியிலேறிக்கொண்டு நேரே அலவாய்க்கு வண்டியைவிட்டார்கள். வண்டி நேரே போயிருக்கும் பக்ஷத்தில் பன்னிரண்டு மணிக்கெல்லாம் அலவாய்க்குப் போய்ச்சேர்ந்திருப்பார்கள். ஆனால், இந்தச் சிந்தாமணி வண்டிக்காரனுக்கு இந்த ரோட்டில் பழக்கமில்லாதபடியால் வராளநதமனுக்குச் சமீபமாய் வந்தவுடன் அலவாய்க்குப் பிரியும் ரோட்டுவழி விடாமல் திருமங்கலத்துக்குப் பிரியும் ரோட்டுவழியே விட்டுவிட்டான். இரவானபடியால் வண்டிக்குள்ளிருப்பவரும் இதைக் கவனிக்கவில்லை. மணி ஒன்றுக்கு மேலாகியும்

ஆலயம் வரைக்காணாதபடியால், சாமியார் வண்டியை விட்டுக் கீழேயிறங்கிப் பார்க்கவும் அது திருமங்கலம் ரோட்டென்றறிந்து வண்டிக்காரனுடைய கையைப் பிடித்துக் கொண்டு பழையபடி வண்டியைத் திருப்பி ஆலயத்துக்கு விட்டார்.

இவ்விதமாய் நேரமாய்விட்டபடியால் பலபலவென்று விடிய ஆறு மணிக்கு வண்டி ஆலயத்துக்குள்ள பக்கமாய் வந்து சேர்ந்தது. இப்படிப் போகும் வழியில் எதிரே ஒரு கிழவரும், வேறே இரண்டு ஆட்களும் என்னென்னவோ பேசிக்கொண்டு வந்தார்கள். இவர்கள் பேச்சைக் கேட்ட சாமியார் எப்படியோ சந்தேகப்பட்டு வண்டியை நிறுத்திக்கொண்டு அதென்னவென்று கேட்டார். அந்த ஆட்கள் "பெண் என்றும் மாப்பிள்ளை என்றும் சர்ப்பட்டென்றும் அவ்வளவுதான் அவள் கதி" என்றும் பேசிக் கொண்டு போனார்கள். உடனே குபீரென்று கீழே குதித் திறங்கி அந்தக் கிழவரைப் பார்த்து

சாமி:—"ஐயா! அதென்ன சங்கதி? எங்கேயிருந்து போகிறீர்கள்? என்று வெகு ஆத்திரமாய்க் கேட்டார்." அதற்கு அந்த

கிழவர்:—"ஒன்றுமில்லை. ஆலயத்தில் சிலநாளைக்கு முன்பு ஒரு கலியாணம் நடந்தது ஒரு பெண்ணுக்கு; அது சாகக்கிடக்கிறது" என்றார். இதைக்கேட்ட

சீராளன்:—(திடீரென்று வண்டியைவிட்டுக் குதித்து "அதென்ன? அதென்ன" என்றான்.

சாமி:—“அது சரிதான் நீங்கள் யார்?” என்றுகேட்க,

கிழவர்:—“ஐயா, நான் திருப்பரங்குன்றத்திலொரு நாட்டு வைத்தியன்; அந்தப்பெண்ணுக்கு யாரெல்லாமோ டாக்டர்கள் வந்து மருந்து கொடுத்தும் குணப்படவில்லையென்று என்னை வரும்படி நாயர் அவாள் கூப்பிட்டனுப்பினார்கள், நான் போய் கைந்நாடியைப் பார்த்ததில் ஒன்றும் சரியாயில்லை, இனிப் பிழையாதென்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இதற்குள் முடிந்தாலும் முடிந்திருக்கும்; என்று சொல்லவும் சொல்லாமலுமிருக்கும் சமயத்தில்,

சிராளன்:—“ஐயோ, ஐயோ, சாமி, சாமி பொற்கொடி போய்விட்டாளோ! ஏ பொற்கொடி! போய்விட்டாயோ! ஏ பொற்கொடி! என்ன மோசம் செய்தாய்? உன்னையல்லவா நம்பியிருந்தேன்” என்று கூவினான்.

உடனே சாமியார் அவனைத் தூக்கி வண்டியிலிருத்திக் கொண்டு வண்டியை விரைவாய் முடுக்கினார், வண்டியும் சூரியோதயத்துக்கு ஆலவாய்த் தெற்கு வீதிவழியாய்ப் போகிறது.

சாமியார்:—(தெருவில் நின்ற ஜனங்களைப் பார்த்து) “என்ன சப்ஜட்ஜ் வீட்டில் விசேஷமுண்டா?” என்று கேட்டார். நின்ற

ஜனங்கள்:—(சாமியாரைக் கண்டு) “ஐயா, நேற்று வரப்படாதா? சிராளப்பிள்ளை யென்கிற மாப்பிள்ளையும் போனார்; புருஷனைத் தேடி பெண்சாதியும் போய்விட்டாள். என்னமோ இரண்டு பேர் கதியும் இப்படியாச்சுது” என்றார்கள்.

சாமி:—"அதைக்கேட்டு அப்படியா? அப்படியா? நிஜந்தானா? சீராளன் இதோ இருக்கிறானே. அடடா எப்போ? எப்போ?" என்று கூவினார்.

இதைக்கேட்ட ஜனங்கள் சீராளன் இருக்கிறான் என்று பார்த்துக்கொண்டு "ஐயோ, என்ன செய்யலாம்! சாமி! இப்போதான் ஜீவன்போய் ஒரு நாழிகையிருக்கும். எல்லா டாக்டர்களும் கைவிட்டுவிட்டார்கள். பரங்குன்றத்திலிருந்து முப்பனார் கூட வந்து பார்த்தார், ஒருவராலும் முடியவில்லை. அவளுக்கு ஆயுள் அவ்வளவு தான், அவள் காரியம் முடிந்தது. அவள் பொற்றொடியைத் தொலைத்துக்கொண்டு போய்விட்டாள். அவள் கலியாணம் முடிந்ததும் போனதும் ஒரு கனாப்போலாச்சுது. அவளுக்குச் சீக்கு ஒன்றுமில்லை, மாப்பிள்ளையைவிட்டுப் பிரிந்த ஏக்கந்தான். நேற்றாவது வந்தீர்களா! அல்லது ஒரு நாழிகைக்கு முன்னாவது வந்தீர்களா! ஒருவேளை பிழைத்தாலும் பிழைத்திருப்பாளே!" என்று சொல்லிக் கொண்டு தாங்களும் தெருவில் நின்ற ஜனங்களோடு வண்டியைத் தொடர்ந்து ஓடிவந்தார்கள்.

சீராளன்:—இதைக் கேட்கவும் கூவென்று சப்தமிடுகிறான், "ஏ பொற்றொடி! பொற்றொடி"! என்று கூவுகிறான்; வண்டிக்குள்ளேதானே கிடந்து உருளுகிறான். தலையை வண்டிப்பிரம்போடு மோதி மோதி முட்டுகிறான். சாமியாரும் இந்தக் கண்ட்ராவியைப் பார்த்துச் சகியாமல் தானும் அழுகிறார். காளிங்கராயபிள்ளையும் "ஐயோ ஐயோ" வென்றுசொல்லிக்கொண்டு வருத்தமடைகிறார்.

இதற்குள் வண்டியும் ராயர் வீட்டு வாசலில் வந்து நின்றது. இதைக்கண்ட அநேக ஜனங்கள் ராயர் வீட்டு வாசலில் ஏகக் கூட்டமாய்க் கூடிவிட்டார்கள். உடனே சாமியார் காளிங்கராயபிள்ளை, குற்றாலத்தேவர் மூவரும் சீராளனைக்கீழே யிறக்கிக் கைத்தாங்கலாய் வீட்டுக்குள் கூட்டிக்கொண்டு போனார்கள். வீட்டுக்குள்ளேயோ ராயர் ஒருபக்கம் கத்துகிறார். துளசி யொருபக்கம் கத்து கிறாள்; முத்தம்மாள் மறுபக்கம் கூவுகிறாள். மீனாக்ஷி ஒருபக்கம் அலறுகிறாள். தகப்பனார் ஒருபக்கம், சிவகாமி ஒருபக்கம் இப்படி ஏகக் கூச்சலாய்க் கிடக்கிறது. 'பொற்றொடி, பொற்றொடி' என்ற கூச்சலாயிருக்கிறது. இதற்குள் சிலர், சீராளனைக்கண்டவுடன் "அப்பா நீ வந்து விட்டாயா, இன்னும் இருக்கிறாயா? பொற்றொடி போய் விட்டாளே" என்று கூவுகிறார்கள்.

சிவகாமி:— "என்னப்பா! நீ இன்னும் உயிரோடி ருந்தாயா? என்னைத்தவிக்க விட்டு விட்டு எங்கேயடா போனாய்? எப்படியடா பிழைத்தாய்? என்கண்ணே! உன் பெண்சாதி போய்விட்டாளே யடா! நீ அவளுக்காக என்ன பாடெல்லாம் பட்டாயடா? உனக்குக் கொடுத்து வைக்க வில்லையேடா! என்னசெய்யலாமடா!" என்று அலறுகிறாள்.

இதைப் பார்த்த ஜனங்களும் மனம் பொறுமல் "ஐயோ, இப்படியும் உண்டா" என்று கூவுகிறார்கள். இதற் குள் சாமியார் ஜனங்களை விலக்கி சீராளனைத்தன் கையிற் பிடித்துக்கூட்டிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்து பொற்

றொடியைக் கிடத்தியிருக்கும் இடத்திற் சேர்த்தார். அங்கே அவளைச்சுற்றிக்கொண்டு மீனாக்ஷி, முத்தம்மாள் முதலியவர்கள் முகத்திலும் தலையிலும் அறைந்து கொண்டு கூவிக் கூவி அழுகிறார்கள். பிரேதமாய்க்கிடக்கிற பொற்றொடியைக் கண்டான் சீராளன்; திடீரென்று கீழே விழுந்தான். உருண்டு உருண்டு புரண்டான்; மண்டையை உடைக்கிறான்; முகத்திலடிக்கிறான்; "ஐயோ! ஐயோ! ஏ பொற்றொடி!" என்று கதறிக்கதறி அலறுகிறான். பக்கத்தில் நின்றவர்கள் அவன் மண்டையைத் தரைமேலடிக்காதபடி தாங்கிப்பிடிக்கிறார்கள். சீராளன் எல்லாரையும் மீறி உதறிவிட்டு, சூழநின்று அழுது கூவும் ஸ்திரீகளைத்தள்ளிக்கொண்டு பொற்றொடியின் மேற்போய்த் திடீரென்று விழுந்து "ஏ பொற்றொடி! என்கண்ணே! என் மணியே! என் உயிரே! உன்கதி இப்படியுமாயிற்றே! என்னை மறந்தாயோ? என்னைத் தனியே விட்டாயோ? என்னை நிலை குலைந்தலைய விட்டுப்போக மனந்துணிந்தாயோ? நான் திரும்பவரமாட்டேனென்று எண்ணினையோ? நான் இறந்துபோனேனென்று நினைத்து நீயுமிறக்கத்துணிந்தாயோ? ஐயோ நான் இன்னும் உயிரோடிருக்கிறேன். நான் சாகவில்லையடீ! என் கண்ணே! நான் சாகவில்லையடீ! உனக்கு என்னநோய் வந்ததடீ! ஒருநோயுமில்லாமல் கற்போலிருந்தாயே. தேவகன்னிகைபோலிருந்தாயே! பத்து நாளைக்குமுன் மணமகளாயிருந்த நீ இன்றைக்குப் பிணமகளாய் விட்டாயே. இதற்கெல்லாம் பாவியாகிய நானல்லவா காரணம்? இந்தப் பாவத்தை நான் எங்கே யடீ தொலைப்பேன்? நானும் மனிதனென்றிருக்கிறேன்? என்று

லல்லவா உனக்கு இத்தனை தீங்கும்வந்தது? என்னாலல்லவா உனது உயிரும் நீங்கியது? பெண்கொலை செய்தபாதகனானேனே நான்? நீ யென்மேல் வைத்த அன்பிற்கு நான் செய்த பிரதியுபகாரம் இதுதானோ? என்னைவிட்டுப்பிரிந்திருக்க முடியாமலோ அல்லது நான் இறந்துபோனேன் என்ற சந்தேகத்தினாலோ நீ உனது உயிரைவிட்டாய்? கண்ணே, நீயல்லவா கற்பரசி! நீயல்லவா உத்தமி! ஆனால் உனக்குத் தகுந்த நாயகன் நானல்ல. நானும் உன்னைப் போலவே உத்தமனா யிருந்தால் நீ யிறந்துபோனதைக் கண்ணாரக்கண்டும் உயிர்வைத்திருப்பேனா? என் உயிர்போகவுமாட்டேனென்கிறதே. நான் உனது உயிரைக்கொண்டு போக வந்த யமனேயன்றி உனது நாயகனல்லனே. அடி கண்ணே! நான் என்னவெல்லாம் எண்ணியிருந்தேன்? உன்னை விவாகம் செய்யுமுன் என்ன கஷ்டமெல்லாம் பட்டேன்! எங்கேயெல்லாம் ஓடினேன்! என்ன கவலையெல்லாம் கொண்டேன்! அடி பொற்றொடி! உன் கையைப் பிடித்து விவாகம் செய்வேனா என்று ஆசையோடெண்ணியெண்ணி உழன்றேன். இரவும் பகலும் உன்னையே நினைந்தேன்; நான் உன்னை நேரே பார்க்குமுன்னமே நீயே என்முன் வந்து நிற்பது போலவும், பேசுவது போலவும், பட்டப்பகலிற் கனவுகண்டேன்; கண்ணே! உனது சத்தியம் தானென்ன! உனது வீரியம் தானென்ன? உன்னைப்போல் பெண்களும் உலகத்தில் உண்டா? சிறுபிள்ளையாயிருக்கும்பொழுது சொன்ன ஒரு வார்த்தையை ஞாபகமாய் நினைத்துக்கொண்டிருந்து என்னையே வேண்டுமென்று மணந்தாயே; எனக்காக உன் அருமையுள்ள தாய் தகப்

பன் மாரையும் ஏசிப்பேசி அவர்களுக்கும் பொல்லாத வளாயினையே! என்னையும் என் வார்த்தையையும் நம்பி அன்றிரவு என்னோடு கூடப்புறப்பட்டு வந்தாயே! என் மேற்கொண்ட அன்பால் உன்னைப்பெற்ற தாயையும் மற ந்து என்னோடு கூட ஓடி வந்தாயே! இதற்கெல்லாம் உனக்கு என்ன பிரதியுபகாரம் செய்கிறேனடி நான் பாவி? உனக்கு என்ன அருமைசெய்தேன்? உன் உயிரைத்தான் வாங்கினேன்! என் கண்மணி! நான் எண்ணிய எண்ண மெல்லாம் இப்படியும் போய்விட்டதே! உனக்கென்ன வெல்லாம் செய்யவேண்டுமென்று எண்ணினேன்! நீ எனக்கு மனைவியாகுமுன்னமே திருமங்கலத்தில் உனக் கென்று பெரிய வீடும் கட்டி அதற்குப் "பொற்றொடி விலா சம்" என்றும் பெயர் கொடுத்தேனே! உனக்கென்று எத் தனை சாமான்கள் வாங்கினேன்! அத்தனையும் அப்படியே கிடக்கிறதே. அவற்றை இன்னும் கண்ணாலும் பார்க்கவில் லையே! உன்னோடு அப்படி வாழவேண்டும் இப்படி இருக்க வேண்டும் என்று பிரமாண்டமான எண்ணமெல்லாம் எண் ணி ஆகாயக்கோட்டை கட்டினேனே! அப்படி நடத்தவே ண்டும்; இப்படி அருமை செய்யவேண்டுமென்று எண்ணி எண்ணி ஆநந்தங்கொண்டிருந்தேன். கடைசியில் உன்னை யும் மணந்தேன். அந்தப்படியே கடைசி வரையில் மங்கள மாய் முடிந்து விடப்பட்டதா? பாவிகள் சண்டாளப்பாவி கள் நம்மிருவருக்கும் எமன்போல வந்து வீட்டைக்கொள் ளைபோட்டார்களே! தீயைச்சொருகினார்களே! நம்மிரு வருக்காக இராப்பகலாய்ப் பாடுபட்ட சாமிகளுக்கும், ஜட்ஜுக்குமாவது முடிவில் நல்ல பெயர் கிடைத்ததா?

அதுவுமில்லையே. இதுதான்போகட்டும் நான் இந்தமகாராஜன் காளிங்கராய பிள்ளையவர்கள் கிருபையால் உயிர் தப்பிப்பிழைத்தேனே? நீயும் இதுவரை உயிரோடிருந்திருந்தால் எல்லாம் சரியாய்ப்போமே. அதற்குமுன் நீ திடீரென்று இறந்துவிட்டாயே! நேற்றுச் சாமிகளைக்கண்ணாற் கண்டவுடன் என் கவலையெல்லாம் தீர்ந்துவிட்டதென் றெண்ணினேனே. அதற்கும் இப்பொழுது பெரிய அநர்த்தம் வந்துசேர்ந்ததே. ஏ கண்மணி, இன்றைவரையாவது நீ ஜீவனோடிருந்தால் உன்னிடம் இரண்டு வார்த்தையாவது பேசியிருப்பேனே! ஐயோ தெய்வமே, ஜெகதீசா, நான் என்ன செய்வேன்! ஐயையோ உனது சீவன் போகும் தருணத்தில் என்னவெல்லாம் நினைத்தாயோ! என்னைத்தேடி அழுதாயோ! என்னிடம் என்னவார்த்தை சொல்ல விரும்பினையோ ஒன்றும் தெரியவில்லையே! என் பொன்னே! என் தங்கமே! என் செல்வமே! என் அரசி! என் கட்டிக்கரும்பே! ஒருவார்த்தையாவது சொல்லடீ! என்னை நீ இப்படி விட்டுவிட்டுப்போனால் எனக்கு வேறே யாரடி துணை? உன்னையே சதமென் றெண்ணியிருந்தேனே! இப்படி அறுதியாய் விட்டுவிட்டுப்போவது உனக்கு நியாயமோ? ஆனாலும் உன்னைப்போல் பெண்களைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இந்தப் பாவியாகிய எனக்கு மனைவியாயிருக்கப் படாதென் றெண்ணிவிட்டாயோ? அல்லது பாவிகள் பெருத்த இந்தக்கலிகாலத்தில் குடும்பவாழ்க்கையில் சுகமில்லை யென் றெண்ணிவிட்டாயோ? ஒன்றும் தெரியவில்லையே. ஒரு வார்த்தை சொல்லடி. நான்தானடி சீராளன். நான்தா

ளடி. உனது நாயகன். நான்தானடி உன்னைமணந்த மணவாளன். என்னிடம் ஒருதரமாவது வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னாலும் போதுமடி. உன் முகமும் இப்படி வாடிவிட்டதே. இப்படி நினைத்திராமல் இறந்துபோவாயென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே. உன் சரீரமெல்லாம் இப்படித் துரும்புபோலாய்விட்டதே. சித்திரப் பதுமைபோலிருந்த உனது சரீரமும், உனது இன்சொல்லும், குளிர்ந்த பார்வையும், அன்னநடையும் எங்கேயோ போய்விட்டது? நீ இருந்திருந்து இதற்காபிறந்தாய்? இப்படி இடைநடுவிலே போகவா பூமியில் பெண்ணொன்று பிறந்தாய்? உன்னைப்போலொத்த உத்தமிகளுடைய கதியே இப்படியானால் மற்றப்பெண்களுடைய கதியெப்படியோ? ஐயோ, மற்றவர்களெல்லாம் நன்றாய்வாழ உனக்குமட்டுமா ஈசனிப்படித் தலையிலெழுதினான்! என்னைவிரும்பி மணந்ததற்கும், உனது வைராக்கியத்திற்கும், உனது புத்திக்கும், நடைக்கும் ஈசன் இந்தக்கதியா கொடுத்தான்? அந்த ஈசன் விளங்குவானா? உத்தமியாகிய உனக்கு இந்த விதி விதித்த அந்தப்பிரமன் ஒருகடவுளா? அவனையும் தெய்வமென்று கையெடுத்துக்கும்பிட நீதியுண்டா? அவனுக்குக் கண்கள் உண்டா? ஏ பொற்றொடி! உன்னைப்போன்ற உத்தமியை மணந்தும் நன்றாய் வாழக்கொடுத்துவையாத பாவியானேனே; என்னிலும் கொடிய பாவி உண்டா? என்னிலும் நீசனுண்டா? நான் இனி உயிர் வைத்திருந்து பயனென்ன? எனக்காக நீ உன்னுயிரை விட்டிருப்பதைக் கண்டவுடனே உனக்காக என்னுயிரை விட்டாலல்லவா நானுனக்குத்தக்க நாயகன்?

இனி உயிரோடிருந்தாலும் நான் ஒரு பிணமேயன்றி மனிதனல்லனே. அன்புள்ள மனைவியை யிறக்கக்கொடுத்து விட்டு உயிர்வைத்திருக்கும் ஆண்பிள்ளையும் ஒரு ஆண்பிள்ளையா! ஐயோ, நாயகரே தெய்வமென்றெண்ணி ஒழுகிய மனைவிமாரை இறக்கக்கொடுத்துவிட்டு, அவளிறந்த மறுதினத்திலே வேறே பெண் பேசுகிறார்களே அந்தப்பாதகர்களைப்போலவா என்னையுமெண்ணினாய்? ஆகா ஒரு பொழுதும் அப்படி எண்ணாதே. நான் ஒரு நிமிஷமும் இனி இந்த உலகத்தில் வாழேன். நான் உன்னோடு உயிரைவிட்டுக்கொண்டு இதோ மாண்டுவிடுகிறேன். எனக்கு உன் பற்றையன்றி ஒரு பற்றுமில்லை. என்னை யுடையவளே, என் தேவி, என் காதலி, நான் உன்னை விட்டுப்பிரிந்து இங்கே இருப்பேனென்று எண்ணவேண்டாம். நான் உனக்குச் செய்யவேண்டிய கிரியைகளையெல்லாம் செய்து அடக்கம் செய்துவிட்டு உடனே கூட வந்து விடுகிறேன். மனைவியாகிய நீ முன்னே யிறக்கவேண்டியதும் நான் பின்னே இறக்கவேண்டியதும் நியாயம்தான். அந்தப்படியே நீ முன்னேபோ. நான் பின்னே வருகிறேன். நாம் கல்யாணத்தன்றிரவு வார்த்தையாடிக்கொண்டிருந்ததே போதும். எல்லா வாழ்க்கையும் அதுவே யென்றெண்ணிக்கொள்வோம். இந்த உலகத்தில் நீயும் நானும் ஒரு நிமிஷநேரமாவது புருஷனென்றும் மனைவியென்றும் வாழ்ந்து விட்டோமல்லவா? அதுவே போதும். பத்துவருஷம் வாழ்வதும் பத்து நிமிஷம் வாழ்வதும் ஒன்றுபோலவே யன்றி வேறில்லை. தவிரவும் உன்னைப்போலொத்த கற்பரசி வாழ்வதற்கு இந்த வுலகமும் தகுதியுடையதல்ல. அது பற்

றிபே நீயுமிறந்தாய்; நானுமிறக்கப்போகிறேன்" என்று இவ்வாறாகக் கடல் மடை திறந்தாற்போல் அலறி அலறிக் குளறிக் குளறிக் கொட்டுகின்றான்; இப்புறம் சாய்கின்றான்; அப்புறம் சாய்கின்றான்; கண்ணீர் அருவி போல் பாய்ந்து பொற்றொடியின்மேல் மூடியிருக்கிற வஸ்திரமெல்லாம் நனைந்தது.

இவன் இவ்வாறு பிரலாபிப்பதைக் கேட்டவர்களும் கண்டவர்களும் எல்லாருமாய் 'ஐயோ, ஐயோ' என்று கூவியழுகிறார்கள். கற்போன்றவன்னெஞ்சினரும் கூடக்கரைந்து கரைந்து வருந்தி யழுகின்றார்கள்.

சிவகாமி:—"அடேயப்பா! என் அப்பா! என்னடா செய்வோம். இப்படி வந்துவிட்டதே" யென்று அவனைக்கட்டிக்கொண்டழுகிறாள். பொற்றொடியின் தாயாரொருபக்கம் அழுகிறாள். இதற்குள் வாசலில் இழவு கொண்டாடுவதற் கடையாளமாக, மட, பட, மட, மட வென்று; பறையர் கொட்டடிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த சப்தத்தைக் கேட்டவே இதுவரையும் ஞானமாய்ப் பேசிக்கொண்டு வந்த

சீராளன்:—(பின்னும் குரலெடுத்து மனங்கலங்கி) "அடி அம்மா! அடி அம்மா! நான் என்ன செய்வேன், ஏ சாமி, ஏசாமி, என்ன செய்வேன், நீங்களாவது சொல்லுங்களேன், ஏ பாட்டி! ஏ பாட்டி நீ என்ன பாடெல்லாம் பட்டாய் இப்படி வந்து விட்டதே, என் பாட்டி என்னம்மா, என்னப்பா, ஏ சகா, ஏ பொற்றொடி, போறையா, போறையா, போறாயோ, போறாயோ, என்னை விட்

டுவிட்டா போராயடி, விட்டு விட்டா போராய் என் கண்மணி எனக்கொரு வார்த்தை சொல்லடி, என் செல்வமே, ஒரு வார்த்தையடி என் பொன்னே, அப்பா ஐயய்யோ, ஐயய்யோ என்னல் பொறுக்க முடியவில்லையே சாமி, ஏ சாமி! பொற்கொடி'' என்று சொல்லிக்கொண்டு பொற்கொடியின் கையிரண்டையும் தூக்கித் தன் கண்களில் வைத்து நன்ருய் ஒற்றிக்கொண்டு பின்னும் பொற்கொடியின் முகத்தோடு தன் முகத்தைச்சேர்த்து வைத்துக்கொண்டு, "உன்னை இனி எப்போது காண்பேனடி, எந்தப்பிறப்பில் காண்பேனடி, இனிக் காண்பேனு, அம்மா காண்பேனு! காண்பேனு! என் பொன்னே! காண்பேனு! என் கண்ணே காண்பேனு, என் கண்மணியே காண்பேனு? காண்பேனு அடி காண்பேனு'' என்று தொண்டை வெடிக்கக் கூவிக்கொண்டழுகின்ருன்.

பதின் மூன்ருவது அத்தியாயம்

புனர் ஜன்மம்.

பின்பு சிறிதுநேரம் முகத்தோடு முகமாய் வைத்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் இருந்தான். பிறகும் மூடப்பட்டிருக்கும் பொற்கொடியின் கண்களிரண்டையும் திறந்து பார்க்கிருன். இன்னும் சிறிது நேரம் அவள் முகத்தை உற்றுப்பார்க்கிருன். உடனே, அங்கு மிங்கும் விழிக்கிருன். பின்னும் "ஏ சாமி வாருங்கள், ஏ சாமி இங்கே பாருங்கள்'' என்று சொல்லிக்கொண்டு பொற்கொடியின் வல

து கைவிரல்களோடு தன் கைவிரல்களைக் கோத்தான். கோக்கவே, பொற்றொடியினுடைய கை சீராளனுடைய கையைச் சற்று இறுகப் பிடித்ததுபோலத் தோன்றிற்று. உடனே சீராளன் தன் முகத்தைப் பொற்றொடியின் முகத்தோடு கிட்ட வைத்துப் பார்த்துக்கொண்டு "சாமி, ஆ! இதென்ன, சுவாசம் வருகிறதே, கையைப் பிடிக்கிறாளே, பாருங்க சாமி, இதென்னவென்று பாருங்க சாமி" என்று உரத்துக் கூப்பிட்டான். இதைக்கேட்ட சாமியார் திடீரென்று ஆட்களை விலக்கிக்கொண்டு ஓடிவந்து பொற்றொடியின் வலது கையை யெடுத்துக்கைநாடியைப்பார்க்கவே இன்னும் உயிர் நீங்கவில்லையென்றும் நாடி கொஞ்சம் அடிப்பதாயுமறிந்து, அழுகிற ஜனங்களைப்பார்த்து "நில்லுங்கள், நில்லுங்கள் அம்மா நில்லு, நில்லு, ஜீவன் கிடக்கிறது. எல்லாரும் விலகுங்கள், எல்லாரும் விலகுங்கள், போங்கள் அப்பாலே, கொஞ்சம் தண்ணீர், கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள் சீக்கிரம்" என்று அதட்டினார்

இதைக்கேட்ட மீனாட்சி, முத்தம்மாள் முதலிய ஸ்திரீகளெல்லாரும் திடீரென்று அழுகையை நிறுத்திவிட்டு "அப்படியா சாமி, ஜீவன் கிடக்கிறதா? பொற்றொடி பிழைத்துக்கொண்டாளா? சாமி சொக்கநாதா! நீதான் காப்பாற்றவேணும், நீயே துணை" என்று சொல்லிக்கொண்டு விரைவாய்ப்போய்த் தண்ணீர் கொண்டுவரப் போனார்கள். இதற்குள், பொற்றொடி யாரும் நினைத்திராவண்ணம் சிறிது கண்ணைத் திறந்து மறுபடியும் மூடினாள். இதைக்கண்ட,

சீராளன்:—"பொற்றொடி, ஏ பொற்றொடி, கண்மணி! உனக்கு உடம்புக்கு என்னமாய் வருகுதம்மா! என்ன வேணு

மம்மா? கொஞ்சம் பேசு, மெல்லப்பேசு" என்று சொல்லிக்கொண்டு அவள் முகத்தைப்பின்னும் உற்றுப்பார்த்தான்.

பொற்றொடி பின்னுமொருதரம் கண்ணை விழித்துத் தனது இடது கையை வெகு பிரயாசையுடன் தூக்கிச் சீராளன் வலது புஜத்தின்மேல் போட்டாள். போடவே எல்லாருக்கும் கொஞ்சம் நம்பிக்கை உண்டாய்விட்டது எல்லாரும் அழுகையை முற்ற நிறுத்தி விட்டார்கள். அவிழ்த்து விரித்துப்போட்டிருந்த கூந்தல்களை வாரி முடிந்துகொண்டு பொற்றொடியின் நான்கு பக்கமும் வந்து சூழ்ந்தார்கள். வெளியே திண்ணையிலிருந்து புலம்பிக்கொண்டிருந்த பொற்றொடியின் தகப்பனும் சத்தியசீலராயரும் வீட்டுக்குள்ளே வந்து "என்ன,! என்ன,! என்ன சங்கதி?" என்று கேட்டார்கள்.

இவ்வளவு ஆகவே வாசலிலடித்துக்கொண்டிருந்த பறையர்களும் பறையை நிறுத்திவிட்டார்கள். தெருவில் நின்ற ஜனங்களும் துஷ்டி விசாரிக்க வந்திருந்த ஜனங்களும் திடுதிடென்று வீட்டுக்குள்ளே வந்து நுழைந்தார்கள். இவ்வாறு ஜனங்களெல்லாம் வீட்டுக்குள் நுழையவே, உள்ளேயிருப்பவர்களுக்குச்சுவாசம் விடக்கூட வழியில்லாமற் போய்விட்டது. இதைக்கண்ட

சாமியார்:—"இதென்ன கூட்டம், எல்லாரும் தயவு செய்து வெளியே போய் உட்காருங்கள். மூச்சுப்போகவாவது இடம் வேண்டாமா?" என்று சொல்லிக்கொண்டு எல்லாரையும் ஒருபுறமாக ஒதுக்கினார். ஒதுக்கினாலும்

இறந்துபோனாள் என்று நினைத்திருந்த பொற்றேடி திடீ ரென்று கண் விழித்துப்பார்த்தாள் என்ற ஆச்சரியத்தைக் கேட்ட ஒவ்வொருவரும் வீட்டுக்குள்ளேயே நுழைகிறார் களேயன்றி வெளியே போகிறார்களில்லை. ஆள் வெக்கை யும், ஜனவாசமும் சகிக்கமுடியாமல் சாமியார் வெகு கோபமாய் எழுந்து போங்கம்மா அப்பாலே, எங்கோ தெய் வச்செயலாய்ப் பிழைத்துக்கொண்டாள். பிறகு வந்து பாருங்கள் எல்லோரும். போங்கள் அப்பாலே” என்று சொல்லிக்கொண்டு எல்லோரையும் பிடித்து வெளியே தள் ளினார். இவ்வளவுகண்ட முத்தம்மாள் பாட்டியின் மகனு கிய சங்கரனும் எல்லா ஜனங்களையும் வெளியே தள்ளி விட்டு வாசலில் நின்று ஜனங்களை உள்ளே வராமற்றடுத்து க்கொண்டான். சாமியாரும் வைத்தியத்தில் தேர்ந்த ஆசாமியாகையால், பின்னுமொருதரம் பொற்றேடி யை யைப்பார்த்து “ஆகா! இவளைத்தானா இந்தவூர் வைத்தி யர்கள் இறந்துபோனதாய்ச் சொல்லிவிட்டார்கள். இந்தச் சாப்பாட்டுராமன்கள் பெரிய பெரிய பரிசைக் கொடுத்துத் தான் மிச்சம்; கைநாடி அறியக்கூடத் தெரியாத மடை யன்கள். அது கிடக்கட்டும். ஐயா, ராயரவர்களே, நீங்கள் இப்போது ஒரு காரியம் செய்யவேண்டும். நிமிஷநேரத்தில் சாமான் வந்து சேரவேண்டிய. இரண்டு சாமான்” என்றார்.

ராயர் — “சாமி, என்ன சாமான்? இதோ வருத்து கிறேன்.”

சாமியார் — “வேறொன்றுமில்லை. 150 கோழிமுட் டை, பக்காவுக்கு இரண்டு அல்லது மூன்றுபடி அரிசி

பால். இந்த இரண்டு சாமானும் இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் வந்து சேரவேண்டும்."

ராயர் —"அப்படியே செய்கிறேன். இதோ வருத்துகிறேன். அவ்வளவுதானே வேறொன்றும் வேண்டாமே?"

சாமியார்:—"முதலில் இது வந்துசேரட்டும். பிறகு சொல்லுகிறேன்." ராயர் "நல்லது" என்று வெளியேபோய் இரண்டு மூன்று சேவகர்களைக் கூப்பிட்டார்.

இந்தச் சமயத்தில் தெருவாசலில் ஒரு இரட்டைக் குதிரை சாரட்டில் ஒருவர் வந்து கீழே இறங்கினார். அவர்தான் மகாராஜா திருமலையப்பநாயக்கரவர்கள். இவரைக் கண்டவுடனே

ராயர்:—"மகாராஜா! ஆசீர்வாதம்" என்றார்.

மகாராஜா:—"என்ன! பொற்கொடி பிழைத்துக்கொண்டாளா! சுகமாயிருக்கிறாளா? சாமியாரவர்களும் சோனைப்பிள்ளையும் இப்போதானே வந்தார்களாம்?"

ராயர்:—"மகாராஜா, ஆம் பிழைத்துக்கொண்டாள். கடவுள் காப்பாற்றினார். இன்னும் குறையும் காப்பாற்ற வேண்டும்." என்றார்.

இப்படி மகாராஜா தெருவாசலில் நிற்கிறார் என்பதைக் கேட்டு சாமியார் திடீரென்று வெளியேவந்து "மகாராஜா வரட்டும். வரட்டும் நமஸ்காரம்" என்று சொல்லுமுன்னமே,

மகாராஜா:—"சாமி வரட்டுமா, வரட்டும். நமஸ்காரம்" என்று சொல்லிக்கொண்டு பொற்றொடியைப்பற்றி விசாரித்தார்.

சாமியார்—"ஏதோ, ஜகதீசன் ஸ்ரீநாகலிங்கநாதர் கிருபையால் பிழைத்தாள். மகாராஜா மட்டும் ஒரு காரியம் செய்யவேண்டும். 150, 200 கோழி முட்டையும் 2, 3 படி ஆவின் பாலும் இன்னும் ஒருமணி நேரத்திற்குள் தருவித்துக்கொடுக்க வேணும். அது வந்துதான் பொற்றொடி துறையும் பிழைக்கவேணும்" என்றார்.

மகாராஜா:—"அப்படியே இதோ வருத்துகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பழையபடி சாரட்டிலேறிக்கொண்டு அரண்மனைக்குப் போய்விட்டார்.

இவைகளெல்லாம் நிற்கும் வீரன் வெளியே வரவே இல்லை; அப்புறம் இப்புறம் நகரவேயில்லை. கண்களில் நீர் ததும்ப வடித்துக்கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக்கொண்டு "பொற்கொடி! பொற்றொடி" என்று புலம்புவான். விதியை எண்ணிப் பொற்றொடிக்கு விசிறுவான். அவள் முகத்தை வஸ்திரத்தால் துடைப்பான். அவள் சரீரத்தில் காற்றுப்படாமலிருக்கும்படி கம்பளிகளைக் கொண்டு மூடுவான். அவள் முகத்தை உற்றுப்பார்ப்பான். பைத்தியக்காரனைப்போல் அங்குமிங்கும் விழிப்பான். சாமி பிழைப்பாளா, இனி பிழைத்துக்கொள்வாளா?" என்று சாமியாரிடம் கேட்பான். இதற்குள்,

சாமியார்:—"அப்பா பயப்படாதே. உன் அதிஷ்டப்படிக்கெல்லாம் கடவுள் காப்பாற்றுவார் இவ்வளவா

வது கண்ணை திறந்து பார்ப்பாளென்று நம்பினோமா பொறு பொறு" என்று அவனை ஆற்றுவார். கையை நிமிஷத்துக்கொருதரம் பிடித்துப்பார்த்து "கொஞ்சம், இன்னும் கொஞ்சங் குணம். இனிப் பயமில்லை" என்றிப்படிச் சொல்லிக்கொண்டிருந்தார் பக்கத்திலிருக்கும், மீநாக்ஷி மேடைப் பிள்ளை, சிராளன் தாயார், முத்தம்மாள், சங்கரன், ஜட்ஜ், துளசி முதலிய எல்லாரும் கொஞ்சம் பயந் தீர்ந்து சிறிது ஆறுதலா யிருந்தார்கள். எல்லாரும் இரண்டு நாள், மூன்று நாள் நான்கு நாள் பட்டினியா யிருந்தாலும் பொற்றொடி பிழைத்துக்கொண்டா ளென்று சந்தோஷப் பட்டார்கள்.

இதற்குள் மகாராஜா திருமலையப்ப நாயக்கரவர்களும் பத்து நூறு குதிரைச் சேவகர்களைப்பட்டணத்திலுள்ள ஒவ்வொரு தெருவிற்கும் சுற்றுக்கிராமங்களுக்கும் அனுப்பி, அங்கங்கே கிடைக்கும் முட்டைகளையும், பாலையும் நிமிஷம் கொண்டுவரும்படி உத்தரவுசெய்தார். மகாராஜாவுடைய ஆஞ்ஞையாகையால் முட்டைகளும் 300, 400 வந்து சேர்ந்தன. காடுகரை வயல்களில் நின்ற ஸ்திரீகளும், மகாராஜாவுடைய ஆஞ்ஞைக்குப் பயந்தும், பொற்றொடி பிழைத்துக்கொண்டாள் என்ற சந்தோஷத்தினாலும், தமது பிள்ளைகளுக்குக்கூட மிச்சமில்லாமல் பாலைக் கறந்து கொடுத்தார்கள். இப்படி எத்தனையோ ஸ்திரீகள் கொடுக்க பக்காவுக்கு 5, 6 படி பால் தயாராய் ஒருமணி நேரத்துக்கெல்லாம் மகாராஜா சாமியாருக் கனுப்பினார்.

இதைப் பெற்றுக்கொண்டு சாமியாரும் முட்டைகளையெல்லாம் உடைத்து ஒன்றாய்ப்போட்டு அடுப்பில் வைத்து

என்னென்ன பக்குவமெல்லாமோ செய்து அதன்றி இந் [illegible] விசேஷமான [illegible] ஒரு ஒரு அரைமணி நேரத்தில் தயார் செய்துவிட்டார். இதற்கெல்லாம் முத்தம்மாளும், மீனாக்ஷியும், தாசியும் கூட நின்று அடுப்பெரித்து உதவிசெய்தார்கள்.

ஆனால் இது இன்ன மருந்து, இன்ன பெயர், இன்ன பக்குவமென்று அது தன் ஒரு மனிதனுக்கும், ஒரு வைத்தியனுக்கும், ஒரு டாக்டருக்கும் தெரியவில்லை. உடனே சாமியார் தயார் செய்யப்பட்ட மருந்தை பொற்கொடியண்டை கொண்டு வந்து தன் கைவசமிருந்த மிகவும் விசேஷமான ராஜாப் பூவர்ணமுள்ள ஒரு பொடியைக்கலந்து பொற்கொடியின் வாயில் ஊட்டினார். அதன் பின் கொஞ்சம் பாலைப்புகட்டினார். இது கொஞ்சம் கொஞ்சமாய் உள்ளே இறங்கிற்று. இப்படி இம்மருந்தை சாப்பிட்டுப்போய் ஒரு அரைமணி நேரத்துக்கெல்லாம் பொற்கொடி கண்களை நன்றாய் விழித்துப்பார்த்தாள். சோளன் தன் பக்கத்திலிருப்பதையும் கண்டாள். அது, சோளன்தான் என்று அவள் நன்றாய் அறிந்தது போலவும் தோன்றிற்று. மயங்கிய வண்ணமாய்ப் படுத்திருந்த பொற்கொடி இப்பொழுது கொஞ்சம் புரண்டு சாய்ந்து படுத்தாள். தனது இரண்டு கைகளையும் தூக்கிச் சோளன் மடிமேற் போட்டாள். இவ்வளவும் காணவே,

சோளன் :—'பொற்கொடி நான் வந்துவிட்டேன், வந்துவிட்டேன். பயப்படாதே. உனக்கு ஒன்றும் செய்யாது. பிழைத்துக் கொள்வாய். கொஞ்சமும் பயப்

படாதே, கண்மணி! என் பொற்றொடி! என் பொற்றொடி" என்று ஆறுதல் சொன்னான்.

இவன் சொல்வது இன்னதுதானென்று பொற்றொடி காதுக்கு நன்றாய்க் கேட்டது. பதில் சொல்லவேணுமென்றோ அல்லது என்ன சொல்லவெண்ணியோ பொற்றொடியும் வாயைத் திறந்தாள். ஆனால் பேச நாவெழும்பவில்லை. வாய் குழறுகிறது. பேசவும் சக்தியில்லை. இதற்குள், சாமியார், வீட்டிற்குள் நின்றுகொண்டிருந்த அந்நிய ஜனங்களையெல்லாம் வெளியே போய் உட்காரும்படி சொல்லியனுப்பிவிட்டுத் தானும் ஜட்ஜானாக வெளியேவந்து, பிராஸ்கார்த்திகேசர் ஆலயத்திற்கும் வேறு சில்லறைக் கோயில்களுக்கும் பூஜை நைவேத்தியம் முதலியவைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளுக்கும், பொற்றொடி பேருக்கும், சீராளன் பேருக்கும் எல்லாக் கோயில்களிலும் அருச்சனை செய்யும்படிக்கும், உத்தரவுசெய்து அன்றையதினம் ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் கொடுப்பதற்காகச் சமயல் வேலைகள் நடக்கும்படியும் திட்டம்செய்தார்.

இதற்குள் மணியும் பத்து ஆய்விட்டது. பொற்றொடியும் சாதாரணமாய்க் கைகால்களை நீட்டவும் மடக்கவும் உருண்டுபுரண்டு படுக்கவும் தொடங்கினாள். சீராளனும் "பொற்றொடி, என்னவேணும்? சொல்லு." என்று உபசாரம்செய்வான். அப்பொழுது பொற்றொடி, சீராளனது ஒரு கையைத் தனது கையாற் பிடித்துத் தனது முகத்தின்மேல் வைத்துக்கொண்டு முத்தமிட்டு, என்னத்தையோ மனதில் நினைத்து வருந்தி விம்மி விம்மியழுதாள். இதைக்கண்ட,

சீராளன்:--"பொற்றொடி, ஏனழுகிறாய்? இனியென்ன உனக்கு? இப்படியெல்லாம் வந்துவிட்டதேயென் றழுகிறாயா? அல்லது நான் என்னென்ன கஷ்டப்பட்டேனோவென்பதை நினைத்து அழுகிறாயா? ஆமா பொற்றொடி! எதற்காக அழுகிறாய்? அழாதே. சும்மா (மறுபடியும் அவள் அழுவதைக்கண்டு) சொன்னால் கேள் அழாதே" என்று அவளை ஆற்றிக்கொண்டு, அவள் இன்னுமழுவதைக்கண்டு சகியாமல் தானும் விம்மி விம்மியழுகிறான், இவ்வாறு இவனழுவதைக்கண்டு சகியாமற் பொற்றொடியும் வாய்திறந்து பேச முடியாமல், அவனை யழவேண்டாமென்று கையினால் ஜாடை செய்தாள். இப்படி இருவரும் ஒருவரையொருவர் பார்த்து அழுவதைக் கண்டபாட்டி முதலிய

ஸ்திரீகள்:-"அம்மா பொற்றொடி! தாயே, சும்மா இரு. அழப்படுமோ? உனக்குக் குணமாய் விட்டது. இன்னும் இரண்டு நாட்களில் சுகமாய்விடும். பிறகு எல்லாருமாய் கோபாலபுரத்துக்குப் போய்விட்டு வருவோம். உனதருமைப் பிள்ளை சீராளன் வந்துவிட்டான். நீயும் பிழைத்துக் கொண்டாய். இனி என்ன குறை? போனது போகட்டும். போன காரியத்தை மறந்துவிடு. அப்பா சீராளா நீயுமேன் அழுகிறாய் சும்மா இரு. அவள்தான் அழுகிறாள். நீயும் கூட அழலாமோ ஆண்பிள்ளை? சும்மா இருக்கவும். சீராளா நீ எப்போது எங்கே சாப்பிட்டாய்? இதுவரை எங்கேயிருந்தாய்?" என்று கேட்டார்கள்.

இந்தச் சமயத்தில் வெளித் திண்ணையிலிருந்து கொண்டு சாமியார் தான் கோர்ட்டு விசாரணை முடிந்தபின்பு திருசிராபள்ளிக்குப் போனதையும் அங்கிருந்து

சிறைக்காட்டுக்குப் போய் காளிங்கராயபிள்ளையையும், சீராளனையும் கண்டதையும் விவரமாய் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். ராயரும், மேடைப்பிள்ளையும், சங்கரனும், மற்ற வந்திருந்த ஜனங்களும் வெகு கவனமாயும் ஆச்சரியத்தோடும் ஆநந்தத்தோடும் செவி கொடுத்துக் கேட்கிறார்கள். இந்தப்பேச்சைக் கேட்டு வீட்டுக் குள்ளிருந்த பொற்றொடி தாயார், துளசி முதலிய ஸ்திரீகளும் அதைக் கவனமாய்க் கேட்டார்கள். திண்ணையில் சுவாமியாருடன் உட்கார்ந்து கொண்டிருந்த காளிங்கராய பிள்ளையும், குற்றாலத் தேவரும் தாங்கள் எடுத்துச் சொல்லவேண்டிய விவரங்களைச் சொன்னார்கள், உடனே எல்லா ஸ்திரீகளும் வெளியேவந்து காளிங்கராய பிள்ளையை உற்றுப் பார்த்துக்கொண்டு, "இவர் தானு அந்த ஐயா! ஐயா! நீங்கள் தானு சீராளனைக் காப்பாற்றினீர்கள்? நீங்கள் தெய்வம் போல்வந் திராவிட்டால் சீராளன் எப்படி ஆயிருப்பானே." என்று சொன்னார்கள்.

சிவகாமி:—"ஐயா! மகாராஜன், நீங்கள் நல்லாயிருக்க வேணும். நீங்கள் தான் என் பிள்ளையைக் காப்பாற்றி எனக்குப் பிள்ளைப் பிக்ஷையும், பொற்றொடிக்கு தாலிப் பிக்ஷையும் கொடுத்த புண்ணியவான். உங்களுக்கு நாங்கள் என்ன பிரதி யுபகாரம் செய்யப் போகிறோம்?" என்று சொன்னாள்.

இவ்வாறே மீனாக்ஷி முதலிய ஒவ்வொரு ஸ்திரீயும் ஒவ்வொன்றைச் சொல்லிக் காளிங்கராயபிள்ளையைப் பற்றிப் புகழ்ந்து துதித்தார்கள்.

ராயர்:—"ஐயா பிள்ளையவாள்! உங்களுக்குத் தருமமே துணை செய்யும். உங்களுடைய வாரண்டைப் பற்றிக் கொ

ஞ்சமும் பயப்படவேண்டாம். இடையபுரத்துக்காரன் ஜயிலுக்குப் போய்விட்டான். இதை வைத்துக்கொண்டே நீங்கள் தப்பித்துக் கொள்ளலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் என்னுலியன்றமட்டும் செய்கிறேன். இனிமேல் நீங்கள் மறைந்திருக்க வேண்டாம். சும்மா வழக்கம் போலவே யிருந்துகொண்டு நேரே கோர்ட்டில் ஆஜராகி வாக்குமூலம் கொடுங்கள். எல்லாம் சரியாய்ப் போகும். பயப்படவேண்டாம்" என்றார்.

சாமியார்:—"அது சரிதான். இனிமே லென்ன ஒருகை பார்க்கலாம். அதைப்பற்றி என்ன? எல்லாம் பொற்றொடிக்குக் குணமாகட்டும். அதற்குவேண்டிய வேலைசெய்வோம்."

பொற்றொடியின் தகப்பனர் நடந்த சம்பாஷணை எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே யிருந்தார்.

துளசி;—"ஐயா பிள்ளையவாள்! நீங்களும், தேவரும் எப்போது சாப்பிட்டீர்கள்? நீங்களும் சீராளப்பிள்ளையும் சாப்பிடுங்கள்" என்று உபசரித்தாள்.

முத்தம்மாள்:—"சமயலாகக் கொஞ்சம் நேரம் செல்லும்; பலகாரம் வாங்கிக்கொண்டு வருகிறேன். எல்லாரும் சாப்பிடுங்கள்" என்று பலகாரம் வருத்தி எல்லாரையுஞ் சாப்பிடச் சொன்னுள்.

காளிங்கராயபிள்ளையும், குற்றாலத்தேவரும் சாப்பிட்டார்கள்.

சீராளன், "இப்போதுதான் நான் சாப்பிட்டேன்"என்று சொல்லிவிட்டபடியால் சாமியாரும், சாப்பிடவில்லை என்று

சொல்லிவிட்டார். இதற்குள் பொற்றொடி கொஞ்சம் கொஞ்சமாய்க் குளறிக் குளறிப் பேசவும் ஆரம்பித்துவிட்டாள். எல்லாரும் சீராளனைச் சாப்பிடும்படி சொன்னதையும், அவன் சாப்பிட மறுத்ததையும் குறிப்பா லறிந்துகொண்ட பொற்றொடி அவனைச் சாப்பிடும்படி மெல்லச் சொன்னாள். ஆனால் சீராளனுக்கு பொற்றொடியை விட்டு அப்புறம் இப்புறம் அரை நிமிஷமாவது பிரிந்துசெல்லச் சம்மதமில்லா திருந்தாலும், பொற்றொடியே வாய்திறந்து சாப்பிடும்படி சொல்லிவிட்டபடியாலும், பொற்றொடி யண்டை யிருந்து கொண்டு சாதத்தைக் கையில் உருட்டிப் போடும்படி முத்தம்மாளிடம் சொல்ல, அவளும் அப்படியே உருட்டிப் போட்டாள். சீராளனும் சிறிது சாப்பிட்டுக் களைப்பாறினன். அதன் பின் சாமியார், ராயர், மேடைப்பிள்ளை மூன்றுபேரும் சாப்பிட்டார்கள். அதன்பின் மூன்றுநான்கு நாளாய் பட்டினியே கிடக்கிற மீநாக்ஷி, பாட்டி, சீராளன் தாயார், துளசி முதலிய ஸ்திரீகளும் சாப்பிட்டார்கள். பின்பு சாமியார் உத்தரவுப்படியே தயார் செய்யப்பட்ட ரவைக் கஞ்சியை பாட்டியம்மாள் கொணர்ந்து கொடுக்க, அதை வாங்கிச் சீராளன் பொற்றொடிக்குக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் புகட்டினன். புகட்டும் பொழுதே "பொற்றொடி! சாப்பிடு. மையச் சாப்பிடு, ஜலம் வேண்டுமா? கல்யாண முடிந்தபிறகு ஷட்ரஸம் பரிமாறுகையில் நீ எனக்கு அன்னம் படைக்க வேண்டியதற்குப் பதிலாய் இன்று முதல் முதல், நானேயுனக்குக் கஞ்சிபுகட்டும்படி நேரிட்டது. ஈசன் செயல் இப்படி யெல்லாமிருக்கிறது." என்று சொன்னன். இதைக் கேட்டவுடன்,

சாமியார்:—“ நல்லதப்பா நல்லது; உன்ஞாபகம் எங்கே யெல்லாம் போகிறது! வேண்டுமானால் பொற்றொடிக்கு குணமானவுடன் அவள் ஷட்ரஸம் பரிமாறுவாள். நன்றாய்ச் சாப்பிடேன். இதுதானா பெரியகாரியம்? அவள் பிழைத்ததே போதும். ஏனம்மா பொற்றொடி! அப்படிச் செய்வாயல்லவா, ஷட்ரஸம் எப்போது பரிமாறுவாய்?” என்று சந்தோஷமாய்க் கேட்டார்.

இதுவரை பேசக்கூடப் பலமின்றிக் கிடந்த பொற்றொடி சாமியாருடைய பரிகாச வார்த்தையைக் கேட்டவுடன் சிறிது வாய்திறந்து மெல்ல சிரித்தாள், இதைக்கண்ட

முத்தம்மாள்:—“ அம்மா பொற்றொடி! சிரித்துக் கொள்கிறாயா? சீராளா நீ யேன் சிரிக்கிறாயில்லை” என்று கேட்டாள். அதன்பின் சீராளனும் சிரித்தான். உடனே எல்லாரும் சிரித்தார்கள். இது முதல் சகலரும் எல்லாத் துக்கத்தையும் நீக்கி சந்தோஷக் கடலில் மூழ்கினார்கள். மணி 3, $3\frac{1}{2}$ க்கெல்லாம் சமயலாய் விட்டது. சாமியார், ராயர் முதலிய எல்லாரும் வெந்நீரில் ஸ்நானஞ் செய்தார்கள். நாலைந்து நாளாய் ஸ்நாநம் அநுஷ்டானம் ஒன்றுமில்லா திருக்கும் ஸ்திரீகளும் 4 மணிக்கெல்லாம் ஸ்நாநம் செய்தார்கள். உடனே எல்லாரும் போஜனம் செய்தவுடன் சுமார் 1000 ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்யப்பட்டது. இரவு ஏழு மணிக்கெல்லாம் ராயரும், துளசியும், சாமியாரும், காளிங்கராயபிள்ளையும் சீராளனையும் கூட்டிக்கொண்டு மீநாக்ஷி கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்துவிட்டு வந்து பொற்றொடியின் நெற்றியில் விபூதியைப் பூசினார்கள். இரவு 10 மணிக்கெல்லாம் பொற்றொடி கொஞ்சம் எழுந்திருக்கவும்,

சாய்ந்து கொள்ளவும் கூடிய நிலைமைக்கு வந்து விட்டாள். இரவு முத்தம்மாளுடைய மார்பிற் சாய்ந்துகொண்டே போற்றேடி நன்றாய்ப் பேசிக் கொண்டும், சீராளன் தனது விருத்தாந்தங்களைத் தன் வாயினாற் சொல்ல அவற்றை அன் போடு கேட்டுக் கொண்டும், துக்கித்துக்கொண்டும், சந்தோ ஷித்துக் கொண்டும், வாழ்த்திக் கொண்டும் இருந்தாள்.

இவ்வாறு இராப்பொழுது கழிந்தது. இன்றிரவுதான் போற்றேடிக்குச் சிறிது தூக்கமும் வந்தது. மற்ற ஸ்திரீ களும் சற்று தூங்கினார்கள். ஆனால், சீராளன், சாமியார், ராயர், மேடைப் பிள்ளை, காளிங்கராய பிள்ளை, குற்றாலத் தேவர், சங்கரன் முதலிய ஆண் பிள்ளைகள் எல்லாரும் சுமார் 12 ஒரு மணி வரையும் சீராளன் சிறைக்காட்டுக்குப் போகுமுன் பட்ட அவஸ்தைகளைப் பற்றியும், இடையபுரம் ஜமீந்தார், வெள்ளையப்பன், இவர்களுடைய அக்கிரமங்களைப் பற்றியும், அவர்களுக்குக் கடவுள் விதித்த விதியைப் பற்றி யும், கிணற்றுத் கலகத்தைப் பற்றியும், சிறைக்காட்டில் கட் டுண்டு கிடக்கிற கூந்தற்பனையூர் சுப்பபிள்ளை, சின்னஞ் சேர்வை இவர்களின் துஷ்டத்தனத்தைப் பற்றியும் பற்பல விதமாய்ப் பேசிக் கொண்டிருந்துவிட்டுப் பின்பு சுமார் இரண்டு மணிக்குப் படுத்துக்கொண்டார்கள். ஆனால் சீராளனுக்கு மட்டும் நன்றாய்த் தூக்கம் வரவில்லை. விடியற் காலம் $4\frac{1}{2}$-5மணிக்கெல்லாம் போற்றேடி எல்லாருக்கும் முன்னமே எழுந்திருந்துகொண்டு பாட்டியையும் தாயை யும் கூப்பிட்டு எழுப்பினாள். அவர்களும் உடனே எழுந்து "அம்மா! என்ன வேணும், கஞ்சி வேணுமா? தண்ணீர் வேணுமா" என்று கேட்டார்கள்.

பொற்ருெடி:—"அவர்க ளெங்கே?" என்ருள்.

முத்தம்மாள்:—"யாரையம்மா சொல்லுகிருய்? சீராள னையா எங்கே யென்கிருய்?" என்ன, பொற்ருெடி "ஆம்" என்றனள்.

அப்போது விழித்துக் கொண்டு படுத்திருக்கும் சீரா ளன் இந்த சப்தம் கேட்டு உடனே எழுந்தோடி வீட்டுக்குள் வந்து, "பொற்ருெடி! என்ன? என்ன வேணும்? இதோ இருக்கிறேன்" என்ருன்.

பொற்ருெடி:—ஒன்றும் வேண்டாம். சும்மாதான் கூப் பிட்டேன்" என்ருள். இதற்குள் எல்லா ஆண் பிள்ளைகளும் ஸ்திரீகளும் விழித்துப் பழையபடியே பழைய சமாசாரங்களை முன்னிலும் விவரமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். பொற்ருெடி, சீராளனுடைய சரீரத்தில் உள்ள காயங்களைப் பார்த்து அவனுடைய தேகம் மெலிந்திருப்பதற்காக மனம் வருந்தினள். இதற்குள் நன்ருய் விடிந்துவிட்டது. பொற் ருெடி, தானே எழுந்து உட்கார்ந்துகொண்டு "சாமி! சாமி!" என்று கூப்பிட்டாள். சாமியாரும் "என்னம்மா!" என்று உள்ளே வந்தார். பொற்ருெடி, "நான் பிழைத்துக் கொள் வேனு? என்னுடைய கையைப் பாருங்கள், என்னுல் எத் தனை பேர் என்னென்ன கஷ்டமெல்லாம் பட்டுவிட்டார்கள். நானும் அவர்களும்தான் பட்டது சரி. என்னுடைய பெற் ருேரும், அத்தையவர்களும் எங்களைப்பெற்ற கடனுக்காக இத்தனையும் பட்டார்கள். சாமி! நீங்களும், ஐயா ஜட்ஜ எஜ மானும் அவர்கள் மனைவியும், என் தங்கமான பாட்டியும் இத்தனை கஷ்டப்பட்டீர்களே! உங்களுக்கு நாங்களிருவரும்

என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறோம்? இதெல்லாம் விட்டு, அந்த ஐயா பழமலைப் பிள்ளையவாள், எனது நாயகருக்கு உயிர்ப் பிச்சையும் எனக்கு மாங்கல்யப் பிச்சையும் கொடுத்தார்களே. அவர்களுக்கு நான் இன்னும் கோடிஜன்மம் பிறந்து ஊழியஞ் செய்தாலும் காணுதே!" என்று குயில் போன்ற இனிய மொழிகளாற் சொன்னுள். இதைக் கேட்ட,

முத்தம்:—"அம்மா, நீ என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிருய்! கடவுள் கிருபையால் நீங்கள் இரண்டுபேரும் நன்ருயிருக்கவேண்டியது. ஐந்தாறு பத்தெட்டுப் பிள்ளைகளைப் பெற்று இவர்களுடைய பேரிட்டுவிடு" என்று பரிகாசமாய்ச் சொன்னுள். இதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் வெட்கிப் பொற்ருேடி பேசா திருந்தாலும், மீனாக்ஷி, "அதற்கும் தடையா? அவள் பிள்ளைகளைப் பெற்ருல் போதும். பேரிட்டழைப்பதா பெரிய காரியம்?" என்ருள்.

இதற்குள் சாமியாரும் பொற்ருேடி கையைப்பார்த்து, "அம்மா உனக்கு மிகவும் குணமாய்விட்டது. முக்கால் வாசிக்குமேலே குணம்தான். இன்னும் கால்வாசியும் நாளைக்குள் குணமாய்விடும்" என்று சொல்லித் தேற்றினுர்.

இந்தச் சமயத்தில் இதுவரையும் ஒன்றும் பேசாமல் மவுனமாயிருந்த பொற்ருேடியின் தகப்பனுர் மேடைப்பிள்ளை மெதுவாய் வீட்டிற்குள்வந்து சாமியாரண்டை உட்கார்ந்தார் சாமியாராவது அல்லது சிராளனுவது இந்த நிமிஷம் வரை இவரிடம் ஒன்றுமே பேசவில்லை. முன் பெண் தரமாட்டேனென்று பிடிவாதஞ் செய்தாரென்ற ஒரு கோபத்தினுல் மேடைப்பிள்ளையிடம் முகம் கொடுத்துப் பேச இந்த இரண்டு

பேருக்கும் நாவெழும்பவில்லை. ஆனாலும் சாமியார் அதை யெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு மேடைப்பிள்ளையைப் பார்த்து "ஐயா மேடைப்பிள்ளையவாள்! உட்காருங்கள், நீங்கள் தானே மகா-ள-ள-ஸ்ரீ வெள்ளையப்பிள்ளை யவாளு டைய அருமை மாமனார்? நல்லது உட்காருங்கள். உங்கள் ஆசை மருமகனும், பயல் இடையபுரம் கோனேறி யென்ற பாமபோக்யனும் சந்திரகிரி காராக்கிரஹ கலாசாலையிலே வாசிக்கிறார்கள். தெரியுமல்லவா?" என்று மிகுந்த வெப்பத் தோடு சொன்னார்.

சீராளன்:—"அவர்கள் போகிறார்கள் சாமி, வேறே பேச்சைப் பேசுங்கள்." என்றான்.

இப்படிச் சீராளன் சொல்வதைக் கேட்ட பொற்ஜெடி மனதில் என்னவோ எண்ணி மெல்லச் சிரித்துக்கொண்டு சீராளன் முகத்தையும், தன் தகப்பனார் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்துவிட்டாள். மறு படியும்,

சாமியார்:—"அது சரிதான்; போனது போகட்டும். மேடைப்பிள்ளையவாளே, நீங்கள் கோபாலபுரமிருந்து எப் போது வந்தீர்கள்? என்ன சமாசாரம்? மகளுக்கும், மரு மகனுக்கும் மறுவீடு எப்போது?" என்று கேட்டார்.

மேடைப்பிள்ளை பதில் சொல்ல நாவெழும்பாமல் வெட் கித் தலை குனிந்து கொண்டிருந்தார்.

சாமியார்:—"என்ன பிள்ளையவாள், பேச்சைக்காணோம்? சொல்லுங்கள். எப்போது மறுவீடு?" என்று திரும்பவும் கேட்டார்.

மேடைப்பிள்ளை:—"எல்லாம் சிக்கிரம் நடக்கவேண்டியதுதான்." என்று உதட்டோடு உதடு அசையாமல் மெல்ல முணங்கினர்.

இதற்குள் ராயரும், அவர் மனைவியும் "அதற்கென்ன நடத்துவார்கள். எல்லாத்துக்கும் பொற்ரேடி உடம்பு கொஞ்சம் தேறட்டும். நாங்களும் வால்தேருக்குப் புறப்படவேண்டும். சீக்கிரம் மறுவீடு நடத்தவேண்டியதுதான்" என்ருர்கள்.

சாமியார்:—"இதற்கென்ன? உடம்பு தேற ஒரு வருஷமா செல்லப் போகின்றது; இன்னும் இரண்டு நாளைக்குள் பொற்ரேடி பழையபடி வந்துவிடுவாள்; அவளுக்கென்ன காய்ச்சலா தலைவலியா? ஒன்றுமில்லை. சீராளனைப் பிரிந்ததுதான் அவளுடைய அசௌக்கியம்; அதுதான் நோய்; அவனைக் கண்டதுதான் அதற்கு ஔஷதம். ஆனுல் இதுவரை சீராளன் மட்டும் வரவில்லையோ அவள்கதி இதற்குள் அதோ கதிதான்! இதையறியாமல் இந்தவூர் முட்டாள் வைத்தியர்கள் கண்ட மருந்துகளை யெல்லாம் கொடுத்து என்ன பிரயோஜனம்? பௌதிக நோய்க்குத்தான் பௌதிகமருந்து பலன்தருமே யன்றி மனநோய்க்கு இந்த மருந்துகள் என்ன செய்யும்? வைத்திய மென்ருல் இலகுவான காரியமா? அவர்கள் படித்தது அவ்வளவுதான். எந்த முன்னோர் செய்த தவமோ இம்மட்டிலும் சரியாய்ப் போய்விட்டது. என்ன ராயரவாள்! நான் சொல்வது சரிதானு? சீராளனுக்கும் அபாயம் நேரிட்டு பொற்ரேடி பாடும் ஒருவிதமாய் ஆய்விட்டால் நாம் இருவரும், இந்த வுலகில் உயிர் வைத்திருக்கலாமா? நம்மிருவருக்கும் பாவிப்பட்டம் கட்டிப் பறை சாற்றிவிடுவார்

களை ஊரிலுள்ளவர்கள்! எல்லாருடைய நல்லகாலமும் காரியம் கெட்டி கெட்டி யென்று போய்விட்டது."

முத்தம்மாள்:—"அப்படியானால் இன்னும் நாலைந்து நாளைக்குள் மறுவீடு நடத்த முடியுமா சாமி?"

சாமியார்:—"எல்லாம் யோசித்துக் கொள்வோம்; கொஞ்சம் பொறு பாட்டி! பொறு. உனக்கு, கல்யாணம் மறுவீடு என்றால் ஏதோ உனக்கு நடக்கிறதுபோலத்தான் உன்பாடு. அவசரப்படாதே. பொற்றொடிக்கு இன்றைக்கும் கொஞ்சம் கஞ்சிதானே போட்டுக் கொடு; வேண்டுமானால் நாளைக்குச் சாதம் கொடுக்கலாம்" என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார்.

பின்பு எல்லாருமாய்க் கூடி மறுவீட்டு விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில் ஒரு சேவகன் மகாராஜா திருமலையப்பநாயக்கரவர்களிடமிருந்து ஒரு கடிதம் சாமியாருக்குக் கொண்டுவந்து கொடுத்தான். அதைச் சாமியார் வாங்கி உடைத்துப் பார்க்கவும், அதில் பொற்றொடியின் க்ஷேமத்தைப்பற்றி விசாரித்தெழுதி யிருந்ததுமன்றி சப்ஜட்ஜ் சத்தியசீலராயரவர்கள் சீக்கிரமாய் வால்மீகருக்குப் புறப்படப் போகிறபடியால் அவர்கள்புறப்படும் தினத்தன்று அவர்களுக்கு மகாராஜாவும் ஆலவாய்ப்பட்டணத்துப் பொதுஜனங்களும் ஒரு வந்தனோபசாரப் பத்திரம் வாசிப்பதற்காக ஒரு பிரசித்த கூட்டம் கூடவேண்டுமென்றும், அது விஷயமாய் யோசனைசெய்வதற்காக சாமியார், மகாராஜா அரண்மனைக்கு வரவேண்டுமென்றும் சுருக்கமாய் எழுதியிருந்தது.

இதை வாசித்த சாமியார், மிகுந்த சந்தோஷமடைந்து இராயரோடு யோசனை செய்தார். இராயரும் அப்படிச்செய்வது தமக்கும் சம்மதமே யென்றும் ஆனால் கோபாலபுரம் மறுவீட்டுக்குத் தானும், மனைவியும் போகவேண்டியிருப்பதால் மறுவீட்டு முகூர்த்தத்தை நிச்சயம் செய்துகொண்டு மற்றக் காரியங்களை நடத்த வேண்டுமென்றும் சொன்னார். துளசியிடம் கேட்டதில் அவள் கோபாலபுரம் மறுவீடு நடந்தவுடன் பொற்றேடியையும் சீராளனையும் வால்தேருக்குக் கூட்டிக் கொண்டுபோய் ஒரு மாத காலம் தன் வீட்டில் வைத்திருந்து, பின்பு அனுப்பவேண்டுமென்ற ஆசையிருப்பதாய்ச் சொன்னாள். சாமியாரும் இவைகளெல்லாவற்றையும் யோசித்து மேடைப்பிள்ளையினுடைய அபிப்பிராயத்தையும் கலந்து கொண்டு முடிவில் சீராளன், பொற்றேடியினுடைய அனுமதியும் பெற்றுக்கொண்டு மகாராஜாவிடம்போய் இன்னும் 5 தினத்துக்குள்—அதாவது அடுத்த ஞாயிற்றுக்கிழமை மாலை ராயருக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசிப்பதற்குக் கூட்டம் கூடலாமென்றும், அந்தக் கூட்டத்தில் மகாராஜா அவர்களை சபாநாயக ராயிருக்க வேண்டுமென்றும் அந்தச் சமயம் தான் 'பணம்பற்றி மணமா அல்லது குணம்பற்றி மணமா?' என்னும் பீடிகையை வைத்து ஒரு பிரசங்கம் செய்வதாயும் மறுநாள் திங்கட் கிழமை மாலை எல்லாரும் கோபாலபுரம் மறுவீட்டுக்குப் புறப்பட்டுப் போவதாயும் தெரிவித்துவிட்டு வீட்டுக்கு வந்து, மறுவீட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யும்படி மேடைப்பிள்ளையைக் கோபாலபுரம் போகும்படி யனுப்பினார். மேடைப்பிள்ளையும் கூட இரண்டு நாள் ஆலவாயிலிருந்து பொற்றேடி நாளுக்கு நாள் சுகம்

பெற்றுவருவதைக் கண்டு சந்தோஷப்பட்டு, மூன்றும் நாள் ஆலவாயில்தானே, மேளகாரர், பாட்டுக்காரர், பல்லக்குக் காரர் முதலியவர்களுக்குத் திட்டம் செய்துவிட்டுக் கோபாலபுரம் போய் ஞாயிற்றுக்கிழமை பன்னிரண்டு மணிக்குள் மறுவீட்டுக்கு வேண்டிய கொட்டகை, பட்டணப் பிரவேசம் முதலிய சகல சங்கதிகளையும் முடிவு செய்துவிட்டு மூன்று மணிக்கெல்லாம் பழையபடி மாப்பிள்ளை பெண்ணை அழைப்பதற்காக ஆலவாய்க்கு வந்து விட்டார்.

இதற்குள் பொற்றொடிக்கும் வரவரக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் படிப்படியாய் வியாதி குணப்பட்டு விட்டது. பொற்றொடி நன்றாய் எழுந்து நடமாடிக் கொள்ளக் கூடிய நிலைமைக்கு வந்து விட்டாள். உடம்பு மட்டும் பழைய தளதளப்பும் காந்தியும் திடனுமில்லாமல் கொஞ்சம் மெலிவாயும் வறண்டு மிருந்தது. ஞாயிற்றுக்கிழமை காலையில்தானே பொற்றொடிக்குத் தலைக்குத் தண்ணீர் வார்த்து விட்டார்கள். தண்ணீர் வார்த்தபின்பு அவளுடைய பழைய முக காந்தியும், அழகும், கொஞ்சம் கொஞ்சமாய்த் தோன்ற ஆரம்பித்து விட்டது. உச்சிகால தரிசனத்துக்காக எல்லாருமாய்ச் சீராளனையும், பொற்றொடியையும் கூட்டிக்கொண்டு மீனாக்ஷி ஆலயத்துக்குப் போய், சாக்ஷாத் மீனாக்ஷி சுந்தரேசுரர் தரிசனம் செய்துவரவும் எல்லாருடைய துக்கமும் சிறிதுமில்லாமல் மாறி சகலரும் ஆநந்தமாய்ப் பேசிக்கொண்டும், சிரித்து விளையாடிக் கொண்டு மிருந்தார்கள். பொற்றொடியின் சந்தோஷகரமான முகத்தை எப்போது பார்ப்போமென்று எதிர்பார்த் திருந்தவனும், இதுவரை அளவிடத்தகாத துக்க சாகரத்தில் மூழ்கி யழுந்தி வருந்தியவனுமாகிய சீராளன்

இன்று மத்தியானத்தில் போற்றேடி யதாப் பிரகாரம் பேசிக் கொண்டும் பாட்டியோடு சிரித்து விளையாடிக்கொண்டு மிருப்பதைக்கண்டு அளவில்லாத ஆநந்தமடைந்து விழித்த கண்ணிமையாமல் போற்றேடியைப் பார்த்துக்கொண்டே யிருந்தான். இன்னும் ஏதேனும் அபாயங்கள் வந்துவிடுமோ வென்றும் பயப்படுவான். கோபாலபுரம் மறுவீட்டைப் பற்றியும், வால்தேருக்குப் போகவேண்டிய விஷயத்தைப் பற்றியும், வால்தேருக்கு போய்விட்டுத் திருமங்கலத்துக்கு வந்து சேரவேண்டிய விஷயத்தைப்பற்றியும் நேரே போற் றேடி யண்டை கலந்து பேசவேண்டுமென எண்ணினன். ஆனல் இதுவரையும் சுகவீனமாருக்கும் பொழுது நாண மின்றி நாயகனேடு நன்ருய்ப் பேசிக்கொண்டிருந்த போற் றேடி தலைக்குத் தண்ணீர் வார்த்து மற்றப் பெண்களைப் போ லானபிறகு சீராளனேடு பழையபடி கூசாமல் எதிரில் வந்து பேசுவதற்குச் சிறிது நாணமுற்று ஒதுங்கிக் கொள்ளத் தலைப்பட்டாள். இதைக் குறிப்பாலறிந்த சீராளன் பாட்டி யிடம் தான்கொண்ட அபிப்பிராயங்களைத் தெரிவித்துப் போற்றேடியினுடைய அநுமதியையும் அபிப்பிராயத்தையும் கேட்டுச் சொல்லும்படி வேண்டினன்.

முத்தம்மாள்:—(அவ்வாறே செய்வதாய் சம்மதித்துப் பொற்றெடியண்டை வந்து) "அம்மா போற்றேடி! உங்க ளிருவருக்கும் விவாகமாகு முன்புதான் நான் தூது சொல்லி யலைந்துகொண்டிருந்தேன். அது நியாயம். இப்போது தாலிகட்டி நீங்களிருவரும் ஒன்றுனபிறகும் நான் தானு அங்குமிங்கும் தூது சொல்லிக் கொண் டலைய வேண்டும். எனக்கு எப்பொழுதும் ஆயுள்வரையும் இந்த தூது சொல்

னும் உத்தியோகம் தானுக்கும்? நல்லது; உன் மாப்பிள்ளை என்னவோ ரகஸியம் சொல்ல வேண்டுமென்று உன்னைக் கூப்பிடுகிறான். போ." என்றாள்.

இதைக் கேட்ட பொற்றேடி, "அதென்ன அப்படிச் சொல்லுகிறாய். இந்த உத்தியோகம் எல்லாருக்கும் கிடைக்குமா? இது உத்தியோகமல்லவே. பெரிய தருமமல்லவா அந்தத் தருமம் ஏதோ உனக்குக் கிடைத்தது. எல்லாருக்கும் கிடைக்குமா?" என்றாள்.

முத்தம்மாள்:—"அம்மா, உனக்குப் பேசவே தெரியாதே! சீராளன் தான் உனக்குப் பதிற்சொல்லவேணும். நான் என்னத்தைக் கண்டேன் கிழவி? உன்னுடைய வாய்ப்பேச்சுக்கும், நளினத்துக்கும் மயங்கியல்லவா பயல் சீராளன் அகப்பட்டான் உன் கண்ணியில்? உன் வலையிற் சிக்கிவிட்டானே! அடி பொற்றேடி! இனிவிடாதே. அவனிடம்போய் என்னவென்று கேட்டுக் கொண்டுவா. ஏதோ ரகஸியமாம், போ; சீக்கிரம் போ."

பொற்றேடி:—"என்ன பாட்டி! என்னவெல்லாமோ அடித்து வீசுகிறாயே; என்ன வலை? என்ன கண்ணி? யார் அகப்பட்டது? அவர்கள் அகப்பட்டாலும் நீதானே இழுத்துப் பிடித்துக் கையிலெடுத்துக் கொடுத்தவள்? பிடித்துக் கொடுத்தவள் நீ; பெற்றுக் கொண்டவள் நான்; அப்படியானால் வலை நீயா நானா சொல்லு? நீயில்லாவிட்டால் அவர்கள் அகப்படுவார்களா? ஆகையால் கண்ணி, வலையெல்லாம் நீ தான். நான் ஒன்றுமறியேன். சிறுபிள்ளை. அப்படித் தானே?"

முத்தம்மாள்:-"என்னவோ அம்மா! உன்னோடு, அதுவும் இக்காலத்து பொட்டச்சிகளோடு பேச என்னலாகாது; அவன் கூப்பிடுகிருன் போ."

பொற்றேடி:—"எதற்கென்று உனக்குத் தெரியாதா? சொல்லேன். நீ சொன்னாலும், அவர்கள் சொன்னாலும் சங்கதி ஒன்றுதானே?" என்றாள். முத்தம்மாள், "அப்படியாமா அம்மா? அவனாவேனு நான்? நான் பாட்டிதான்; அவன் அவன் தான்." என்றாள்.

பொற்றேடி:—"தெரியும். தெரியும். விரிக்க வேண்டாம்." போதும். சங்கதியைச் சொல்."

முத்தம்மாள்:—"சங்கதியா? மறுவீட்டுக்குப் பின்பு வால்தேருக்குப் போகவேண்டுமென்று துளசி அம்மாள் சொல்லுகிறார்களாம். அது உனக்குச் சம்மதம்தானு? அதன் பின் திருமங்கலத்துக்குப் போகவேண்டுமாம். அதுதான் உன்னுடைய சம்மதம் கேட்டுக்கொண்டுவரச் சொன்னான். என்ன சொல்லுகிறாய்? இனிமேல் எல்லாம் உன்னுடை உத்திரவில்லாமல் ஒன்றுமே செய்ய மாட்டானும். உன்பாடு யோகந்தான். என்னை மறந்துவிடாதே. என்னையும் நினைத்துக்கொள்."

பொற்றேடி:—"என்ன பாட்டி! உன்னை நினையாமல் வேறே யாரை நினைக்கப் போகிறேன்? இதற்கென்ன யோசனை? எல்லாம் அவர்க ளிஷ்டப்படியே நடக்கட்டும். அவர்களுக்கு எது யுக்தமாய்த் தோன்றுகிறதோ அதுவே எனக்கும் பரம சம்மத மென்று சொல்லிவிடு. எல்லாத்துக்கும் சாமியாரவர்களும் ராயர் எஜமானு மிருக்கிறார்கள். அவர்க

ளிடம் யோசனை செய்துகொண்டால் போதுமே. அவர்க ளிரண்டுபேரும் சொல்லுகிறபடிதானே இவர்களும் செய் வார்கள்? பிறகென்ன? திருமங்கலத்துக்குப் போவோம் என்று சொல்லு. எப்போது புறப்பட்டாலும் நானும் புறப் படத் தயார். இவ்வளவுதானே சங்கதி?" என்றாள்.

முத்தம்மாள்:—"அப்படியா? தயார் தானா? பேஷ்! அப்படிச்சொல்லு." என்று சொல்லிவிட்டுப் பொற்றொடி சொன்ன மறுமொழியைச் சீராளனிடம் தெருவித்து "அப் பா! சீராளா! அவள் நீ என்ன சொல்லுகிறாயோ அப்படியே செய்வாளாம். பிறகென்னப்பா வேணும்? இன்னும் ஏதே னும் வேண்டுமானால் சொல். என்னைப் புறப்படும்படி சொல் வாரைக் காணோம்! எல்லாரும் அவரவர்கள் பாட்டைத் தான் பார்க்கிறீர்கள். இனி நான் எதற்கு? காரியம் முடிந்த பிறகு நான் எங்கே கிடந்தா லென்ன?" என்று சொன்னாள்.

சீராளன்:—"இவ்வளவுதானா உனக்குத் தெரிந்தது? நீயும் இனிமேல் பொற்றொடி கூடத்தா னிருந்திருப்பாயென் றெண்ணினேன். உன்னை வேறே பிரத்தியேகமாய்க் கூப் பிட வேண்டுமா பாட்டி." என்று சொல்லிக்கொண்டிருக்கை யில் வெளியே யிருந்து வந்த,

சாமியார்:—"என்னவோய் சீராளப்பிள்ளை! இனிமேல் நீர் நம்மை விசாரிக்கவா போகிறீர்கள்? தயவிருக்கட்டும். அரண்மனையில் கூட்டம் நடக்கப்போகிறதே வரவில்லையா? இராயரவாள் எங்கே? மேடையி லிருக்கிறார்களா?" என்று சொல்லிக்கொண்டு மேடைமே லேறினார்.

சீராளன்:—"இதோ நானும் வருகிறேன்" என்று சொல் லிக்கொண்டு தானும் கூடவே மேடைக்குப் போனான்.

அங்கே சத்தியசீலராயர், உடுப்புகளெல்லாம் தரித்துக்கொண்டு கூட்டத்துக்குப் போகத் தயாராயிருந்துகொண்டிருந்தார். சீராளனும் உடுப்புகளை எடுத்து மாட்டிக்கொண்டு கூடவே புறப்பட்டான்.

ஆகவே இராயர், சாமியார், சீராளன், பேடைப்பிள்ளை, காளிங்கராயபிள்ளை, குற்றாலத்தேவர், சங்கரன், முதலிய பதநாட்பேர்கள் சரியாய் 4½ மணிக்குவீட்டைவிட்டுப் புறப்பட்டு அரண்மனைக்கு முன்னமைக்கப்பட்டிருந்த கொட்டகைபோய்ச் சேர்ந்தார்கள். இரண்டு தினத்துக்கு முன்னமே விளம்பரங்கள் பிரசுரிக்கப் பட்டிருந்தபடியால் சுமார் இரண்டாயிரம் ஜனம்வரை கூடியிருந்தார்கள். ஆலவாய் ஜில்லா கலெக்டர், இராயருக்குப் பதிலாய் வந்திருக்கும் புது ஜட்ஜ், முனிசிப்கள், தாசில்தார்கள், போலீஸ் அதிகாரிகள், பெரிய வர்த்தகர்கள் முதலிய பெருங் கனவான்களெல்லாரும் வந்துகூடி சாமியார் பிரசங்கத்தைக் கேட்க ஆவலாயிருந்தார்கள். சாமியார் இராயர் முதலியவர்கள் பந்தலுக்குள் வருமுன்னமே மகாராஜாவும் அவருடையபிரதானியும் வந்து சாமியாரையும் இராயரையும் எதிர்கொண் டழைத்து உயர்ந்த ஆசனங்களிலே உட்கார்த்தினார்கள். அவர்களுக்குப் பக்கத்தில் காளிங்கராய பிள்ளை, சீராளன், பேடைப்பிள்ளை முதலியவர்கள் இருந்தார்கள். இவர்கள் இப்படிப் போகும் பொழுது கூட்டத்திலுள்ள ஒருவன் எழுந்து "இது தான் மகா பக்காச்சாமி, டடேசாமி" என்டான். இன்னொருவன் "இதுதான் அந்தச் சீராளப்பிள்ளை திருமங்கலம் ஹைஸ்கூல் வாத்தியார்" என்பான். வேறொருவன் "இது தான் அவருடைய மாமனார். கோபாலபுரம்." என்பான் இன்

ஒருவன் "இது யார் தெரியுமா? இவர்தானையா அந்தக் காளிங்கராயபிள்ளை; பொல்லாத மனுஷன். பலபேர்வழி" என்பான். இவ்விதமாக ஒவ்வொருவனும் ஒவ்வொன்றைச் சொல்லிக்கொண் டிருக்கையில்; சபாநாயகராகிய மகாராஜா அவர்கள் எழுந்து நின்று சபையார்களை நோக்கி, சத்தியசீல ராயரவர்களுடைய பெருமையையும், அவர்களால் ஸ்தாபிக் கப்பட்ட (Social Reform Association) 'ஆசார சீர் திருத்தச் சபை' யால் விளைந்த அளவில்லாத நன்மைகளையும், இவைக் கெல்லாம் மேலாக, சிராளப்பிள்ளை பொற்றொடியம்மா ளிருவ ருடைய விவாக விஷயத்தில் எடுத்துக்கொண்ட அரிய பிர யாசையையும் பராக்கிரமத்தையும், அதற்குத் துணைநின்று அருளிய சாக்ஷாத் ஜகதீசனுடைய கருணைத் திறனையும் வெகுவாய் யெடுத்துப் பேசினர். பின்பு பிரதானியால் இரா யரவர்களுக்கு எழுதப்பட்ட வந்தனோபசாரப் பத்திரம் வாசி க்கப்பட்டது. அதன் பிரதிகள் சபையிலிருந்த ஒவ்வொரு வருக்கும் கொடுக்கப்பட்டன. அதன்பின் சபாநாயகர் எழுந்து சாமியாரவர்களைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து அன்றையத்தினம் விஷயமாகிய "பணம்பற்றி மணமா குணம் பற்றிமணமா?" என்னும் பிரசங்கத்தை ஆரம்பிக்கும்படி சாமியாரை வேண்டினர். வேண்டவே பக்காச் சாமியார் பெரிய ஆண்சிங்கம் போல் சபைநடுவே எழுந்துநின்று செரு மினர். இவர் எழுந்துநிற்கவே ஜனக்களெல்லாரும் மட மடவென்று காதுகள் செவிடுபடும்படியாகக் கரகோஷம் செய்து ஆர்ப்பரித்தனர். சுமார் 10-நிமிஷகாலம் பந்தல் முழு தும் கரகோஷமயமாகவே சப்தித்தது. கரகோஷம் நிற்கவே சாமியார் தமது பிரசங்கத்துட் பிரவேசித்தனர்.

பதினான்காவது அத்தியாயம்

நற்போதனை

“சபா நாயக ரவர்கட்குங் கனவான்களுக்கும் வந்தனம்.
இவ்வுலகில் மனிதன் முதலாயுள்ள சகல பிராணிகளும்
ஊண், உறக்கம், காதல் என்னும் மூன்றையே நாடுகின்றன.
இம்மூன்று மின்றியிருப்பன பிராணிகளே யல்ல. இம்
மூன்று மில்லாப் பிராணிகளும் இலவே இல. இம்மூன்று
மின்றி இப்பிரபஞ்சமே யின்று. ஒருவன் ஊணையேனும்,
உறக்கத்தையேனும், அல்லால் காதலையேனும் நீக்கி இருத்
தல் இயலாது. இம்மூன்றையு மடையும் பொருட்டே நாமனை
வேமும் இவ்வுலகத்தில் இத்தனைபாடும் படுகின்றோம். நாம
டையும் இவ்வுலக இன்பங்களனைத்திற்கும் இம்மூன்றே கா
ரணம். அந்தோ! நாம்படும் இவ்வுலக துன்பங்களனைத்திற்
கும் இம்மூன்றே காரணம்! (கரகோஷம்) நன்று, நன்று;
இந்த ஊண், உறக்கம், காதல் ஆய மூன்றையும் அடைதலில்
இன்பங்களும் உண்டாகின்றன' துன்பங்களும் உண்டாகின்
றன வெனின் ஒவ்வாதே? இம்மூன்றையும் நாம் எவ்வழிக
ளாலடைகின்றோமோ அவ்வவ் வழிக்குத் தக்கவாறு இன்ப
மும் உண்டாகும்; துன்பமும் உண்டாகும். மிருகங்கள்
முதலியன எப்பொழுதும் தன்னயம் கருதுபவையாதலின்
அவை இம்மூன்றினையும் எவ்வழியாலடையினும் தகுதியே;
சிங்கம் தனக்கெதிர்ப்பட்ட பசுவைக் கொன்று தின்னினும்,
பூனை தனக்கெதிர்ப்பட்ட எலியைப் பிடித்துத் தின்னினும்

பாவமாகாது. ஆயினும், மனிதன் சர்வஜீவன்களின் சுகதுக்கத்தையும் கருதியே தன் சுகத்தை யடையவேண்டியவனுயிருத்தலால், அவன் முற்கூறிய ஊண், உறக்கம், காதல் ஆய மூன்றையும் பிறர்க்குத் துன்பம் வராதவாறு அடையக் கடமைப்பட் டிருக்கின்றான். ஆகவே, இன்னொருவன் மனைவியைச் சார்ந்து அவனுக்குத் துன்பம் விளைத்தலும், அயல்வீட்டுக்காரன் பொருளைத் திருடி அதனுற் ஜீவித்தலும் பாவமெனவும், தன் மனைவியோடிருந்து தன்கையாலுழைத்துப் பிழைத்தல் தருமமெனவும் கொள்ளப்படும். இம்மூன்றனுள் உறக்கமென்பதைத் தேடலால் பிறர்க்கு விளையும் துன்பமும் சிறிது; அதன்பொருட்டு நாமடையும் சிரமும் சிறிதே. ஏனெனில் ஒருவன் தூங்குதற்குப் பிறனுடைய உத்தரவேனும் அல்லது வேறு சாதனங்களேனும் வேண்டா. ஊண் என்பதையடைதற் பொருட்டே நாம் நிலங்களை வாங்கலும், உழுதலும் பயிர்செய்தலும், அதனுல் வரும் கஷ்டாகஷ்டங்களை யனுபவித்தலும். ஊணுக்குச் சாதனமாயுள்ள நிலங்கரைகளையும் ஆடுமாடுகளையும் நல்ல வழியா லடைபவன் தனக்கும் பிறர்க்கும் நல்லவனுதலோடு அதனுல் விளையும் துன்பங்களுக்குத் தப்பி மறுமையிலும் நற்கதியடைகின்ருன். தீயவழியாலடைபவன் தனக்கும் பிறர்க்கும் தீயவனுகி அதனுல் விளையும் பொதுஜன தண்டனைக்கும், ராஜதண்டனைக்கும், மறுமையில் தெய்வ தண்டனையாகிய நரகத்துக்கும் ஆளாகின்ருன். இனிக் காதல் என்னும் அதிமுக்கியமான விருப்பத்தையடைவதில் மனிதர்படும்பாட்டையும், அதனுல் விளையும் அளவிறந்த இன்பத்தையும், அதினுமளவிறந்த துன்பத்தையும் இம்மட்டெனச் சொல்ல எவராலுமியலாது.

(கரகோஷம்) இனி இவ்வுலகம், எத்தனை பெரியதேயாயினும், எத்தனை உடைத்தேயாயினும், இக்காதல் என்னுமொன்றில்லாவிடின், ஒருகாசும் பெறாது; இஃதின்றி இவ்வுலகில் ஒரு உப்புமில்லை. உறக்கம் ஊண் ஆய வனைய இரண்டும் இதற்குத் தாழ்ந்தனவேயாம். இப்பொருளை யடைதற் பொருட்டாய், ஊணையும், உறக்கத்தையும் வெறுத்தாரும் உளர்; வெறுத்தலும் தகுதியே! (கரகோஷம்) ஆனால், ஊணின் பொருட்டாயேனும், உறக்கத்தின் பொருட்டாயேனும் இதனை வெறுத்தாரைக் கண்டுமறியோம்; கேட்டுமறியோம்: ஒருக்கால் ஊணையும் உறக்கத்தையும் விரும்பி இதனைக் கைவிட்டானொருவ னிருப்பினும் அவன் மனிதனுமன்று; மிருகமுமன்று; கல்லோ, மண்ணோ கட்டையோ அறியேம். (கரகோஷம்) கனவான்களே, நான் சாமியாரென்றும் துறவி யென்றும் இருந்துகொண்டு காதற் சிறப்பையும் பெருமையையும் இவ்வாறு வியந்து கூறற்காய் என்னைப் பரிகசிக்கவேண்டாம். (சிரிப்பு.) எல்லாத்துறவிகளும் எல்லா ஞானிகளும், இதிகாசபுராணங்களிற் கூறியபல பெரியோரும் இக்கொடிய காதலிற்பட்டுச் சிக்கியதும், அதன் கண்ணிக்குத் தப்பியோடவேண்டுமென் றுழன்றதையும் உங்களுள் யாவர்தாம் அறியீர்? [கரகோஷத்துடன் சிரிப்பு] ஆதலின் சாமான்யமான யானிக்காதற் சிறப்பை யெடுத்துரைத்தல் ஒரு வியப்பன்று. இது ஒன்று இலாவிடின், நமது பாரத ராமாயணங்களும், நைஷதமுதலிய காவியங்களும், இவ்வுலகிற் பிறப்பதெங்ஙனம்? அவற்றைப் புலவர்கள் பாடுவதெங்ஙனம்? முற்காலங்களில் நடந்த பெரும்பெரும் கதைகளுக்கும் யுத்தங்களுக்கும் காரணமெஃதென ஆய்ந்து யோசித்

தால் இக்காதலேயெனத் தோன்றும். காதலொழிந்தவிட த்து ஊணுறக்கமிரண்டும் ஒருக்கால் வெறுக்கப்படுதலும் படும். ஆகவே எல்லாவற்றிற்கும் இதுவே காரணமாமன்றோ? தற்காலத்தில் நடக்கும் எண்ணற்ற வழக்குகளுக்கும், வியாஜ்ஜியங்களுக்கும் அடிபிடி சண்டைகளுக்கும் இக்காதலே முதற்காரணமெனக் கொள்ளுதற்கு உங்களுள் யாவர்தான் தடுப்பீர்கள்! நன்று. இக்காதலால் இன்பமும் உண்டாம், துன்பமும் உண்டாம் எனக்கொள்ளின் காதல் என்பது நல்லதோ கெட்டதோ? ஆஹா, அதை நல்வழியாற் பெறின் அதினும் நல்லதும் இனியதும் வேறொன் றின்று; அதைக் கெட்டவழியாற் பெறின் அதினும் கெட்டதும் கொடியதும் வேறொன் றின்று. (காகோஷம்) நல்லவழியால் நன்மனைவியைக் காதலித்து மணந்து வாழும் நல்வாழ்க்கையினும் அரியபதவியும் இன்பமும் இம்மையிற்றானுண்டா? அன்றேல் மறுமையிற்றானுண்டா? இன்றே இன்று. கெட்டவழியால், அதாவது, கெட்டவளைக் காதலித்தடைந்து கெடு நெறிப்பட்டுக் கெட்டழிந்து வாழும் கெடுவாழ்க்கையினும் கேடான கேடும் நரகும் பிறிதொன்றுண்டா? இல்லையே. அங்ஙனமாயின், நல்வழியால் நன்மனைவியைக் காதலித்து மணந்த தெவ்வாறு? அதனால் விளையும் இன்பமெது? நன்று நன்று. இதுவே நானின்று பிரசங்கஞ்செய்ய தொடங்கும் பெருத்த விஷயம். காதல் என்பது ஸ்திரீ புருஷரிருவர்க்கிடையில் நிகழும் அன்னியோன்னிய அன்பேயன்றி வேறொன் றன்று. காதலே ஸ்திரீ புருஷரிருவர்க்கிடையில் நின்று ஒருவரொருவரைக் கவர்ந்திழுக்கும் காந்தக்கவர்ச்சி. காதலே ஒரு ஸ்திரீயையும் ஒரு

புருஷனையும் பிரிவொட்டாத ஒரே கட்டாய் இறுக்கிக்கட்டுகின்றது. காதலே இத்துன்பமயமான வுலகமென்னும் சமுத்திரத்திற்பட்டழுந்தினோர் ஏறுங் கரை. காதலே ஸ்த்ரீபுருஷரிருவரையும் பிறர்முகம் பார்க்கவொட்டாது தடுத்து ஒருவரையொருவர் காக்கச்செய்யும் காவல். ஒரு ஸ்திரீக்கும் ஒரு புருஷனுக்குமிடையில் நிகழ்ந்த காதலைக்காட்டதற்கு அறிகுறியாய் உலகமுழுக்கத்தை யநுசரித்துச் செய்யும் கருமமே விவாஹம்; அதுவே வதுவை; அதுவே கல்யாணம்; அதுவே பாணிக்கிரஹணம்; அதுவே மாங்கல்ய தாரணம்; அதுவே திருமணம்; அதுவே பட்டணப்பிரவேசம்; (கரகோஷம்! பேஷ்!) இவையெல்லாமதுவே யன்றி வேறொன்றுமில்லை. விவாக காலத்திற்றான் ஒரு புருஷனும், அவன் மனைவியும் தாங்களிருவரும் ஒருவர்க்கொருவர் காதலெகொண்டதை உலகத்தார்க்கும் உறவினர்க்கும், உற்றோர்க்கும், பெற்றோர்க்கும், உணர்த்துகின்றார்கள். இவ்வாறன்றி அப்பாவினுடைய ஜாதியாசைக்கும், அம்மாவினுடைய பொருளாசைக்கும், விவாகமென்பது பெயராகமாட்டாது. அதாவது ஸ்திரீ, புருஷர் மனமொத்த சம்மதம் தான் விவாகமேயன்றித் தாயும் தகப்பனும் அண்ணனும், அம்மானும் கூடித் தங்கள் தங்கள் நோக்கப்படியும் பிரியப்படியும் சௌகரியப்படியும் அடித்துப்பிடித்து அமுல் செய்து பயமுறுத்திச் செய்யும் விவாகம் விவாகமே யன்று. அவ்வாறு ஸ்திரீ புருஷர் சம்மதமின்றி பலோத்காரமாய்ச் செய்யும் விவாகமே சிறை; (ஜயில்) அதுவே விலங்கு; அதுவே குடும்பப் படுகுழி; அதுவே நரகம்; அதற்குப் பெயர் விவாகமே யன்று. (கரகோஷம் சரி! சரி!) தகப்பன் தன் சுகத்தைக் கருதியும்,

தாய் தன் சுகத்தைக் கருதியும் செய்யும் விவாகந்தான் இழவு. அப்படிக்கட்டும் தாலிதான் தாலியறுப்பு! அப்பொழுது அடிக்கும் கொட்டே அவ்விருவருக்கும் அந்தியக்கொட்டு!

இவ்வாறு காதல் என்னும் கவர்ச்சியைக் கவனியாமற் செய்த எண்ணில்லாத விவாகங்களால் விளைந்த கேடுகளை என்னாற் சொல்லவுமுடியாது; எண்ணவுமுடியாது; நினைக்கவும் முடியாது (கேளுங்கள்! கேளுங்கள்!) காதலித்த புருஷனைக்கை விட்டுப் பெற்றோர் கொடுமையால் பிறரைமணந்த பெண்களே இப்பொழுது நெறிகெட்டு தெருத்தோறும் திரிகின்றனர். தான் நினைத்த புருஷரைத் தன்னிஷ்டப்படி யடையமுடியாத சற்புத்திரிகளே இப்பொழுது ஒவ்வாப் புருஷர் கையில் அகப் பட்டுத் துற்புத்திரிகளாயினர். தேடிய புருஷன் கிடைத் தால் அவனைத் தெய்வம்போல் வணங்கவேண்டுமென் றெண் ணியிருந்த செவ்வியரே பெற்றோர் கொடுமையால் இசை யாப் புருஷர்க் குட்பட்டு இடுக்கண் சகியாது அவனை மருந் திட்டுக்கொல்ல வகைதேடி மாபாவிகளாயினர். தாம் விரும் பிய பெண்ணை விவாகஞ் செய்ய வியலாது, பெற்றோரால் வேறு பெண்களோடு கட்டிப்போடப்பட்ட சில மைந்தர்கள் பின்னாட்களில் வேசிவீடு காத்து வெறுங் காவடிகளாய் வெற் றென்பு கல்வி அதையும் விடுத்து வெண்ணீறு பூசிச் சந்நி யாசிகளாகித் திரிகின்றனர். வேறு சிலர் அன்பில்லாப் பெண்களை மணந்து அவர்களோடு கட்டியழமுடியாமல், அயல்வீடு காத்து அந்நியர் பெண்களையும் நெறிதவறச் செய்து அவர் நாயகரையுமிழிக்க அதனால் அடிபிடி கலகங் களுக்கு மாளாகி முடிவில் அரசாட்சியாரால் தண்டிக்கப்படு கின்றனர். ஆதலால் ஏ கனவான்களே! கல்விமான்களே, செல்

வர்களே, கேளுங்கள்: விவாகமென்பது ஸ்திரீ புருஷர்களுடைய அந்நியோந்நிய சம்மதமே யன்றி உங்களுடைய இஷ்டமுமன்று; என்னுடைய இஷ்டமு மன்று; சபாநாயகரா யிருக்கும் மகாராஜாவினிஷ்டமு மன்று; ஈசனுடைய இஷ்டமுமன்று. (கரகோஷம்) அந்தச் சம்மதத்தைக் கவனியாமல் நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கேனும் பெண்களுக்கேனும் விவாகஞ் செய்ய விரையக் கெட்டுவிடவேண்டாம். உங்கள் மகள் ஒருத்தியை அவளுக் கிஷ்டமில்லாத புருஷனுக்குக் கட்டிக்கொடுப்பதினும் அவளுக்கு அன்றுதானே கோடியுடுத்து வீட்டுக்குள் வைத்துக்கொள்ளில் பெருத்த லாபமுண்டு. பொருட்செலவு மில்லை; வீண்பெயரும் வந்து சேராது. ஒருபெண்ணை அவள் விரும்பாத குடியனுக்கும் கிழவனுக்கும் கட்டியழுவதிலும் அவளையழைத்து 'அம்மா! தாயே! நீயின்றுமுதல் இஷ்டமுள்ளபேர்க்கு மனைவியாயிரு' வென்று எழுதிக்கொடுத்துவிடுவது மிகவும் சிலாக்கியம். தம்மக்களைப் பலோற்காரமாய் விவாகஞ்செய்துகொடுக்கும் பெற்றோர் பெரும்பாவிகளாவார். மனமில்லாப் பெண்களை வலிந்து மணஞ்செய்தவர் மாபாவிகளாவர். அன்பர்களே! நான் சொல்வதில் எள்ளளவும் பொய்யிருப்பதாயேனும், அல்லால் ஒன்றைப் பத்தாய் உயர்த்திச்சொல்லுகிறேனென்றேனும் நினைக்கவேண்டாம். இவைகளையெல்லாம் திருஷ்டாந்த பூர்வமாய் எடுத்து ரூபித்துக்காட்டத் தயாரா யிருக்கிறேன். ஆனால், புருஷர்க்காயினும் பெண்களுக்காயினும் தக்க பருவமும் அறிவும் வந்தபிறகு அவர்களின் அந்தரங்க நோக்கத்தையும் ஆசையையும் அவர்கள் பேச்சாலும், நடையாலும், முகக்குறியாலும், சந்தோஷ அசந்தோஷக் குறி

யாருமறிந்தே விவாகஞ்செய்யவேண்டுமென்றி நான் பிடித்த பிடியை விடமாட்டேனென்று பொருளாசையாலும் உத்தியோக ஆசையாலும் பந்துக்களென்ற அபிமானத்தாலும் 'முறைப்பெண் முறை மாப்பிள்ளை'யென்ற பாமரக்கொள்கையாலும், தாய் தகப்பன்மாருடைய அபிப்பிராய பேதத்தாலும், உனக்கு எனக்கு என்ற போட்டிபோட்டுக்கொண்டும், உங்கள் அருமையான மக்களை அவர்கள் சம்மதமின்றி நடத்திவைக்கவேண்டாம். குழந்தையில்லையென்று தவஞ்செய்து விரதமிருந்து காசி இராமேசுவரம் போய்ப் பெற்று வளர்த்த உங்கள் அருமைப் பெண்களைப் பேய்கையிற் பிடித்துக்கொடுப்பதுபோல் துஷ்டர் கையில் கொடுத்துக் கொன்றுவிட்டால், அவர்களுக்கு உங்களைத்தவிர வேறு கதியுண்டா? பெற்றோர்களாகிய நீங்களே இப்படிச் செய்யும்பொழுது அந்தச் சிறு பெண்கள் யாரிடம் சொல்லியழுவார்கள்? அவர்களுக்கு வந்த துக்கம் அவர்களுக்கே யன்றி உங்களுக்குண்டா? உங்களுடைய அபிப்பிராயப்படி நீங்கள் செய்துகொண்டால் அவர்களுடைய ஆசையும் நோக்கமும் நிறைவேறுவதெப்படி? கல்வியானை மணக்கவேண்டுமென்று விரும்பியவளைச் செல்வனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தால் அவளுக்குத் துன்பமேயொழிய இன்பமுமுண்டா? அன்றேல், செல்வனையும் செல்வத்தையும் விரும்புகிறவளை, அறிஞனுக்குக் கொடுத்தாற்றான் இன்பம் உண்டா? தமக்கிசைந்த வயதுமறிவுமுள்ள இளைஞனை யடைய வேண்டுமென்று நெடுநாளாய் எண்ணிவந்த பெண்ணை கிழவன் கையிற் பிடித்துக்கொடுத்தால் என்ன பிரயோஜனம்? உங்கள் பிள்ளைகள்மீதும் பெண்கள்மீதும் நீங்கள் உள்ளன்புள்ளவர்களென்பது மெய்யானால் நீங்கள் அவர்

களுக்குச் செய்யவேண்டிய பெரிய உபகாரம் ஒன்றே யுண்டு. சகல இன்பங்களுக்கும் முக்கிய ஆதாரமாயிருக்கிற விவாக விஷயத்தில் நீங்கள் அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கலந்தே எதுவும் செய்யவேண்டும். அவர்களுடைய நோக்கத்துக்கு மாருக நீங்கள் நடந்தால் உங்களுக்கும் அவர்களுக்கும் எண்ணில்லாத தீமைகள் விளையும். பணத்தையும் நகைகளையும் வரிசைகளையும் கொடுப்பதில் யாதொரு பயனு மில்லை. ஸ்திரீ புருஷர் இருவரும் மெய்யன்போடு வாழ்ந்தாலன்றி இத்தனை பொருளும் நகையு மிருந்து பய னென்ன? இசைந்த புருஷனை விவாகஞ்செய்ய வியலாமல், தனக்கொவ்வாத நாயகனேடு அழுதழுது காலங்கழிப்பவட்கும் விதவைக்கு மென்ன பேதம்? அந்தோ! விதவைக்குத் தன் புருஷனை யிழந்த அன்றேடு எல்லாம் ஒழிந்துவிடுகின்றன. அவள் இறந்துவிடவேண்டு மென்றலும் இறந்துவிடலாம். ஆனல் பிரியமில்லாத நாயகரோடு வாழும் பெண்கள் விதவைகளைப் பார்க்கிலும் அதிக துர்அதிர்ஷ்டமுள்ளவர்கள் என்பதில் தடையேயில்லை. புருஷன்மீது திருப்தியற்ற பெண்கள் அணிந்துகொள்ளும் ஆபாணங்களுக்கும், பிணங்களுக்கு அணியும் ஆபரணங்களுக்கும் என்னபேதம்? ஐயோ! இவ்வாறு அசம்மதமான விவாகங்களால் இவ்வுலகத்தில் புருஷரும் பெண்களுமடையும் துக்கத்துக்களவுண்டா? ஒருவீட்டில் "ஐயோ எனக்கோர் நன்மனை வாய்க்கப்படாதா? தெய்வமே, நான் இந்தப் பிடாரியோடு காலங்கழிக்கவைத்தாயே! என்று தலையிலு முகத்திலுமடித்தடித்து வருந்துகின்றன் ஒரு புருஷன். இன்னெருவீட்டில் 'ஐயோ, எண்ணியிருந்த எண்ணமெல்லாம் போக, இந்த நீசனுக்குப் பெண்ணுயிருக்கும்படி தெய்

லம் விதித்ததே! இப்படிப் பெண்ணாய்ப் பிறந்ததினால் அடைந்த பயனென்ன?' என்று வயிற்றிலடித்துப் பாய்கின்றாள் ஒருபெண். வேறு சில பெண்கள், 'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததே. உயிரை விடுவதும் கொடுமை. இவனோடு உயிர்வைத்து வாழலும் கடிது. பெற்றோர் வீட்டுக்குப் போனாலும் மதிப்பில்லை. அல்லால் நமக்கிசைந்த நாயகனோடு சேர்ந்து மணந்துகொண்டாலும் நமது ஜாதியாசாரத்துக்கும் மதாசாரத்துக்கும் விரோதம் ஊராருமொவ்வொன்றைச் சொல்வார்களே. என்னசெய்வோம்' என்று புலம்புகின்றனர்.

இப்படிப் புருஷரொருபக்கம், ஸ்திரீகளொருபக்கம் வருந்துகின்றனர். அதாவது, தற்காலத்தில் நடக்கும் விவாகங்கள் குதிரையைக் கழுதையோடும், பசுவைப் பன்றியோடும், மயிலை நெருப்புக்கோழியோடும் கட்டிவைப்பதுபோல விருக்கின்றனவேயன்றி, என் மனதிற்கு விவாகமாகவே தோன்றவில்லை. கழுதையைக் கழுதையோடு கட்டி, குதிரையைக் குதிரையோடு கட்டி மயிலை மயிலோடு சேர்த்துப் பார்ப்பதே கண்ணுக்கு ரம்மியமா யிருக்கும். அதுபோலவே ஒரு நாட்டில் நல்ல புருஷர்களு மிருக்கின்றார்கள்; நல்ல பெண்களும் உளர். ஆனால் நல்லதை நல்லதோடும், கெட்டதை கெட்டதோடும் சேர்த்துவைப்பதுதான் முறை. எதற்கும் எதற்குப் பிடிக்குமோ அதையுமதையும் சேர்த்தால் தான் சேர்ந்து நிற்கும். சுருங்கக்கூறுமிடத்து, பாயசத்திற்கு ஜீனியும் கஞ்சிக்கு உப்பும் சேர்த்தால் ருசிக்குமேயல்றி உப்பைப்பாயசத்திலும் ஜீனியைக்கஞ்சியிலும் சேர்த்தால் இரண்டும் கெட்டு ஒன்றுக்கு முதவாது போய்விடுமது

போல ஸ்திரீ புருஷருடைய மனோபாவத்தையும், ருசியையும் அறிந்தே விவாகங்களை செய்யவேண்டுமென்பதே யானின்று உங்கட்குப் பிரசங்கிக்க விரும்பிய விஷயம். ஆதலால் பிர புத்வளி ஒரு விவாக காலத்தில் பெற்றோர்கள் கவனிக்கவேண்டியது வதூவரர்களுடைய குண நற்றன்மையே யன்றி வேதுமானம், குலம், அந்தஸ்து, உருவம், நிறம் முதலியவைகளே யன்று. இவ்விஷயத்தில் பெற்றோர் மூடராயும் பிடிவாதமுள்ளவராயு மிருந்தால், பெண்களும் புருஷரும் தமது அபிப்பிராயத்தை பிரேர வெளியிட்டுத் தம் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமே யல்லாது வெட்கத்தாலும், பயத்தாலும், சோம்பலாலும், பேசாமல் மனம்போகிருக்கவிட்டுக் காரியமுடிந்தபிறகு 'ஐயோ, போச்சே போச்சே' என்பதிற் பிரயோசனமில்லை, 'காணிசோம்பற் கோடிகேடு' என்றதுபோல சிறிது வெட்கத்தையும் பயத்தையும் காரணமாய் வைத்துக்கொண்டு மனமில்லாமல் 'ஊம், ஊம்' என்று தலையசைத்துக்கொண் டிருந்துவிட்டால் பின்னால் வரும் துக்கமும் கஷ்டமும் பெரிதாயிருக்கும். இதுவிஷயத்திற்கு உதாரணமாக சமீபத்தில் இந்த அவையில் நடந்த ஒரு மகா விவாகோத்ஸவத்தைப்பற்றி நீங்களெல்லாரும் அறிவீர்களென்றே நம்புகின்றேன். (ஆம். ஆம். கரகோஷம்) ஆதலின் அதை விரித்துச்சொல்லாவிடினும் சுருக்கக் கூற வேண்டியிருக்கிறது. இவ்விவாகத்திற் சம்பந்தப்பட்ட ஸ்திரீ புருஷர் இரண்டுபேரைப் போன்ற திடசித்தமும் வைராக்கியமுமுள்ளவர்களை நான் எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும், எந்தச் சரித்திரத்திலும் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. அவ்விருவருள் ஒருவராகிய புருஷன் உண்டே அவர் இதோ

இருக்கின்றார் சீராளப் பிள்ளை! (கரகோஷம். கரகோஷம்) அப்பெண்ணின் தகப்பனுமே அதோ விருக்கின்றவர் மேடைப் பிள்ளை. அப்பெண்ணின் பெயர் பொற்றொடியம்மை யென்பதை நீங்கள் நன்கறிவீர்கள். (மூன்றுமுறை கரகோஷம்) அவர்களிருவருக்கும் நமது நண்பரும் உங்களது நீதிபதியுமாகிய சத்தியசீலராயரவர்கள் வீட்டில் (கரகோஷம்) நடந்த விவாகத்தையும் அன்றிரவு அந்த துஷ்டர்கள் செய்த அக்கிரமங்களையும், அதன்பின் சீராளப் பிள்ளையும், பொற்றொடியும் அனுபவித்த கஷ்டங்களையும் நான் சொல்லவேண்டியதில்லை. இவர்களிருவரும், அவர்களும் காணாமல் சும்மாகிடந்த நானும், இராயரவர்களும், இன்னொரு பாட்டிக்கிழவியும், அவள் மகனும் இன்னும் பலரும் இத்தனை பிரயாசை யெடுத்ததற்கும் கஷ்டப்பட்டதற்கும் காரணம் அவ்விருவர்க் கிடையில் உதித்த மெய்க்காதலன்றோ? இக்காதலினும் சிறந்ததொன்று எவ்விதத்தும் எங்கேனும் உண்டோ? இவர்களினும் சிறந்த ஸ்திரீ புருஷர்களை நாம் காணமுடியுமா? இவர்களிருவர்க்கும் நடந்ததன்றோ விவாகம்? இதுவன்றோ அன்பு? இதுவன்றோ வைராக்கியம்? இதுவன்றோ பக்தி? இதுவன்றோ முக்தி? இவ்வாழ்க்கையிலிருந்தால் இவர்கள் பெற்ற பாக்கியமன்றோ பெறவேண்டும்? ஒரு நாளிருந்தாலும் ஒரு நொடிநேரம் வாழ்ந்தாலும் இவர்களிருவரைப்போல் வாழ்தலே பரமபதம். கீரியும், பாம்பும் போல் நூறுநூறென்று நூறு வருஷம் வாழ்ந்து வேண்டிய ஊணுமுண்டு உடையுமுடுத்திட் டிருக்குந் திரியுமன்றி புருஷர் பூமிக்குப் பாரமும், சோற்றுக்குச் செலவுமேயன்றி அவர்கள் இருப்பதுமொன்றே, இறப்பதுமொன்றே.

ஆனல் இவ்விருவரும் முடிவில் அடைந்த இணையில்லாத வெற்றி இவர்கட்கு எளிதிற் கிடைத்ததா? போற்ரேடியின் மனவலிதா னென்னே! அவளுடைய திடசித்தமும் அஞ்சாமையும்தா னென்னே! அவளுடைய கல்வி தா னென்னே! அவளது அரியகற்பின் வன்மைதா னென்னே! (ஓயாத கரகோஷம்) அவளது வெற்றியின் பிரதாபந்தா னென்னே! ஆஹா! இவளே பெண்; இவளே மெய்யுருவாய் வந்த மேலவள்; உண்மையே வடிவாய்வந்த உத்தமி. இவளை மணக்கப் பெற்றஇச்சீராளப் பிள்ளையே இவ்வுலகிற் பிறந்த புருஷரெவரினும்இணையற்ற பாக்கியவான்.(கரகோஷம்)இம்மங்கை முதன் முதல், தான் சீராளப்பிள்ளைமீது கொண்ட அன்பை வெளியிடப் பயந்தேனும் வெட்கியேனு மிருந்தால் அவளுக்கு இத்தனை பெருமையும் அருமையும், புகழ்ச்சியும், மகிழ்ச்சியும், புண்ணியமும், கண்ணியமும் கிடைத்திருக்குமா? அவள் வெள்ளையப்பனுக்கு மனைவியாயிருக்கும்படி நேரிட்டிருப்பின் அவள் கதி எவ்வாருகும்? அவள் கல்வியும் கற்பும் எவ்வாருகும்? அவளை இழந்த சீராளப்பிள்ளை கதிதான் எவ்வாருகும்? ஆதலால், சத்தியமான எக்காரியத்தையும் மனப்பூர்வமாயும் அஞ்சாமையோடும் சலியா ஊக்கத்தோடும் தொடங்கினல் முடிவில் வெற்றிபெறுவோமென்பது இவ்விருவர் சரித்திரத்தாலும் விளங்குகின்றது.

ஆதலால், இங்கு வந்திருக்கும், ஏ சிறுவர்களே! ஏ சிறுமிகளே! நீங்கள் இளமைப்பருவத்திற் கற்கவேண்டிய கல்வியைக் கற்றுத்தேர்ந்து விவாகஞ்செய்யத் தொடங்குங்கால் உங்கள் அந்தரங்க நோக்கங்களையும் அபிப்பிராயங்களையும் உங்கள் பெற்ருேர்க்குக் குறிப்பாலறிவித்து உங்கள் இஷ்

டத்தை முடிபுங்கள். அப்படியில்லாமல் விவாகமென்பது விளையாட்டு வேடிக்கையென்று அலக்ஷியஞ் செய்தாவது வெட்கத்தையும் பயத்தையும் முன்னிட்டாவது பொருள் மேலும் நகை மேலும் பெரும்பெயர்மேலும் வீணாசைவைத்தாவது மதியீனமாய் இருந்துவிட்டால் நீங்கள் பின்னாட்களில் அளவிறந்த துன்பத்திற்காளாய், கூடாவொழுக்கங்களிற் பிரவேசித்து இம்மையில் நாட்டாருக்கும், மறுமையில் நமதுஜகதீசனுக்கும் விரோதியாய் நரகப்படுகுழியில் வீழ்ந்து வருந்துவீர்கள். இதுவே யானுங்கட்குச்செய்யும் உபதேசம். யான் தொடங்கிய இப்பிரஸங்கத்தை முடிக்கு முன், இக்கூட்டத்தை இன்றுதினம் நடத்துவதற்காக முன்னின்று உதவியவர்களும், இதோ சபாநாயகராய் வீற்றிருப்பவர்களுமாகிய எனது நண்பரும் உங்கள் மகாராஜவுமாகிய திருமலையப்ப நாயக்கரவர்கட்கு எனது அன்புகலந்த எண்ணில் வந்தனங்களை யளிக்கின்றேன். (கரகோஷம்) இதுகாறும் இவ்வாலவாயின்கண் உபநீதிபதியாயிருந்துசெங்கோல் நடாத்தியவர்களும் இவ்வூர் ஆசார சீர்திருத்தசபையின் சபாநாயகரும் ஜனாசாரசீர்திருத்தத்தை மனத்தாலும் வாக்காலும் செயலாலும் உலகுக்குப் புகட்டும் உத்தமரும், இப்பொழுதுகூறிய பொற்றொடி, சீராளர் விஷயத்தில் அரும் பெரும் உழைப்பெடுத்தவர்களுமாகிய எனது நண்பர் சத்திய சீலராயரவர்கட்கும் எனது வந்தனங்களைக் கூறுதலோடு, அவர்கள் நாளையத்தினம் இவ்வூரைவிட்டு நீங்கி வால்தேர்பட்டணம் போவதனால் இந்நகர் வாசிகளடையும் துக்கத்தைப் பங்கிட்டுணருகின்றமையையும் தெரிவிக்கின்றேன். இன்னும், எனது மெய்ச்சீடனும், எனது ஆத்ம நண்பனும், எனது உயிரினும்

பன் முறை யரியவனுமாகிய சீராளப்பிள்ளையும் அவனுக்கு அவனின் னுயிரினு மாயிரமுறையரிய சௌபாக்கியவதி பொற்றொடி யம்மையும் சகல சம்பத்தையும் புத்திர பௌத்திர பாக்கியங்களையும் பெற்றுச் சிரஞ்சீவிகளாய் வாழவும், அச்சீராளப் பிள்ளைக்கு ஜீவதானஞ் செய்து காத்த அருள்வள்ளலாகிய எமது காளிங்கராயபிள்ளை குற்றாலத்தேவர் முதலிய சத்தியர்களும் இவ்விருவருடைய உற்றோர்பெற்றோரும், அவர்களுக்கின்றியமையா உதவியாயிருந்த மற்றோரும் அவர்களுடைய அரிய சரித்திரத்தைக் கேட்கவேண்டி இச்சபையில் வந்து பிரகாசிக்கும் கனவான்களும் கனவாட்டிகளும் எல்லாரும் இனிதே வாழவும் பெருங்கருணைக்கடங்கடலாகிய எம் பெருமானது திருவடிகளை என்முழுமனத்தோடு வணங்கி எனது சிறிய பிரசங்கத்தை முடிக்கிறேன்." என்று சாமியார் பிரசங்கம் செய்து முடித்துத் தன் ஆசனத்திலுட்கார்ந்தார்.

அப்பால் சபாநாயகர் முதலான சகலஜனங்களும் சுமார் பதினைந்து நிமிஷநேரம் கரகோஷஞ்செய்து ஆர்ப்பரித்தனர். உடனே சபாநாயகர் எழுந்து காளிங்கராயபிள்ளையைச் சிறிது பேசும்படி வேண்டினார். உடனே காளிங்கராயபிள்ளையும் அளவிறந்த கரகோஷத்துடன் எழுந்து, "சபாநாயகரவர்களே! சாமிகளே! கனவான்களே! இப்படிப்பட்ட மகத்தான சபைகளில் நான் இதுவரையும் எழுந்து நின்று பேசி அறியேன். ஆயினும், சபாநாயகரவர்களின் ஆக்ஞையைச் சிரமேல் வகித்துச் சிறிது பேசுகின்றேன். இப்போது கூடியிருக்கும் இப்பெரிய கூட்டத்தில் நான் ஒரே ஒருவிஷயத்தைப்பற்றிமட்டும் சொல்ல விரும்புகிறேன். அஃதாவது,

நமது அருமைப் பொற்றொடியம்மையார் சமத மனதாரச் சீராளரையே விரும்பி இருக்கிறார் என்பதை யறிந்தும் நிர் மூடனான வெள்ளையப்பன் அம்மாதைக் கட்டாயப்படுத்திப் பலோற்கார விவாகஞ்செய்யக் கருதினான். அவனடைந்த கதியை யறிந்தீர்களா? ஆதலால் கனவான்களே! விவாக விஷயங்களில், உள்ளன்பில்லாத பெண்களைப் பலோற்கார மாய் விவாகஞ்செய்தலும், அதற்கு உதவியா யிருத்தலும், பெருந் தீங்காய் வந்து முடியுமென்பதை நன்கே யறியுங்கள். இதுவே நான் சொல்லவேண்டிய விஷயம்" என்று பேசி விட்டுக் கரகோஷத்துடன் உட்கார்ந்தார்.

அதன் பின் இராயர் எழுந்து சபாநாயகர் முதலிய ஆல வாய் பிரஜைகள் தமக்குச் செய்த உபசாரத்திற்காக மிகவும் நன்றியறிதல் பாராட்டிப் பேசினதுமன்றி சாமியாருடைய கல்வித் திறனையும், தனக்கு மவருக்கு முள்ள நெடுநாள் நட்பையும் விளக்கிச் சீராளப் பிள்ளை, பொற்றொடியம்மை யிவர் களின் அரிய மன வன்மையையும், அதற்குடனின் றருளிய ஈசனது அருட்பெருமையையும் பற்றிப் பேசினார்.

முடிவில், சபாநாயகர் எழுந்து சாமியார், இராயர், சீரா ளர், பொற்றொடி இவர்களைப்பற்றி முறையே பேசி முடி வில் காளிங்கராயபிள்ளையின் அமையாத வீரத்தன்மையை யும், அஞ்சாமையையும் வியந்து கூறிச் சபையை முடித்த னர். உடனே திருமங்கலத்தில் சீராளனிடம் மாணாக்கனா யிருந்தவனும், பொற்றொடிக்குத் தாய்வழியால் தம்பிமுறை யுள்ளவனுமாகிய குமாரசாமி என்னும் ஒருசிறுவன் எழுந்து பொற்றொடி சீராளர்மீது பாடிய வாழ்த்துக் கவிகளைப் பாடி னான், இவை முடியவே, சபாநாயகர் தங்கத்தினால் செய்த

ஒரு சூழலில் இராயரவர்களுக்குச் செய்த வந்தனோபசாரப் பத்திரத்தையடைத்து அவர் கையிற் கொடுத்து அவர் கழுத்தில் பெரிய பூமாலையை இட்டார். (கரகோஷம்) உடனே, சாமியார் எழுந்து சபாநாயகராகிய மகாராஜா கழுத்தில் ஒரு மாலையிட்டார். காளிங்கராயபிள்ளை எழுந்து சாமியார் கழுத்தில் ஒரு மாலையைச் சூடினார். சீராளன் எழுந்து காளிங்கராயபிள்ளைக்கு ஒரு மாலை சூடினான். உடனே குமாரசாமி எழுந்து யானைத்தந்தத்தினால் செய்யப்பட்டதும் மேல் மூடியில் "பொற்றொடி, சீராளர்" என்று சுவர்ணத்தினால் எழுதப்பட்டதுமான சிறு பெட்டியில் வாழ்த்துக் கவிகளை வைத்துச் சீராளர் கையில் கொடுத்து நறுமலர்களாற் கட்டப்பட்ட மூன்றுமாலைகளையெடுத்து அவன் கழுத்திலிட்டான். (கரகோஷம்) உடனே கூட்டம் கலைந்தது. மகாராஜாவும் இராயர் சுவாமியார் சீராளன் முதலியவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார். உடனே சாமியார், இராயர், சீராளன், மேடைப்பிள்ளை, காளிங்கராயபிள்ளை, குற்றாலத்தேவர், சங்கரன் ஆகிய எல்லாரும் வீட்டுக்குப் புறப்பட்டார்கள். சபையில் நின்ற ஜனங்களுள் அநேகரும் பள்ளிக்கூடத்து மாணாக்கரும் பிள்ளைகளும் இவர்களின் பின் ஒரு சேனைபோல் வீட்டுவரை தொடர்ந்து வந்தார்கள்.

இதற்குள் மாலை 8, 8½ மணியாய் விட்டபடியால் இவர்கள் வரவை யெதிர்பார்த்துக்கொண்டு துளசியும், பொற்றொடியும், வெளித் திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். எல்லாரும் இத்தனை கூட்டத்தோடு வீட்டுக்குள் போய்ச் சேர்ந்தார்கள். இதைக்கண்ட துளசியும், பொற்

றொடியும் வந்த ஜனங்களுக்கெல்லாம் தாம்பூலம் கொடுத்து உபசரித்தார்கள். இராயர் பொற்றொடியை யழைத்து "குழந்தாய் பொற்றொடி! இதைப்பார்" என்று சொல்லித் தன்கையிலிருந்த தங்கக் குழலைக் கொடுத்தார். இதற்குள் சீராளனும் துளசியண்டை போய் "அம்மா, இதைப்பாருங்கள்" என்று தன் கையிலிருந்த தந்தப்பெட்டியைக் கொடுத்தான். இருவரும் இரண்டையும் திறந்து விளக்குமுன் இருந்து வாசித்தார்கள். முத்தம்மாள் முதலிய சகலரும் காதுகுளிரக் கேட்டு ஆனந்தமடைந்தார்கள். வந்த ஜனங்களும் எல்லாரிடமும் வழியனுப்பிக்கொண்டு போனார்கள். உடனே சாமியார், இராயர், சீராளன் காளிங்கராயபிள்ளை முதலிய எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். துளசி அன்னம் படைத்தாள். ஆண்பிள்ளைகள் போஜனமுடிந்தவுடன் பெண்பிள்ளைகளெல்லாரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். பொற்றொடி எவர்க்கும் அன்னம் படைத்துவிட்டுத் தானும் சாப்பிட்டாள். சுமார் 10-மணிக்கெல்லாம், மறுநாள் மறுவீட்டுக்குப் புறப்படவேண்டிய சாமான்களையெல்லாம் தயார்செய்துவிட்டு நித்திரை செய்தார்கள்.

பதினைந்தாவது அத்தியாயம்.

மறுவீடு.

மறுநாள் விடியவும் எல்லாரும் ஸ்நானம்செய்து சிறிது பலகாரமும் சாப்பிட்டு விட்டு எட்டுமணிக்கெல்லாம் புறப்பட்டார்கள். ஆனால் மாப்பிள்ளை பெண் கோபாலபுரம் மறு

வீட்டுக் கிருகம் வந்துசேரும் சமயம், பொற்றேடியின் தாயார் மீனாக்ஷி தன்வீட்டில் முன்னக்கூட்டியே இருக்கவேண்டிய தவசிய மாகையால், அவளுக்காக இதற்குள் அநேகர் புறப்பட்டுவிட்டார்கள். அதாவது பொற்றேடி தாயார் தகப்பனுர், சீராளன் தாயார், முதலிய அநேக ஆட்கள் முன்னமேயே புறப்பட்டுப் போய்விட்டார்கள். பின்பு சுமார் 8½ மணிக்கு இரண்டு குதிரைமாட்டிய இரண்டு சாரட்டுகளும் இரண்டு சவாரிக் குதிரைகளும் வந்து நின்றன. இதில் முன் வண்டியில் சாமியாரும், காளிங்கராயபிள்ளையும் ஒருபக்கமும், இராயரும், சீராளனும் ஒருபக்கமும் உட்கார்ந்து கொண்டார்கள். பின்வண்டியில் துளசியும், பொற்றேடியும் ஒருபக்கமும், பாட்டியும், குமாரசாமியும் ஒருபக்கமும் உட்கார்ந்துகொண்டார்கள். முன்வண்டிக்கு முன்னே குற்றாலத்தேவர் குதிரைச் சவாரி; பின்வண்டிக்குப்பின்னே பாட்டி மகன் குதிரைச்சவாரி. இதற்குப்பின் வேறே சாமான்வண்டிகளும் மறுவீடு பார்க்கவரும் ஜனங்களின் சவாரி வண்டிகளும் மெல்ல வந்தன. சுமார் 8-40-க்கு சாரட்டுகள் புறப்பட்டன. சரியாய் 8-55, அல்லது 9-மணிக்கெல்லாம் கோபாலபுரம் ஊரண்டையிற் போய்விட்டன.

இதற்குள் ஊர் மந்தையில் மேளகாரர்களும் பாண்டு வாத்தியக்காரரும் நின்று வாசித்துக்கொண்டு இருந்தார்கள். கோபாலபுரத்துக்கு 4,5 பர்லாங்குத் தூரத்துக்கிப்பாலே ரோட்டின் இருபுறமும் ஜனங்கள் வந்து நின்றூர்கள். இதைக் காணவும், சாரட்டுகள் மெல்லப்போயின. உடனே எல்லாரு மிறங்கி ஊர்மந்தையிலுள்ள கணபதியைத் தரிசனம் செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டார்கள்.

பின்பு சாமியார், சீராளனையும், பொற்றொடியையும் முன் வண்டியி லிருந்துகொள்ளும்படி உத்தரவு செய்ய, இதற்குள் ராயர் மாப்பிள்ளைத்தோழனாகவும், அவர் மனைவி பெண் தோழியாயும் நின்று மாப்பிள்ளை பெண்ணிருவரையும் முன் சாரட்டில் உட்காருவித்தார்கள். சாமியாரும் இரா யரும் மற்ற ஜனங்களோடு சாரட்டின் முன் நடந்து சென் றார்கள். பின்சாரட்டில் துளசியும் முத்தம்மாளு மிருந்து கொண்டார்கள். கொஞ்சம் வெய்யலாயிருந்தபடியால் எல் லா ஜனங்களும் குடைகளைப் பிடித்துக்கொண்டே பட் டணப் பிரவேசத்தோடு சென்றார்கள். என்றாலும் சூழ்ந்து வரும் சிறுவர்களும்,சிறுமிகளும், புஷ்பங்களையும், பனிநீரை யும், சந்தனத்தையும் மாப்பிள்ளை பெண்மீதும் மற்ற ஜனங் கள்மீதும் அள்ளியள்ளி இறைத்தமையால் அந்த வெய்யலை ஒருவரும் உணரவே யில்லை. பொற்றொடியின் வீடு சமீபிக் கவும் வழக்கப் பிரகாரமே ஆலத்தி முதலிய உபசாரங்கள் செய்யப்பட்டவுடன் மாப்பிள்ளை பெண் இருவரையும் உள்ளே யழைத்துக்கொண்டு போனார்கள். போகவும், கல் யாணத்தில் நடந்தபிரகாரமே நலுங்கு முதலிய எல்லா விளை யாட்டுகளும், முடிவில் மஞ்சள்நீராட்டும் வெகு சிறப்பாயும் வேடிக்கையாயும் சந்தோஷமாயும் நடந்தன. மாலையில் பட் டணப் பிரவேசம் பாட்டுக்கச்சேரி முதலியவைகளும் வெகு விமரிசையாய் நடைபெற்றன.

இவ்வித அற்புதமான மாப்பிள்ளை பெண் இருவரையும் பார்க்கவேண்டுமென்று நிரம்ப தூரத்திலிருந்து ஆயிரக்க ணக்கான ஜனங்கள் வந்திருந்தார்கள். சுற்றுக்கு நாற்காத வழிக்குப் பொற்றொடி சீராளருடைய பேச்சாகவே யிருந்

பொற்றொடி.

எடுத்துப் படிப்போர்க்கு இன்பம் தரும் தமிழ் நாவல்.

இரண்டாம் பதிப்பு. விலை அணா—13.

இப்புத்தகமும் இதிற் குறிப்பிடப்பட்ட ஏனைய பிரதிகளும் எம்மிடத்திலும், அடியிற்கண்ட வியாபாரிகளிடத்திலும் பெறலாம்.

T. V. வேங்கடேசுவரையர்,
புஸ்தக வியாபாரி, சுவாமி சந்நிதி, திருநெல்வேலி.

E. M. கோபாலகிருஷ்ணக்கோன்,
புக்-ஸெல்லர், ரப்பர் ஸ்டாம்பு மேக்கர் etc., மதுரை.

T. R இராமசுப்பிரமணிய ஐயர்,
தருவை, திருநெல்வேலி ஜில்லா.

N. R. சுப்பிரமணிய சர்மா,
வெள்ளியம்பலம், மதுரை.

S. R V. & Brothers,
ஸவுத் டவர், மதுரை.

ரிப்பன் புஸ்தகசாலை, தம்புசெட்டித்தெரு, சென்னை.

விவேகபாநுப்பிரஸ், மதுரை.

ஜெனரல் சப்ளைஸ் & Co, மைலாப்பூர், சென்னை.

T. கோபால நாயக்கர் & Co,
கோல்டன் பிரஸ், சூளை, சென்னை.

இங்ஙனம்,

K. S. நெல்லையப்பையர்,
புக் ஸெல்லர் & பப்ளிஷர்,
சுவாமி சந்நிதி திருநெல்வேலி.